நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# ஸ்ரீ சாய் குருசரித்திரம்

(அற்புதங்களும் உபதேசங்களும்)

மராத்தி மூலம்

**ஸ்ரீதாஸ்கணு மகராஜ்**

தமிழில்

**திருமதி. ரமா சுப்ரமணியன்**

(பாபா மாமி)

NOT FOR SALE




வெளியீடு

**ஸ்ரீ சீரடி சாய் மஹராஜ் பவுண்டேஷன்**

51, பிள்ளையார்கோயில் தெரு, பெரியார் நகர்,
சாக்கோட்டை - 612 401, கும்பகோணம், தமிழ்நாடு.
Cell : 8903766111, 8903765888, Ph : 0435 - 2414919
E-Mail ID : shridattasayee@gmail.com.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## ஓர் பார்வை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஸ்ரீ சாய் குருசரித்திரம் |
| இயற்றியவர் (மராத்தி மூலம்) | : | ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் |
| தமிழில் | : | திருமதி. ரமா சுப்பிரமணியன் (பாபா மாமி)<br>C-4, பாபா நகர், ஜஸ்வந்த் நகர் விரிவு, முகப்பேர் மேற்கு, சென்னை - 37.<br>☎ : 8144928666 |
| வெளியீட்டாளர் | : | சாய் S. ஜெயக்குமார்,<br>நிர்வாக அறங்காவலர்,<br>ஸ்ரீ சீரடி சாயி மஹராஜ் பவுண்டேஷன்<br>51, பிள்ளையார்கோவில் தெரு,<br>பெரியார் நகர், சாக்கோட்டை - 612 401,<br>கும்பகோணம். ☎ : 0435 2414919,<br>செல்: 89037 66111, 89037 65888<br>E-Mail : shridattasayee@gmail.com |
| பதிப்பு | : | 2018 - 1500 பிரதிகள் |
| நாள் | : | ஸ்ரீ சாயிபாபா மகா சமாதி நூற்றாண்டு நிறைவு நாள்<br>19.10.2018 (விஜயதசமி) |
| அச்சிட்டோர் | : | நாடார் பிரஸ், கும்பகோணம்.<br>செல் : 94437 27594 |
| நன்கொடை | : | ரூ. 100/- |

© *Copyright :*
SHRI SHIRDI SAI MAHARAJ FOUNDATION
51, Pillayar Koil Street, Periyar Nagar, Sakkottai - 612 401.Kumbakonam.
Ph : 0435 2414919, 89037 66111, 89037 65888 E-Mail : shridattasayee@gmail.com

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல



ஓம் ஸ்ரீ சாய்ராம்
ஓம் ஸ்ரீ கணேசாய நமஹ!
ஸ்ரீ சரஸ்வதி தேவியே நமஹ!
ஸ்ரீ குருப்யோ நமஹ!

# சமர்ப்பணம்

எம் முன்னோர்களுக்கும், எமது குலதெய்வத்திற்கும் நமஸ்காரங்கள்.

ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியும், கலியுகத்தில் கண்கண்ட தெய்வமும், மகாயோகீஸ்வரரும், உலகம் முழுவதும் அநேக அற்புதங்களைப் புரிந்து அனைவரையும் காத்து இரட்சிக்கும் **சத்குரு ஸ்ரீ சாய்பாபா** அவர்களின் உபதேசங்களையும், அற்புதங்களையும் தமிழாக்கம் செய்யுமாறு அடியேனைப் பணித்து, ஒவ்வொரு அத்தியாயத்தையும், கருணையோடு என் விரல் பிடித்து எழுத வைத்த நம் **சத்குரு சமர்த்த ஸ்ரீ சாய்நாதர்** அவர்களுக்கும், இப்புண்ணிய தேசத்தில் அவதரித்த **மகான்கள்** அனைவரின் பாதங்களிலும் படர்ந்த புழுதிப் படலத்திற்கும் என் சிரம் தாழ்த்தி வணங்கி இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.

குரு கடாக்ஷம் பரிபூரணம்!



NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# முன்னுரை

**கலியுகத் தெய்வமான ஷீரடி சமர்த்த ஸ்ரீ சாய் பாபா, மகா சமாதி நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு,** அடியேன் ஸ்ரீ சாய் பாபாவைக் குறித்து எழுத ஆர்வம் கொண்டேன். இப்பணியை ஆற்றுவதற்கு முன்னர், ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரங்களான ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே) ஸ்வாமிகள் போன்ற மாபெரும் மகான்களின் திவ்ய சரித்திரங்களை தமிழாக்கம் செய்யும் சௌபாக்கியத்தை, சத்குரு ஸ்ரீ சாய்நாதர் அடியேனுக்கு அருளினார்.

இச்சமயத்தில் பாபாவின் அன்புக்கு பாத்திரமான, ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்கள் இயற்றிய உலகப் புகழ்பெற்ற "சந்த் கதாம்ருத்", "பக்தலீலாம்ருத்", "பக்தசாராம்ருத்" என்ற உயர்ந்த ஞான நூல்களை படிக்கும் வாய்ப்பை பெற்றேன்! மகாராஷ்டிரா தேசத்தின் "சந்த்கவி" என்று போற்றப்படுகின்ற ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் தமது படைப்புகளில் ஷீரடி ஸ்ரீ சாய் பாபாவைக் குறித்து வரலாற்று சிறப்பு மிக்க ஏழு அத்தியாயங்களை ஸ்ரீ சாய் குருசரித்திரம் என்ற தலைப்பில் படைத்து அதில் ஒரு அத்தியாயம் முழுவதையும், ஸ்ரீ சாய் பாபாவின் குருவாக, அவரை வழிநடத்திய, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள், இவ்வுலக நன்மைக்காக, பாபாவின் உயிரைக் காத்து, நம் அனைவருக்கும் பொக்கிஷமாக அருளியுள்ளார். மகத்துவம் நிறைந்த இந்நூற்றாண்டு விழாவில் பாபாவின் குருவான, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுக்கு, உலகம் முழுவதும் நிறைந்திருக்கும் ஸ்ரீ சாய்நாதரின் பக்தர்களின் சார்பில், நன்றியைத் தெரிவிக்கும் விதமாக ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் திவ்ய சரித்திரமும், அற்புதங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

ஸ்ரீ ஷீரடி சாய் பாபாவின் அற்புதங்களை முதன்முதலாக தொகுத்து, இவ்வுலகிற்கு அருளிய பெருமை ஸ்ரீ தாஸ்கணு மகராஜ்

NOT FOR SALE

அவர்களையே சாரும். மகத்துவமான இப்பணியை அவர், ஷீரடியில், பாபா தன் ஸ்தூல சரீரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, தாம் நேரிடையாகக் கண்டு அனுபவித்த பாபாவின் பல அற்புதங்களை, அவருடைய ஆசீர்வாதம் பெற்று அருளியதே ஸ்ரீ சாயி குருசரித்திரம் என்ற இப்புனித நூலாகும். இந்நூலை இயற்றுவதற்காக ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்கள், பாபா தமது பால்ய பருவத்தில் வாழ்ந்த சேலு, மனாவத் (ஆந்திரபிரதேசம், கர்நாடகா) முதலிய கிராமங்களுக்குச் சென்று அரும்பாடுபட்டு, பல தகவல்களை சேகரித்து, ஸ்ரீ சாயி குருசரித்திரம் என்ற இப்புனித நூலை நமக்கு அருளியுள்ளார்.

தாஸ்கணு மகராஜ் 1903-1906 -இல் பதிவுசெய்த பாபாவின் பல அற்புதங்கள், ஏறக்குறைய 20 வருடங்களுக்கு பிறகு (1922-1923) திரு. ஹேமத்பந்த் அவர்கள் எழுதிய ஸ்ரீ சாயி சத்சரித்திரத்திலும் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவைப் பற்றி முதன்முதலாக எழுதப்பட்ட இப்புனித நூலை, தமிழாக்கம் செய்யும் மாபெரும் வாய்ப்பை ஸ்ரீ சாய் பாபா அடியேனுக்கு வழங்கியதற்காக சத்குருவிற்கு அனந்த கோடி நமஸ்காரங்களை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புனித நூலை இயற்றிய ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவருடைய வாழ்க்கை வரலாறும், இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீசாய் பாபா மகாசமாதி அடைவதற்கு 36 நாட்களுக்கு முன்னர் பாபாவின் ஆசீர்வாதத்துடன், ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அருளிய "ஸ்ரீ சாயிநாதரின் ஸ்தவன மஞ்சரி" என்ற ஸ்தோத்திரத்தின் விளக்க உரையையும், அடியேன் பணிவுடன் சமர்ப்பித்துள்ளேன். பக்தர்கள் ஸ்ரீ சாய்நாதரின் ஸ்தவன மஞ்சரியை பாராயணம் செய்து பாபாவின் அருளைப் பெற வேண்டுகிறேன்! ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், பாபாவின் ஆரத்தி பாடல்களையும், திரு. அட்கர் அவர்களோடு இணைந்து எழுதியுள்ளார். ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், பாபாவுடன் கொண்ட நெருங்கிய உறவுக்கு எடுத்துக்காட்டாக, பாபா மகா சமாதி அடைந்தவுடன், முதன் முதலாக தமது சூட்சும சரீரத்தில் பண்டரிபுரம் சென்று, ஸ்ரீ தாஸ்கணு அவர்களை தமக்கு ஆரத்தி

NOT FOR SALE

எடுக்குமாறு அன்புடன் அழைத்தார்.

ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள அடியேன், அவரது மகாசமாதி அமைந்த இடமான ஹுசைன்புரா (கர்நாடகம்) சென்று, அக்கிராம மக்களிடையே சேகரித்த அற்புதங்களை இந்நூலில் இறுதியில் பதிவு செய்துள்ளேன். ஸ்ரீ சாயி குருசரித்திரம் என்ற இந்த புனித நூலை பக்தியோடு, ஏழு நாட்களுக்குள் பாராயணம் செய்யும் பக்தர்கள், ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனைப் பெறுவார்கள் என்ற வாக்குறுதியை ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், பாபாவின் சந்நிதானத்தில், பாபாவை சாட்சியாக வைத்து அனைவருக்கும் அறிவிக்கின்றார்.

பாபா வாழ்ந்த காலத்தில் பாபாவின் அருளோடும், ஆசீர்வாதத்துடன் இயற்றப்பட்ட ஸ்ரீ சாய் குருசரித்திரம் என்ற இந்த நூலை **கும்பகோணம் ஸ்ரீ தத்தசாயி தியான பீடத்தில், பாபாவின் சேவைக்கு சமர்ப்பணம்** செய்கிறேன். இந்நூலை பக்தியோடு தட்டச்சு செய்த பாபாவின் பக்தர் திரு. வேல்முருகன் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு அளித்த கும்பகோணம் நாடார் பிரஸ் நிறுவனத்திற்கும், இப்புனித நூலை எழுத எனக்கு உறுதுணையாக இருந்த எனது குரு திரு. பிரேமா சாய்ராம் அவர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், மகான்களின் பாதையில் என்னை வழிநடத்தும், ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரித்திரத்தை தமிழாக்கம் செய்த திரு. சந்தானம் அவர்களுக்கும், எனது சகோதரரும், 'சாயி என் வாழ்க்கை உன்னோடுதான்' பத்திரிகை ஆசிரியருமான திரு.சிவநேசன் அவர்களுக்கும், பாபாவின் குருவைப் பற்றி சகல விவரங்களையும் எனக்கு அளித்த உயர்திரு. ஹனுமந்த ராயுடு அவர்களுக்கும் மற்றும் இந்நூலை வெளியிட உதவிய நல்ல உள்ளங்களுக்கும், சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இத்திவ்ய சரித்திரத்தை தமிழ் உலகிற்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE

# ஸ்ரீ சீரடி தத்த சாயி தியான பீடம்

பெரியார் நகர், சாக்கோட்டை, கும்பகோணம்.

## - ஒரு பார்வை -

ஸ்ரீ சீரடி சாயி மஹராஜ் பவுண்டேஷன் அறக்கட்டளையின் நிறுவனர், பாபாவின் முதன்மையான சேவகர் சாயி. எஸ்.ஜெயகுமார் அவர்கள், பாபாவின் சூட்சும சரீர கட்டளைகளை ஏற்று, 2010 ஆவது ஆண்டு, கும்பகோணம், சாக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் பாபாவின் வழிபாடுகளை முறையாக துவங்கினார். இச்சேவைக்காக சாயி. எஸ்.ஜெயக்குமார் தமது இல்லத்தின் ஒரு பகுதியையே தத்த சாயியின் வழிபாட்டு கூடமாக மாற்றிவிட்டார். சீரடியில் பாபாவிற்கு நடக்கும் நான்கு வேளை ஆரத்தி முதல் அபிஷேக, அர்ச்சனை முதலிய பூஜா விதிமுறைகள் இன்றளவும் அங்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுமக்களும், ஆர்வத்துடன் வழிபாடுகளில் கலந்து கொண்டு சேவை செய்கிறார்கள். ஒவ்வொரு வியாழக்கிழமை அன்னதானம் மற்றும் பௌர்ணமி தினத்தில் ஸ்ரீ சாயி சத்யநாராயண பூஜையும், ஸ்ரீ இராமநவமி, குருபூர்ணிமா, ஸ்ரீ பாபாவின் மகா சமாதி, தத்த ஜெயந்தி, ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி போன்ற விசேஷ நாட்களில் சிறப்பு வழிபாடுகளும், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

2012 ஆவது ஆண்டு, இங்கு சுமார் 3.5 அடி உயரமுள்ள ஐம்பொன்னால் ஆகிய பாபாவின் திருவுருவம் வைக்கப்பட்டு தினமும் ஆராதனை வழிபாடுகளும், நைவேத்யமும் செய்யப்படுகின்றது. "மானுட சேவா, மாதவா சேவா" என்று பாபா கூறுவதைப் போன்று ஆன்மீக சேவை மட்டுமல்லாமல், பல சமூக சேவைகளும் இவ்வாலய குழுவினரால் நடைபெற்று வருகின்றது.

- புற்றுநோயாளிக்கு சிகிச்சைக் காண உதவி
- பார்வையற்றோருக்கு தேவையான உதவிகள்
- ஏழை மாணவர்கள் கல்வி பயில்வதற்கான நிதி உதவிகள்
- ஆதரவற்றோருக்கு தேவையான உதவிகள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

திரு. சாயி. எஸ்.ஜெயக்குமார் அவர்களின் இடைவிடாத முயற்சியால், ஆலயத்திற்கென்று தனியாக நிலம் 2016 இல் வாங்கப்பட்டது. 09.03.2017 அன்று பாபாவின் உத்தரவின்படி பூமி பூஜை செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு பல சிறப்புகள் உண்டு. முதலாவதாக சீரடி தத்த சாயி தியான மண்டபம் பாதாள அறையில் அமைக்கப்பட்டுள்ளது. மிகச் சிறந்த முறையில் கட்டப்பட்ட இந்த தியான மண்டபம் முழுவதுமே குளிரூட்டப்பட்டு, பக்தர்கள் ஆனந்தமாகவும், அமைதியாகவும் தியானம் செய்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் இரண்டாவது சிறப்பு அம்சம், ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரிகள் அனைவரும் இங்கு வீற்றிருப்பது தான். ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர், ஸ்ரீகுரு நிருசிம்ஹ சரஸ்வதி, ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ், ஸ்ரீ மாணிக்க பிரபு, ஷேக்காவ் ஸ்ரீ கஜானன் மகராஜ் போன்ற மாபெரும் தத்த அவதாரிகளுக்கென்று தனித்தனியே பீடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் திருவுருவச்சிலையை ஷேக்காவ் ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானமே அளித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சிறப்பு அம்சமாக அகத்திய மகரிஷி, முரளீதரர் கிருஷ்ணன் ஆகியோரது ஐம்பொன் திருமேனி தியான பீடத்தை அலங்கரிக்கிறது.

இவ்வாலயத்தின் மூன்றாவது சிறப்பு என்னவென்றால் தல விருட்சமாக, சுயம்புவாக அத்திமரம் உள்ளது. மும்மூர்த்திகளின் உருவத்தில் மூன்று பகுதிகளாக தொடங்கி, மீண்டும் இணைந்து காணப்படுவதாகும். புனித வேப்ப மரத்தடியில் குருஸ்தானமாக துவாரக மாயி வீற்றிருக்கின்றார்.

2017 இல் துவக்கப்பட்ட ஆலயப் பணியானது, அறங்காவலர் திரு. சாயி. எஸ்.ஜெயகுமார் அவர்களின் அயராத உழைப்பினால் 2018, அக்டோபர் 19ஆம் தேதி, விஜயதசமி நன்னாளில் பாபாவின், மகா சமாதி நூற்றாண்டு நிறைவு விழாவில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. பாபாவின் சூட்சும சரீர

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கட்டளைகளை மானிட உருவில் செய்து முடிக்கின்ற முதல் பணியாள் என்று சொல்வதுதான் எனது வாழ்வின் இலட்சியம் என்கிறார் சாயி. ஜெயக்குமார். எனவே நடக்கிற காரியங்கள் அத்தனையும், பாபாவே நடத்துகிறார் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார்.

இந்த தியான பீடத்தில் ஆந்திராவைச் சார்ந்த சுவாமி ராம் ரத்தன்ஜி அவர்களால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்றி வைக்கப்பட்ட மகா அணையா தீபம் இன்றும் பிரகாசமாக எரிகிறது. இந்த தியான பீடத்தில் 48 நாட்கள் தொடர்ந்து சத்சரித பாராயணம் நடத்தப்பட்டது சிறப்புக்குரிய ஒன்று. சேங்காலிபுரம் தத்தகுடீரம், தத்தாத்ரேயர், கார்த்தவீர்யார்ச்சுனர், ஸ்ரீ ராமானந்த சுவாமிகள் அவர்களின் ஆசிகளோடு பணிகள் சிறப்பாக நடைபெற்று ஸ்ரீ கிருஷ்ண சாயி மந்திர் கும்பாபிஷேகம் நிறைவுற்றது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக பாபாவின் ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் எழுதிய ஸ்ரீ சாய் குருசரித்திரம் என்ற இந்நூல், **பாபா மாமி** என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் எனது சகோதரியான, திருமதி. **ரமா சுப்ரமணியன்** அவர்களால் மிகச்சிறப்பாக தமிழாக்கம் செய்யப்பட்டு, பாபா மகாசமாதி நிறைவு நாள் அன்று திரு. **ஞான பாபாஜி** அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டு, அன்னை. **அனந்தலெட்சுமி கிருஷ்ணன்** அவர்களின் பொற்கரங்களால் பெற்றுக்கொள்வது இந்த அறக்கட்டளைக்கு கிடைத்த மகத்தான வாய்ப்பாகும்.

மதச்சார்பற்ற மனித நேயமும், மக்கள் சேவையும், ஆன்மீக பணியும் அறக்கட்டளையின் நோக்கமாக அமைந்ததற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்குருவின் திருவடி சரணம்!

இங்ஙனம்,
திரு. **சந்தானம்**
ஆசிரியர், ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரித்தாம்ருதம்,
நெய்வேலி.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பொருளடக்கம்

**அத்தியாயம் - 1** 1- 46

- கடவுள் வாழ்த்து
- ஷீரடியில் சத்குரு பாபா
- தண்ணீரில் விளக்கேற்றிய அற்புதம்
- பாபா உறங்கும் பலகை
- பாபாவின் உத்தரவிற்கு கீழ்ப்படிந்தால் விளையும் நன்மைகள்
- அப்பா குல்கர்ணியின் விதியை மாற்றி விடுதலை அளித்த அற்புதம்
- கிருஷ்ண பெண்சே, பாபாவை உணர்ந்து கொண்ட அற்புதம்
- குல்கர்னியன் முடிவை அறிவித்து, முக்தி அளித்த அற்புதம்
- வைக்கோல் பொதியும், பாபாவின் லீலைகளும், உபதேசங்களும்
- பாபாவின் தீர்க்க தரிசனம்
- ஹரி பந்த்திற்கு குழந்தை வரம் அளித்த நிகழ்வு

**அத்தியாயம் - 2** 47- 77

- அனைத்தையும் அறிந்து கொள்ளும் நிலை
- கர்மாவைப் பற்றிய விளக்கம்

**அத்தியாயம் - 3** 78- 83

- கற்ற வழியை பின்பற்ற, பாபாவின் உபதேசங்கள்

**அத்தியாயம் - 4** 84- 105

- இறைவனை அடைவதற்கு முன் அவரை உணர்ந்து கொள்ளும் வழி - நானா சந்தோர்கர்

**அத்தியாயம் - 5** 106- 137

- பாபாவின் குரு ஸ்ரீ வெங்குசா மகராஜ் - திவ்ய சரித்திரம் துவக்கம்
- ஸ்ரீ மகராஜ் தனது புனிதத்துவத்தை நிரூபித்த அற்புதம்
- ஸ்ரீ சத்குரு ஷீரடி சாய்பாபாவின் வருகை குறித்த தகவல்
- பாபாவை ஆபத்திலிருந்து காப்பாற்றிய ஸ்ரீ வெங்குசா மகராஜ் - அற்புதம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

**அத்தியாயம் - 6** 138 - 168

- சந்துபாய் படேல், பாபாவை தரிசித்த நிகழ்வு
- பாபாவின், ஷீரடி வருகை
- தன்னிலை அறியச் செய்தல்
- புனித வேப்ப மரம்
- சாது கங்காகீர் புவாவின் சந்திப்பு
- ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அளித்த தேங்காய் அற்புதம்

**அத்தியாயம் - 7** 139 - 198

- குருஸ்தான் - குருவின் புனித இடம்
- தீக்ஷித்திற்கு பாண்டுரங்கனாக காட்சி அளித்த அற்புதம்
- மேகாவின் தூய்மையான அன்பு
- குரு ஸ்ரீவெங்குசா மகராஜ் அளித்த புனித செங்கல்லின் மகத்துவம்
- ரத்தன்ஜியிடம் நிகழ்த்திய லீலை
- மதப்பிரிவினைகளை நீக்க வேண்டி பாபாவின் உபதேசம்
- சத்குருவின் லீலைகள்
- ஸ்ரீ தாஸ்கணுவின் சமர்ப்பணம்

ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறு 199-241

ஸ்ரீ தாஸ்கணு அருளிய ஸ்ரீ சாய்நாத ஸ்தவன மஞ்சரி 242-269

ஸ்ரீ வெங்குசா மகராஜ் மகா சமாதி - ஆசிரியரின் அனுபவங்கள் 270-288

NOT FOR SALE



நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல



ஓம் ஸ்ரீ சாய்ராம்
ஓம் ஸ்ரீ கணேசாய நமஹ!
ஸ்ரீ சரஸ்வதி தேவியே நமஹ!
ஸ்ரீ குருப்யோ நமஹ!

## அத்தியாயம் - 1

எம் முன்னோர்களுக்கும், எமது குலதெய்வத்திற்கும் நமஸ்காரங்கள்.
மூலாதார மூர்த்தியான ஸ்ரீ கணேசனே உம்மை போற்றுகின்றேன்!.

ஓ உமாபதியே, பஞ்சமுக ஈஸ்வரனே உம்மை சரணடைகின்றேன்!. அக்னியை போன்ற வீரச்சுடரே! சர்வேஸ்வரா! உம்மைப் பணிகின்றேன்!. இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் அன்னையாகவும், தந்தையாகவும் விளங்குபவனே! தயவு கூர்ந்து இக்குழந்தையை புறக்கணிக்க வேண்டாம்! கற்பனைக்கும் எட்டாத கம்பீரமும், அழகும் நிறைந்த கைலாச பர்வதத்தை வாசஸ்தலமாக கொண்டவரே! ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் உம்மை நோக்கி தவம் செய்த கைலாச பர்வதத்தின் நாதரே! உம்மை அழைக்காமல் யாகம் வளர்த்த தக்ஷப்ரஜாபதியை வதைக்க அகோர வீரபத்திரராக அவதாரம் எடுத்தவரே! உன் பக்தர்களை எப்போதும் காத்து இரட்சிப்பவரே!

NOT FOR SALE

அவ்வாறு இருக்க பார்வதிரமணர் ஆகிய தாம் என்னை மட்டும் நிராகரிப்பது ஏன்? என்னுடைய பிரார்த்தனைக்கு ஏன் தாம் இன்னும் செவிசாய்க்கவில்லை?. ஓ சூலபாணியே! ஒருவேளை நான் ஒரு பாவி என்ற காரணத்தினால் என்னை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாயா? அல்லது தம்முடைய கருணையைப்பெற நான் தகுதி அற்றவனா? உமாபதியே மிருக குணங்களை உடைய மனிதக் குழந்தையாக என்னை இவ்வுலகில் பிறக்கச்செய்த தாங்கள். அத்தகைய குணங்களால் மகத்துவம் எதுவும் இன்றி அலைந்து கொண்டிருக்கும் இக்குழந்தையை தயை கூர்ந்து

புறந்தள்ளாதீர்கள்! சர்வேஸ்வரரின் உண்மையான பக்தர்கள் நிச்சயமாக மரணத்திற்கு பின்னர் அவருடன் பரமானந்தமாக ஐக்கியம் அடைவார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மீண்டும் பிறந்தாலும் அவர்கள் ஸ்ரீஹரியுடன் இணைந்தவர்கள் ஆவார்கள். மனிதர்கள் மட்டுமே பேதங்களுடன் அலைகின்றனர். இறைவனைச் சேர குலம், அந்தஸ்து, இனம் எதுவுமே தடையாக இருந்ததில்லை. அனைவரையும் ஒரே விதமாக காணும் காட்சி இறைவனுக்கு மட்டுமே உரித்ததாகும்.

ஆகையால், பக்தர்களாகிய நாம் நமக்குள் பேதங்கள் எதுவுமின்றி நம்முடைய குல வழக்கத்தை குறித்து பெருமை எதுவும் கொள்ளாமல் இருக்க வேண்டும். மாபெரும் மகான்களாகிய கபீர்தாஸரும் வேறு குலத்தைச் சேர்ந்த கமலதாஸரும் இறைவனின் அன்புக்குரியவர்கள். அவர்களிடம் இறைவன் குல வேறுபாடுகளை காணவில்லை. ஸ்ரீ பாண்டுரங்கன் தமது பக்தர்களின் கிரஹபலன்கள் மிகவும் கேடு விளைவிக்கும் நிலையில் இருந்தாலும் அவர்களையும் தடுமாறி விழாமல் காத்து இரட்சிக்கும் கருணையுள்ளவர். எக்குலத்தில் பிறந்தாலும் வசதிகள் அற்ற ஏழைகள் ஆனாலும் இறைவனை நோக்கிய ஒருமுகமான பக்தியையும், மலைப்பாறையை நிகர்த்த நம்பிக்கையும் கொண்டவர்களே ஸ்ரீஹரியின் அன்புக்கு பாத்திரமானவர்கள் ஆவார்கள்.

நதிக்கரையில்தான் நாகரீகம் வளர்ந்ததாக நம் தேச வரலாறு கூறுகின்றது. அதே நதிக்கரையில்தான் இறை அவதாரங்களும் தோன்றி இவ்வுலகில் தர்மத்தை நிலைநாட்டினர். புனித கோதாவரி நதியின் தெற்குப் பகுதியில் சுமார் பனிரெண்டு (12) மைல்கல் தொலைவில் கோபர்காவ் என்றழைக்கப்பட்ட பகுதியில் அமைந்த ஒரு சிறிய கிராமமே ஷீரடி ஆகும். இன்று இவ்வுலகம்

NOT FOR SALE

முழுவதும் போற்றிப் பாராட்டி வரும் இச்சிறிய கிராமம் அன்று பாபாவின் வருகையின் முன்னர், வறுமையில் வாடிய வறண்ட ஒரு பிரதேசமாக காட்சி அளித்தது. பாபா, ஷீரடி என்ற அச்சிறு கிராமத்தின் தலைவிதியையே மாற்றி அமைத்தார்.

நம் சத்குரு சாய்நாதர் அங்கு வருவதற்கு முன்னர் எங்கிருந்தார்? என்ன செய்து கொண்டிருந்தார்? அவருடைய பெற்றோர், பூர்வீகம், குலம் இவை குறித்து உறுதியாக எவராலும் கூற இயலாது. மகான்களின் அவதாரம் எப்போது எங்கு தோன்றும் என்பதை இறைவனால் மட்டுமே தீர்மானிக்க இயலும். ஷீரடிக்கு வருகை தந்ததும் சாயி என்ற நாமத்தில் அன்புடன் அனைவராலும் அழைக்கப்பட்டார். சச்சிதானந்த சத்குருவான இத்தெய்வத்தின் லீலைகள் குறித்து ஒன்றும் அறியாத தாஸ்கணுவான நான் எவ்வாறு எடுத்துக்கூறுவேன்?.

எவராவது பாபாவிடம் சென்று "தேவா தாங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்று கேட்டால் அதற்கு அவர் கூறும் பதில் இதுதான், ஆகாயத்தில், நீருண்ட மேகங்கள் ஒன்றாக திரண்டு மின்னலைப் பாய்ச்சி இடி ஓசையோடு பூமியில் விழும் மழைத்துளிகளில் நானும் ஒரு துளியாவேன்!. நான் தண்ணீராக பூமியில் விழுந்ததால் ஊரும், பெயரும் இல்லாதவனாவேன்! தம்மிடம் வந்து சேர்ந்தவை எதுவாக இருப்பினும் அவற்றின் இயல்பையே கொள்ளும் தண்ணீராவேன்! ஆகையால் எனக்கென்று எக்குணங்களும் தனியாக இல்லை. என்னுடைய இந்த உடல் சென்ற ஜென்மத்தில் நான் செய்த வினைப்பயனாகும்."

என் கர்மவினையின் பயனை தடையின்றி அதற்கேற்றவாறு எனது இந்த சரீரம் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. என்னுடைய ஸ்தூல சரீரத்தை வைத்து இவ்வுலக மக்கள் என்னை அறிந்து கொள்கின்றனர். ஆனால் இப்பிரபஞ்சமே என்னுடைய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருப்பிடம். நான் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளேன். பிரம்மம் எனது தந்தை ஆவார். மாயை எனது தாய் ஆவாள். இவ்விரண்டின் சங்கமமே நீங்கள் காணும் என்னுடைய இந்த உடலாகும். இவ்வாறு மிகத் தெளிவாக இவ்வுலகத்தில் தம்முடைய வருகையை குறித்து பாபா குறிப்பிடுகிறார். நாம் காணும் யாவும் நிலையற்றது என்ற தத்துவத்தை தம் அடியவர்களுக்கு எப்போதும் போதித்தார்.

கருணைக்கடலான ஸ்ரீ சாய் மகராஜ் தாம் உடலோடு வாழ்ந்த காலத்தில் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அவருடைய தெய்வீக ஆற்றல் அளவிட இயலாததாகும். அத்தகைய தெய்வத்தின் லீலைகள் அனைத்தையும் இந்த தாஸ்கணுவால் எவ்வாறு விவரிக்க இயலும்?. பாபாவால் நிகழ்த்தப்படும் அற்புதங்கள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு மகத்துவமான காரணம் புதைந்துள்ளதை ஷீரடியில் வாழ்ந்த மக்களால் முதலில் புரிந்துகொள்ள இயலவில்லை. இறைவனுடைய செய்கைகளை புரிந்துகொள்ளும் பக்குவம் வாய்க்கப்பெற்றவர்களால் மட்டுமே அது சாத்தியமாகும்.

அக்காலத்தில் ஷீரடி என்ற சிறிய கிராமத்தின் கடைத் தெருவில் தெய்வத்திருவுருவான நம் பாபா தம் இருகைகளை நீட்டி தமக்கு எண்ணெய் வேண்டுமென்று யாசகம் கேட்பார். அவர்கள் அளிக்கும் எண்ணெயை ஒரு தகர குவளையில் வாங்கி வந்து இரவு முழுவதும் தமது மசூதியில் விளக்கேற்றி எரிய வைத்தார். சத்குருவின் இந்த செய்கைக்கான காரணம் அறியாத கடைக்காரர்கள் அனைவரும் ஒன்றாக கூடி இனிமேல் இந்த மனிதருக்கு எண்ணெய் அளிக்க இயலாது என்று முடிவெடுத்தனர். மறுநாள் நம் சத்குரு எண்ணெய் வேண்டி வரும் வேளையில் அனைவரும் தங்களிடம் எண்ணெய் இல்லை என்று பொய் உரைத்தனர். ஒருவேளை அவர்கள் தங்களால் எண்ணெய் தர

NOT FOR SALE

இயலவில்லை என்றும் சிறுவியாபாரிகளான தங்களின் வியாபாரமும் இலாபகரமாக இல்லை என்று பாபவிடம் வருந்திக் கூறியிருந்தால் பாபா அவர்களின் கஜானாவை பெருகவே செய்திருப்பார். ஆனால் அவர்கள் தங்களிடம் எண்ணெய் ஒரு துளியும் இல்லை என பொய்யுரைத்தனர். மனிதர்கள் தீய குணங்களால் ஞானிகளிடம் பொய்யுரைத்து, பாவக் கடலில், மூழ்கி விடுகின்றனர்.

தம்முடைய கர்ம வினைப்பயனால் ஆட்டுவிக்கப்பட்டு நேர்மையான வழியில் இருந்து விலகிச் செல்கின்றனர். பொய்யுரைத்தல் என்பது பாவங்களிலேயே மிகக் கொடிய பாவமாகும். மகான்களிடமும், ஞானிகளிடமும் பொய்யுரைத்தால் இறைவனுடைய அருளை ஒருபோதும் பெற இயலாது. உண்மையான பக்தர்களுக்கு இறைவனே சேவகனாக இருந்து சேவை செய்ய விரும்புவார். ஜெபமும், தவமும், மந்திர உச்சாடனங்களும், பூஜைகளும் எதுவுமே புரிய இயலாவிட்டாலும் பொய்யுரைக்காமல், நேர்மையாக இருப்பவர்களிடம் இறைவனே ஓடி வந்து அருள்புரிவார். நேர்மையும், உண்மையும் ஒருவரிடம் இருந்தால் அவர்கள் மேற்கூறிய எவ்வித சாதனைகளை புரியத் தவறினாலும் அவர்கள் இறைவனாலும், ஞானிகளாலும், மகான்களாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். எல்லா தர்மங்களிலும் தலைசிறந்த தர்மம் உண்மையும், நேர்மையும் ஆகும். மோட்சத்தை அடைய மிக எளிய வழியும் அதுவே ஆகும்.

சத்குரு சாய்நாத மகாராஜ் ஒருவரையும் கடிந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவர் அமைதியாக மசூதி திரும்பினார். ஷீரடி மட்டுமல்லாது அதனைச் சுற்றியுள்ள அனைத்து கிராமவாசிகளும் கண்டு வியக்கத்தக்க ஒரு அற்புதத்தை அங்கு நிகழ்த்தினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாவிடம் ஒரே ஒரு விளக்கு எரிவதற்குண்டான எண்ணெய் மட்டுமே இருந்தது. அதைத் தம் தகர குவளையில் தண்ணீருடன் கலந்து, தம் கண்களை மூடி தியானித்தார். அதிலிருந்து ஒரு சிறிய துளியை தமது வாயில் ஊற்றிக்கொண்டார். பிறகு தண்ணீரை நிரப்பி அனைத்து விளக்குகளையும் விடிய விடிய எரிய வைத்தார்.

அதற்குள் அங்கு கூடி இருந்த மக்கள் பலவிதமாக தமக்குள் உரையாடினார். "இந்த மனிதருக்கு சித்தம் கலங்கிவிட்டதா! உயிரில்லாத விதையை எவ்வாறு முளைக்கச் செய்ய இயலும்? கருப்பை இல்லாத ஒரு பெண் எவ்வாறு கருவைச் சுமக்க இயலும்? இந்த மனிதர் சித்தப்பிரமையால் நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்!". இவ்வாறெல்லாம் சத்குருவைப் பற்றி பேசத் துவங்கிய மக்களைப் பார்த்து, திரு. நானாசாஹேப் டாங்லே என்ற உண்மையான பாபாவின் பக்தர், "மக்களே நீங்கள் எல்லோரும் கண்கள் இருந்தும் குருடர்களாக இருக்கின்றீர்கள்! உங்களுடைய அறியாமையால் இந்த தெய்வத்தைப் பற்றி அவதூறு உரைக்காதீர்கள்! இவருடைய ஆற்றல் யாது என்பதை இன்று நீங்கள் அனைவரும் காண்பீர்கள்!"

NOT FOR SALE

பெரிய மலையிலிருந்து உடைந்து கீழே விழும் பாறைகளின் நடுவில் இருக்கும் வைரத்தையும், கல்லாக நினைத்துக் கொண்டுள்ளீர்கள்! இப்பொழுது இந்த பக்கிரி செய்யும் செயலைப் பாருங்கள்! என்று கூறியதும் மக்கள் அனைவரும் அங்கு நிகழ்ந்த அந்த அற்புதத்தை சாட்சியாக நின்று கண்டு வியந்தனர்.

அனைவரும் சத்குருவின் பாதத்தில் விழுந்து வணங்கி தம்மை மன்னிக்கும்படி வேண்டினர். "பாபாவே நாங்கள் அனைவரும் உங்கள் குழந்தைகளாவோம்! நீரே எம்முடைய

தாயாவீர், தயை கூர்ந்து கருணையோடு எங்களை மன்னித்தருள்வீர்" என்று மன்றாடினர். தங்களிடம் கோபித்துக் கொள்ள வேண்டாம் என்றும் தங்களுக்கு சாபம் எதுவும் அளித்துவிட வேண்டாம் என்றும் வேண்டினர்.

பாபா கருணையோடு அவர்களை நோக்கி "நீங்கள் ஒருபோதும் பொய்யுரைத்து இறைவனின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்! எது நேரினும் உண்மையை கூறினால், இறைவன் உங்களுடைய துன்பத்தைப் போக்குவார். உங்களால் இயன்ற அளவு தர்ம காரியங்களுக்கு அளித்து, அதன் பலனை உங்கள் தலைமுறைக்கும் பெற்று மகிழுங்கள்! எவனொருவன் தம் வாழ்நாள் முழுவதும் தர்ம காரியங்களில் ஈடுபடுகிறானோ அவனுடைய இறுதி நேரத்தில் இறைவனுடைய அருட்காட்சியைக் காணும் வரத்தைப் பெறுகிறான்! இதுவே சத்தியமாகும்! என்னுடைய இந்தக் கருத்தை உங்கள் மனதில் நன்றாக பதிய வைத்துக்கொள்ளுங்கள்!" என்றார். பாபாவின் இந்த அற்புத உபதேசத்தைக் கேட்டவுடன் மக்கள் மனம் மகிழ்ந்து அவருக்கு நன்றி தெரிவித்து தங்கள் இல்லம் திரும்பினர்.

பாபா மகா யோகீஸ்வரர், தாஸ்கணுவாகிய நான் அவருடைய மகிமைகளை எடுத்துக் சொல்வதற்குரிய ஞானத்தையோ, அறிவாற்றலையோ பெறாத காரணத்தால், அது எனது கற்பனைக்கும் எட்டாத அறிவாகும். பாபாவின் படுக்கையைப் பற்றி திருவாளர் நானா சாஹேப் விவரிக்கும் போது தான் இதுவரை கண்டிராத அதிசயமாக அமைந்ததாக கூறுகிறார். ஒரே ஒரு சிறிய மரப்பலகை, இற்றுப்போன ஒரு கயிற்றில், இடிபாடுகளின் நடுவே இருந்த அந்த மசூதியின் கூரையில் நமது பாபாவை சுமந்து கொண்டு ஆனந்தமாக ஊஞ்சலாடும் அழகை நான் எங்கனம் எடுத்துக்கூறுவேன்! அந்த ஊஞ்சலின் நான்கு மூலைகளிலும் அகல்விளக்கை ஏற்றி வைத்து ஸ்வாமி துயில்

NOT FOR SALE

கொள்ளும் அழகை கண்டவர்கள் வேறு எதையும் காண தேவையில்லை! இது பாபாவின் யோக ஆற்றலின் வெளிப்பாடு ஆகும். எல்லா சித்திகளும் கைவரப் பெற்ற நம் பாபா தம் சரீரத்தை மயிலிறகை விட மென்மையாக மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தவர். பாபா துயில் கொள்ளும் அழகை காண பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வரத் தொடங்கினர். ஆனால் அவ்வாறு அங்கு குழுமியிருந்த சிலர் இதில் ஏதோ ஒரு தந்திர வேலை அடங்கியிருப்பதாக பேச் துவங்கினர். இனியும் இவர்களின் அறியாமைக்கு இடம் அளிக்க விருப்பமில்லாமல் பாபா அப்பலகையை சுக்கு நூறாக உடைத்தெறிந்து விட்டார். ஞானிகளையும் மகான்களையும் ஒரு போதும் சாதாரண மனிதர்களாக நினைத்துவிடக் கூடாது. அது மாபெரும் பாவமாகும். அவர்கள் அளவில்லா ஆற்றலை தன்னகத்தே கொண்டவர்கள்.

ஷீரடி என்ற கிராமம் பாபாவின் வருகையினால், மக்களின் புனித யாத்திரை செல்லும் ஸ்தலமாக மாறிவிட்டது. பக்தர்களின் கர்ம வினைகளை போக்க வல்ல உலகப் புகழ் பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாக ஷீரடி என்ற புனித தோட்டம், பாபா என்ற வாசனை மலரால் மணம் கமழ்கின்றது. எவ்வாறு துளையிடப்பட்ட காதுகளில் அவற்றில் பொருத்தப்படும் வைர காதணியால் அக்காதுகள் பெருமையுறுமோ, எவ்வாறு தங்கள் நாணயங்களை முடியிருந்த வஸ்திரத்தின் பெருமை அதன் உள்ளே இருக்கும் தங்கத்தின் காரணமாகவே அமையும் என்பது போல ஷீரடி என்ற கிராமம் பாபா என்ற தெய்வத் திருவுருவால் மிகப்பெரிய புகழை அடைந்தது.

மகாராஷ்டிரா தேசத்தில் உள்ள பல நகரங்களில் இருந்தும் மக்கள் பாபாவின் தரிசனம் பெற வரத் தொடங்கினர்.

ஒருமுறை ஒரு குழுவினர் அஹமது நகர் ஜில்லாவிலிருந்து பாபாவை தரிசிக்க வந்தனர். அவர்களில் திருவாளர் நானா

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சந்தோர்கர் என்பவர் முதன்மையானவர். அவர் அஹமத் நகர் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரி ஆவார். அவர் அனைவராலும் அன்புடன் நானாசாஹேப் என்று அழைக்கப்பட்டார். அக்குழுவில் இடம் பெற்ற இரண்டாவது நபர் இறைவனின் புகழை ஆலய விழாக்களில் பாடி அதற்கேற்ற சன்மானத்தைப் பெற்று வரும் ராமதாஸ் என்பவர் ஆவார். மூன்றாவது நபர் பாபு நாசர்கர் மற்றும் நான்காவது நபர் காமசாவ்கர் ஆவார். இவர்கள் நால்வரும் இணைந்து பாபாவின் தரிசனம் பெற ஹனுமன் ஜெயந்தி விழாவிற்கு ஒரு நாள் முன்னதாகவே ஷீரடிக்கு வந்திருந்தனர்.

அந்நால்வரில் ராமதாஸ் என்ற பாடகர் மறுநாள் அஹமத் நகரில் ஹனுமன் ஜெயந்தி விழாவில் பாடுவதற்காக செல்ல வேண்டும். அஹமத் நகரில் அமைந்த ஹனுமான் ஆலயம் சீனா (Zeena) என்ற நதிக்கரையில் அமைந்துள்ளது. மறுநாள் அங்கு பாடவேண்டும் என்பதால் ராமதாஸின் மனம் ஒரு நிலையில் இல்லை. ஒரு வேளை தம்முடன் வந்தவர்கள் பித்து பிடித்தவரைப் போல இருக்கும் இந்த கிழவரிடம் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தால், தாம் அங்கு செல்ல தாமதமாகிவிடும் என்று நினைத்தார். அவருடைய அறியாமையின் காரணமாக தாம் காணும் பாபாவே, ஸ்ரீஹனுமானின் அவதாரம் ஆவார் என்பதை புரிந்து கொள்ளும் பக்குவம் அற்றவராக இருந்தார். அவர் வண்டியோட்டியை அழைத்து தம்முடன் கூட வருகை தந்தவர்கள் பற்றி சிறிதும் யோசிக்காமல் தம்மை மட்டும் எவ்வாறாவது இரயில் நிலையத்தை விரைவாக அடையச் செய்யுமாறு கூறினார்.

பாபா சர்வாந்தர்யாமி ஆவார். அவர் நடப்பது யாவையும் அறிவார். பாபா மிகவும் பொறுமையாக நானாசாஹேப் அவர்களைப் பார்த்து "நானா முதலில் நீங்கள் நன்றாக

NOT FOR SALE

உணவருந்திவிட்டு பின்னர் செல்லுங்கள்!" என்று உத்தரவிட்டார். நானாவிற்கு பாபாவின் சொற்களே சத்தியம் என்று தோன்றியது. அதனால் அவர் ராமதாஸ் அவர்களுடன் தாம் உடனே வர இயலாது என்று கூறிவிட்டார். அக்குழுவின் மற்றொரு நபரான பாபு நாசர்கர் ராமதாஸிடம் சென்று, "ராமதாஸரே தாம் ஏன் இவ்வாறு பதற்றம் அடைகிறீர்கள்! இம்மகானை தரிசிக்க வந்தபிறகு தாம் பயப்பட வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டதும் ராமதாஸ் மிகுந்த கோபம் கொண்டார். அவர் பாபுவிடம் நான் அதிகாலைப் பொழுதிற்குள், அஹமத் நகரை சென்று அடைய வேண்டும்!.

ஒரே ஒரு வண்டி மட்டுமே தற்போது புறப்பட ஆயத்தமாக உள்ளது. இதைத் தவிர்த்துவிட்டால், நாளை நான் அங்கு சென்று சேர இயலாது!. மேலும் நாம் இந்த பைத்தியக்கார மனிதருடன் நிறைய நேரம் அமர்ந்து கொண்டிருந்து விட்டோம்! நானாசாஹேப் மிகுந்த வசதிகளை உடையவர்! ஆகையால் அவருக்கு அடுத்த வேளை உணவைக் குறித்து எந்தவித கவலையும் இல்லை! ஆனால் என் நிலைமை அவ்வாறு அல்ல! இந்த நிகழ்ச்சியை நான் தவறிவிட்டால் என்னுடைய வருமானம் தொலைந்துவிடும்! இங்கே உட்கார்ந்து இந்த மனிதரை பார்த்துக் கொண்டு இருப்பதால் என்ன பலன் கிடைத்துவிடும்? ஒரு பைசா கூட எனக்கு இங்கே கிடைக்கப் போவதில்லை! நாம் ஒப்புக்கொண்ட செயலை ஒழுங்காக செய்து முடிக்க வேண்டும்!" புகைவண்டி வருவதற்கான நேரம் நெருங்கி விட்டது! நான் விரைந்து உடனே இரயில் நிலையம் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு பாபு நாசர்கரை துணைக்கு வருமாறு கூறி அவரையும் அழைத்துக் கொண்டு இரயில் நிலையம் சென்று விட்டார்.

நானேசாஹேப் மற்றும் காம்காவ்கர் இருவரும் பாபாவின் உத்தரவிற்கு பணிந்து உணவருந்தி விட்டு பாபாவின் அருகில் வந்து அமர்ந்தனர். பாபா நானாவை நோக்கி "நானா! இந்த மனிதர்கள்

NOT FOR SALE

நடந்து கொள்வதை கவனித்தாயா! அவர்களுடன் கூட இருந்தவர்களை விட்டுவிட்டு தங்கள் சுயநலத்திற்காக தனியாக செல்வதற்கும் துணிந்து விட்டனர்! இனிமேலாவது நம் கூட இறுதிவரை பயணம் செய்பவர்கள் எவரோ, அவரை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்! எவ்வாறு மலரும், மணமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவதில்லையோ அதைப்போல நட்பு என்பது நம் வாழ்நாளின் இறுதிவரை துணையாக இருக்க வேண்டும்!" என்று அறிவுறுத்தினார். நானாவும், காம்காவ்கரும் பாபாவின் உபதேசத்தைக் கேட்டு மகிழ்ந்து அவர் அறிவுரையை பின்பற்றுவதே சிறந்ததாகும் என்று நம்பிக்கையுடன் அவர் பாதத்தில் நமஸ்காரம் செய்து விட்டு கோபர்காவ் நோக்கி சென்றனர்.

கோபர்காவ் இரயில் நிலையத்தில், நானாசாஹேப் கண்ட காட்சி அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அஹமத் நகர் உடனே செல்ல வேண்டுமென்று பாபாவின் மொழிகளை மதிக்காமல் சென்ற ராமதாஸரும், பாபுவும் புகைவண்டி தாமதமானதால், வெகு நேரமாக இரயில் நிலையத்திலேயே காத்துக் கொண்டிருந்தனர்.

நானேசாஹேப் அவர்களிடம் "ஏன் இன்னும் தாங்கள் அஹமத் நகர் புறப்படவில்லை? புகைவண்டி தாமதமாகிவிட்டதா? என்று வினவியவுடன்" ராமதாஸ் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவர் நானாவிடம் "புகைவண்டி இன்று மூன்று மணி நேரம் தாமதமாக வந்து கொண்டிருக்கிறது!" பசியால் மூன்று மணி நேரமாக பரிதவித்துக் கொண்டிருக்கிறோம்! பாபாவின் உத்தரவைக் கேட்டு உணவருந்தியிருந்தால், இவ்வாறு துன்பப்பட வேண்டிய அவசியம் இல்லை! நான் பெரிய பாவம் செய்துவிட்டேன் "பாபாவின் சொற்களே வேதமாகும்" என்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். அவர் எல்லாம் அறிந்த மாபெரும் யோகி ஆவார்! என்று மனம் வருந்தி பாபாவிடம் மன்னிப்பு வேண்டினார். சிறிது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நேரத்தில் அஹமத் நகர் செல்ல இருக்கும் இரயில் வந்ததும் அவர்கள் நால்வரும் ஏறிக் கொண்டு அஹமத் நகரை நோக்கிச் சென்றனர். பாபா முக்காலும் உணர்ந்தவர். அவருக்கு அந்த புகைவண்டி எப்போது வரும் என்பது நன்றாகவே தெரியும். ஆதலால் அனைவரையும் உணவருந்திவிட்டு பொறுமையாக செல்லுமாறு கூறினார். பாபாவின் வார்த்தைகளை பின்பற்றுவோருக்கு வாழ்க்கையில் ஒரு குறையும் இருக்காது என்பது தான் உண்மை.

NOT FOR SALE

ஷீரடியில் வசித்த ஒரு சில அந்தண குடும்பங்களில் அப்பா என்று அழைக்கப்படும் அப்பா குல்கர்ணி என்ற அந்தண குலத்தைச் சேர்ந்தவரின் குடும்பமும் ஒன்றாகும். அவர், வருவாய்த்துறை அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பா குல்கர்ணி ஸ்ரீசாய் பாபாவிற்கு சேவை செய்வதையே தம் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருந்தார். மிகவும் நேர்மையான கடமை தவறாத அப்பாவின் வாழ்வில், அவரது கர்ம வினையின் காரணமாக ஒரு பெரிய சோதனையை சந்திக்க நேர்ந்தது.

அப்பாவின் உயர் அதிகாரி, அரசாங்க சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தியதாக, அப்பாவின் மீது குற்றம் சுமத்தியதால் அத்துறையின் சார்பில் அப்பாவிற்கு எதிராக ஒரு வழக்கு தொடரப்பட்டது. தற்பொழுது இறைவனுக்கு மட்டுமே, அப்பா குற்றவாளியா அல்லது நிரபராதியா என்ற உண்மை தெரியும். அப்பாவிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதும், அந்த ஊர் மக்களும் அதை உண்மையென்று நினைத்து அவரைப்பற்றி அவதூறு உரைத்தனர். அப்பா செய்வதறியாது தவித்தார். தம் வாழ்நாளில், உண்மைக்கு புறம்பாக அவர் ஒரு போதும் நடந்து கொண்டதில்லை. அவ்வாறு இருக்க அரசாங்கமும், தம்மைச்

சுற்றியிருக்கும் ஊர் மக்களும் தம்மைக் குற்றவாளியாக கருதுவதால் அப்பா நிலைகுலைந்து போனார். இந்நிலையில் அப்பாவின் கவலை, அரசாங்க சட்டத்தைப் பற்றியோ அல்லது பொதுமக்களின் கருத்தைப் பற்றியோ அல்ல. இந்த சமூகம் என்னை குற்றவாளியாக பார்க்கும்போது, ஒரு வேளை என் சாயிநாத் மகராஜ் அவர்களும் நான் குற்றம் செய்ததாக நினைத்து என்னை வெறுத்து விடுவாரோ என்று அஞ்சினார். இதுவே உண்மையான பக்தியின் வெளிப்பாடு ஆகும்.

இந்நிலையில் வருவாய்த் துறை உயர் அதிகாரிகள் அப்பாவின் வழக்கை விசாரிப்பதற்காக அவரை வரும்படி பணித்தனர். ஒருவேளை வழக்கை விசாரித்து தம்மை சிறையில் அடைத்துவிட்டால், அதற்கு பின்னர் மசூதிக்குச் சென்று பாபாவை சந்திக்க இயலாமல் போய்விடுமோ என்று அப்பா பயந்தார். ஆகையால் என்ன ஆனாலும் சரி, மசூதிக்கு சென்று முதலில் பாபவை தரிசித்துவிட்டு பின்னர் விசாரணைக்கு செல்லலாம் என்று முடிவெடுத்தார். அம்முடிவு பாபாவால் எடுக்கப்பட்ட முடிவு.

அப்பா, மசூதியில் வீற்றிருந்த பாபாவை பணிந்து நமஸ்கரித்து, "ஓ என் பாபாவே! நீங்கள் எல்லா மகான்களிலும் தலை சிறந்தவர்! எங்கள் கண்களுக்கு தாம் ஒரு மகான் போல தோற்றமளித்தாலும் நீங்கள் இறைவனின் திருவுருவமாவீர்கள்! இப்பொழுது ஒரு பெரிய பழி எனது தோள்களில் விழுந்திருக்கின்றது! தேவாதி தேவா! தங்களுக்கு உண்மை நிலை என்னவென்று நன்றாகத் தெரியும்! நீங்கள் காலத்தை வசப்படுத்தி உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் ஆற்றல் உடையவர் என்பதை நான் நன்கு அறிவேன்! இச்சோதனையால் எதிர்காலத்தில் எனக்கு விளையும் துன்பங்களையும் தாம் அறிவீர்கள்! முக்காலங்களையும் உணர்ந்த, தாங்கள் ஒருவரே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இந்நிலையில் இருந்து என்னைக் காப்பாற்ற இயலும்! நிபந்தனைகள் இல்லாத அன்பை வாரி வழங்க ஒரு தாயால் மட்டுமே இயலும்! நீங்கள் எனது தாயாவீர்கள்! ப்ரபு! நான் இறுதியாக உங்களின் பாதங்களை தஞ்சமடைகின்றேன்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கூறி பாபாவின் பாதங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு தன் கண்ணீரால் அபிஷேகம் செய்தார்.

பாபாவிடம் எல்லா உரிமைகளும் அவர்கள் பக்தர்களுக்கு நிச்சயமாக உண்டு. அதனால் அப்பா, பாபாவிடம், "ஸ்வாமி! இறுதி விசாரணைக்குப் பிறகு, ஒருவேளை நான் சிறை செல்ல நேர்ந்தால் அது உங்களுடைய பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும்! பாபாவிடம் உறுதியான நம்பிக்கை கொண்ட பக்தனை பாபா காப்பாற்ற தவறிவிட்டார் என்று அனைவரும் தங்களின் மீது குற்றம் சுமத்துவார்கள்! ஆகையால் தாம் என்னை இச்சிக்கலில் இருந்த விடுவித்தே ஆக வேண்டும்!" என்று உரிமையோடு பாபாவிடம் முறையிட்டார்.

செல்வத்திற்கு அதிபதியான குபேரனாகிய பாபா நம்மிடம் இருக்கும்போது நாம் வீடு வீடாகச் சென்று கையேந்த வேண்டிய அவசியம் இல்லை. கேட்டதை எல்லாம் தரும் புனிதமான காமதேனுவின் பாலை அருந்திய குழந்தைகள், பாலுக்காக வேறு எந்த பசுவையும் தேடி அலைய வேண்டியதில்லை. நாம் நினைத்ததை எல்லாம் தரும் கற்பவிருட்சம் என்றும் தெய்வீக மரம் நம்மிடம் இருக்கும்போது நாம் ஏன் நமது தேவைக்காக முட்புதர்களை அணுகவேண்டும்?

பரந்த சமுத்திரத்தின் ஆழத்தில் ஆனந்தமாக உலவிக் கொண்டிருக்கும் மீன்கள், ஏன் குளத்தையும் குட்டையையும் தேடிப் போக வேண்டும்? "ஓ பாபா நான் உங்களிடம் சரணடைந்துள்ளேன்!

NOT FOR SALE

என் தேவைகளை பூர்த்தி செய்வது தங்கள் கடமையாகும். இனி மேலும் எடுத்துச் சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை! தயை கூர்ந்து என்னைக் காப்பாற்றுங்கள், ப்ரபு" என்று கூறி பாபாவிடம் தம்மை பரிபூரணமாக சமர்ப்பணம் செய்துவிட்டார்.

அப்பாவின் வேதனைகள் அனைத்தையும் பொறுமையாக கேட்ட பாபா, மிகுந்த அன்புடனும், கருணையுடனும், "அப்பா நீ அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை! என்மீது நம்பிக்கை வைத்துள்ளாய்! அந்த நம்பிக்கை உன்னைக் காப்பாற்றும்! இப்போது நீ நேய்வாசா என்ற கிராமத்திற்குச் செல்! அங்கு அழகாக பொங்கி ஓடிக் கொண்டிருக்கும் ப்ரவரா நதிக்கரையில், இப்பிரபஞ்சத்தில் எவருடைய கண்களுக்கும் புலப்படாத நாடக இயக்குநரான ஸ்ரீஹரி மோகினியின் வடிவில் அமர்ந்துள்ளார். அம்மோகினிராஜனின் மேல் தீராத காதல் கொண்ட, ஞானி ஸ்ரீ ஞானேஷ்வர், அவரிடம் தம்மை அர்பணித்துக் கொண்ட ஸ்தலம் ப்ரவரா நதிக்கரையாகும்.

அந்நதிக்கரையில் தான் சமூகத்தால் புறந்தள்ளி விலக்கி வைக்கப்பட்ட ஸ்ரீஞானேஷ்வர், ஸ்ரீஹரியை மட்டுமே தன்னுடைய உறவாகப் பெற்று பகவத் கீதையின் விளக்கவுரையான "பாவார்த்ததீபிகா" என்ற உலகம் போற்றும் நூலை எழுதியுள்ளார். அங்குள்ள மோகினிராஜனாகிய ஸ்ரீஹரி பத்து அவதாரங்களை எடுத்து தீய சக்திகளை அழித்து தர்மத்தை நிலைநாட்டியவர் ஆவார். அந்த அல்லா இலாஹி, அறியாமையில் மூழ்கி இருக்கும் மூடர்களை இரட்சித்து காப்பதற்கென்றே பல அவதாரங்களை எடுத்தவர்! அத்தகைய கருணையே உருவான அல்லா உன்னை நிச்சயம் காப்பாற்றுவார் பயப்படாதே! சென்று வா! என்று ஆசீர்வதித்து அனுப்பினார்.

பாபாவின் ஆசீர்வாதத்துடன் அப்பா குல்கர்ணி ப்ரவரா நதிக்கரையில், மோகினியின் ரூபத்தில் ஸ்ரீஹரியை வணங்கிய

NOT FOR SALE

பின்னர் விசாரணைக் குழுவிடம் சென்றார். அங்கு அவருடைய மேலதிகாரிகள் கேட்ட எல்லா கேள்விகளுக்கான விடையளிக்கும் போதும் பாபாவின் நாமத்தை மனதில் உச்சாடனம் செய்து கொண்டே இருந்தார். நீண்ட நேரத்திற்குப்பின் அவ்விசாரணை முடிவுற்றது. அப்பாவின் உயர் அதிகாரி அவருடைய விசாரணை குறிப்பேட்டில் இவ்வாறு எழுதினார். "என்னுடைய கருத்து என்னவென்றால் அப்பா குல்கர்ணி இவ்வழக்கில் தவறாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்! அவர் அரசாங்க கஜானாவின் பணத்தையோ அல்லது அரசாங்க சொத்துக்களையோ துஷ்பிரயோகம் செய்யவில்லை! தனக்கென்று அவர் எதையுமே பெற்றுக் கொண்டதில்லை! ஆகையால் தீவிர விசாரணைக்குப்பின் அப்பா குல்கர்ணி நிரபராதி என்று கருதி விடுவிக்கப்பட்டார்!" இத்தீர்ப்பைக் கேட்டதும் அப்பா குல்கர்ணி அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்பா உடனடியாக 'ஷீரடிக்கு ஓடிவந்தார்.

அப்பா பாபாவின் பாதங்களை நமஸ்கரித்தார். "எங்கள் சாயிநாதரே! நீரே எமது கற்பக விருட்சமும் காமதேனுவும் ஆவீர்கள்! உன் பக்தர்களை காப்பாற்றும் தேவனே! தாம் என் மீது அளவில்லாத அன்பைப் பொழிந்ததால் நான் இன்று நிரபராதி என்று தீர்ப்பு எழுதப்பட்டு விடுவிக்கப்பட்டேன்! என் மீது குற்றம் சுமத்தப்பட்ட நாள் முதல் என் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரின் முன்னிலையிலும், முகம் காட்டும் தைரியத்தை இழந்து, கூனிகுறுகி நின்ற என்னை இன்று நீங்கள் கம்பீரமாக நிமிர்ந்து நடக்க வைத்தீர்கள்! இச்சமூகத்தின் முன்னால் தாம் என்னை கௌரவித்தீர்கள்!"

நான் தங்களுடைய அருளால் மட்டுமே இவ்வெற்றியைப் பெற்றேன்! இந்த நன்றியை நான் என்றும் மறவேன்! என்றும் அப்பா தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல், பாபாவின் அற்புதத்தை எண்ணி போற்றிப் பாராட்டினார். பாபா இவை அனைத்தையும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பொறுமையுடன் கேட்டுவிட்டு, "அப்பா எல்லாம் வல்ல இறைவனால் மட்டும் இத்தகைய அற்புதத்தை நிகழ்த்த முடியும்! அற்புதங்களை செய்பவரும் அவரே! நம்மை அதற்கேற்ப காரியங்களை செய்விக்க வைப்பவரும் அவரே ஆவார்! நடக்கவே இயலாது என்ற நம்ப இயலாத செயல்களையும் நடத்திக் காட்டும் ஆற்றல் அவருக்கு மட்டுமே உண்டு. அத்தகைய ஆற்றல் பெற்ற தெய்வத்தை வணங்கி, நேர்மையான நடப்பாயாக!" என்று உபதேசித்தார். பாபா ஒருபோதும் தம்மை கடவுள் என்று பறைச்சாற்றிக் கொண்டதில்லை.

இதேபோல் தன் மீது நம்பிக்கையே இல்லாத திரு. நாராயண கிருஷ்ண பென்சே என்பவரை தன்னுடைய ஆற்றலை உணரச் செய்தார். அந்த அற்புதத்தை நாம் இப்பொழுது காண்போம்! கிருஷ்ண பென்சேலின் மனைவி பாபாவின் மிகச்சிறந்த பக்தர் ஆவார். அவர் மிகவும் அன்பானவர். அவர் தம் மனதில் தம் வாழ்நாளில் ஒரு முறையாவது ஷீரடிக்கு சென்று பாபாவை தரிசிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் தன் கணவர் கிருஷ்ண பென்சேலிடம், ''என்னுடைய நிறைவேறாத விருப்பம் ஒன்றை தாம் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்! பாபா என்ற மிகப்பெரிய யோகி ஷீரடியில் உள்ளார் என்று அனைவரும் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன்! நாம் ஒருமுறை ஷீரடி சென்று, அப்புனித ஸ்தலத்தில் தெய்வத்தின் அவதாரமான பாபாவை தரிசித்து, அவருடைய பாதங்களை நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்று வர வேண்டும்! இதுவே எனது பணிவான வேண்டுகோளாகும்" என்று கூறினார். ஆனால் கிருஷ்ண பென்சே தன் மனைவியிடம் "நீ கூறுவது போன்ற பெரிய மகானோ அல்லது யோகியோ ஷீரடியில் இல்லை! அங்கு முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த சித்தப்பிரமை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்ட ஒரு மனிதர் உள்ளார். அவர் முற்றிலுமாக சித்தம் கலங்கியவர். அவர் அங்கு அமர்ந்து கொண்டிருக்கும் ஒரே நோக்கம் என்னவென்றால், மக்களை வறுமையின் பிடியிலிருந்தும், நோயிலிருந்தும் விடுபடச் செய்வேன் என்று ஏமாற்றிக் கொண்டிருப்பது மட்டுமே ஆகும்! சில அப்பாவிகள் அவரை கடவுள் என்று நம்பிக் கொண்டிருக்கின்றனர்! எனதருமை மனைவியே! என் கூற்றை ஏற்பாயாக! நான் உரைப்பது சத்தியம்! நீ தேடுவது அங்கு உனக்கு நிச்சயமாக கிடைக்கப்போது இல்லை! தகரத்திலிருந்து தங்கத்தை எவ்வாறு பிரித்தெடுக்க இயலும்? அந்த பக்கிரி தனக்கே உணவு இல்லாமல் வீடு வீடாகச் சென்று யாசகம் பெற்று உண்கிறார் என்று கேள்விப்பட்டேன்! அவரிடம் இருந்து நீ என்ன பயனை அடைய முடியும்!" என்று கூறி தன் மனைவியின் நம்பிக்கையை அலட்சியம் செய்துவிட்டார்.

கிருஷ்ண பென்சேலியின் இத்தகைய சொற்களால் மிகவும் வருத்தமுற்ற அவரது மனைவி, என்றாவது ஒரு நாள் நிச்சயமாக நான் பாபாவை தரிசிப்பேன்! அப்பொழுது அவர் பாதங்களில் விழுந்து என் கணவரை மன்னிக்க வேண்டுவேன்! என்ற நம்பிக்கையுடன் இருந்தாள். அந்த நன்னாளும் வந்தது. ஒரு நாள் கிருஷ்ண பென்சே அரசாங்க பணியின் தொடர்பாக கோபர்காவ் வர நேர்ந்தது. அங்கு சில நாட்கள் தங்க வேண்டியிருந்ததால், மனைவியுடன் சுற்றுலா செல்ல எண்ணி அவர் தன் மனைவியையும் அழைத்து வந்தார்.

அங்கு ஷீரடியில் ஒரு வேலை நிமித்தம், கிருஷ்ண பென்சே சென்றுவிட, இது தான் தனக்கு பாபாவை தரிசிக்க, இறைவனால் அளிக்கப்பட்ட சந்தர்ப்பமாக கருதி, அவர் மனைவி மிகுந்த உற்சாகத்துடன், பாபாவை தரிசிக்க மசூதியை வந்தடைந்தார். அங்கு பாபாவை கண்டதும் தன் புலன்கள் அனைத்தும் தெய்வீக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உணர்வால் உந்தப்பட்டு பேரானந்தத்தில் திளைத்தார். அவர் பாபாவின் பாதங்களில் தம் சிரசை வைத்துப் பணிந்தார். அன்று தமக்கு ஏற்பட்ட சொல்ல இயலாத அந்த ஆனந்தத்தை தம் கணவரிடம் எடுத்துக் கூறினார். "இது போன்ற கருணை ததும்பும் பார்வையை நான் எங்கும் கண்டதில்லை! உலகின் அனைத்து நற்குணங்களின் சங்கமமாக திகழ்கிறார்! ஆகையால் தயை கூர்ந்து இனியும் அம்மகானைக் குறித்து அவதூறு உரைக்காதீர்கள்! ஒரு முறை அவரை நேரில் தரிசிக்கும் போது அவர் யார் என்பதை தாம் உணர்ந்து கொள்வீர்கள்!" என்று மன்றாடி கேட்டுக் கொண்டார்.

கிருஷ்ண பென்சே தனது மனைவியின் வார்த்தையில் ஏதோ ஒரு உண்மை இருப்பதை உணர்ந்தார். ஆனாலும் அவர் மனதில் பாபாவைக் குறித்த ஐயம் நீங்கவில்லை. இருப்பினும் ஒருமுறை அவரைக் கண்டு வரலாம் என்று எண்ணிய கிருஷ்ண பென்சே பாபாவைத் தரிசிக்க மசூதிக்கு வந்தார். அங்கு தான் அந்த அற்புதத்தை அவர் நேரில் கண்டார்! அவர் தன் கால்களை மசூதியின் வாசலில் வைத்த அதே சமயத்தில், பாபா, "எனது அருகில் வராதே!" என்று சத்தம் போட்டு கூறியதும் கிருஷ்ண பென்சே அப்படியே நின்று விட்டார்.

பாபா உடனே தனது அருகில் இந்த ஒரு கல்லைக் கையில் எடுத்துக்கொண்டார். "இதற்கு மேலும் இந்த மசூதிக்குள் ஒரு அடி எடுத்து வைத்தாலும், இந்த கல்லால் நீ அடிபடுவாய்!" நான் ஒரு ஏமாற்றுக்காரன்! என்னிடத்தில் என்ன இருக்கிறது என்று என்னைக் காண வந்தாய்! தாழ்ந்த குலத்தில் பிறந்தவன், ஒரு முகமதியன், இது மட்டுமில்லாமல் சித்தம் கலங்கிய பைத்தியக் காரனும் ஆவேன்! நீ குலத்தால் உயர்ந்த அந்தணன்! இந்த மசூதிக்குள் நுழைய முயன்றால், நீ மிகுந்த துன்பப்படுவாய்! இங்கிருந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சென்றுவிடு! என்று எச்சரித்தார். பாபாவின் அனைத்து மொழிகளும், தம்மால் தன் மனைவியிடம் சில தினங்களுக்கு முன்னால் கூறியவை! இவருக்கு எவ்வாறு இது தெரிந்தது? இது என்ன ஆச்சரியம்! என்று கிருஷ்ண பென்சே அதிர்ச்சியில் எதுவும் பேச முடியாமல் அப்படி நின்று கொண்டிருந்தார்.

கிருஷ்ண பென்சே அதிர்ச்சியிலிருந்து வெளியே வந்ததும், தாம் மிகப்பெரிய தவறிழைத்து விட்டோம் என்பதை மனதார உணர்ந்தார். இவர் மகாயோகீஸ்வரர். இவர் ஷீரடியில் இருந்தாலும் இவருடைய மனோவலிமையும், ஆற்றலும் உலகின் எந்த மூலையிலும் சென்றுவரக் கூடியது. தன் மனைவியிடம் தனிப்பட்ட முறையில், இவரைக்குறித்து கூறிய வார்த்தைகளை, அவ்வாறே ஒரு சொல் கூட மாறாமல், கூறும் இவர் முக்காலங்களையும் உணர்ந்த மகான் ஆவார். எவர் மனிதில் உதிக்கும் எண்ணங் களையும் படிக்கும் வல்லமை பெற்ற ஒரு தீர்க்க தரிசியாவார்.

கிருஷ்ண பென்சே தன்னுடைய தவறை உணர்ந்து தமக்கு மன்னிப்பு வழங்குமாறு பாபாவிடம் சிபாரிசு செய்வதற்காக அப்பா குல்கர்ணியை நாடினார். இறுதியாக அவர் பாபாவால் மன்னிக்கப்பட்டு பாபாவின் ஆசீர்வாதம் பெற்று தன் மனைவியுடன் ஊருக்குத் திரும்பினார்.

சிறிது நாட்களுக்குப்பின் ஷீரடியில் என்ன நடந்தது என்பதை பாபாவின் பக்தர்களாகிய நாம் இனி காண்போமாக!

ஒரு நாள் பாபா, அப்பா குல்கர்ணியிடம் "நம் கிராமத்தில் சில திருடர்கள் நுழைந்து விட்டனர்!. அவர்கள் சாதாரண திருடர்கள் இல்லை! அவர்கள் திருடும் முறை மிகவும் வித்தியாசமானது மற்றும் மிகவும் அபாயமானது! அவர்கள் ஒவ்வொரு வீட்டினுள்ளும் நுழைந்து தாம் திருட வேண்டிய வஸ்துவை கணக்கிடுவார்கள்! அந்த வீட்டில் விலைமதிப்பு கூறவே இயலாதவற்றை திருடிச்

சென்றுவிடுவார்கள்! அவர்களை எவராலும் தடுக்கவும் முடியாது. அவர்கள் கொண்டு செல்வதை தடை செய்யவும் இயலாது! அவர்கள் முதலில் உன்னுடைய வீட்டிற்கு செல்லவிருக்கின்றனர்! முதலில் நீ உன்னைக் காத்துக் கொள்ள முயற்சி செய்வாயாக! என்று கூறியதும் அதிர்ச்சியடைந்த அப்பா, பாபா கூறியதன் ஆழமான உட்கருத்தை புரிந்து கொள்ள இயலாமல் வீடு திரும்பினார். அவர் மனம் மிகவும் வேதனையில் தவித்தது. அவர் சில காவல் காக்கும் பணியாளர்களை வாடகைக்கு அமர்த்தி, அவர்களுடன் தாமும் ஒரு காவலாக, தமது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்.

ஒரு மணி நேரத்தில் அப்பாவுக்கு வாந்தியும் பேதியும் ஏற்பட்டு, மிகச் சோர்வடைந்து, அவருடைய உடல் இயல்பு நிலைக்கு மாறாக, தீவிரமாக வேலை செய்ய துவங்கியது. அவரது கண்கள் பார்க்கும் சக்தியை இழந்தன. அவருடைய நாடி துடிப்பு மிகவும் குறைவாக இருந்தது. அப்பா தீவிரமான காலரா நோயால் பீடிக்கப்பட்டார். அவரைச் சுற்றி இருந்த அனைத்து கிராமவாசிகளும் மிகவும் வருந்தினார்கள். திடீரென்று ஏற்பட்ட இத்தகைய மோசமான நிகழ்வால், பெரிதும் கலங்கிய அப்பாவின் மனைவி மகூதியை நோக்கி ஓடினாள். அவள் பாபாவிடம், "பாபா என் கணவரின் உடல்நிலை திடீரென்று மோசமாகிவிட்டது! அவரைக் காணும் போது, அவர் உயிர் பிரியும் அபாயம் உள்ளதென்று என் மனம் உணர்கின்றது! தாங்கள் உதியையும், உங்களின் ஆசீர்வாதத்தையும் அளியுங்கள்! அதை என் கணவருக்கு அளித்து எவ்வாறாயினும் அவரை மீட்டு தங்களிடம் அழைத்து வருவேன்!" என்று கண்ணீர் சிந்தி பாபாவிடம் வேண்டினாள்.

பாபா முக்காலமும் உணர்ந்தவர். அவர் அங்கு என்ன நடக்கப்போகிறது என்பதை முன்னரே அறிவார். அவர்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பொறுமையாக அப்பாவின் மனைவியிடம், "எனதருமை தாயாரே! நீ வருத்தப்பட்டு கண்ணீர் சிந்தி ஒரு பயனும் இல்லை! இப்பூமியில் பிறக்கும் எல்லோரும் ஒரு நாள் அல்லது மறுநாள் இறந்தே ஆக வேண்டும் என்பதுதான் இறைவனின் தீர்ப்பு! பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் அவன் கைகளில் மட்டுமே உள்ளது.

இறைவனால் திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வை தடுக்க எவராலும் இயலாது! உன்னை நீயே சுதாரித்துக்கொள்! உன் உள்ளத்தின் உணர்வுகளை வைத்து தீர்மானிக்காதே! உன் உண்மையான அறிவை வைத்து தீர்மானம் செய்யும்போது, நடப்பவை யாவும் இறைவனின் ஆணை என்பது உனக்குப் புரியும்!" என்றார். நம் உடலைச் சுற்றியிருந்த எதன் மீது நமக்கு மிகுந்த நாட்டம் உள்ளதோ அதை ஒருநாள் நாம் இழந்து விடுவோம்! கருணைக் கடலான இறைவன் அழியாத நமது ஆத்மாவை அழியக்கூடிய துணியாகிய உடல் என்பதைக் கொண்டு மூடி வைத்திருக்கின்றார்.

அத்துணியான உடல் கிழியும் போது, அதில் பிணைத்திருக்கும் ஆத்மா, அந்த உடலை விட்டு வெளியேறுகிறது. அந்த உடலில் இருந்து வெளியேறும் ஆத்மா அழிவில்லாதது. குணங்கள் அற்றது! மற்றும் உருவமில்லாத கடவுளும் ஆத்மாவே ஆகும்! நீ உன் கணவரின் அழியக்கூடிய உடலை மட்டும் தான் நேசிக்கிறாயா! அப்பாவின் அன்புக்குரிய ஆத்மாவை அல்லவா நீ விரும்புகிறாய்! அப்பாவை அமைதியாக அவருடைய இடத்திற்கு செல்ல அனுமதி வழங்குவாயாக! அவருடைய கிழிந்த உடலை மீண்டும் நீ சேர்க்க முற்பட்டால், அது இயற்கையின் விதிகளுக்கு மாறானது! அது மட்டுமல்லாமல் அது அப்பாவின் ஆன்மாவிற்கு முக்தி அளிக்காது! நான் இப்பொழுது உன்னுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதே, அப்பா தன்னுடைய கிழிந்த துணியான உடலை விட்டு விட்டு ஆத்மாவின் மூலம் வெளியேறிவிட்டான்! இந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உண்மையைப் புரிந்து கொண்டு வீடு திரும்புவாயாக! என்று அப்பாவின் மனைவிக்கு மட்டுமல்ல பாபாவின் பக்தர்கள் அனைவருக்கும் இத்தகைய உண்மையை உணர வைத்தார்.

அது மட்டுமல்லாமல் அவர் அப்பாவின் ஆத்மா முக்தி அடைந்து விட்டது என்றும் அந்நிகழ்வை மாயாவால் பிணைக்கப்பட்ட இந்த சரீரத்தால் காண இயலாது என்று அன்புடன் அவளைத் தேற்றி, வீடு திரும்பச் செய்தார். பாபா கூறியவாறு அத்திருடர்கள் எடுத்துச் செல்வதை தடுக்கவும் இயலவில்லை, எவராலும் தடை செய்யவும் இயலவில்லை. இதுவே நம் வாழ்க்கையின் தத்துவமாகும். அப்பாவின் மனைவி வீடு திரும்புவதற்குள் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி அவள் செவிக்கு எட்டியது.

அதற்கு அடுத்த நாள் அதே காலரா வியாதிக்கு இன்னும் சில பேர் பலியானார்கள். கிராம மக்கள் அனைவரும் பாபாவிடம் ஓடி வந்து முறையிட்டனர். "பாபா தாங்கள் எங்களுடன் இருக்கும்போது இக்கொடிய வியாதி எங்களில் பலரின் உயிரைப் பறித்து விட்டது. தாங்கள் இதை சரி செய்யாவிடில், தாம் எம்மைக் காப்பாற்ற வந்த தெய்வம் என்று எவ்வாறு எங்களால் கூற இயலும்? தயை கூர்ந்து, தாங்கள் இந்த காலரா வியாதியை இந்த ஊரைவிட்டுத் துரத்துங்கள்!" என்று மன்றாடி வேண்டிக் கொண்டார்.

பாபா "நான் ஏற்கனவே உரைத்தது சத்தியமான வார்த்தைகள்! திருடர்கள் இன்றும் சிலரின் வீட்டிலும் நுழைய இருக்கிறார்கள்! ஷீரடியில் மொத்தம் ஏழுபேர் இந்த வியாதிக்கு பலியாவார்கள். அதை எவராலும் தடுக்க இயலாது. அது இறைவனின் தீர்ப்பாகும். ஏழாவது நபரின் இறப்பிற்கு பின்னர் அத்திருடர்கள் இக்கிராமத்தை விட்டு ஓடிவிடுவார்கள். அதற்குமேலும் ஒருவரது மரணமும் நிகழாது என்பதற்கு நான்

NOT FOR SALE

உத்தரவாதம் அளிக்கிறேன்!" என்றார். தெய்வத் திருவுருமான பாபா கூறியவாறு 7 பேர்களின் மரணத்திற்குப் பின்னர் காலரா வியாதி ஷீரடியை விட்டு ஓடிவிட்டது.

ஞானிகளும் மகான்களும் இயற்கையின் விதிகளுக்கு புறம்பான எச்செயலையும் புரியமாட்டார்கள். இப்போது தாஸ்கணுவாகிய நான், பாபா, எவ்வாறு கிராமவாசிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றினார் என்பதைப் பற்றி கூறுகிறேன்! மகான்களின் சரித்திரம் படிப்பவர்களையும், கேட்பவர்களையும் பேரானந்தம் என்ற பெருங்கடலில் திளைக்கச் செய்வது மட்டுமல்லாமல் அது நம் தலைமுறையினருக்கும் முக்தியை தரவல்லது. நம் சாயி நம்முடனேயே வாழ்கின்ற ஒரு தலைசிறந்த மகானாவார். அவருடைய இச்சரித்திரத்தில் இன்னும் பல அற்புதங்களைக் காண்போம்.

கோநியாஜி என்ற மார்வாடி இனத்தைச் சேர்ந்தவர். பாபாவின் மீது மிகுந்த பக்தியும், அன்பும் கொண்டவர், ஒரு நாள் அவர்கள் பாபாவின் தரிசனத்தைப் பெற வந்தார். பாபா அவரிடம் கோனியாஜி "கல்வாடியில் உள்ள உன்னுடைய வைக்கோல் பொதியில் தீ பற்றிக் கொண்டதால், நீ உடனே தாமதிக்காமல் சென்று நடுவில் இருக்கும் வைக்கோல் பொதியின் தீயை, அணைத்துவிட்டு வா" என்றார். பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு கலக்கமுற்ற கோநியாஜி, உடனே விரைந்து ஓடிச்சென்று கல்வாடியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள வைக்கோல் பொதியை சோதித்த பொழுது அங்கு தீ பற்றிக் கொண்டதற்கான அறிகுறியே இல்லை. கோநியாஜி கல்வாடியில் இருந்து திரும்பியதும் பாபாவிடம், "பாபா இந்தச் சுட்டெரிக்கும் வெயிலில், என்னை ஏன் இத்தனை தூரம் ஓடச் செய்தீர்கள்!" என்றார். மேலும் அவர் பாபாவிடம், "தாம் கூறியவாறு வெயிலில் ஓடியதால் தீ பிடித்தது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

என்னுடைய கால்களில் மட்டுமே ஆகும்!" இதைத் தவிர வேறு எந்தத் தீயும் அங்கு இல்லை என்றார். பாபா உடனே, "நான் பொய்யுரைப்பதில்லை. என்னுடைய வார்த்தைகள் சத்தியமானவை உனக்கு பொறுமை இல்லை, ஆகையால் சிறிது நேரம் கூட காத்திருக்காமல் உடனே ஓடி வந்து விட்டாய். இப்பொழுது சென்று பார்!" என்றார். இம்முறை சென்ற கோறியாஜி, வைக்கோல் பொதியின் நடுவில் இருந்து, மிகப்பெரிய புகை ஒன்று கிளம்புவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். எல்லாவற்றிக்கும் நடுவில் இருந்த அவருடைய வைக்கோல் பொதி, தீவிரமாக எரிந்து கொண்டிருந்தது. அது மிகக்கடுமையான வெயில் காலம். சூரியனின் கதிர்கள் சுட்டெரித்துக் கொண்டிருந்ததால், அத்தீயானது நன்றாகக் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அத்தீயை நாலாபுறங்களிலும் சென்றடையச் செய்ய அக்னிக்கு, காற்றும் உதவி செய்தது. இதைப் பார்த்து அஞ்சிய மக்கள் தங்களின் பாதுகாவலரான, பாபாவின் பாதங்களை சரணடைந்தனர்.

கல்வாடி முழுவதும் வைக்கோல் பொதி வைக்கப்பட்டு இருந்ததால் அந்த பகுதி முழுவதுமே தீக்கிரையாகும் அபாயம் ஏற்பட்டது. கிராம மக்கள் பாபாவிடம், "தேவா எங்களுடைய வாழ்வாதாரம் எங்கள் கண்களின் முன்னால் அழிந்து கொண்டிருக்கின்றது! ஒரு வருடம் முழுவதும் எங்கள் பசுக்களுக்கு அளிக்கும் உணவை, நாங்கள் கல்வாடியில் சேமித்து வைத்துள்ளோம்! இப்போது அவை அனைத்தும் அழிந்துவிட்டால் பசுக்களுக்கு எவ்வாறு உணவளிப்போம்! கோவர்தன மலையை சிறுவிரலால் தூக்கி அங்குள்ள பசுக்களைக் காத்த ஸ்ரீஹரியாக தங்களை பூஜிக்கின்றோம்! எங்கள் பசுக்களின் உணவை காத்து இரட்சியுங்கள்!" என்று வேண்டினர்.

பாபா அவர்களின் ப்ரார்த்தனைக்கு செவி சாய்த்து மனம் உருகி தன் கைகளில் சிறிதளவு நீரை எடுத்து எல்லாவற்றிற்கும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நடுவில் இருக்கும் வைக்கோல் பொதியில் சிறிதளவு தெளித்தார். அவர் மக்களிடம் "நீங்கள் பயப்படத் தேவையில்லை. நடுவில் இருக்கும் இப்பகுதி மட்டும் எரிந்து சாம்பலாகும். மற்ற அனைத்துமே பாதுகாக்கப்படும். நீங்கள் சிரமம் எடுத்துக் கொண்டு தண்ணீரை வாரி இறைக்க வேண்டாம்!" ஷீரடியில் அப்போது தண்ணீர் பஞ்சம் இருந்ததால் பாபா தண்ணீரின் உதவியின்றி காட்டுத்தீயாய் எரிந்து கொண்டிருந்த நெருப்பை தம் தவ வலிமையால் ஒரு துளி நீரால் அணைத்து அக்னியின் மீது தமக்குள்ள கட்டுப்பாட்டை அனைவருக்கும் புரிய வைத்தார். அனல் காற்று வேகமாக வீசிய போதும், பாபாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அக்னி தன் வேகத்தைத் தணித்துக்கொண்டு, அமைதியடைந்தது.

கோனியாஜி பாபாவின் கூற்றுக்கு செவிசாய்த்து, பொறுமையுடன் அங்கு இல்லாத காரணத்தால், அவருடைய வைக்கோல் பொதி முழுவதும் தீயிற்கு இரையானது. தங்கள் பசுக்களின் உணவை காத்து இரட்சித்த பாபாவிற்கு அம்மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

மறுநாள் மாலை நானாசாகேஹப் சந்தோர்கர் (தாசில்தாராக பணியாற்றியவர்) பாபாவை தரிசிக்க, ஒரு குழுவுடன் ஷீரடி வந்தார். பாபா, நானாவின் மீதும் அவருடைய சந்தோர்கர் பரம்பரையின் மீதும் மிகுந்த அன்பு கொண்டவர். காரணம் சந்தோர்கரின் குடும்பமே இறைப்பணியில் சிறந்து விளங்கியது. பாபா நானாவிடம் "நானா நீ நற்பண்புகள் நிறைந்த கோவிந்தருடைய புதல்வன்! சந்தோர்கர் பாரம்பரிய குடும்பத்தின் வைரமாகத் திகழ்பவனே! இங்குள்ள சுயநலமிக்க சில மனிதர்களைப் பார்த்தாயா! இன்று ஒரு மார்வாடியின் வைக்கோல் பொதியானது தீக்கிரையானது! அவன் அதைக் காப்பாற்றாமல்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

போனதற்கு என்னைக் காரணம் காட்டுகிறான்! பழியை என்மீது சுமத்துகிறான்! பிறப்பும், இறப்பும், லாபமும், நஷ்டமும் இறைவனால் தீர்மானிக்கப்பட்டவை! இது தெரிந்தும் தெரியாததுபோல ஒரு சிலர் ஏன் இறைவனின் சக்தியை பலவீனமாக நினைக்கின்றனர்!" லாபம் வரும்பொழுது சிரிப்பதும், நஷ்டம் வரும்பொழுது அழுவதும் "நான்", "எனது", "என்னால்" என்ற அகம்பாவத்தைக் காட்டுகிறது.

இவை அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனின் செயல் என்ற எண்ணம் ஏன் தோன்றவில்லை? "எரிந்து சாம்பலான வைக்கோல் பொதியை தன்னுடையது என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் இந்த மார்வாடி!'' சரி, ஒருவேளை அவ்வைக்கோல் பொதி அவனுடையது என்றே வைத்துக் கொள்ளலாம்! அந்த வைக்கோல் பசுக்களுக்கு இரையாகிறது. இதன் மூலம் நெல் மணியின் விதைகள் நாலாபுறமும் பரவி விழுவதால் அது மண்ணில் உயிரூட்டப்படுகின்றது! அதற்கு உறுதுணையாக, ஆகாயத்திலிருந்து மழை நீர் பூமிக்கு வருகிறது. நீர்த்துளிகள் அதன் மேல் விழுந்ததும், உயிர் துளிர்க்க துவங்குகின்றது! சூரியனின் கதிர்கள் அச்செடிக்கு சக்தியை அளித்து அச்செடி கை கால் முளைப்பது போல கிளைகளோடு வளர்கின்றது! இப்பொழுது சொல் நானா? வைக்கோல் பொதியும், அச்செடியின் கதிர்களும், நெல்மணிகளும் அதன் பலனும் யாருக்கு சொந்தமானது! அதற்கு உயிரூட்டிய பூமிக்கும், முளைக்கச் செய்த மழைநீருக்கும், வளரச் செய்த சூரியனுக்கும் மட்டுமே அவை சொந்தமானதாக இருக்கும்போது, மனிதர்கள் ஏன் எல்லாவற்றையும் தமதாக எண்ணிக் கொள்கிறார்கள்?

அச்செடியின் உண்மையான சொந்தக்காரர்களான பூமியும், வானமும், மழைநீரும், சூரியனும், காற்றும் ஒரு போதும் அவற்றை சொந்தம் கொண்டாடியதில்லை. அச்செடி வளர்ந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பெரியதாக மரமானாலும் சரி அல்லது சில காரணங்களால் வாடி உயிரிழந்தாலும் சரி அதன் உண்மையான சொந்தக்காரர்கள் சிரிக்க போவதும் இல்லை. அழப்போவதும் இல்லை. அவ்வாறு இருக்க தமக்கு இங்கு எதுவுமே சொந்தமில்லாத போது ஏன் பொய்யான ஒரு தோற்றத்தை இங்கு சிலர் உண்மையென நம்புகின்றனர்?

பாபாவின் இத்தகைய அற்புத உபதேசத்தைக் கேட்ட நானாசாஹேப் "தேவா இங்குள்ளவர்கள் அனைவரும் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள்", ஆகையால்தான் "சாயி" என்ற இந்த தெய்வம் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்று பாபாவை அவரோடு வந்த அனைவரும் நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் பெற்றனர்.

பாபா, ''நானா நான் கூறிய அந்நிகழ்வுகளின் பரிணாமத்தை நினைத்துப்பார்த்தாயா! அதன் விளைவுகளையும் இந்த இயற்கையே அனுபவிக்கின்றது! சூரியன் தன் கதிர்களின் மிகுந்த வெம்மை காரணமாக, நெருப்பை உண்டாக்கியதால் வைக்கோல்பொதி எரிந்து சாம்பலானது! பூமியும் அக்கோப அக்னியை தமதாக்கி பொறுமையுடன் உள்வாங்கிக் கொண்டது! எவ்வாறு செடிகளுக்கு இடம் அளித்ததோ, அவ்வாறே வைக்கோலுக்கும் சாம்பலுக்கும் இந்த பூமியே இடமளித்தது! இதில் மனிதர்களுடைய சாதனை என்று என்ன உள்ளது? எல்லா வினைகளும், வினைகளின் விளைவுகளும் இயற்கையில் தொடங்கி இயற்கையிலேயே நிறைவடைகின்றன! மனிதர்கள் வெறும் கருவிகள் மட்டுமே ஆவார்கள். ஆகையால் நாம் அடையும் எதற்காகவும் மகிழ்வோ அல்லது நம்மை விட்டுச் செல்லும் எதற்காகவும் வருந்தவோ தேவையில்லை. ஏனெனில் இங்கு எதுவும் நம்முடையது அல்ல! இறைவன் ஒரு கரத்தால் அளித்ததை மறு கரத்தால் திரும்ப பெற்றுக்கொள்கிறார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சந்தோஷமும் துக்கமும் நமது அறியாமையின் வெளிப்பாடு ஆகும் என்று கூறிவிட்டு அழுது கொண்டிருந்த மார்வாடியிடம் "ஓ சேட்டு இப்பொழுது உன் வீட்டிற்கு சென்று ஓய்வெடு" இந்த தொழிலில் ஏற்பட்டதாக நீ நினைக்கும் நஷ்டம் அடுத்த தொழிலில் லாபமாக மாறும் கவலை கொள்ளாதே! என்று ஒரு அன்னையின் கருணையோடு கூறி அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். பாபாவிடம் மனம் நிறைய துக்கத்தைப் பாரமாக ஏற்றி வந்தவர்கள் அனைவரும், அவரிடம் இருந்து விடைபெறும் போது தங்கள் சுமைகள் அனைத்தும் தம்மை விட்டு நீங்குவதாகவே உணர்ந்துள்ளனர். ஏனெனில் அந்த பாரத்தையும் அவரே ஏற்றுக்கொண்டு நமக்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறார்.

நானாசாஹேப் சந்தோர்கர் மிக்க மகிழ்ச்சியுடன் பாபாவின் உபதேசங்களை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார். நானாசாஹேப் தம் இரு கரங்களையும் கூப்பி, "ஓ பாபா, பக்தர்களின் உள்ளத்தில் நிறைந்தவரே! முழு நிலவாய் ஒளிவீசி உனது அடியவர்களை குளிரச்செய்தாய்! ஞானத்தின் சாகரமே! (சமுத்திரம்) எங்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து எங்களை அறியாமை என்னும் இருளில் இருந்து நீக்குவாயாக!" என்று கூறி நானா கடவுள் தொடர்பான தமது சந்தேகங்களை பாபாவின் முன் வைத்தார்.

"தேவாதி தேவா, கடவுள் என்பவர் யார்? அவர் உருவமாக இருப்பாரா இல்லை. உருவமின்றி இருப்பாரா? கடவுள் இருக்கிறார் என்று கூறினால் அவர் எங்கு இருக்கிறார்? எந்த ரூபத்தில் இருக்கிறார்? அவருடைய நிஜ தரிசனத்தைப்பெற நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இந்த உலக வாழ்க்கை நிரந்தரமற்றது. ஒரு மாயை என்றால், நாங்கள் சதாசர்வ காலமும் இந்த மாயாவில்

NOT FOR SALE

சிக்குண்டு இருப்பதற்கான காரணம் என்ன? இந்த கேள்விகளுக்கு தயை கூர்ந்து, உங்கள் அன்பிற்குரிய நானாவான எனது புத்தியில் உணரும்படியாக எடுத்துச் சொல்லுங்கள்!" என்று வேண்டினார்.

பாபா பொறுமையுடன் நானாவை நோக்கி "நானா உங்கள் அனைவரின் கேள்விகளுக்கும் நான் இன்னொரு நாள் பதிலளிக்கிறேன்! இப்பொழுது நான் கூறுவதைக் கேட்பாயாக! ஒரு விநாடி கூட தாமதிக்காமல் நீங்கள் அனைவரும் வந்த இடத்திற்குப் புறப்பட்டு உடனடியாக செல்ல வேண்டும்!" என்று உத்தரவிட்டார்.

சந்தோர்கருடன் பாபாவை தரிசிக்க வந்த, விவசாயத்துறை அதிகாரியான, கணேஷ் கிருஷ்ணா என்பவர் பாபாவுடன் தங்கி இருந்து அவருடைய பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெறவே விரும்பினார். நானாசாஹேப் அவரைப்பற்றி, பாபாவிடம் எடுத்துக்கூறி அவருக்கு சிறிது அவகாசம் தருமாறு வேண்டினார். பாபா தீர்மானமாக, "நீங்கள் இங்கு வருகை தந்ததற்கு காரணம் எதுவாயினும் பரவாயில்லை! ஆனால் இப்பொழுது நீங்கள் புறப்பட்டே ஆக வேண்டும். ஒரு விநாடி கூட தாமதிக்காதீர்கள்! சமயத்தை வீணாக்காமல் உடனே குதிரை வண்டியைப்பிடித்து கோபர்காவன் சென்று நீங்கள் செல்ல வேண்டிய இரயிலைப் பிடியுங்கள்!" என்று உறுதியாகக் கூறினார்.

நானாவும், கணேஷ் கிருஷ்ணாவும் பாபாவின் வார்த்தையில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தனர். ஆகையால் அவர்கள் உடனே கிளம்ப ஆயத்தமாயினர். குதிரை வண்டியில் அவர்கள் அமர்ந்ததும் அவர்கள் வண்டியோட்டியிடம் மிக விரைந்து வண்டியை கோபர்காவனை நோக்கி செலுத்துங்கள் என்று கூறவும், அவர்கள் வண்டி மிக வேகமாக ஓடியது. வழியில் அதே இரயிலைப் பிடிக்க மற்றொரு குழுவினர் குதிரை வண்டியில் சென்று கொண்டு இருந்தனர். அவர்கள் உற்சாகமாகப் பயணித்தனர். நானாவின்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வண்டி மிக வேகமாக ஓடியதைக் கண்ட அவர்கள் ஏன் இவ்வாறு விரைந்து ஓடுகிறீர்கள்! புகைவண்டி வருவதற்கு இன்னும் நிறைய நேரம் உள்ளது. புலியிடமிருந்து தப்பிக்க நினைக்கும் புள்ளி மானைப் போல இவ்வளவு விரைவாக ஏன் செல்ல வேண்டும்? என்று கேலியாகக் கேட்டனர். கணேஷ் கிருஷ்ணா அவர்களின் குரலுக்கு மதிப்பளிக்காமல் பாபாவின் உத்தரவை ஏற்று தமது வண்டியோட்டியிடம் மிக விரைவாக வண்டியைச் செலுத்துமாறு வேண்டினார். வண்டியோட்டியும் அவர்கள் சொல்லுக்கு மதிப்பளித்து விரைவாக ஓட்டியதால் அவர்களின் வண்டி கோதாவரி நதியைக் கடந்து சென்று இரயில் நிலையத்தில் நின்றது.

NOT FOR SALE

நானாவுடன் வந்த அனைவரும் புகைவண்டியில் ஏறி அமர்ந்து கொண்டனர். மறுநாளே பாபா தம்மை ஏன் இத்தனை விரைவாக கோபர்காவ் வரச் செய்தார்? என்பதன் அர்த்தத்தை முழுமையாக உணர்ந்து கொண்டனர். அவர்களுக்கு பின்னால் வந்த வண்டி வழிப்பறி கொள்ளைக் கூட்டத்தால் நிறுத்தப்பட்டு அவர்களுடைய விலையுயர்ந்த பொருட்கள் யாவும் சூறையாடப் பட்டன. அது மட்டுமல்லாமல் அவர்கள் அந்த கொள்ளைக் காரர்களிடம் வாங்கிய அடியால் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காவல் துறையினரால் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

கணேஷ் கிருஷ்ணா இச்செய்தியை கேட்டு கண்ணீர் சிந்த பாபாவிடம் ப்ரார்த்தனை செய்தார். "ஓ எங்கள் சத்குருவே உங்கள் குழந்தைகளை நீங்கள் காப்பாற்றி விட்டீர்கள்! தாம் என்னை உடனே திரும்பிப் போகச் செய்ததால், காரணம் அறியாமல் நான் வருந்தினேன்! ஆனால் எங்கள் மீது தாம் வைத்திருந்த அளவற்ற அன்பும், கருணையுமே எம்மை பாதுகாப்பாக கோபர்காவ் கொண்டு வந்து சேர்த்துவிட்டது என்பதை இப்பொழுது நான்

முழுமையாக உணர்ந்தேன் ஸ்வாமி! நான் எனது மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்!" என்று மனதளவில் கணேஷ் கிருஷ்ணா பாபாவிற்கு நன்றி செலுத்தினார், பாபாவின் சொல்லை ஏற்று நடப்பவர்களை ஒருபோதும் துன்பங்கள் அணுகாது என்பதை இந்நிகழ்வே சாட்சியாக அறிவிக்கின்றது.

ஒரு சமயம் புனேவில் ஹரிபந்த் என்ற ஒரு அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் அன்பான மனிதர். இறை வழிபாட்டில் மிக்க ஈடுபாடு கொண்டவர். தினமும் இறைவனுக்கு செய்யும் பூஜா விதிகளை முறையாகக் கடைபிடித்தார். அவருடைய தெய்வம் அக்னி தேவராகும். அக்னி தேவரின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர் தினமும் அக்னியை வளர்த்து ஹோமங்கள் செய்து வழிபடுவார். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் ஆகியிருந்தது. தலைமுடி நரை விழுந்து வயதானவர் போல காணப்பட்டார். அவருடைய மூதாதையரின் சொத்துக்களும், நில புலன்களும் அவரிடம் நிறைய இருந்தன. ஆனால் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள அவருக்கு ஒரு மகன் இல்லை என்று மிகவும் மனமுடைந்து இறைவனின் முன்னால் கண்ணீர் சிந்தி வேண்டினார்.

துரதிருஷ்டவசமாக அவரது மனைவியும் இறந்து விட்டார். தனக்கும் வயது ஐம்பதைத் தாண்டி விட்டது. இனியும் புத்திர பாக்கியம் எனக்கு அமையும் என்பதில் நம்பிக்கை அற்றவராக இருந்தார். ஆனால் தினமும் அக்னி ஹோமம் செய்யும் அவர் தன் மனைவியின் துணையின்றி அக்னி ஹோமம் செய்யும் அவல நிலை தமக்கு வந்து விட்டோமே என்று வருந்தினார். மனைவியின்றி செய்யப்படும் யாகங்கள் பூரணத்துவம் அடையாது என்பது சாஸ்திர விதியாகும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அக்கிராமத்து மக்கள், நல்ல மனதைக் கொண்ட அந்த அந்தணரிடம் ''ஸ்வாமி தாங்கள் ஏன் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது" என்று கேட்டனர். அதற்கு அந்த அந்தணர் எனக்கு மட்டும் சாய்பாபாவின் திருவருள் கிட்டினால், நான் நிச்சயம் மறுமணம் செய்து கொள்ள, நல்ல குணங்களுடைய பெண் எனக்கு கிடைப்பாள்! எனக்கு புத்திர பாக்கியமும் கிடைக்கும்! என்று நான் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளேன்! மக்கள் என்னை அலட்சியமாக எண்ணி, எத்தகைய பரிகாசம் செய்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை! பாபாவின் கருணை என் மீது பொழிந்துவிட்டால் நான் நினைப்பது நிச்சயம் ஈடேறும் என்று கூறினார். அவருடைய கிராம மக்கள் அவரிடம் "இறைவனை தேட வேண்டுமென்ற உள்ளன்போடு தேடுதல் தொடர்ந்தால், அத்தகைய இறைவனையே அவர்கள் காண இயலும்! ஆகையால் அந்த அந்தணர் ஒரு நல்ல பெண்ணை துணையாக்க முயற்சி செய்ய வேண்டும் என்றனர்!" அந்தணரோ, "என் பாபாவின் அருள் கிடைத்தால் மட்டுமே போதுமானது! அது நம்ப இயலாத ஒன்றையும் நடக்க வைக்க வல்லது!" என்றார்.

ஒரு நாள் அந்த அந்தணர் ஷீரடிக்கு வந்து பாபாவை தரிசித்தார். பாபா சிரித்துக் கொண்டே அவரிடம் "ஓ ஹரி நீ மிகவும் கொடுத்து வைத்தவன்! திருமணம் செய்து கொள்! அந்த ஆண்டவனின் அருளால் ஒரு அழகான ஆண்குழந்தை நிச்சயம் உண்டு!" உன்னுடைய இச்சைகள் யாவும் நிறைவேறும்! அதில் சிறிதும் சந்தேகமோ அல்லது கவலையோ தேவையில்லை! திரிசூலத்தை வைத்துக்கொண்டிருக்கும் ''போலேநாத்'' என்று அன்புடன் அழைக்கப்படும் அந்த சர்வேஸ்வரனின் அருள் எப்போதும் உனக்கு உண்டு! ஒளிவீசும் ஆபரணத்தை தலையில் அணிந்ததைப்போன்று, சந்திரனை தன் ஜடையில் தரித்தவருமான ஈஸ்வரன் உன்னைக் காத்து இரட்சிப்பார்! ஆகையால் நீ விரைவில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


திருமணம் செய்து கொள்! என்று பாபா உத்தரவிட்டதும் அவரைச் சுற்றி இருந்தவர்கள் ஹரி மிகுந்த புண்ணியம் செய்ததால்தான் பாபாவின் அருளைப்பெற முடிந்தது! என்று பாபாவின்மேல் உறுதியான நம்பிக்கை கொண்டனர். ஹரி இப்போது அம்மக்களிடம், "பாபா ஆசிர்வதித்து விட்டார்! திருமணம் எப்போது நிகழ வேண்டும் என்று ஜோதிட வல்லுநர்கள் கூறுகிறார்களோ, அப்போது நிகழும் என்றார்!" ஜோதிட வல்லுநர்களும் பாபா கூறியவாறு, ஹரியின் ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்புகள், அவருடைய திருமணத்தை உறுதி செய்வதாக தெரிவித்து நல்ல நாளையும் குறித்துக் கொடுத்தனர்.அந்த அந்தணருக்கு பாபா கூறியதைப் போல நல்ல குணவதியான பெண் கிடைத்தாள். அவரும் மறுமணம் செய்து கொண்டார். பாபாவின் உத்தரவை ஏற்று காலதேவன் அந்த அந்தணரின் மனைவியின் கருப்பைக்கு உயிரளித்தார். அவர் புத்திர பாக்கியமும் பெற்றுவிட்டார். பாபாவின் அருள் பெற்றால் பல நாட்களாக தண்ணீரில் கிடந்த மரக்கட்டைகளும் தீப்பற்றி எரியும்! உயிரற்று கருகிய மொட்டுகளும் உயிர்கொண்டு மலர்ந்து மணம் வீசும்!

மேகத்திலிருந்து விழும் மழைநீரும், காற்றும் இருந்தால் வளர இயலாத சூழ்நிலையில் இருந்தாலும் பயிர்கள் வளர்ந்து நமக்கு பலனைத்தர வல்லது. அதைப்போன்றே பாபாவின் ஆசிர்வாதம் பெற்றவருக்கு தோல்வி என்பதே இல்லை. கருணையில் மலைக்கு நிகரானவர். நாம் கேட்டதை தரும் சிந்தாமணிக்கு நிகரானவர். ஆனால் நன்றி மறவாமல் எப்பொழுதும் அவருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டவர்களின் அனைத்து துயரங்களும் நீங்கிவிடும் என்பதற்கு தாஸ்கணுவாகிய நான் உத்தரவாதம் அளிக்கின்றேன்! கனவில் கூட பாபாவை மறக்காதீர்கள்! அவருடைய பரிபூர்ண அருள் நிச்சயமாக உங்கள் அனைவருக்கும் கிடைக்கும். நம் பக்தர்கள் அனைவரையும் தம்


NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


இதயத்தில் சிம்மாசனம் அளித்து அமரச் செய்து அன்னைப் பொழியும் பாபாவின் திருவடிகளுக்கு இந்த அத்தியாத்தை சமர்ப்பிக்கின்றேன்! இந்த அத்தியாத்தை பக்தியோடு படித்தவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் பாபா நிறைவேற்றி வைப்பார் என்பதை அவருடைய குழந்தையான இந்த தாஸ்கணு நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்! இந்த சாயி குரு சரித்திரத்தைப் படித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் பாபாவின் அருள் கிடைக்க வேண்டுமென்று இந்த தாஸ்கணு பக்த லீலா அமிர்தம் என்னும் பாடலைப் பாடுகிறேன்! இதுவரை எனக்கென்று தனிப்பட்ட முறையில் பாபாவிடம் எதையும் கேட்டதில்லை! இதைப்படிக்கும் உங்கள் அனைவருடைய பாவங்களையும் நீக்குமாறு வேண்டுகிறேன்!

நாம் அடுத்த அத்தியாயத்தில் இவ்வுலகத்தில் மழைத் துளிகளால் எங்கேயோ ஒரு மூலையில் பிறந்த நாம் ஒவ்வொருவரும் இறைவனால் அளிக்கப்பட்டிருக்கும் இவ்வுலக வாழ்க்கை முடிவதற்குள் நாம் எவ்வாறு வாழ வேண்டும்? நம் சமுதாயத்தில் நமக்குரிய கடமைகள் யாவை? கர்மாவின் கோட்பாடுகள் என்ன? நம் கவலைகைள் தீருவதற்கான வழி யாது? என்ற அற்புதமான உபதேசங்களைக் கேட்க உள்ளோம். அனைவரும் வாருங்கள் ஷீரடிக்குச் சென்று அத்தெய்வத்தை ஆராதிக்கலாம்!

ஜெய் சாய்ராம்



NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# அத்தியாயம் - 2

ஓம் கணேசாய நமஹ! தூய்மையான ஆத்மாவின் விழிப்புணர்வின் உருவமே! மூன்று உலகிற்கும் முதல்வரே! கருணையின் வடிவமே! குணங்கள் அற்ற, ஆனால் எல்லா குணங்களையும் மீறிய குணமுடைய, ஒளியைப் போன்ற ப்ரகாசம் மிக்கவரே! தாம் விண்ணும், மண்ணும், காலமும், நேரமும் கடந்து இயல்பான தன்மையைக் கொண்டு எல்லா கலைகளையும் தன் உள்ளடக்கிய மூலாதார மூர்த்தியே!

எங்களின் அன்னையாகவும், தந்தையாகவும் திகழ்பவரே! உன்னுடைய சுந்தர ரூபமானது எங்களுக்கு மிகவும் மகத்துவம் வாய்ந்தது. நான்கு வேதங்களும் தங்களைப் பற்றிக் கூற இயலாமல் தடுமாறுகின்றது! மாபெரும் ரிஷிகளான வசிஷ்டரும், பிருகு முனிவரும் தங்களுக்கு தெரிந்த அனைத்து வகை ஞானத்தையும் கொண்டு, உன் ரூபத்தை வர்ணிக்க இயலவில்லை! அவர்களுக்கு முன்னால் நான் எம்மாத்திரம்? ஓ கணபதியே! உம்முடைய அருளுக்காக நான் பல துன்பங்களை அடைந்த பின்னரும் காத்திருக்கின்றேன்! தயை கூர்ந்து இந்த தாஸ்கணுவின் இதயத்தில் நீ எப்போதும் நீங்காத இடம் பெற வேண்டும்? என் சத்குருவின் குருசரித்திரத்தை எழுதும் என்னை எழுதுகோலாக, ஒரு கருவியாக உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்! இந்த சாயி குரு சரித்திரத்தை எழுதும் தாஸ்கணுவாகிய அடியேன் இப்புனித நூலை என் சத்குரு சாய்நாதருக்கு சமர்ப்பிக்கின்றேன்! உங்களின் பாதங்களை நான் என்றும் மறவாதிருக்க அருள் புரியுங்கள்!

ஒருநாள், உள்ளத்தூய்மையும், நல்லொழுக்கங்களும், பாபாவின் மீது தீவிரமான பக்தியும் உடைய நானா சந்தோர்கரும், நானாசாஹேப் நிமோண்கரும் பாபாவின் தரிசனம் பெற ஷீரடிக்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வந்தனர். நானாசாஹேப் பாபாவின் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து "ஓ சாய் மஹராஜ், நாங்கள் நினைத்ததை யாவும் தாம் முடிக்க வல்லவர். இவ்வுலக வாழ்க்கையின் மீது எந்த விருப்பமும் எனக்கு இல்லை! எல்லா சாஸ்திரங்களும், இவ்வுலக வாழ்க்கையை ஒரு மாயை என்றே கூறுகின்றன! இந்நிலையில் உயர்ந்தவர்கள் ஆனாலும், தாழ்ந்தவர்கள் ஆனாலும் காப்பாற்றுபவன் நீயல்லவா!"

சங்கிலித்தொடர் போல என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஆசைகளை அறுத்து விடுங்கள்! இவ்வுலகில் எவற்றின் மீதெல்லாம் ஆசை கொண்டிருந்தேனோ அவை யாவும் எனக்கு துன்பங்களையே அளித்தன! இந்த ஆசை என்னும் மாயை எங்களை பொம்மலாட்டக்காரன், பொம்மைகளை ஆட்டுவதைப் போல ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இச்சைகளை களைந்து, உண்மையைத் தேடும் பணியில் தொடர்ந்து நாங்கள் ஈடுபட்டு வந்தாலும், இன்றும் அந்த சத்தியத்தை எங்களால் உணர முடியவில்லை! ஆகையால் தேவா! "எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது! இந்த சிக்கலில் இருந்து எவ்வாறாவது என்னை விடுவியுங்கள், ஸ்வாமி" என்று வேண்டினார்.

இவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த சத்குரு "நானா இது மாதிரியான பைத்தியக்கார எண்ணங்களை நீ எங்கிருந்து பெற்றாய்! நீ சொல்வதிலும் ஓரளவுக்கு உண்மை இருப்பதை ஒப்புக்கொள்கிறேன்! ஆனால் அதற்காக வாழ்க்கையே ஒரு முடிவுக்கு வந்ததாக நீ நினைப்பது தவறு! உனக்கு வரும் துன்பங்களில் இருந்து நீ தப்பித்துக் கொள்வதற்காக வாழ்க்கையை நீ வெறுக்கிறாய்! ஆனால் நீ எவ்வளவு யோசித்தாலும் உன்னால் அதிலிருந்து தப்பிக்க இயலாது! வருவது எதுவாயினும் அதை துணிந்து எதிர்கொள்ள நீ பயப்படுகிறாய்!"

NOT FOR SALE

நீங்கள் மட்டுமல்ல இந்த உடல், மனம் இவை ஏற்படுத்தும் உணர்வுகள் இவற்றிலிருந்து நானும் மீள இயலாது. இது இறைவனால் விதிக்கப்பட்டது. அவ்வாறு இருக்க நீ மட்டும் எவ்வாறு தப்பிக்க இயலும்? இவ்வுலகில் வாழ்வோருக்கு நிறைய குணங்களால் பாதிப்பு ஏற்படுகின்றன அவற்றைப்பற்றி நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன்!

**காமம், கோபம், பேராசை, சந்தேகம், கர்வம், பொறாமை இக்குணங்கள் யாவும் நான் என்ற அகம்பாவமாக உருவெடுத்ததன் விளைவாகவே இவ்வுலகில் பிறந்தோம்!** இதுதான் இவ்வுலக வாழ்க்கை! நமது கண்கள் ஒரு பொருளை பார்க்கின்றன! காதுகள் அவற்றின் ஓசையை கேட்கின்றன! நாக்கு சுவையை உணர்கின்றது! இது நம் சரீரத்தின் இயற்கை! இவ்வுலக வாழ்க்கை சுகம், துக்கம் என்ற கலவையால் உருவாக்கப்பட்டது. அவை இரண்டும் எவரையுமே விட்டு வைத்ததில்லை! இவற்றியிலிருந்து விடுபட எவருக்கும் சாத்தியமில்லை! நீ இதுவரை உன் வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளாய்! இப்போது அதிலிருந்து விடுபட நினைக்கின்றாய்! ஆனால் நீ இவற்றை விட வேண்டுமென்று நினைத்தாலும் அவை உன்னை விலக அனுமதி தராது! இதையே வேதங்களும், உபநிடதங்களும் **ப்ராரப்த கர்மா** (Prarabdha Karma) என்றழைக்கின்றது.

இந்த உலகில் மட்டுமல்ல, மூன்று உலகங்களிலும் இந்த கர்மாவை விட்டு அவ்வளவு எளிதில் எவராலும் வெளியே வர இயலாது. அவ்வாறு வெளியே வர வேண்டுமானால், அதை முழுவதுமாக அனுபவித்து, அந்த அனுபவங்கள் தரும் விளைவுகளை பொறுமையாக ஏற்றுக்கொண்ட பின்னரே இதிலிருந்து விடுபட சாத்தியமாகும். பாபாவின் இவ்வுபதேசங்களைக் கேட்ட நாம், அனைவருமே பாக்கியசாலிகள்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


நானாசாஹேப் பாபாவை நோக்கி, "ப்ரபு! தாங்கள் முன்னர் கூறிய அனைத்தும், இறைவனின் லீலைகள் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்! ஆனால் இறுதியாக அவற்றை அனுபவிக்க எனது சரீரமும், மனதும்தான்! ஆகையால் இந்த ப்ராரப்த கர்மாவிலிருந்து அடியேனுக்கு விடுதலை அளியுங்கள்" என்றார்.

பாபா உரக்கச் சிரிந்தபடியே "ஓ நானா நீ கூறியவாறு எல்லாவற்றையும் நீ அனுபவிக்கிறாய் என்று நினைத்தால் அதற்காக ஏன் வேதனைப்பட வேண்டும்? இவையெல்லாம் நீ சென்ற ஜென்மத்தில் செய்த வினைப்பயனே ஆகும்!" இந்த ப்ராரப்த கர்மா தான் நம்மை அடுத்தடுத்த பிறப்பிற்கு அழைத்துச் செல்கிறது. இந்த ப்ராரப்த கர்மா ஒருவரைக் கூட விட்டு வைக்காது. நாம் இந்த ஜென்மத்தில் பிறப்பெடுத்ததற்கே காரணம் ப்ராரப்த கர்மாதான். ஏழையாகவும், பணக்காரர்களாகவும், நல்லவர்களாவும், தீயவராகவும், சம்சார பந்தத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதுமாக, சன்னியாசியாக திரிந்து கொண்டிருப்பதும் பல்வேறு விதமான குணங்களின் கலவையாக நாம் ஒவ்வொருவரும் பிறப்பெடுத்துள்ளோம்.

NOT FOR SALE

மனிதர்கள் மட்டுமல்ல! விலங்குகளும், பறவைகளும், நீர்வாழ் உயிரினங்களும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. நம்மைப் போன்றவர்களின் கண்களுக்கு எல்லாமே வித்தியாசமாகத் தெரியும். ஆனால் படைத்தவனின் கண்களுக்கு முன்னால் இவை யாவும் ஒன்றுதான். இவ்வாறு ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு விதமாக, ஒவ்வொரு ரூபத்தில் பிறப்பெடுத்ததன் காரணம் அவர்கள் புரிந்த **சஞ்சித கர்மாவே** (Sanchitha Karma) ஆகும்.

நம்முடைய உடல் வாழும்போது நம்கூடவே இருந்து நம்மை இயக்கிய அடிப்படை பண்புகள், தகுதி, நாம் நடந்து கொள்ளும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

முறை மற்றும் நம்முடைய செயல்களின் விளைவு இவையாவுமே அடுத்த ஜென்மத்தில் நாம் வேறுவிதமாக உருவம் எடுக்க காரணங்களாக அமைகின்றன. இதுவே சஞ்சித கர்மாவின் விளைவு ஆகும்.

இவ்வாறு இருக்க இந்த அழியக்கூடிய உடலுக்கு இவ்வளவு மகத்துவம் அளித்து அதன் பலனை நினைத்து ஏன் இவ்வாறு துன்பப்படுகிறாய்! சிங்கம் உயிருள்ள மிருகங்களை வதைத்து உண்ணும் தன்மை கொண்டது! புலி வதைப்பட்ட மிருகங்களை உண்ணும் தன்மை கொண்டது! பன்றிகள் கழிவுகளை உண்ணும் தன்மை உடையது. காட்டு ஓநாய்கள் புதைக்கப்பட்டிருக்கும் இறந்த மனித சரீரத்தை தோண்டி எடுத்து உண்ணும் தன்மை கொண்டது! அன்னப் பறவைகள் தாமரை மலரின் இளந்தளிர் இலைகளை உண்ணும் தன்மை கொண்டது. கழுகுகள் நாற்றமெடுத்து அழுகிய மாசிசத்தை உண்ணும் தன்மை கொண்டது. ஒவ்வொரு விலங்கும், பறவையும் அவற்றின் உடலின் ஜீரண சக்தியின் தன்மைக்கு ஏற்றவாறு தக்க உணவைத்தேடி உண்பதை வழக்கமாக கொண்டுள்ளன! இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும், அவற்றின் கர்மவினைக்கு ஏற்றவாறு வேறு வேறு ரூபங்களில் விலங்காகவும், பறவையாகவும் பிறப்பெடுக்கின்றன! இதுவே இயற்கையின் நியதி.

NOT FOR SALE

இந்த இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டே ஒவ்வொரு உயிரும் தம் ப்ராரப்த கர்மாவை அனுபவிக்கின்றது. இதோ பார், நாணா சில சிங்கங்கள் காடுகளில் மிகவும் சுதந்திரமாக கம்பீரமாக உலவிக் கொண்டிருக்கின்றன! ஆனால் சில சிங்கங்கள் கூண்டில் அடைக்கப்பட்டு கண்காட்சிப் பொருளாய் வீடு வீடாக அழைத்துச் செல்லப்பட்டு அவஸ்தைக்கு உள்ளாகின்றன! பெரிய செல்வந்தரின் வளர்ப்பு நாய், தன் எஜமானிக்கு நிகராக பட்டு மெத்தையில் தூங்க வைக்கப்பட்டு, விரும்பிய உணவைப்பெற்று

 நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல 

கௌரவமாகக் காக்கப்படுகின்றது. ஆனால் தெரு நாய்கள் ஒரு சிறிய ரொட்டித் துண்டிற்காக நாள் முழுவதும் தெருக்களில் உலாவிக் கொண்டிருக்கின்றன! சில பசுக்கள் தங்கள் மீது மிகவும் ப்ரியமுள்ள எஜமானரால் நல்ல உணவைப் பெறுகின்றன. பச்சைப் புல்வெளிகளுக்கு மேய்வதற்காக அழைத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் சில பசுக்கள் சுவற்றில் உள்ள சுவரொட்டிகளையும், குப்பைத் தொட்டியில் உள்ள உணவையும் உண்டு வாழ்கின்றன. அப்பசுக்களுக்கு தாகம் தீர்த்துக் கொள்வதற்குக் கூட நல்ல தண்ணீர், எவரும் தருவதில்லை!

இத்தகைய வேறுபாடுகளுக்கான காரணம் என்ன தெரியுமா? அவை முன் ஜென்மத்தில் புரிந்த **ப்ராரப்த கர்மாவே** ஆகும். இத்தகைய ப்ராரப்த கர்மாவிலிருந்து எந்த உயிரும் தப்பிக்க இயலாது. அதை முழுமையாக அனுபவித்த பின்னரே அது நம்மை விட்டு விலகும். ப்ராரப்த கர்மாவின் காரணமாகவே ஒருவர் செல்வந்தராகவும், மற்றவர் வறுமையிலும் வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த விதி எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை, பாரபட்சமற்றவை. இத்தகைய காரணங்களால் சிலர் ஏழையாகவும், சிலர் பணக்காரர்களாகவும், சில பெண்கள் கருத்தரிக்காமலும், சிலர் கருத்தரிக்கும் தன்மையையே இழந்தவர்களும், சிலர் ஒரே ஒரு குழந்தை பெற்றெடுப்பதற்கு கடினமான சோதனைகளை அனுபவித்தும், மற்றும் சிலர் மருத்துவரின் உதவியின்றி நிறைய குழந்தைகளை பெற்றெடுப்பதும், சிலர் குழந்தை பாக்கியம் இருந்தும் திருமணம் செய்து கொள்ளாமலேயே இருப்பது போன்ற இத்தகைய விளைவுகளுக்கெல்லாம் காரணம் ப்ராரப்த கர்மாவே ஆகும். நிறைய நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் தங்களிடம் கணக்கிட இயலாத அளவுக்குச் செல்வம் குவிந்திருந்தாலும், ஒரு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


புத்திரனைப் பெறுவதற்குப் பாக்கியம் இன்றி, வேதனையை அனுபவிப்பார்கள் மற்றும் சிலர் அடுத்த வேளை உண்ண உணவுக்கு வழியின்றி, வறுமையில் வாடினாலும் நிறைய குழந்தைகளை பெற்ற பாக்கியம் செய்தவர்களாக இருப்பதற்கும் இந்த ப்ராரப்த கர்மாவின் பாதிப்பே ஆகும். இவ்வாறு வேதங்களைக் கற்றும், புரிந்து கொள்ள இயலாத சிக்கலானத் தத்துவத்தை மிகவும் எளிமையான முறையில், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றவாறு அனைவருக்கும் புரியவைத்த, நம் சத்குரு சாய் மகராஜ் அவர்களின் பாதம் பணிந்து போற்றுவோமாக!

நானாசாஹேப் தம் கைகள் தொழுது ஸ்வாமி! தாங்கள் கூறியவாறு நடப்பவை அனைத்தும் ப்ராரப்த கர்மாவின் வினையே காரணம் என்றால், நாங்கள் அனைவரும் துன்பம் வரும்பொழுது அழுவதும், இன்பம் வரும்போது சிரிப்பதற்கும் காரணம் என்ன? எல்லாமே வினைப்பயன் என்று சொல்லும்போது, இன்ப துன்பங்கள் எதுவுமே பாதிக்க இயலாதவாறு காத்தருள வேண்டுகிறேன் என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, எனதருமை குழந்தையே இன்பம், துன்பம் இரண்டுமே மாயாவின் லீலைகள். பனிக்காலத்தில் நம் கண்களில் காணும் பொருட்களின் மீது, பனித்திரை சூழ்ந்து மூடியிருக்கும்! அதைப்போன்று உண்மை நிலையை, அதாவது சத்தியத்தை நாம் அறிய விழையும் போது இன்பம், துன்பம் என்ற மாயாவின் திரைகள், சத்தியத்தை மறைத்து அது நம் கண்களுக்கு புலப்படாமல் வேடிக்கை காட்டுகின்றது! நாம் எவற்றையெல்லாம் நமக்கு சந்தோஷம் அளிக்கக் கூடியது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அவை அனைத்துமே நமக்கு நிரந்தரமாக மகிழ்ச்சி அளிக்கக் கூடியவை அல்ல. இக்கூற்றை நாம் சோதித்துப் பார்ப்போம்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு மனிதனுக்கு நல்ல சுவையான ஆகாரம் கிடைக்கும் பொழுது அவன் மனம் சந்தோஷத்தில் கூத்தாடுகிறது. மற்றொருவனுக்கு அவன் நினைத்தது கிடைக்கப்பெறாமல் சாதாரண உணவே கிடைக்கும்பொழுது, அது அவனுக்கு ஏக்கத்தையும், துக்கத்தையும் அளிக்கின்றது. சிறிது நேரம் சிந்தித்துப்பார்! உணவு சுவையாக, வகையாக இருந்தாலும் சுவையின்றி சாதாரணமாக இருந்தாலும் அவற்றின் இலட்சியம் என்ன? பசியைத் தீர்ப்பது மட்டுமே! எத்தகைய உணவு உண்டாலும் வயிற்றுப்பசி நீங்கிவிடுகிறது. அதேப் போல விலையுயர்ந்த வஸ்திரத்தை உடுத்தியிருக்கும் ஒருவன், சாதாரண வஸ்திரம ;அணிந்த இன்னொருவனை விட உயர்ந்தவன் என்று எவ்வாறு கருத இயலும்? வஸ்திரத்தின் இலட்சியம், உடலை மறைப்பது ஒன்றுதான்.

அவ்வாறு இருக்க வஸ்திரம் மகத்துவத்தைப் பெற இயலாது! வயிற்றுப்பசியை தீர்க்க உணவும், உடலை மறைக்க வஸ்திரமும் கிடைக்க வேண்டும் என்பது மனிதர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கே ஆகும். அடிப்படைத் தேவைகளை ஒருவன் தன் வாழ்நாளில் அடைந்து விட்டால் ஆடம்பரத் தேவைகளை நோக்கிச் செல்கிறான்! அத்தேவைகளை அடைவதற்கு நிறைய தவறுகள் செய்கிறான்! ஆகையால் இன்பம், துன்பம் எது நேரினும் அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாம்.

நமது மனம் பரந்து விரிந்த கடலைப் போன்றது. அதில் ஏற்படும் இன்பமும் துன்பமும் கடல் அலைகளைப் போன்றது. மனதில் ஒருவேளை ஒரு சந்தேகம் ஏற்படக்கூடும்! இன்ப துன்பங்களாகிய அலைகள் இருக்கின்றது என்றால் அதற்கு ஆதாரம் பரந்து விரிந்த சமுத்திரமே ஆகும்! தீபம் எரிவதற்கு காரணம் விளக்கே ஆகும்! அதைப்போல இன்ப துன்பங்களுக்கு ஆதாரம் என்ன? அவை நான் கூறிய ஆறு எதிரிகளான காமம், கோபம்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பேராசை, பயம், கர்வம் மற்றும் பொறாமை இவைபோன்ற எவ்வளவு உதாணரங்களை நான் உனக்கு தர இயலும் நானா? நான் கூறிய ஆறு எதிரிகளை நீ வெற்றிக் கொண்டால் கடல் அலைகளைப் போன்ற இன்பமும் துன்பமும் நம்மை நெருங்க முடியாது!

சரி நான் இப்பொழுது உனக்கு உண்மையான சந்தோஷம் மற்றும் உண்மையான துக்கத்தைப் பற்றி கூறுகிறேன்! முக்தி அடைதல் (Salvation) உண்மையான சந்தோஷமாகும். மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பது உண்மையான துக்கமாகும்!.

நான் இப்போது இந்த உலகில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கூறுகிறேன்! நம்மை விட வசதி புகழ், அந்தஸ்து இவற்றில் உயர்ந்தவர்களைப் பார்த்து நாம் பொறாமை கொள்ளக்கூடாது! அது அவர்களுடைய ப்ராரப்த கர்மாவின் பலனே ஆகும்! அதை நினைத்து நாம் பொறாமைப்பட்டால் நம் மனதில் துன்பங்கள் வந்து ஆக்கிரமிக்கும்! ஓ நானா! அதே போல நிறைய வசதிகள் நமக்கு இருந்தாலும், அதற்காக பெருமையும், கர்வமும் கொள்ளக்கூடாது! எவ்வாறு மரம் நிறைய கனிகள் பழுத்து குலுங்கும்போது, அந்த மரம் நிமிர்ந்து பெருமையுடன் நிற்காமல், தலை சாய்த்து பணிவோடு இருப்பதைப் போன்ற நம்மிடம் உள்ள செல்வத்தால், நாம் கர்வம் கொள்ளாது பணிவோடு அடக்கமாக இருத்தல் அவசியமாகும்.

செல்வந்தர்கள் தம்மிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு, தர்ம காரியங்களுக்கு, தம்மால் இயன்ற வரை அளிக்க வேண்டும். செல்வம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கடன் வாங்கியாவது செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருபோதும் நம் மனதில் வரக்கூடாது! அதே போல செல்வம் நிறைய இருந்தாலும் அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே செலவு செய்ய வேண்டும். இப்போது நம்மிடம் உள்ள செல்வம், நாம் முன் ஜென்மத்தில் செய்த

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


நற்செயல்களின் விளைவே ஆகும். அத்தகைய செல்வத்தினை ஆடம்பரத் தேவைக்காக வீணாக்கினால், அடுத்த ஜென்மத்தில் தரித்திரர்களாய் நாம் வாழ்ந்தாக வேண்டும் என்பது இறைவனின் கட்டளையாகும்! அது மட்டுமல்லாமல் செல்வந்தர்கள், நம்மிடம் மிகுந்த வசதி வாய்ப்புகள் உள்ளது என்ற காரணத்தினால் மற்றவரை துன்புறுத்தி வாழக்கூடாது! செல்வம் என்பது மிக அவசியமான ஒன்று.

ஆனால் அதற்காக நம் வாழ்க்கையின் இறுதிகட்டம் வரை ஒருவன் பணம் சம்பாதிப்பதற்காக மட்டுமே, தன் வாழ்நாள் முழுமையும் செலவிடக்கூடாது! பிறருக்கு தானம் அளிக்க வேண்டும் என்பதற்காக யோசிக்காமல், அவரைப்பற்றி அறிந்து கொள்ளாமல் செல்வத்தை வாரி வழங்குவதும் தவறான செயலாகும்! ஏனெனில் நம் கஜானாவில் செல்வம் இருக்கும் வரை நம்முடன் இருக்கும் கூட்டங்கள் முழுவதும், நம் கஜானா காலி ஆகிவிட்டால் அவர்களில் ஒருவர் கூட நம்முடன் இருக்க மாட்டார்கள்!

நாம் சேமித்து வைத்த நிதியை தர்ம ஸ்தாபனங்களுக்கும், ஆசிரமங்களுக்கும் தருவதற்கு முன்னர் விசாரித்து, அத்தொகை நல்வழியில் செல்லக்கூடியதா என்று அறிந்து கொண்ட பின்னரே நிதி வழங்க வேண்டும்! ஊனமுற்றவர்களுக்கு நன்கொடை அளிப்பதும், உணவு அளிப்பதும் இறைவனுக்கு செய்யும் சேவையாகும்! உடல்நிலை சரியில்லாத ஏழைகள், அநாதைக் குழந்தைகள், வசதி இல்லாத பெண்களின் பிரசவத்திற்கும், வறுமையில் வாடும் பண்டிதர்களுக்கும், நிதி வழங்க வேண்டும்! சேவையிலேயே மிகப்பெரிய சேவையாக அன்னதான சேவை கருதப்படுகிறது. அவற்றில் மூன்று வகையாக அன்னதான சேவை செய்யலாம். விசேஷகர்ணம் (Visesha Karanam) என்ற

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

முதலாவதாக குறிப்பிட்ட வகையைச் சில குடும்ப விழாக்களில் அன்னதானம் செய்யலாம். இரண்டாவதாக நித்திய கரணம் (Nitya Karanam) என்பது தினமும் அன்னதானம் செய்வது. மூன்றாவதாக கார்ய கர்ணம் (Occasional Cases) என்ற வகை நினைத்த சில முக்கிய காரியங்கள், நிறைவு பெற்றதற்காகவும், அன்னதானம் வழங்கலாம். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வது மிகவும் புண்ணியமாகும்.

அன்னதானம் வழங்கும்போது முக்கியமாக கவனிக்க வேண்டிய கருத்துக்களை நான் இப்போது குறிப்பிடுகின்றேன்! கவனிப்பாயாக! நல்லவர், தீயவர், ஏழை, பணக்காரன் இவை போன்ற எந்த பாகுபாடும் பார்க்காமல் அன்னதானம் வழங்க வேண்டும். தீயவர்களாக இருந்தாலும் அன்னதானம் வழங்குவதில் தவறில்லை!

விலங்குகளுக்கும் அன்னதானம் வழங்க வேண்டும். அன்னதானம் பெறுவதற்கு எல்லோருக்கும் தகுதி உண்டு. அதனால் பாரபட்சமில்லாமல், அவர்களின் பாத்திரத்தை நோக்கி அன்னதானம் அளிக்க வேண்டும். முகத்தை நோக்கி அன்னதானம் அளித்தல் ஆகாது. ஒருவேளை நாம் காணும் முகம் நமக்கு விருப்பமில்லையென்றால், விருப்பமில்லாமல் அளிக்கும் அன்னதானத்தில் எப்பலனும் இல்லை. ஆகையால் பாத்திரம் நோக்கியே அன்னமிட வேண்டும்.

நானாசாஹேப் பாபாவிடம் "தேவா அன்னதானம் செய்து கொண்டிருந்தவர்கள், ஒருவேளை தொடர்ந்து செய்ய நிதி வசதி பற்றாக்குறை ஏற்பட்டால் என்ன செய்யலாம்?" என்று வினவினார். பாபா தீர்க்கமாக, ஒருவேளை அந்நிலை வந்தால், நல்ல நிலைக்கு வரும் வரை அமைதியாக இருக்க வேண்டும்! இறைவனை ப்ரார்த்திக்க வேண்டும். ஆனால் அதற்காக கடன் வாங்கி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அன்னதானம் செய்யலாகாது! எந்த தானத்தையும் கடன் வாங்கி செய்யக்கூடாது! அவ்வாறு கடன் வாங்கி செய்யும் தானங்கள் தெய்வ காரியங்கள் எவையும் பாபா விரும்பவில்லை. நம்மிடம் இருப்பவற்றை பகிர்ந்தளித்து உண்போம் என்றார். அதுமட்டுமில்லாமல் கடன் வாங்கி தன்னை தரிசிக்க வருவதும் கூடாது என்று அனைவருக்கும் உத்தரவிட்டார்.

நானாசாஹேப் பாபாவிடம் "ஸ்வாமி நித்ய அன்னதானம் பற்றி அறிந்து கொள்ள விழைகிறேன்" என்றார். பாபா, "நானா நான் இப்பொழுது நித்ய அன்னதானத்தைப் பற்றியும், அதைப் பெறுவதற்கு தகுதி உடையவர்களைப் பற்றியும் கூறுகிறேன்! நித்ய அன்னதானம் பெறுவதற்கு, திருமணம் நிச்சயிக்கப்பட்டவர் முதல் சந்நியாசி வரை எல்லோருமே தகுதியை உடையவர்கள்".

சாஸ்திர விதிகளின்படி சில பண்டிதர்கள், சமைத்த உணவை யாசகமாக பெறமாட்டார்கள்! வேதம் பயிலும் மாணவர்களும் சமைக்கப்படாத அரிசி மற்றும் தானியங்கள் பெற்று தாங்களே சமைத்து உண்ணும் பழக்கத்தை கொண்டவர்கள்! அத்தகையோருக்கும் நித்ய அன்னதானம் வழங்கலாம்! அவர்களும் நித்ய அன்னதானம் பெற்றுக் கொள்ளலாம்! யாசகம் பெற்று உண்பவர்கள் ஒரே வீட்டில் தொடர்ந்து யாசகம் பெற இயலாது. வேறு வேறு இடங்களில் சென்றே யாசகம் பெற்று உண்ண வேண்டும்.

கார்ய அன்னதானம் என்பது சிலர் இல்லத்தில் கை கூடி சுப நிகழ்வுகள் உதாரணமாக திருமணங்கள், பூணூல் என்னும் உபநயன சடங்குள், இது போன்ற முக்கிய வைபவங்களில் அளிக்கப்படும் அன்னதானம் கார்ய அன்னதானம் என்று அழைக்கப்படுகிறது. பாபா இவ்வாறு அன்னதானத்தைப் பற்றி தெளிவாக எடுத்து உரைத்ததும், அவரது அடியவர்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனைவரும் அவரைத் தொழுது இத்தகைய அறிவுரைகளுக்கான நன்றியைத் தெரிவித்தனர்.

பாபாவின் பக்தர் ஒருவர் "பாபா இதுவரை அன்ன தானத்தின் கோட்பாடுகளை, தங்களிடம் இருந்து மிகச்சிறப்பாக அறிந்து கொண்டோம்! தாம் எமக்கு தயைகூர்ந்து "வஸ்திரதானம்" மற்றும் "வித்யா தானம்" மற்றும் இதர தானங்களிலும் கடைபிடிக்க வேண்டிய நியதிகளைக் கூற வேண்டுகிறேன்" என்றார்.

பாபா தன் அடியவர்களிடம் வஸ்திர தானம் மட்டுமல்ல எல்லா வகையான தானங்களுக்கும் அடிப்படையானது தூய்மையான அன்பும், சுயநலமில்லாத எண்ணமும் கொண்டு பலனை எதிர்பாராமல் அளிக்கப்படும் தானமே தலைசிறந்ததாகும். பிறரின் துக்கத்தைப் போக்க இயன்றவரை அன்பை தானமாக அளியுங்கள்! பிறரின் செல்வத்தை அவருடைய சார்பில் தவறாகப் பயன்படுத்தி தானமாக தான் அளிக்கவும் கூடாது. தானம் அளிப்பவர்கள் நெறியற்ற முறையிலும் தவறான வழியிலும் சம்பாதித்த பொருளில் தானம் வழங்கவும் கூடாது. அவற்றை தானமாகப் பெற்றால் அந்தப் பாவத்திலும் ஒரு பங்கு தானம் பெறுபவருக்கும் வந்தடையும்!

மேலும் மிகவும் ஆடம்பரமாக உடைகள் உடுத்துவதோ! அளவுக்கு அதிகமான அலங்காரங்கள் செய்து கொண்டு புண்ணிய காரியங்கள் செய்யலாகாது! எவர் மனதும் புண்படுமாறு பேசவே கூடாது! எவரையும் இழிவு செய்யலாகாது! தீய குணம் உடையவர்களை அடையாளம் தெரிந்து கொண்டு அவர்களை விட்டு விலகியே இருக்க வேண்டும்.

ஒருவனுக்கு நல்ல மனைவி, நல்ல புத்திரர்கள், நல்ல வேலையாள் அமைவதும் அவனுடைய ப்ராரப்த கர்மாவின் வினையே ஆகும். எல்லோரையும் ஒரே மனதுடன் நேசிக்க கற்றுக்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொள்ள வேண்டும். அவர்கள் ஒருமுறை தவறு செய்தால் உங்கள் உறவினர் என்று கூறி ஒருபோதும் காப்பாற்ற நினைக்கக் கூடாது. அவ்வாறு காப்பாற்றினால் இறைவன் வழங்கும் பெரிய தண்டனையிலிருந்து எவரும் அவரை காப்பாற்ற இயலாது.

நம்முடைய ப்ராரப்த கர்மாவை முழுமையாக அனுபவித்து இப்பிறவியிலேயே அதிலிருந்து நாம் விடுதலை அடைய முயற்சி செய்ய வேண்டும்! ஆகையால் பிரச்சினைகளை எதிர்கொள்ள தயக்கம் காட்டி அவற்றிலிருந்து தப்பிக்க நினைக்கக்கூடாது! அவ்வாறு நினைத்து தப்பித்தால் அத்தண்டனை அடுத்த ஜென்மத்தில் மிகப்பெரிய தண்டனையாக நமக்கு வழங்கப்படும்! நாம் எல்லோரும் ஒரு கருத்தை நன்றாக நம் மனதில் பதிவு செய்து கொள்ள வேண்டும்! நமது ப்ராணன் நீங்கும் வேளையில், அடுத்த ஜென்மத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு, இறக்கக் கூடாது. அவ்வாறு விடுதலை அடையும் சிந்தனை உள்ளவர்கள் இந்த பிறவிக் கடனை இப்பிறவிலேயே முழுவதுமாக அனுபவித்துவிட்டு இறைவனை அடையும் பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள்.

NOT FOR SALE

நமக்கு வாய்த்த மனைவி, மக்கள் மற்றும் சொந்தங்கள் யாவும் இந்த ஜென்மத்தில் மட்டுமே நமக்கு உறவுகளாக இருக்கின்றன! அடுத்த ஜென்மத்தில் இவர்கள் எவரும் நம்மை அறியக் கூட இயலாது. சென்ற ஜென்மத்தில் இவர்களோடு நமக்கு எந்த உறவும் இல்லை! இந்த ஜென்மத்தினை உறவுகள் இந்த பிறவி முடிவடையும் வரையே நம்முடன் இருப்பவை என்பதை நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்!

ஒரு சிலர் இறைவனிடம் எனது அடுத்த பிறவியிலும் இவரே எனக்கு உறவாக அமைய வேண்டும் என்று அறியாமல் ப்ரார்த்தனை செய்கிறார்கள்! அவர்கள் அடுத்த பிறவி எடுப்பதிலிருந்து முக்தி அடைய இயலாது! தாமே தமக்குண்டான

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விதையை விதைத்துக் கொள்கிறார்கள்! யாத்திரை செய்பவர்கள் பயணக்களைப்பில் ஓய்வெடுப்பதற்காக ஏதாவது ஒரு சத்திரத்தில் இரண்டு நாட்கள் தங்கிய பிறகு அந்த இடத்தைவிட்டு நீங்கிச் செல்வார்கள். அவர்கள் மீண்டும் அந்த சத்திரத்தைப் பற்றியோ அல்லது அந்த சத்திரத்தில் அவருடன் கூட தங்கியவர்களைப் பற்றியோ நினைவில் கொள்வதில்லை. அவர்களின் பயணத்தில் சந்தித்த மனிதர்களின் உறவுகள் யாத்திரை நிறைவடைந்ததும் முடிவடைந்து விடுகிறது.

இப்பிறவியில் நம்மைச் சூழ்ந்துள்ள மனித உறவுகள், நாம் இப்பிறவியிலிருந்து முக்தி அடைந்ததும் நம்மை விட்டு நீங்கி விடுவார்கள் என்ற சத்தியத்தை அனைவரும் உணர வேண்டும். ஆகையால் இந்த உலகை நாம் வாடகை அளித்து தங்கும் சத்திரமாகத்தான் கருத வேண்டும்! நாம் அனைவருமே வந்து, போகும் வழிப்போக்கர்கள்! இதுவே உண்மை. இதை நன்றாக உணர்ந்து கொண்டால், பந்த பாசங்களில் தம்மை பிணைத்துக் கொண்டு, மகிழ்வதும், வேதனையுறுவதும், அழுவதும், சிரிப்பதும் பயனற்ற செயல்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

NOT FOR SALE

ஆகையால் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் தம்முடைய கடமையை, பற்றின்றி ஆற்ற வேண்டும். சத் சித் ஆனந்தமான, இறைவனின் ரூபத்தை மனதில் நிறுத்தி தனது புத்திரர்களும், மனைவியும் இறைவனால் தமக்கு இப்பிறவியில் மட்டுமே அளிக்கப்பட்ட சொந்தங்கள்! என்பதை உணர்ந்தால், அவர்கள் எதை இழக்க நேரிடினும் அதற்காக வருந்த மாட்டார்கள். அதற்காக நம் கடமையிலிருந்து நாம் தவறக்கூடாது.

குடும்பத் தலைவன் தன் புத்திரர்களுக்கு தேவையான உணவு, உடை, கல்வி, நல்ல சிந்தனைகள் இவற்றை தருவதற்கு

கடமைப்பட்டவன் ஆவான். தாயும், தந்தையும் தன் புத்திரர்களை பேணி காக்கும் கடமையிலிருந்து தவறக்கூடாது! இத்தகைய அற்புத உபதேசங்களால் பக்தர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

பாபாவின் அடியவர் ஒருவர் "ஸ்வாமி கடமையைப் புரிய தாங்கள் உத்தரவிட்டுள்ளீர்கள்! ஆனால் பாசவலையினுள் சிக்கக் கூடாது என்றும் கூறுகிறீர்கள்! இல்லற வாழ்க்கையை வாழும் நாங்கள் இவை இரண்டையும் எவ்வாறு நோக்க வேண்டும் என்பதையும் தயை கூர்ந்து அருளுங்கள்! என்றவுடன், சத்குரு தாமரை இலையின் மேல் நீர் அமர்ந்து இருந்தாலும், ஒட்டாது அமர்ந்து இருப்பதைப்போல தனக்கு அளிக்கப்பட்ட கடமையை ஆற்ற வேண்டும்! எது நேர்ந்தாலும் விளைவை இறைவனிடம் விட்டு விடவேண்டும்" என்றார். இத்தகைய விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தை நமக்கு உபதேசித்த சத்குருவை அனைவரும் பணிந்து வணங்கினர்.

மற்றொரு நாள் பாபா மசூதியில் அமர்ந்திருக்கும் சமயத்தில் அடியவர் ஒருவர் "தேவாதி தேவா, கடமையைச் செய்யும் போது பலனை எதிர்நோக்காமல் செய்ய வேண்டும் என்று கூறியதன் முழுமையான விளக்கத்தை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம்" என்றார், மகராஜ் சிரித்துக்கொண்டே, நாராயணா! தன்னுடைய பெற்றோரையும், மனைவியையும், புத்திரர்களையும் காக்க வேண்டியது ஒருவனுடைய இல்லற தர்மமாகும்!.

ஆனால் அவன் அதை நினைத்து கர்வம் கொள்ளக் கூடாது! நான் என் சொந்தங்களுக்காக இவற்றை செய்துள்ளேன்! நான் என் புத்திரர்களை வேறு எவரைக் காட்டிலும் உயர்வான வகையில் பேணிக் காக்கின்றேன்! நான் என் உறவினருக்கு இதைச் செய்தேன்! அதைச் செய்தேன்! நானே அவர்களைத் தாங்கும் தூணாவேன்! என்ற கர்வம் தலை தூக்கக்கூடாது! அது இவ்வுலகில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வாழ்பவர்களின் கடமையாகும். அக்கடமையை தான் மட்டுமே செய்வதாக நினைத்து பெருமை கொள்ளலாகாது! அதன் பலனை இறைவனிடத்தில் விட்டுவிட வேண்டும்! ஞானமுள்ள ஒருவனின் ஞானத்தைக் கொண்டு, மற்றவர்களுக்கு நல்லவை, தீயவைகளை பகுத்தறிந்து எடுத்துக்கூற வேண்டும்! அச்செயலுக்காக அவர்களுக்கு ஞானச் செருக்கு ஏற்படக்கூடாது. பிறரிடமிருந்து நற்குணங்களை மட்டுமே நாம் கற்றுக்கொள்ள வேண்டும்! ஒருவன் நற்காரியங்களை ஆற்றும் போது உறுதியான தீர்மானத்துடன் அதன் பலனை எல்லோருக்கும் சென்று சேரும் வகையில் கர்வமின்றி ஆற்ற வேண்டும்!

ஒருவன் இந்த உலகில் வாழும் வாழ்க்கையானது. அவன் இறந்து பல ஆண்டுகள் ஆனபிறகும் இச்சமூகம் அவனை போற்றும் வண்ணம் அமைய வேண்டும்! ஒருவன் செய்யும் நற்காரியத்தால் அவனுக்கு அதற்குண்டான மரியாதை கிட்டுமானால் அதை தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவனுடைய செயல்களால் கிடைத்த வெற்றியை, இறைவன் அளித்த வரமாகக் கருதி, அவருக்கே சமர்ப்பிக்க வேண்டும். நீ உயிருடன் இருக்கும்வரை, உன் சரீரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது உன் கடமையாகும்! ஆனால் மரணத்தைப்பற்றி நினைத்து வருந்துவது வீணானது. இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும் மரணம் என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும்!

இந்த உடல் பஞ்ச பூதங்களிடம் இருந்து. நீ வாங்கிய கடனாகும்! அக்கடனை நீ அடைக்க வேண்டுமென்றால், உன் உடலை விட்டு ஆன்மா நீங்க வேண்டும். இதுவே இயற்கை! உயிருடன் இருக்கும்போது உன்னுள் இருந்த காற்று, காற்றுடன் இணைகின்றது! உன்னுடைய சக்தி இயற்கையின் சக்தியுடன் சேர்ந்து விடுகிறது! உன் உடலை உருவாக்குவதற்காக, உனக்குள்

NOT FOR SALE

நுழைந்த பஞ்ச பூதங்கள், உன் உடல் நீங்கியதும் தங்களுடைய இடத்திற்குச் சென்று சேர்ந்து விடுகின்றது!

ப்ருத்வி என்று சொல்லக்கூடிய இந்த பூமியின் ஒரு பாகமே உன்னுடைய உடலாகும்! ஒரு விதையை விதைக்கும்போது பூமியும், சூரியனும், மழைநீரும், காற்றும் அதற்கு உயிரூட்டி அது வளர்ந்து பெரிய விருட்சமாக வளர்ந்து, பின்னர் தம்மால் தான் எல்லாமே நிகழ்ந்தது என்று பூமியும், சூரியனும், காற்றும், மழையும் உரிமை கொண்டாடுவதில்லை! அவ்வாறு இருக்க பஞ்ச பூதங்களிடம் இருந்து கடனாக நீ பெற்ற உடலுக்காக ஏன் கர்வம் கொள்ள வேண்டும்?

இயற்கையின் தத்துவத்தை இத்தனை எளிமையாக எவரால் விவரிக்க இயலும்? இது நம் சத்குரு சாயிநாதருக்கே உள்ள தனித்துவமான குணமாகும்.

பாபா நானாசாஹேப் அவர்களிடம், "ஓ நானா, நான் இவ்வளவு நேரம் எடுத்துரைத்த முக்தி அல்லது விடுதலை அடைதல் என்பதன் முழுமையான அர்த்தம், இன்பம், துன்பம் இவை இரண்டையும் சமமாகப் பார்க்க வேண்டும் என்பதே ஆகும்! இதற்கு மேல் நான் என்ன கூற இயலும்? இப்போது நீ சென்று வா!" என்று ஆசிர்வதித்தார். நானாசாஹேப் இரு கரங்களைக் கூப்பி "ஸ்வாமி தங்கள் உபதேசம் என்ற மழையில், என்னுடைய அறியாமை என்ற குப்பையை அகற்றி, என் மனதை நல்வழிப்படுத்தியதற்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்! இத்தகைய பேருதவியை நான் எவ்வாறு மறக்க இயலும்? இங்கு உங்களை தரிசிக்க வந்த அனைவருக்கும் தங்கள் உபதேசத்தை வரப்ரசாதமாக அளித்தீர்கள்! நாங்கள் அனைவரும் பாக்கியசாலிகள்! என்று கூறி மீண்டும் பாபாவின் பாதங்களை வணங்கி விடைபெற்றுச் சென்றார். இத்தகைய உபதேசங்களால் நன்மை அடைந்தவர்கள் நானாசாஹேப்பும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவருடன் வந்தவர்களும் மட்டுமல்ல, இவற்றைப் படிக்கும் நல்வாய்ப்பு பெற்ற நாம் அனைவரும் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள் அல்லவா!

இச்சரித்திரத்தை, இவ்வத்தியாயத்தை பக்தியுடன் படித்தவர்களை ஒரு துன்பமும் அணுகாது பாபா இரட்சித்து காப்பாற்றுவார் என்பதை "பக்த லீலா அம்ருதம்" என்ற இச்சரித்திரத்தை எழுதும் பேறு பெற்ற தாஸ்கணுவாகிய நான் உறுதியாகக் கூறுகிறேன்.

## பாபாவின் அணுகுமுறை

சாயி குருசரித்திரத்தைப் படிக்கும் சில அடியவர்களுக்கு, பாபா இத்தகைய அளவில் மிகப்பெரிய உரையை நிகழ்த்தினாரா! அல்லது இரத்தினச் சுருக்கமாக தாம் கூற வந்ததை கூறினாரா? என்ற சந்தேகம் எழக்கூடும்.

பாபா தன் அடியவர்களிடம் அநேக அற்புதங்களை புரிந்துள்ளார். அதே சமயம் அந்த அற்புதங்களின் மூலம் தம் பக்தர்களுக்கு இறை உணர்வு மற்றும் வாழ்வியல் கோட்பாடுகளையும் மறைமுகமாகவும், குறிப்பாகவும் பலமுறை வெளிப்படையாகவும் குறிப்பிட்டுள்ளார். பாபா கூற விழைந்த கருத்துக்களை, அவருடன் கூட இருக்கும் வாய்ப்பு கிடைத்தவர்களின் மூலம் நிறைய கருத்துக்கள் சேகரிக்கப்பட்டது. சில சமயங்களில் அவருடன் நெருக்கமாக இருப்பருக்கே அவர் கூறுவதன் பொருள் புரியாமல் போனதும் உண்டு.

அத்தகைய தருணங்களில் ஏதாவது ஒரு குறிப்பைக் கொண்டு பாபாவே உணர்த்துவார்! சிலருக்கு உபதேசங்கள் கனவிலும் கிடைத்தது. சிலருக்கு காட்சியாகவும் கிடைத்தது! ஒவ்வொரு மனிதருடைய தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ப அவருக்கே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


உரிய பாணியில் உபதேசங்கள் வழங்கப்பட்டன! அதைப் பின்பற்றியவர்களும் அவர்களின் தலைமுறையினரும் இன்று சமூகத்தின் மிகப்பெரிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்! பாபாவுடன் கூடவே இருந்த நானாசாஹேப் சந்தோர்கர் மிகவும் பாக்கியம் பெற்றவர். அவர் பாபாவிடம் இருந்து நிறைய உபதேசங்களைப் பெற்றுள்ளார். அவையாவும் இந்த அத்தியாயத்தில் தொகுத்து அடியேன் தாஸ்கணு, பாபாவின் பக்தர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்! அவருடைய உபதேசங்களை கேட்டால் மட்டும் போதாது, அவற்றை முறையாக பின்பற்றவும் வேண்டும். அவ்வாறு பின்பற்றுவோரிடம் பாபா என்ற கருணைக்கடல் எப்போதும் தனது அருளைப் பொழிவார் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

பாபாவிடம் விடைபெற்றுச் சென்ற நானாசாஹேப் அவர்கள் தன் இல்லத்திற்கு சென்றதும், கிடைத்த உபசதேசங்களை ஆனந்தமாக மற்றவருக்கும் எடுத்துரைத்தார். அவர் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. நான் பாபாவிடம் கர்மாவின் விளக்கங்களை கேட்டுப் பெற்றேன்! ஆனால் வித்தியாசங்களையும், அவற்றின் வகைகளையும் கேட்டுப் பெற எவ்வாறு மறந்தேன் என்ற எண்ணம் அவரிடம் தோன்றியவுடன் இரண்டு நாட்களில் புறப்பட்டு ஷீரடிக்கு மறுபடியும் வந்து விட்டார். பாபா புன்முறுவலுடன் "என்ன நானா இன்னும் உன் சந்தேகம் தீரவில்லை போல் தோன்றுகிதே இப்பொழுது என்ன வேண்டும் உனக்குக் கேள்!" என்றார். நானா மிக்க மகிழ்ச்சியோடு, "என் கருணா மூர்த்தியே தங்களின் கருணைக்கு ஒரு அளவே இல்லை! அடியேன் தங்களிடம் கர்மாவின் வகைகளையும், அவற்றின் நடுவில் இருக்கும் வித்யாசங்களையும் அறிய ஆவல் கொண்டேன்!" தயை கூர்ந்து எடுத்துரைப்பீர்கள் என்று வேண்டினார்.

NOT FOR SALE

பாபா "நானா என்னுடைய கூற்றில் இருக்கும் உண்மையை உணர்ந்து கொண்டால் முக்தி நிலையை உன்னால் எளிதில் அடைய இயலும்!"

நான் முன்னரே கூறியவாறு ப்ராரப்த கர்மாவால் பாதிக்கப்பட்டிருந்தால், அதனுடைய தன்மையை, நேர்மையான சிந்தனையுடன் கண்காணிப்பது அவசியமாகும். அக்கர்மாவின் தன்மையைக் குறித்து உன் மனதில் விசாரணை நடத்து! ஒன்றை மட்டும் மறவாதே! என்ன நிலைமை நமக்கு ஏற்பட்டாலும் அது இயற்கையாக நிகழ்வதானால் அதன் பலனே ப்ராரப்த கர்மா என்று அழைக்கப்படுகிறது. உனக்கு இன்னும் எளிமையாக புரிய வைக்கிறேன். சிலர் ஒரு வீட்டில் திருடிவிட்டனர். அவ்வாறு திருடிய குற்றத்திற்காக அவர்கள் அரசாங்கத்தால் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அவர்களின் தீய செயலுக்காக வழங்கப்பட்ட தண்டனையே கர்மா என்றழைக்கப்படுகிறது. ஆனால் அது ப்ராரப்த கர்மா அல்ல. ஒருவன் விஷம் குடித்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறான். இதுவும் அவன் செயலுக்கான கர்மாவின் பலனே ஆகும். ஒரு வேலைக்காரன் தன் எஜமானரை ஏமாற்றி நிறைய சொத்துக்கள் சேர்த்து வைத்துள்ளான். இதுவும் அவனுடைய கர்மாவே ஆகும். அந்த வேலைக்காரன் தன் எஜமானரை ஏமாற்றி சேர்த்து வைத்த எண்ணத்தில் மனை, குதிரை போன்றவற்றை வாங்கி மிகப்பெரிய செல்வந்தராகி விட்டான். அவன் மிக்க சந்தோஷமாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய அந்த தீய செயலால் அவனுடைய கர்மா அவனை அடுத்த ஜென்மத்திற்கு துரத்தியது.

இத்தகைய கர்மாவே **"சஞ்சித கர்மா"** என்று அழைக்கப்படுகிறது. தனது செயலுக்கான விளைவாக அவன் அடுத்த ஜென்மத்தைப் பெறுவதே சஞ்சித கர்மாவாகும். ஆனால்

NOT FOR SALE

அவன் அடுத்த ஜென்மத்திலும் மிகக் குறைவான கூலியைப் பெறக்கூடிய வேலைக்காரனாகவே பிறவி எடுக்கிறான். இதுவே அவனுடைய ப்ராரப்த கர்மாவின் விளைவு ஆகும்.

நாம் அடுத்த பிறவி எடுப்பதன் காரணம், நாம் புரிந்த **சஞ்சித கர்மாவாகும்.** அடுத்த பிறவியிலும் நம்மைத் துன்புறுத்தும் வறுமைக்கும், துன்பத்திற்கும் காரணம் நம்முடைய **ப்ராரப்த கர்மாவாகும்.** நானா! ஒருவேளை நீ அந்த வேலைக்காரனிடம் அவன் சம்பாதித்தது ஏன் என்று கேட்டால் அதற்கு அவன் உண்மையாகக் கூறும் பதில் என்ன தெரியுமா? அவன் புரிந்த செயலால் அவனுக்குக் கிடைத்த அடுத்த பிறவியே ஆகும். இதுவே சஞ்சித கர்மாவின் விளைவாகும்.

இப்பிறவியில் மனிதர்கள் சிலர் உயர்பதவியை வகிக்கின்றார்கள். சிலர் யோகியாகவும் அலைகின்றனர். இப்பதவிகள் அனைத்திற்கும் காரணம் அவர்களின் ப்ராரப்த கர்மாவின் பலனே ஆகும். அதை கர்மா என்று கூற இயலாது. நானா ஆச்சர்யத்துடன் "தேவா ஒரு திருடன் தான் செய்த குற்றத்தினால் திருடனாகிறான். அதற்கு கர்மாவே காரணம் என்றீர்கள். மறுபடியும் அதனுடைய பலன் ப்ராரப்த கர்மா என்று கூறுகிறீர்கள். இந்த மூடனுக்கு தாம் கூறியதன் அர்த்தம் விளங்கவில்லை. தேவா! தயை கூர்ந்து இதை விவரிக்க வேண்டுகிறேன்" என்றார்.

பாபா "நானா முதலில் நீ கேள்விகளால் நிரம்பியுள்ள உன் மனதை வெற்றிடமாக்கு" அப்போது நான் சொல்வதை உன்னால் புரிந்து கொள்ள இயலும்! சிலர் திருடுகிறார்கள்! அவர்களின் தீச்செயலுக்காக தண்டனை பெறுகிறார்கள்! மற்றும் சிலர் திருடிய பிறகும் கூட, தண்டனையிலிருந்து தப்பி, அரசாங்கத்தை ஏமாற்றிவிட்டு சமூகத்தில் தவறு செய்யாதவர்களைப் போல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


நடித்துக் கொண்டிருக்கின்றனர்! இதற்கெல்லாம் காரணம், ப்ராரப்த கர்மாவே ஆகும்! மேற்கூறிய இருவரும் திருடிய குற்றத்தைச் செய்தவர்கள். ஒருவன் கண்டுபிடிக்கப்பட்டு சிறைக்குச் சென்று விட்டான். மற்றவன் தப்பித்துவிட்டான். இங்கு ப்ராரப்தா (Prarabdha) என்பது கர்மாவையும் தாண்டிய ஒன்றாகும். திருடியவன் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வான் எனில் அவன் கர்மா அவனை அடுத்த ஜென்மத்திற்கு அழைத்துச் செல்லும்! ஏனெனில் செய்த தவறுக்கு தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும், இப்பிறவியில் அரசாங்கத்திடம் இருந்து தப்பிக்க நினைப்பவன், அடுத்த பிறவியில் இறைவனால் மிகக் கடுமையாக தண்டனைக்குள்ளாவான்.

அனைவரும் நல்லவர்களாக, நேர்மையான மனிதர்களின் நட்புறவுடன் இருத்தல் அவசியம்! தீய நட்பை ஆரம்பத்திலேயே விலக்கிவிட வேண்டும். போதை தரும் பாணங்களை ஒருபோதும் நம்மை அணுகவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது நம்மை கைப்பற்றிவிட்டால் நாம் அதற்கு அடிமைகளாகி விடுவோம்! தேவையற்ற வீண் விவாதங்களில் நாம் ஒருபோதும் ஈடுபடலாகாது! எப்போதும் உண்மையைப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்! எவரிடமாவது ஒரு வாக்களித்தால் அதை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற வேண்டும்! வாக்கு தவறுபவர்களை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்! இந்த அறிவுரையை பின்பற்றினால் ஹரி மிகவும் மகிழ்வார்! உன் உடலில் உள்ள பெண்ணாசை, உன்னைத் தூண்டும் போது, உன் மனைவியை மட்டுமே காண வேண்டும்! காணும் பெண்கள், எல்லோர் மீதும் மோகம் கொள்வது மிகவும் தவறாகும். சரீர இன்பத்திற்கு ஒருபோதும் அடிமையாகி விடக்கூடாது! ஒரு எல்லைக்கு மேல் அந்த உணர்வை செல்லவிடாமல் கண்காணிக்க வேண்டும். உணர்ச்சிகளுக்கு ஒருபோதும் அடிமையாகாதே! அது நம்மை

முக்தி நிலையை அடையச் செய்யாமல் தடுத்து நிறுத்திவிடும்! ஆனால், நாராயணா! இந்த உணர்ச்சிகள் உன்னை நிம்மதியாக இருக்க விடாது! ஆறு வகையான எதிரிகளில் காம உணர்வு மிகவும் வலிமையானதும் ஆபத்தானதும் ஆகும். அத்தகைய உணர்வுகளை நாம் அடக்கிவிட்டால் ஞானிகளுக்கு சமமான இடத்தைப் பெறுவோம் என்பதில் ஐயம் எதுவும் இல்லை!

எப்போதும் நம் மனதில் இறைவனுடைய (அது எந்தக்கடவுளாக இருந்தாலும்) நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும்! அவ்வாறு உச்சரிக்கும் போது பாவச் செயல்கள் புரிவதற்கு அந்த நாமம் அவனை அனுமதிக்காது. நம் மனதில் நாம் எப்போது பந்த பாசம் என்ற கட்டுகளில் இருந்து முக்தி பெறுவோம் என்ற எண்ணம் இருந்து கொண்டே வர வேண்டும். ஒருவேளை நிறைய பாவச் செயல் புரிந்தாலும் அதிலிருந்து விடுபட்டு மனதை இறை உணர்வால், பக்தியால் நிரப்பிக் கொள்ள வேண்டும். எதை நினைத்தும், எதற்காகவும் கர்வம் ஏற்படக்கூடாது. சாதுக்கள் மற்றும் மகான்களின் சரித்திரத்தை படிக்கவோ அல்லது கேட்கவோ செய்தால் அவர்களின் தலைமுறைக்கும் புண்ணியங்கள் வந்து சேரும்.

அனைவரும் தம் தாய், தந்தையை இறுதிவரை ஒரு குறையும் இன்றி காக்க வேண்டும். தமது தாய் தந்தைக்கு மரியாதை அளித்து அவர்களை அன்புடன் கவனிப்பவருக்கு ஆயிரம் புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்த பலன்கள் கிடைக்க வல்லது! சகோதர சகோதரிகளை பாரபட்சமின்றி பேணி காத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய வேண்டும்!

பிறரிடம் அன்பை மிகுதியாக வெளிப்படுத்தி அதன் மூலம் அவர்களை அடிமையாக வைத்திருத்தல் தவறாகும்! இல்லத்தின்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தேவைகளையும், நடைமுறைகளையும், ஒருவன் தன் மனைவியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, அத்தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தம் புத்திரர்களுக்கு திருமணம் செய்து வைத்த பின், அவர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதோ அல்லது தனது புத்திரர்களுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் நுழைய முற்படுவதோ முற்றிலும் தவறான செயலாகும்! நண்பர்கள் மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தாலும் ஒருவன் தன் நிலையை அவர்களிடம் இழந்து விடக்கூடாது! குழந்தைகளை அவரவர் வயதிற்கேற்ப குழந்தைகளாகவே நினைத்து வளர்க்க வேண்டும்! வேலைக்காரர்கள் உன்னிடத்தில் மிகவும் விசுவாசமானவர்களாக இருந்தாலும் அவர்களிடமும் தன் நிலையை இழந்து நட்புறவு பாராட்டுதல் தவறாகும்! புத்திரர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக மருமகளாக வரும் பெண்ணிடம் ஒரு தொகையைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் அழிய வேண்டும்.

உன்னிடத்தில் வசதி இல்லை என்பதற்காக உன் வயதில் சிறிய செல்வ மகளை, வயதான கிழவருக்கு மணம் முடித்து வைக்காதே! உனக்கு வரவிருக்கும் மருமகன், உன் மகளுக்கு ஏற்ற வரனாக இருக்க வேண்டும்! உன் மகளுக்கு நீ செய்யும் தர்மமாகும். பணத்தின் மீதுள்ள மோகத்தால் பொருந்தாத திருமணங்கள் செய்வது தர்மமாகாது!

ஒரு குடும்பத்தில் வாழ வந்த மங்கை மிகவும் பொறுமையாகவும், எளிமையாகவும் இருக்க வேண்டும்! பிற ஆண்களின் மனதில் காமத்தை தூண்டும் வகையில் உடை அணியலாகாது! எவ்வாறு ஒரு ஆடு, குள்ளநரிக்கு தந்திர முறையால் உணவாகிறதோ, அதைப்போல பாவத்தினுடைய உணவாக, இவ்வுலகில் பெண்களை மாற்றுகின்றனர்! ஆடுகளை நாம் எவ்வாறு நரிகளிடம் இருந்து வேலியிட்டு பாதுகாப்பதைப் போன்று நம் குலப் பெண்களையும், பாதுகாக்க வேண்டும்.

NOT FOR SALE

மற்ற பெண்களையும் அன்னையின் ரூபத்தில் வணங்கி போற்ற வேண்டும். ஓ நானா! பெண்களின் நடவடிக்கை ஒரு குலத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

நானா. "நான் உன்னிடம்! ஆண், பெண் இருவரும் இந்த சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தேன்".

நான் இப்போது உனக்கு மனதளவில் ஏற்பட்ட தடுமாற்றத்தால் சிக்குண்டு பரிதவிக்கும் நபர்களின் குணங்களைப் பற்றிச் சொல்கிறேன் கேள்! ஒருவன் இவ்வுலகில் எது நன்மை, எது தீமை என்று பகுத்து அறியும் அறிவற்றவனாக இருந்தால், அவனுடைய மனதில் நல்ல சிந்தனைகள் தோன்ற இயலாமல் மனம் தடுமாறும். இதுவே தடுமாறி சிக்குண்ட மனமாகும். குற்றங்களை கைகளால் புரிந்தவர்களுக்கும், தீய சொற்களை தம் வாயால் பேசுபவர்களுக்கும், எவ்வித வித்தியாசமும் இல்லை. அவர்களும் தடுமாறியவர்களே ஆவார்கள்.

சென்ற பிறவியில் செய்த செயல்களால் இப்பிறவி எடுத்துள்ளோம். இப்பிறவியிலாவது மகான்களின் சரித்திரத்தை படித்தும், கேட்டும், தெரிந்து கொள்வது அவசியமாகும். அவ்வாறு மகான்களைப் பற்றி கேட்டு தெரிந்து கொண்ட சிலர், அவர்களை குற்றம் கூறவும் தயங்க மாட்டார்கள். அவர்களும் தடுமாறிய குணம் கொண்டவர்களே ஆவார்கள். செல்வந்தர்களாக இருந்த போதும், பிறருக்கு தான தர்மம் அளிக்க மனமில்லாமல் இருப்பவர்களும் மனம் தடுமாறியவர்களே.

மனிதர்கள் பலவகை குணங்களைப் பெற்று இருக்கிறார்கள். தனக்கு பெயரும், புகழும் வருவதற்காக அடுத்தவரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் அவர்களும், மனம் தடுமாறியவர்களே ஆவார்கள். அதற்காக கர்ம பலனையும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்கள் அனுபவித்தாக வேண்டும். தடுமாறிய மனம் உடையவர்கள் இந்த உலகையும், இதில் வாழும் வாழ்க்கையையும் நிரந்தரம் என்றும், இவற்றையே இறைவன் என்றும் நினைத்துக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய சிந்தனை சதா சர்வ காலமும், இந்த உலகைப் பற்றியதாகவே இருக்கும்! அவர்களும் மனம் தடுமாறியவர்களே! சிலர் நல்ல நண்பர்களை பகைத்துக் கொள்வார்கள் மற்றும் சிலர் தாம் குருவாக ஏற்றுக் கொண்டவரின் சொல்லை ஏற்காமல், குருவிடம் பகைமை பாராட்டும் அவர்களும் மனத்தடுமாற்றம் கொண்டவர்களே ஆவார்கள். ஒருவர் நிறைய நூல்களை கற்றுத் தெரிந்தும், தேவ சாஸ்திரங்களை கற்றும் அவருக்கு மனம் தூய்மை அடையாமல் இருந்தால் அவர்களும் மனம் தடுமாறியவர்களே ஆவார்கள். இத்தகைய மனத்தடுமாற்றம் கொண்டவர்கள் நல்ல நட்பும், நல்ல குருவும், நல்ல மனைவியும், நல்ல புத்திரர்களும் கிடைத்தால் கூட அவர்களை நெருங்காமல் விலகியே நிற்பர். இதுவே அவர்களின் சாபமாகும். மகான்களையும், சான்றோர்களையும் மதிக்காத அவர்கள் மிக்க துன்பத்திற்கு ஆளாகி மரணத்திற்குப் பின்னர் நரக வாசலுக்கே செல்வர்.

NOT FOR SALE

நானாசாஹேப், பாபாவிடம் "என் அன்பு தாயே! மனம் தடுமாறிய தீயவர்களைப் பற்றிக்கூறி எங்களுக்கு எச்சரிக்கை விடுத்து கவனமாக இருக்கும்படி உபதேசங்களை அருளினீர்கள்! தற்பொழுது சத்தியத்தை பின்பற்றக்கூடிய உண்மையானவர்களின் குணங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் தயை கூர்ந்து கூறுங்கள்" என்று பணிந்தார்.

பாபா "நானா, நான் இப்போது உனக்கு சத்தியத்தின் பாதையில் செல்லக் கூடியவர்களின் குணாதிசயங்களைப் பற்றிக் கூறுகிறேன், கவனமாகக் கேள்! எவர் ஒருவர் தடுமாறிய மனத்தை

கடிவாளம் கொண்டு அடக்கி, நல்ல எண்ணங்களைக் கொண்டு தீய குணத்தை அறிந்து கொண்டு அவற்றை விலக்கி, உண்மையான பரம்பொருளைத் தேடி அவர் தரிசனத்திற்காகவே காத்துக் கொண்டிருக்கிறாரோ, அதற்கு முமூக்ஷம் என்று பெயர். அவர் எப்போதும் சத்சங்கம் செய்யும் நண்பர்களை, தம்முடன் இருப்பதை விரும்புவார். இறைவனைத் தேடும் பணியில் இருக்கும் அவர்! இவ்வுலக விஷயங்கள் யாவும் மாயை என்று உணர்ந்து அவற்றியிலிருந்து நீங்கியே வாழ்பவர். இறைவனால் நமக்கு இந்த ப்ராரப்த வாழ்க்கையில் என்ன அளிக்கப்பட்டிருக்கிறதோ, அதை வைத்துக் கொண்டு வாழ்வதில் எண்ணம் கொண்டவர். ஒருவன் பாவம் செய்வதற்குப் பயப்படு வானேயானால், அவன் எப்போதும் உண்மையை பேசக் கூடியவன் என்றால், அவனே முமூக்ஷம் என்ற நிலைக்கு தகுதியானவன் ஆவான். அவன் தவறு செய்திருந்தாலும் அதற்காக இறைவனிடம் மன்னிப்பு வேண்டி, தன்னை திருத்திக் கொண்டு அத்தவறு மீண்டும் நிகழாதவாறு தன்னை பாதுகாத்துக் கொள்வான்.

முமூக்ஷ நிலை அடைந்தவன் எப்போதும் எளிமையாகவும், சாதுக்களையும், மகான்களையும் மதித்து வணங்குபவராகவும், எந்த சூழ்நிலையிலும், நேர் வழியில் இருந்து தவறாமலும் இருப்பான். இத்தகைய நிலையை முமூக்ஷம் என்று அழைக்கப்படுகிறது.

நானாசாஹேப், பாபாவிடம் "தேவா முமூக்ஷம் என்பதைப் பற்றி மிகத் தெளிவாக என்னைப் போன்றவருக்கும் புரியும் வண்ணம் எடுத்துக் கூறினீர்கள். தாம் எமக்காக இறைவனின் நாமத்தை எப்போதும் உச்சரித்துக் கொண்டே இருக்கும் "சாதனா" என்ற நிலையையும், நமஸ்காரங்களை செய்து கொண்டிருக்கும் "சாதகர்" பற்றியும் விளக்கமாக விவரிக்க வேண்டுகிறேன்! என்றார். பாபா, நானா இக்கலியுகத்தில் "சாதகர்" என்று சொல்லக்கூடிய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இறைவனுடைய நாமத்தை சதா சர்வகாலமும், உறங்கும் வேளையில் கூட உள்ளுணர்விலும் உச்சரித்துக் கொண்டிருப்பவரைப் பற்றியும், அவன் பலனைப் பற்றியும் கூறுகிறேன் கேள்! சாதகர் என்று சொல்லப்படுபவர், நல்ல பக்தர்களின் நட்பை என்றும் கைவிடமாட்டார்கள். தங்களின் சரீரத்தால் எக்காரியம் புரிந்து கொண்டிருந்தாலும், அவர்களின் உள்ளுணர்வு எப்போதும் இறைவனின் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும். இறைவனின் நாமத்தைத் தவிர, மற்ற அனைத்துமே வீண் என்று நினைப்பவர்களே (உச்சரிப்பதை தவிர) உண்மையான சாதகர்கள் ஆவார்கள். அவர்கள் மேலும் மேலும் உச்சநிலையை அடைவதற்கான வழியை தேடிக்கொண்டு, இறைவனின் அருளோடு உயரிய நிலையை அடைவார்கள். அவர்கள் இவ்வுலகில் கடமைகளைச் செய்த போதும், ஆத்மாவில் இறைவனைக் குறித்த தியானத்திலேயே இருப்பார்கள். அவர்கள் எங்கேயாவது இறைவனின் திருநாமம் கேட்க நேர்ந்தால் தங்கள் உள்ளம் குளிர்ந்து, செவிகளில் தேன் ஆறாக பாய்ந்ததாக இறைநாமத்தை உணர்வார்கள்.

இத்தகைய சாதகர்கள் சாதுக்களையும், மகான்களையும் கண்டால், இவ்வுலகை மறந்து அவர்களின் சேவையில் ஈடுபடுவதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கருதுவார்கள். இதுவே உண்மையான சாதகர்களின் நிலையாகும். நானா! இத்தகைய சாதகர்களின் சிந்தனையில் இறைவனைத் தவிர வேறு எந்த உலகப் பொருளுக்கும் இடமில்லை! என்றார்.

நானாசாஹேப் பாபாவிடம் “சாயி மஹராஜ், நாங்கள் இதுவரை இத்தகைய நிலையை அடைய எவ்வித ப்ரயத்தனமும் செய்யவில்லை! ஆனால் தங்களின் இவ்வுபதேசங்கள் எங்கள் மனதிலும், இறைவனின் நாமத்தை எப்போதும் உச்சரிக்கும் சாதகராக வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது! நாங்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மிகவும் பாக்கியசாலிகள், தேவாதி தேவா! இந்த தேசத்தில் சித்தர்கள் இறைவனின் அவதாரமாக பிறவி எடுத்துள்ளனர் என்று சான்றோர்களும் குறிப்பிடுகின்றனர். அப்படியானால், சித்தர்கள் என்பவர் யார்? என்பதை எங்கள் அறிவுக்கு எட்டுமாறு தயை கூர்ந்து கூறுவீர்கள் ஸ்வாமி! இவ்வாறு கேட்டதும், பாபா சிரித்துக் கொண்டே, "நானா உனக்கு சித்தரைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவ்வினாவை நீ சித்தனிடமே கேட்பாயா? சரி கூறுகிறேன் கேள்!

சித்தர்களுக்கு எல்லாம் தலைசிறந்த சித்தராக விளங்கும் நம் பாபா, சித்தரைப் பற்றி நானாவிடம் என்ன கூறுகிறார் என்பதை நாம் இப்போது கேட்போம் வாருங்கள்!

ஒரு உண்மையான சித்தருக்கு, மனிதனும், தெய்வமும் ஒன்றுதான்! போற்றினாலும் சரி, தூற்றினாலும் சரி, எந்தவித உணர்வும் இன்றி இருப்பவனே சித்தர் எனப்படுவார். தன்னிலையை அறிந்தவர், ஆறு எதிரிகளான காமம், கோபம் பேராசை, பொறாமை, பெருமை, தடுமாற்றம் இவை யாவற்றையும் களைந்த நிலையாகும்.

இவை யாவற்றையும் கடந்தவரே சித்தர் ஆவார்! உனக்கும், எனக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை, அதில் சந்தேகமோ, தடுமாற்றமோ தேவையில்லை. நான் என்பது எதுவுமே இல்லை. இவ்வுடல் ஒரு வாடகை வீடு என்பதை உணர்ந்தவரே சித்தர். பிரம்மத்தை உணர்ந்து சுக துக்கங்கள் எல்லாமே சமம். இவையாவும் மாயையின் விளையாட்டுக்கள் என்ற நிலையை அடைந்தவரே சித்தர் ஆவார். இவ்வாறு சித்தரைக் குறித்து அற்புதமாக உரைத்த நம் சித்தர், யோகீஸ்வரர், மகா ஞானியான பாபா, நானா! நான் மேற்கூறிய தடுமாறிய மனம், முமுக்ஷும், சாதகா மற்றும் சித்தநிலை இவை நான்கு நிலைகளையும் மனதில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பதிய வைத்துக்கொள்! நாம் சில சமயங்களில் ஆலயங்களிலும், பூஜை அறையிலும் மட்டுமே கடவுள் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம், ஆனால் இறைவன் சர்வ வியாபி! அவர் இல்லாத இடம் எதுவும் இல்லை என்பதை மனதில் நிறுத்து! அவருடைய தெய்வீக மாயை நம்மை குழப்பத்தில் ஆழ்த்தி உண்மை நிலையை உணர முடியாமல் தவிக்கவிடும்! மாயா இறைவனைத் தேடும் பணியை நம்மை சுதந்திரமாக செய்யவிடாது! அந்த மாயாவைத் தாண்டி வருவதற்கு குருவின் அருளே நமக்குத் துணை நிற்கும்! என்று பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் மிக உயர்ந்த தத்துவத்தை எளிமையாக சத்குரு புரிய வைத்தார்.

நானேசாஹேப்பும், அவருடன் பாபாவின் தரிசனம் பெற வந்தவர்களும், மிகச்சிறந்த விருந்தினைப் பெற்றதற்காக, பாபாவிற்கு நன்றியுரைத்து, அவருடைய ஆசீர்வாதத்துடன் தங்களின் இல்லம் திரும்பினர். நானேசாஹேப்பிற்கு, பாபாவை விட்டு பிரிய மனமில்லை. பாபாவிற்கு நன்றாகத் தெரியும், நானா இரண்டு நாட்களில் தம்மை நாடி மீண்டு பல கேள்விகளுடன் வருவார் என்று! முக்காலமும் உணர்ந்தவரே நம் சத்குரு.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE



## அத்தியாயம் - 3

ஓ கணேசா! முழுமுதற் கடவுளே! ஓ மூலாதார மூர்த்தியே! கணபதி தேவா! உம்மை வணங்குகின்றேன்! நான், நீ, கடவுள், உண்மை இவற்றின் ரூபங்களே மாருதி, மஹல்சாபதி, காசிநாத், அட்கர், சாதே, ஹரிபந்த், காகா, தாத்யா, கணேஷ்பேரே, வேணு பாலச்சந்திரா எல்லோருமே கடவுளின் வடிவங்களே! ஆகையால் தான் நாம் ஒருவரையும் வெறுக்கக்கூடாது! இறைவன் எல்லா உயிர்களிலும் இருக்கிறான்! இதை நாம் என்றுமே மறக்கக் கூடாது! இந்த ப்ரபஞ்சத்தையும் அதில் வாழும் அனைத்து உயிர்கள் மீதும் மிகுந்த அன்பு கொண்டவனே எல்லாவற்றையும் வெற்றி கொள்வான்! அன்பை இதயத்தில் வ்யாபிக்கச் செய்து, இவ்வுலகத்தின் உயிர்கள் அனைத்தின் மீதும் மிகுந்த அன்பை பாரபட்சமில்லாமல் பொழிபவன், தான் ஆற்றும் எல்லா காரியங்களிலும் வெற்றி அடைவான்! அத்தகைய பரந்த மனப்பான்மை கொண்ட அன்பு நமக்கு ஏற்படும் வரை நாம் அமைதியாகவும், பொறுமையாகவும் இருந்து உணர வேண்டும்.

பூச்சிகள் எவ்வாறு நெருப்பைச் சுற்றி வட்டமிட்டு பின்னர் அந்நெருப்பில் இறங்காமல் அந்த இடத்தைவிட்டு நீங்குகிறதோ, அதைப்போலவே, நம் மனங்களும் எல்லா இடங்களுக்கும் செல்லும் தன்மை உடையவை. அவற்றை நாம் தடுக்க இயலாது. ஆனால் எல்லா இடங்களையும் சுற்றி வந்தாலும் இறுதியாக ப்ரம்மத்தை அடைவதே தம் இலட்சியம் என்று உணர்ந்து வரவேண்டும். மனதை ப்ரம்மத்தை நோக்கி செலுத்தாமல், அடக்க இயலாமல் இருப்பின் பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியை ஒருவர் தவிர்க்க இயலாது. மனித வடிவில் உயிர் கொண்ட நாம் எடுத்த இந்த பிறவியில் பிரம்மத்தைத் தேடிச் செல்வதைவிட வேறு எந்த உயர்ந்த காரியமும் ஆற்ற இயலாது! இந்த மனித வடிவம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ப்ரம்மத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்! ஆரம்பகால பூஜை வழிபாடுகளை நாம் மூர்த்தி அல்லது (விக்ரஹம்) உருவம் வைத்து செய்யக்கூடிய பூஜை, நம் மனதை ஒரு முகப்படுத்துகிறது. இவ்வழிபாடு ஆரம்பகால வழிபாடு ஆகும்! ஆனால் மனிதர்கள் அனைவரும் இறுதிவரை ஆரம்ப கால வழிபாட்டு முறையிலேயே சிக்குண்டு, அதிலிருந்து விடுபட்டு அடுத்த நிலைக்கு செல்வதை விருப்பாமல், அதனுடன் ஒன்றிவிடுகின்றனர்.

பூஜை முறையில் தலை சிறந்தது மானசீக பூஜையாகும். நாம் வணங்க நினைக்கும் மூர்த்தியின் (இறைவனின்) உருவம் ஆத்மாவில் இருப்பதை உறுதியாக உணர்ந்து வணங்க வேண்டும், நம் புறக்கண்களுக்கு எதிராக இறைவனின் உருவத்தை வைத்து செய்யும் வழிபாட்டு முறையில், அவ்வுருவத்தை நாம் ஆத்மாவில் நிறுத்தி ஆராதனையை ஆத்மாவில் நிகழ்த்தவேண்டும்.

இப்பூஜையைக் அகக்கண்களை கொண்டு நிகழ்த்த வேண்டும். அவ்வாறு செய்யும் ஆத்ம பூஜையானது ஒருவருக்கு மனம் ஒருமுகப்படவும், சிந்தனைகள் சிதறாமலும், இருப்பதற்கும் உறுதுணைாகிறது. மனம் ஒருமுகப் படாவிட்டால் இப்பூஜை செய்ய இயலாது. இத்தகைய பக்குவத்தைப் பெற்ற ஒருவர் இறை உணர்வை தூண்டும் நூல்களைக் கற்க வேண்டும். கற்ற விஷயங்களை நடைமுறையில் கொண்டு வர வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். பலர் நிறைய நூல்களைக் கற்று பின்னரும் மனம் சிறிதும் பக்குவமடையாமல் இருப்பதற்கு காரணம், அவர் மனதை ஒருமுகப்படுத்தாமல் இருப்பதுதான். அவ்வாறு இருப்பவர் எந்த நூலைக் கற்றாலும், வேத சாஸ்திரங்களைக் கற்ற பண்டிதரானாலும் அவையும் வீணாகும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உயர்ந்த இறை ஞானத்தைப் போதிக்கக்கூடிய நூல்களைக் கற்றோ அல்லது ஞானிகளின், மகான்களின் உபதேசங்களைக் கேட்டே மனம் ஒருமைப்பட வேண்டும். இறைவனைப் பற்றிய நூல்களை கற்பது தலை சிறந்த ஒன்றாகும், ஐந்து தலைகளை உடைய சர்வேஸ்வரன் ஞானத்தின் உறைவிடமானவார். மலைகளில் எல்லாம் சிறந்த மலையரசி, மேருமலையாவாள்! அதைப் போல முக்தி நிலை என்பது தனக்குள் ஏற்படும் உணர்வாகும். அதை யாரிடம் இருந்தும் கடனாகப் பெற இயலாது! தன்னிலை உணர்ந்தவருக்கே அது சாத்தியமாகும்! தன்னிலை அறிந்தவரிடத்தில் இறைவனும் சேவகம் செய்ய விரும்புவார்.

NOT FOR SALE

தன்னிலை அறிவதற்கு உண்டான வழிமுறைகள் மிகவும் கடினமான ஒன்றாகும். ஆனாலும் இதுவே மோக்ஷத்தை அடைவதற்கான எளிய வழியாகும் அந்நிலையை உங்களுக்கு புரியும் வண்ணம் நான் கூறுகிறேன்! கேளுங்கள்! பாபா நானாவைப் பார்த்து நானா நீ, மாருதி, ஹரிபந்த், பேரே, காகா, தாத்தியா மற்ற அனைவரும் இறைவனைத் தேடும், இவ்வழியைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்! நான் கூறியதை நினைவில் நிறுத்தி உங்களை முழுவதுமாக இறைவனிடத்தில் அர்ப்பணித்து விடுங்கள்! உண்மையான சமர்ப்பணத்தையே இறைவன் ஏற்றுக்கொள்கிறார்! யாத்திரைகள் செய்யும் போது மகான்கள் மற்றும் ஞானிகளின் இடம் தேடிச் சென்று தரிசியுங்கள்!

உங்கள் நடைமுறை வாழ்க்கையிலும் நீங்கள் கற்று உணர்ந்த ஞானத்தை கடைபிடியுங்கள்! நேர்மையாக நீங்கள் வாழும் வாழ்க்கையே நினைத்த பலன்கள் அனைத்தையும் அதற்கு மேலும் தரவல்லது! தொடர்ந்து நல்லதையே நினைத்து, நன்மையை மட்டுமே செய்து கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் இறுதி காலகட்டத்தில் மனம் தூய்மையை அடைந்து பேரானந்த

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நிலையை அடைவீர்கள்! இறக்கும் தருவாயில் எந்தப்பொருளின் மீதும் இச்சையோ, எவர்மீதும் மோகமோ வளர்த்துக் கொள்ளாதீர்கள்! இம்முறையை ஆரம்பத்திலேயே பின்பற்ற துவங்கினால் இறுதியில் நாம் கொண்டு செல்வதும் எதுவும் இல்லை என்ற மனநிறைவுடன் இறைவனிடம் சேர இயலும்! தியானத்திலும், நாமம் உச்சரிக்கும் வேளையிலும் உங்கள் மனக்கண் முன்னர் இறைவனை மட்டுமே நிறுத்துங்கள்! தியானத்தில் இறைவனை அடையுங்கள்! இவ்வாறு தொடர்ந்து தியானம் செய்யும் போது சாமீப்யமுக்தி (Sameebyamukthi) என்ற முக்தி நிலையை நாம் இறுதியில் அடைய இயலும்.

தற்போது நான் உங்களுடன் உரையாடும் போதே போதிகாவ் என்ற இடத்தில் பானு என்ற பெண்மணி தன் சரீரத்தை துறந்து இத்தகைய முக்தி நிலையை அடைந்தாள்! என்று கூறிவிட்டு இதே முக்திநிலையை, அட்கரும், வேணுவும், நிச்சயம் அடைவார்கள். அவர்கள் பொருட்களின் மீதான இச்சையை துறந்தவர்கள். இவ்வாறு கூறிய பாபா அட்கருவுக்கும், வேணுவுக்கும் தமது தீர்ப்பை வழங்கி விட்டு நானாவின் தலையில் தன் வலக்கரம் வைத்து ஆசிர்வதித்தார்.

சந்தோர்கர், மகிழ்ச்சியில் சொல்ல வார்த்தைகள் வராமல் பாபாவை நமஸ்காரம் செய்து "ஓ பாபா! சித்தர்களுக்கெல்லாம், சித்தராக விளங்குபவரே! கருணையைப் பொழிவதில் மேருமலைக்கு நிகரானவரே! எனது தாய் தந்தை மற்றும் அனைத்து உறவுகளும் நீரே ஆவீர்! ப்ரம்மத்தின் உருவமே! இவ்வுலகின் எல்லா சுப நிகழ்வுளின் காரணமாக விளங்குபவரே! எல்லா பாதகங்களும் நிறைந்த இந்த வாழ்க்கை சமுத்திரத்தை, கடக்க உதவும் பரம்பொருளே! தம்முடைய தெய்வீக ஞானத்தால், எமது அறியாமை என்ற கண்களைத் திறந்து அருள் புரிந்தீர்கள்!

NOT FOR SALE

எப்போதும் உங்களின் கருணைப் பார்வை எங்களின் மேல் பொழிய வேண்டுகிறேன் என்று உற்சாகமாக ப்ரார்த்தனை செய்தார். பாபா உறுதியாக " நான் என்றும் என் பக்தனை ஆசிர்வதித்து அவனுடன் கூடவே இருப்பேன்!"

இந்த முடிவில் உனக்கு எவ்வித சந்தேகமும் தேவையில்லை! இது நான் என் பக்தர்களுக்கு அளிக்கும் வாக்கு! அல்லா இலாஹியின் கருணை எப்போதும் உங்களின் மேல் இருக்கும் என்று தன் பக்தர்களுக்கு பாபா உறுதி கூறினார்.

இதைப் படித்துக் கொண்டிருக்கும் ப்ரியமான பக்தர்களே! பாபாவின் பாதங்களை வணங்கிய அடியவர்கள், அவருடைய அளவில்லாத கருணையை நினைத்து ஆனந்தமடைந்தனர். எந்த சூழ்நிலையிலும் தன் பக்தனை கைவிட மாட்டேன்! என்று அவர் அளித்த வாக்கை எண்ணி மனம் மகிழ்ச்சி அடைந்தனர். அதற்கு முக்கிய காரணம்! அவர்கள் பாபாவின் மேல் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும், பக்தியுமே ஆகும்! அத்தகைய பக்தியுடைய அவர்களின் பாதங்களில் படிந்துள்ள தூசிக்குக்கூட நாம் சமமானவர்களா என்று சந்தேகம், இந்த தாஸ்கணுவின் மனதில் எழுந்துள்ளது! தனக்கு எவருமே ஆதரவாக இல்லை என்று நினைத்துக் கொண்டிருப்பவர்க்கு, பாபாவே ஆதாரமாகத் திகழ்கிறார். இந்த உலகை சிருஷ்டித்து அதில் சம்சார வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் மற்றும் ஆசைகளோடு உழன்று கொண்டிருக்கும் நமக்கு முக்தியை அளிப்பதற்கே அவர் அவதாரம் எடுத்துள்ளார்.

சாயி மகராஜ் அவர்களின் தர்பாரில் இன்று பாபாவே தனது கைகளால் மிகச் சிறப்பான விருந்தைத் தயாரித்து நம் பக்தர்களுக்கு வழங்கியுள்ளார். இந்த ஞான விருந்தில் நாம் அனைவரும் பங்கெடுப்போம். மனம் நிறைவடையும் வரை நீங்கள் அனைவரும் உண்பீர்களாக! சாயியின் தர்பாரின் வாசலில் ஞானம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல



என்ற ரொட்டித்துண்டிற்காக ஏங்கி நின்று கொண்டிருக்கும் நாய்களான நாம் நம்மை உணரவேண்டும். அவர் தருவதில் இருந்து ஒரே ஒரு ரொட்டித்துண்டைக் கூட நம்மில் பெற இயலாமல் போனால், நம் ஆத்மா முக்தி அடைய இயலாது. அனைவரும் வாருங்கள்! இதுபோன்ற சந்தர்ப்பம் இனியும் வருமா என்று தெரியாது. இப்புனித நூலான சாயி குருசரித்திரத்தை பக்தியுடன் படித்தவர்கள், ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனைப் பெறுவார்கள் என்பது தாஸ்கணுமாகிய நான், சாயியின் தர்பாரில் நின்று கொண்டு உறுதியாக கூறுகின்றேன்!

இவ்வத்தியாயத்தை கருத்தூன்றி படித்தவர்கள் முக்தி நிலையை அடைவது உறுதியாகும். தாஸ்கணுவாகிய நான் சாயி மகராஜ். அவர்களின் குரு சரித்திரத்தை “பக்தலீலா அம்ருதம்” (Bhaktha Leelamirth) என்ற இந்நூலை பக்தியுடன் பாராயாணம் செய்தவர்களுக்கு, மூன்று புனித நதிகளாக கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய ஆற்றில் நீராடியதற்கான பலனையும் தரவல்லது.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE



நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## அத்தியாயம்-4

கணபதி தேவா! அனைத்து சுபநிகழ்வுகளுக்கும் ஆதாரமாக விளங்குபவரே! பெருத்த வயிறு என்ற ஞானத்தை உறைவிடமாகக் கொண்டவரே! மூலப்பொருளே! முழுமுதற் கடவுளே! தயை கூர்ந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டு என் முன்னால் வரும் தடைகளை உடைத்து என் சத்குருவின் சாயி குரு சரித்திரத்தை என்னை எழுத வைக்குமாறு வேண்டுகிறேன்! "சந்த் கதாஅம்ருதம்" (Santh Kathamrith) என்ற இந்த சரிதம் பழுத்த ஒரு மாமரத்தில் முதல் பருவத்தில் காய்த்து கனியான சுவை மிகுந்த தெய்வீக உணவாகும். இச்சரிதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள் சுவை மிகுந்த மாங்கனியின் பழச்சாறாகும்! பாபாவால் வழங்கப்பட்ட உபதேசங்கள் இக்கனி மரத்தின் பல்வேறு கிளைகளாகும்! சாயிநாதரின் இச்சரிதம் கைலாச பர்வதத்தின் கீழ் உற்பத்தியாகும் புனித மானஸரோவர் நதியாகும் இச்சரித்திரத்தின் தலைப்பு ஐந்து தலைகளை உடைய சர்வேஸ்வரனாவார். இதன் உட்கருத்து புனித மானஸரோவர் நதியில் பூத்த அற்புத தாமரை மலர்கள் ஆகும்.

தாஸ்கணுவாகிய நான் "பக்தலீலா அம்ருதம்" என்னும் நூலில் ஸ்ரீ சாயிபாபாவின் அற்புத உபதேசங்களைத் தொகுத்து வழங்கும் பாக்கியம் பெற்றேன்! அவர் பக்தர்கள் கேட்டதை எல்லாம் தரும் கற்பக விருக்ஷமாவார். அவருடைய கருணைக்கு முன்னர் கடலும் தன் பரந்த தன்மையை சுருக்கிக் கொள்ளும். அவருடைய ஞானம் மேருமலையை விட ஆழமானது. தன் பக்தர்களை துயரங்களில் இருந்து காப்பாற்றி ஆனந்தமான உலகிற்கு அழைத்துச் செல்வார்! ஒரு சமயம் சில பக்தர்கள் ஜோதிடர்களால் ராசியற்ற நாள் என்று சொல்லக் கூடிய ஒரு நாளில், பாபாவை தரிசிக்க வந்தனர். ஏன் அவ்வாறு அதிர்ஷ்டமில்லாத நாளை பாபாவை தரிசிப்பதற்காக தேர்ந்தெடுக்க வேண்டும்? பாபாவின்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கருணையால் தீய நாளும், தூய நாளாக மாறியது. பாபாவிடம் சரணடைந்த பின் அதிஷ்டம், ஜோதிடம், தீய நிகழ்வு, நல்ல நிகழ்வு இவை எதைப்பற்றியும் கவலை கொள்ளத் தேவையில்லை. சத்குருவின் துணை நம்முடன் இருக்கும்போது எந்த தீமையும் நம்மை அணுகாது.

## கடவுளை எவ்வாறு அறிவது?

சந்தோர்கரின் பரம்பரையில் கோவிந்தருக்கு புத்திரராக பிறந்த நானாசாஹேப், பாபாவின் மேல் கொண்ட தீவிர பக்தியால் அவரை விட்டு எங்கும் அகலாமல் இரவும், பகலும் பாபாவின் பாதங்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டு, அவரிடம் மிக்க உரிமையுடன் தன் சந்தேகங்களை கேட்டுக் கொண்டும் அவருக்கு சேவை செய்து கொண்டும் இருப்பவர் ஆவார். பாபா, அவரை புறப்படு என்று சொல்லி பலமுறை வழி அனுப்பி வைத்தாலும் அவர் இரண்டு மூன்று நாட்களில் மீண்டும் ஷீரடிக்கு ஓடிவந்து விடுவார். பாபாவும் நானாவின் மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

NOT FOR SALE

இன்றும் அதே போல நானா வந்துவிட்டார்! மசூதியின் வாசலில் நின்று கொண்டு இரு கைகளையும் கூப்பிய வண்ணம் தம் தெய்வத்தைக் கண்டு அவரது பாதங்களை வணங்கி அவருக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டார். நானா, ஹரி பந்த்தைப் போல அவருடைய ஆன்மீக வழிபாட்டு முறைகளை முறையாகப் பின்பற்றி வந்தார். அன்று அவருடன் பேரே, லக்ஷ்மண், மாருதி போன்ற பலர் பாபாவின் பாதங்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டிருந்தனர். இத்தகைய அற்புதக் காட்சியை நான் எவ்வாறு விவரிப்பேன்?.

வெகுநேரமாக தன் தாயைக் காணாமல் ஏங்கிய ஒரு குழந்தை எவ்வாறு தன் தாயைக் கண்டதும் தன்னை மறந்து தன்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


தாயை உற்று நோக்கி ஆனந்தம் கொள்ளுமோ, அவ்வாறே அவர்கள் அனைவரும் பாபாவை உற்று நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தனர்!

நாணாசாஹேப் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், பாபா என்ற இவ்வரிய பொக்கிஷம் நமக்கிடையே இருக்கும் வேளையில் நாம் நம்முடைய அனைத்து சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று தீர்மானித்தார். அவர் பாபாவிடம் "பாபா நாங்கள் பல முறை உங்களிடம் கேட்டும் சில கேள்விகளுக்கு தாம் விடை தர மறுப்பது ஏன்? ஏன் எங்களிடம் சில சமயம் கோபம் கொள்கிறீர்கள்? எங்கள் தெய்வம் எங்களிடம் கோபித்தால் நாங்கள் வேறு எங்கே புகலிடம் தேடிப்போவோம்! என்று பணிவோடு ஆரம்பித்தார்.

பாபா புன்னகையோடு "நான் எவரிடமும் கோபம் கொள்வதில்லை! நீங்கள் அனைவரும் என்னுடைய குழந்தைகள்! அவ்வாறு இருக்க, குழந்தையிடம் என் கோபத்தை எவ்வாறு? காண்பிக்க இயலும்! நானும் உங்களைப்போல எனது குருவான ஸ்ரீவெங்குசா அவர்களின் முன் குழந்தையாக அமர்ந்து இருக்கிறேன்! எதற்காக காரணமின்றி, ஒருவர் கோபித்துக் கொள்ள வேண்டும்? என்று கூறிவிட்டு "நீங்கள் அனைவரும் நான், கூறுவதை கவனமாகக் கேளுங்கள்! நானா, நான் முன்னர் கூறிய நான்கு வகை நிலைகளை நீ நன்கு உணர்ந்திருந்தால் அதன் மகத்துவத்தைப் பற்றி நன்கு அறிந்து கொண்டிருப்பாய்! நான் கூறிய அந்த நான்கு நிலைகளில் ஒருவன் மனதை செலுத்துவான் என்றால் அவன் எளிதாக ப்ரம்மத்தை அடைய இயலும் "சாதனா" என்பது ஒரு முயற்சியே ஆகும்! அம்முயற்சி நம்மை முக்திநிலைக்கு அழைத்துச் செல்லும்! அம்முயற்சியே அவருக்கு தன்னைப்பற்றி தெளிந்த ஞானத்தையும் அளிக்க வல்லது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அத்தகைய உயர்ந்த " சாதனா" நான்கு வகைப்படும்.

1. அறிவுக்கண் கொண்டு இவ்வுலகில் நிலையானவற்றையும், நிலையற்றதையும் பிரிக்கும் தன்மையாகும்.

2. இரண்டாவதாக சாந்த மனப்பான்மை, எவர் எச்செய்தியை கூறினாலும், என்ன நேர்ந்தாலும் சாந்தமாக இருக்கும் மனநிலை.

3. மூன்றாவதாக மனதைக் கட்டுப்படுத்தும் ஆறு வகையான பயிற்கு முறைகள். அவையாவன,

   1. சமா (Sama) 4. உபராதி (Uparathi)
   2. தமா (Dhama) 5. ஷ்ரத்தா (Shraddha)
   3. திதிக்ஷா (Titiksha) 6. சமாதாணா (Samadhana)

4. நான்காவதாக நான் முன்னர் கூறிய முமுக்ஷு நிலையாகும்.

**சமா (Sama) :**

புலன் உணர்வுகளாலும், இச்சைகளாலும், பாதிக்காதவாறு மனதை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல், அதன் மூலம் அடைய வேண்டிய இலக்கை நோக்கி மனதை செலுத்தல். நிறைய வேதாந்தவாதிகள் இக்கருத்தை "மனதை அடக்குதல்" என்ற பொருளில் கூறுகின்றனர். அது தவறாகும். மனதைக் கட்டுப்படுத்துதல் என்பதே "சமா" வின் சரியான பொருளாகும். கட்டுப்படுத்துதல் என்பது மனதை அதன் போக்கில் சென்று பின்னர் அதன் கட்டுக்குள் கொண்டு வருதல் என்பதாகும். அடக்குதல் என்ற சொல் மனதிற்கு எவ்வித வாய்ப்பும் அளிக்காமல் நேரிடையாக வற்புறுத்தி அடக்கி, தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் என்ற பொருளில் சொல்லப்படுகிறது. ஆனால் இவ்வகையில், மனதிற்கு வாய்ப்பே அளிக்காமல், அடக்கினால் சிறிது நேரம் மட்டுமே நம்

NOT FOR SALE

சொல்லைக் கேட்கும். அடுத்த வாய்ப்பு எங்கேயாவது கிடைத்துவிட்டால், உடனே அடக்கி வைத்த உணர்வுகள் வீறிட்டு எழுந்து வெளியேறும். ஆகையால் அடக்குதல் என்ற சொல் தவறானதாகும். மனதை வற்புறுத்தி அதன் போக்கில் சென்று தன் பொருள்களின் மீதுள்ள இச்சையை, புலன்கள் வெறுப்பதை உணரச் செய்து, பின்னர் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது, நிரந்தரமான செயலாகும். இதுவே சமா என்பதின் முறையான பொருளாகும்.

NOT FOR SALE

**தமா (Dhama) :**

தமா என்பது நமது ஐம்புலன்களால் ஏற்படும் உணர்வுகள் ஏதாவது ஒரு பொருளை நோக்கி செல்கிறது. நாம் காணும் ஏதாவது ஒரு பொருளையோ அல்லது மனிதரையோ இந்த உணர்வுகள் ஈர்க்கின்றன. இந்த ஈர்ப்பை தவிர்க்க வேண்டுமானால் முதலில் புலன் உணர்வை நாம் காணும் பொருள்களின் மேல் உள்ள பார்வையைவிட்டு திசை திருப்பி விடும்போது அந்த பொருள்களின் மீதுள்ள இச்சையை புலன்கள் இழந்து விடுகின்றது. அப்போது அப்பொருட்கள் மீதுள்ள இச்சையை புலன்கள் வெறுப்பதை உணரச் செய்து அதன் பின்னர் சமாவின் மூலம் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும் "தமா"வின் செயல்பாடுகளால் சமா தன் உயர்வான இலட்சியத்தை அடைய இயலும்.

**திதிக்ஷா (Titiksha) :**

இச்சொல் மிக உயர்வான ஒரு சிந்தனையைக் குறிப்பதாகும். இவ்வுலக வாழ்க்கையில் நமக்கு வரும் துன்பங்களையும், சுகங்களையும் மகிழ்ச்சிதரக்கூடிய செய்திகளையும், துன்பம் விளைவிக்கும் சில காரணங்களையும் போன்ற இவையாவற்றையும் சம நிலையில் ஏற்றுக்கொள்ளும்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பக்குவமே திதிக்ஷா என்று அழைக்கப்படும். இவ்வுலகில் எல்லா நிகழ்வுகளும் மாற்றம் பெறக்கூடியவை. எதுவும் நிரந்தரமில்லை. ஆதலால் துன்பம் வரினும் இதுவும் ஒருநாள் நம்மை கடந்து போய்க்கொண்டிருக்கும், என்றும் அதே சமயம் மகிழ்ச்சியான செய்தி வரும்போது இதுவும் நிரந்தரமில்லை என்றும் எப்போதும் ஒரே சமநிலையில் மனதை வைத்துக் கொள்ளும் குணம் திதிக்ஷா என்று கூறப்படுகிறது.

NOT FOR SALE

**உபராதி (Uparathi) :**

பலனை எதிர்பாராது பொருட்களின் மீதுள்ள இச்சையைக் கடந்து செய்யப்படும் செயல்கள். நாம் இவ்வுலகில் மாயாவின் சக்திக்கு அடிபணிந்து, பெண், தங்கம், குழந்தைகள், உறவினர் மற்றும் நண்பர்கள் இவையாவும் நிரந்தரம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால் இவையாவும் நம்முடன் கூட எப்போதும் வர இயலாது.

இந்த உண்மை மனிதர்களுக்கு புரிவதில்லை. இந்த உண்மையை உணர்ந்து கொண்டு, பலன்களை எதிர்பார்த்து, செயல்களை செய்யக்கூடாது. ஆயினும் இவ்வுலகத்தாரின் இயல்பு என்னவென்றால் எத்தகைய செயல்களைச் செய்தாலும் ஏதாவது ஒரு பலனை எதிர்பார்த்தே அக்காரியத்தை புரிவார்கள். அவ்வாறு பலனை எதிர்பார்த்து ஆற்றப்படும் காரியங்கள் ப்ரம்மத்தை அடைய இயலாது. ஆகையால் பொருள்களின் மீதும், மனிதர்களின் மீதும் உள்ள எதிர்பார்ப்பை கைவிட வேண்டும் என்பதே உபராதி என்பதன் பொருளாகும்.

**ஷ்ரத்தா (Shraddha) :**

குருவின் மேல் கொண்ட அசைக்க இயலாத நம்பிக்கையே ஷ்ரத்தா என்று அழைக்கப்படும்.

**சமாதானா** (Samadhana) :

உண்மையை அல்லது சத்தியத்தை நோக்கி நம் மனதை, ஒருமுகப்படுத்துதல் நாம் எச்செயலைச் செய்தாலும் மனம் ஒருமுகப்படாவிட்டால் அக்காரியத்தில் வெற்றி அடைய இயலாது.

நான்காவதாக **முமுக்ஷும்** என்ற தகுதி அடையும் நிலையாகும். ஞானத்தை தேடும் தகுதியை நம்முள் ஏற்படுத்திக்கொள்ளும் நிலையாகும்.

முமுக்ஷும் என்ற இந்த இந்த நிலையை ஏற்படுத்திக் கொள்ளுதல் சாதாரண செயலன்று. இதைப்பற்றி தெளிவாக விளக்குகிறேன்! கவனிப்பாயாக!

நான் முதலில் நிலையானவற்றிற்கும் நிலையில்லா வற்றிற்கும் உள்ள வேறுபாட்டை பகுத்தறியும் ஞானத்தைப்பற்றிக் கூறுகின்றேன்! கவனமாகக் கேள்! எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரம்மமே நிரந்தமான நிலையான ஒன்றாகும். இவ்வுலகத்தில் நாம் காணும் யாவும் மாயையின் விளையாட்டே ஆகும். இவ்வுலகம் நிலையற்றதாகும். இங்கு நமக்கு கிடைக்கும் உறவுகளுக்கு நிலையற்றதாகும். நிறைய வேதாந்தாவாதிகள் நிலையான மற்றும் நிலையற்ற வஸ்துக்களை பிரித்து அறியும் பக்குவத்தைப்பற்றி தவறாக எடுத்துரைத்து தங்களின் அறியாமையை வெளிச்சம் போட்டு காட்டுகிறார்கள். அவர்கள் எவருமே பிரம்மத்தைப்பற்றி அறிய மாட்டார்கள்.

பிரம்மம் என்பது என்ன? அது எத்தகைய உருவத்தில் காணப்படும்? அது தங்குமிடம் யாது? இவையாவும் எவருக்கும் தெரியும்?

பண்டரிபுரத்திற்கும், கைலாசத்திற்கும் புனித யாத்திரை செல்லும் குழுக்கள் மற்றவர்களிடத்தில் தாங்களும் புனித யாத்திரை

NOT FOR SALE

சென்று வந்தோம் என்பதை காட்டி கொள்வதற்காகவே செல்பவர்கள் உண்மையான பக்தர்களாக இருக்க இயலாது. மற்றும் சிலர் வேதங்களையும், புராணங்களையும் மற்றும் நீதி நூல்களையும் கற்றுக்கொண்டு பிறருக்கு நன்னடத்தைப்பற்றியும், நல்லொழுக்கத்தைப் பற்றியும் நிறைய உபதேசங்களை செய்வார்கள். ஆனால் அவர்களின் மனம் குப்பையும் கூளமுமாக இருக்கும். அவ்வாறு இருந்தால் உயர்ந்த நூல்களைக் கற்றதால் என்ன பயன்? மற்றும் அவர்கள் பிறருக்கு அளிக்கும் அறிவுரையால் என்ன பயன்? அவர்கள் வெறும் கிணற்றுத் தவளைகள் ஆவார்கள்.

மனம் புனிதமடையாமல் இருப்பவர்கள் செய்யும் உபதேசங்களும் அறிவுரையும் ஏரியின் கரையில் அசுத்தங்களுடன் கலங்கி இருக்கும், மண்ணை உண்பதற்கு சமமானவர்கள்! புனிதமடைந்த மனத்தை உடையவர்கள் செய்யும் உபதேசங்களின் மூலம் பெறப்படும் ஞானம், தாமரை மலர்களின் மகரந்தத்தின் தேனை அதன் ஆழத்தில் சென்று பருகுவதற்கு போல பிரம்மத்தை உணர்ந்தவர்கள்.

பிறரின் மனம் புண்படும்படி விமர்சனம் செய்பவர்கள், அசுத்தங்களுடன் கலங்கி இருக்கும் சேற்று மண்ணிற்கு இணையாவார்கள்! அவர்கள் ஒருபோதும் ஞானத்தை அடைய இயலாது. எவர் ஒருவர் விவாதங்களையும், வாக்குவாதங்களையும் முன்னிறுத்தி, எப்போதும் எவரையாவது விமர்சனம் செய்து கொண்டு இருப்பவர்கள் பிரம்மம் என்ற சொல்லின் அர்த்தத்தைக்கூட அறிய மாட்டார்கள்! அவருக்கு ஆன்மீகம் பற்றியும், இறை உணர்வைப் பற்றியும் ஒரு சிந்தனையும் இருக்க இயலாது. நானா! நான் கூறுவது சத்தியமாகும்!

NOT FOR SALE

நானா, நான் குறிப்பிட்ட சமா, தமா, திதிக்ஷா, உபராதி, ஷ்ரத்தா மற்றும் சமாதானா இவையே ஆறு சாதனை முறைகள். இவற்றில் சமாதானா என்பது பற்றி விரிவாகக் கூறுகிறேன். சந்தோஷமோ அல்லது துக்கமோ, இவ்விரண்டையும் ஒரே நிலையில் காண்பதற்கு நம் இதயத்தை பக்குவமடையச் செய்வதே "சமாதானா" என்பதன் பொருளாகும்.

எவர் ஒருவர் தன் மனதில் முக்தியை அடைய வேண்டும் என்று உறுதியாக நினைக்கின்றானோ, அவர் வேறு எந்த உலகப் பொருளுக்கும் மகத்துவம் அளிக்க மாட்டார்! பிரம்மத்தை அடைய உதவும், அப்பாதையை நோக்கி உண்மையாகச் சொல்லும் ஒருவரே முமூக்ஷம் என்ற தகுதியை அடைகிறார். நான் முன்னரே முமூக்ஷத்தின் பண்புகள் பற்றி நிறைய கருத்துக்களைக் கூறியுள்ளேன்.

முக்தி என்பது கைலாசமோ அல்லது வைகுந்தமோ அல்ல! மோக்ஷம் என்று சொல்லக்கூடிய முக்தி நிலையை அடைவது மிகவும் கடினமான ஒரு செயலாகும். முக்தியை அடைய ஒவ்வொரு முறை, நாம் முயற்சிக்கும் போதும் நிறை தடைகளும் படுகுழிகளும் நம்மை தடுத்துவிடும். நானா! இக்கூற்றை தெளிவாக கவனிப்பாயாக!

இப்பிரபஞ்சத்தின் மெய்ஞான (True Wisdom) உணர்வுகளோடு ஒன்றாக ஐக்கியமாவதே முக்தி என்ற நிலையாகும். புருஷார்த்தம் (Purushartha) என்று வடமொழியில் சொல்லக்கூடிய இந்நிலையை அடைவதே, இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனின் தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த முக்தி நிலையே நமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட இறுதியான மற்றும் மிக உயர்ந்த, எல்லோருக்கும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எளிதில் கிட்டாத, நிலையாகும். இதைத் தவிர மற்ற அனைத்துமே வீணாகும் என்பதை உணர்ந்து கொள்வாயாக!

நானாசாஹேப், பாபாவிடம் "தேவாதி தேவா! நான் ஒன்றும் அறியாத குழந்தையாவேன்! "மெய்ஞான உணர்வுகள்" என்று தாங்கள் குறிப்பிட்ட அச்சொல்லுக்குறிய பொருளை விளக்குமாறு பணிவோடு வேண்டிக் கொள்கிறேன் என்றார். மெய்ஞான உணர்வுகள் என்பதன் குணங்கள் யாவை? அதை நாங்கள் எவ்வாறு உணர இயலும்? எங்கு உணர இயலும்?

சத்குரு சாய்நாதர் மகராஜ் அவர்கள் தமது அடியவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைப்பதில் பேரார்வம் கொண்டவர். மேலும் அவர்களை நிராசை அடையச் செய்ய மாட்டார். ஆகையால் பாபா, பொறுமையுடன் நானா வினவிய வினாவிற்கு விடையளித்தார். "இப்பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறுகள் பற்றி கூறுகிறேன் கேள்! உயிரில்லாத பொருட்களிலும், உயிருள்ளவற்றிலும் எந்த சக்தி நிறைந்துள்ளதோ? அது இன்னும் இவ்வுலகத்தில் எஞ்சி உள்ளது. இப்பிரபஞ்சத்தின் அடித்தளமாக விளங்கக் கூடிய அனைத்து உயிர்களின் சக்தியும், மெய்ஞான உணர்வே ஆகும். இந்த சக்தியைக் கொண்டு துவங்கப்பட்ட இப்பிரபஞ்சத்தின் இயக்கம், இந்த சக்தியிலேயே நிறைவடைகின்றது. இந்த உயிர் சக்தியே, "மெய்ஞான உணர்வுகள்" என்று அழைக்கப்படுகின்றது.

நானா! இப்பிரபஞ்சம் (Universe) முழுவதும் நம் கண்களுக்கு புலப்படும் அனைத்தும் பிரம்மத்தின் கூறுகள் ஆகும். நான் குறிப்பிட்ட மெய்ஞான உணர்வு, இவை அனைத்திலும் நீக்கமற நிறைந்துள்ளன. இப்பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்திலும் நிறைந்துள்ள இத்தகைய மெய்ஞான உணர்வு "நான்" என்ற ரூபத்தில் பிரதிபலிக்கின்றது. நான், என்ற உணர்வில் மெய்ஞானம் இயற்கையாகவே கலந்துள்ளது. இது மனிதர்களுக்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


மட்டுமல்ல, எல்லா உயிரினங்களுக்கும் இந்த உணர்வு ஒரு நிலையான அனுபவமாகத் திகழ்கிறது. நீ என்னிடத்தில் மெய்ஞான உணர்வைப் பற்றிக் கேட்கின்றாய்! அந்த உணர்வு எங்கு இருக்கின்றது? என்றும் கேட்கின்றாய்! இப்பொழுது, நான் உன்னிடம் கேட்கிறேன்! மெய்ஞான உணர்வு எங்கு இல்லை என்று உன்னால் கூற முடியுமா? முடியாது! இப்பிரபஞ்சத்தின் உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, இந்த மெய்ஞான உணர்வு நடமாடிக் கொண்டு இருக்கிறது. இந்த உணர்வு இல்லாத ஒரு இடத்தை உன்னால் சுட்டிக்காட்ட இயலாது.

ஏனெனில் நாம் காணும் யாவையுமே "மெய்ஞான உணர்வில் இருந்து பிரிந்தவையே ஆகும்! அதற்கு வடிவமும் இல்லை! பெயரும் இல்லை! எவ்வாறு பஞ்ச பூதங்களில் ஒன்றான காற்று உருவமில்லாத தன்மையை கொண்டுள்ளதோ! அது போலத்தான் இந்த மெய்ஞான உணர்வுக்கும் உருவம் இல்லை! எவ்வாறு காற்று நிறமற்ற தன்மையைக் கொண்டுள்ளதோ! அதைப்போல மெய்ஞான உணர்வும் நிறமற்றவை! எவ்வாறு காற்று எவ்வித குணங்களுக்கும் இடமளிக்காதோ, அதைப்போலவே மெய்ஞான உணர்வு, எல்லாவித குணங்களுக்கும் அப்பாற்பட்டது! எல்லாவித குணங்களையும் கடந்தது!"

இத்தகைய மெய்ஞான உணர்வே பிரம்மமாகும். இந்த உண்மையை மறக்காதே! ஞானிகளும், மகான்களும் இந்த மெய்ஞான உணர்வை நேரிடையாக, தங்களின் இறை அனுபவத்தின் மூலம் பெறுகிறார்கள், அவ்வாறு நேரிடையாக இத்தகைய உயர்ந்த அனுபவத்தைப் பெற்ற காரணத்தால் ஞானிகளும், மகான்களும் தன்னிலை அறிந்தவர்களாக ஆகின்றனர். பல்வேறு வகையான விலங்குகளின் வாழ்க்கை, தாவரங்களின் வாழ்க்கை மற்றும் மனிதர்களின் வாழ்க்கை இவை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யாவும் பிரம்மத்தின் வடிவமே ஆகும். பார்வை, பார்க்கும் எண்ணம், பார்க்கும்போது ஏற்படும் கவனிப்பு, அதன் மூலம் அடையும் அறிவு, அதன் சக்தி இவையாவும் மெய்ஞான உணர்வின் விளைவுகள் ஆகும். இந்த உணர்வு மேற்கூறிய அனைத்திற்கும் அடிப்படையாக அமைகின்றது. அது எங்கும் நிறைந்திருக்கும், இது ஒரு முழுமையான பேரானந்த நிலையாகும். இது ஒரு சத்தியமான ஞானமாகும். இந்த மெய்ஞான உணர்வே பிரம்மமாகும்.

நானாசாஹேப்பிற்கு, புரிந்தது போன்ற நிலையும் இருந்தது. அதே சமயம் புரியாதது போன்ற ஒரு நிலையும் ஏற்பட்டது. நானாசாஹேப் பாபாவை விடுவதாக இல்லை. காரணம், இது நானாவின் சந்தேகம் மட்டுமல்ல ஆர்வமுடன் சாய்குரு சரித்திரத்தைப் படித்துக்கொண்டு இருக்கும் பக்தர்கள் அனைவருக்கும், இக்கருத்து பற்றி தெளிவு பிறக்க வேண்டும் என்பதே, இந்த தாஸ்கணுவின் விருப்பமாகும். நானாசாஹேப், பாபாவிடம் ''ஸ்வாமி! எல்லாவித உணர்விலும் கலந்து, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் தங்கள் ஞானத்தின் முன் சிறு குழந்தையான என் அறிவுக்கெட்டிய கேள்விகளுக்கான விடையை என் புத்தியில் உணரும் வண்ணம் அளிக்குமாறு வேண்டுகிறேன்!

தாங்கள் ப்ரம்மம், எல்லாவற்றிலும் நிறைந்துள்ளது என்று கூறினீர்கள்! அது மட்டுமல்ல, அது பேரானந்த நிலையாக இருக்குமானால், நாம் காணும் எல்லா பொருட்களிலும் எவ்வாறு பிரதிபலிக்கும்? நிறைந்த மெய்ஞான உணர்வு, உயிருள்ள மற்றும் உயிரற்ற எல்லாவற்றிலும் நிரம்பி இருப்பதாக கூறினீர்கள்! அது மட்டுமல்லாமல் அதனுடைய இயல்பு பேரானந்தத்தை அளிக்கக்கூடிய ஒன்று என்று குறிப்பிட்டீர்கள்! அவ்வாறு எல்லா உயிர்களிலும், இப்பேரானந்தம் நிறைந்திருக்குமானால், ஏன் இவ்வுலகில் துயரங்களும், வேதனைகளும் சூழ்ந்திருக்க

NOT FOR SALE

வேண்டும். ஏன் அனைவரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டும்? தேவா! அடியேனால் இக்கருத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வுலகம் முழுவதும் உண்மையான ஞான உணர்வால் சூழப்பட்டிருப்பதாக கூறினீர்கள்! அவ்வாறு இருந்தால் ஏன் அவற்றை எல்லாம் மாயா என்று கூற வேண்டும். அனைத்தும் மெய்ஞான உணர்வால் சூழ்ந்திருக்கும்போது மாயா எவ்வாறு வரும்?

பிறக்கும்போதே இரண்டு கண்களிலும் பார்வையற்ற ஒரு குழந்தையானது, எவ்வாறு அழகை இரசிக்க இயலும்? நம் ஆத்மாவே மெய்ஞான உணர்வின் கூறு என்று கூறினீர்கள்! அவ்வாறு ஆத்மா மெய்ஞான உணர்வாக இருந்தால், இவ்வுலகில் எண்ணற்ற ஆத்மாக்கள் உள்ளனவே. அப்படியானால் மெய்ஞான உணர்வு எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும்? ஒவ்வொரு ஆத்மாவும், அதனுடைய சந்தோஷத்தையும், துயரத்தையும் தன்னகத்தே கொண்டவை. அவ்வாறு இருக்க ஒரே ஒரு மெய்ஞான உணர்வு வித்தியாசமான அனைத்து ஆத்மாக்களிலும் எவ்வாறு இருக்க இயலும்? நம் ஒவ்வொருவரின் சரீரத்திலும், ஒரு ஆத்மா குடிகொண்டுள்ளது. அது அவரவர்களின் கர்மபலனுக்கு ஏற்ப வேறுபடும்போது எவ்வாறு பேரின்பநிலை, எல்லாவற்றிலும் ஒன்றாக இருக்க இயலும்? தயை கூர்ந்து என்னுடைய சந்தேகங்களுக்கு விடைதாருங்கள் பாபா என்று நானா வேண்டினார்!

பாபா பொறுமையுடன், "ஓ நானா! இங்கு நீ தவறு செய்கின்றாய்? இன்னும் உன்னுடைய மனது ஒருமுகப் படவில்லை. உனது சிந்தனை நாலாபுறங்களிலும் சிதறுகின்றது. அமைதியாக கவனி! நான் கூறுவதைக் கேள்! சில பானைகளை எடுத்துக் கொண்டு அவற்றில் தண்ணீர் நிரப்புவாயாக! அத்தண்ணீர் பானையில் கருப்பு, மஞ்சள், பச்சை, சிவப்பு மற்றும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நிறைய வர்ணங்களைக் கலப்பாயாக! அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித வர்ணமாகக் காட்சி அளிக்கின்றதா? ஆனால் அந்தப்பாகைகளில் நிரப்பப்பட்ட தண்ணீர் ஒன்று தான். சிவப்பு வர்ணம் கலந்த பானையின் நீர் சிவப்பாக பிரதிபலிப்பதை பார்த்தாயா? ஒரு வேளை கலக்கப்பட்ட வர்ணம், ஏதாவது ஒரு வழியில் பானையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டால், அப்பானையில் எஞ்சி இருப்பது தண்ணீர் மட்டுமே.

அதைப்போலவே ஆத்மா ஒன்றுதான். சரீரத்தோடு இணைந்து இருக்கும் இதயங்கள் வேறாகும். ஆத்மாவும், இதயமும் சேர்ந்து ஒரு சரீரத்தில் அமையும் போது, அது சந்தோஷத்தையும், துயரத்தையும் மற்றும் வெவ்வேறு உணர்வுகளையும் அனுபவிக்கின்றது. இப்பொழுது புரிந்ததா! என்று அன்புடன் வினவினார் சத்குரு பாபா. அவர் மேலும் தொடர்ந்தார், "ஆத்மாவிற்கு எந்தவித வித்யாசமும், பிரிவினையும் இல்லை. அது ஒரே நிலையில் எல்லோரிடமும் இருக்கின்றது. அதுவே, உண்மையின் வடிவமாகும். சந்தோஷமும், துயரமும் இதயத்திற்கு தொடர்பான தர்மமாகும். இதயம் ஆத்மாவோடு இணையும் போது மட்டுமே, அது தன் உணர்வைப் பெறுகின்றது. நான் இதைப்பற்றி இன்னும் உனக்கு புரியும் வகையில் எளிமையாக விவரிக்கின்றேன்!

நான் கூறிய மெய்ஞான உணர்வு பரமார்த்தகா (Paramardhaka) என்ற வடிவத்திலும், வ்யவஹாரிகா (Vyavaharika) என்ற வடிவத்திலும், ப்ரதிபாஸிகா (Paribhasika) என்ற வடிவத்திலும் எல்லா மனித உயிர்களிலும் அவர்களுடைய பக்குவத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது.

ஓ நாராயணா! இந்த உடல் குழந்தைப் பருவத்திலும்,

NOT FOR SALE

இளைமைப் பருவத்திலும், வயோதிக பருவத்திலும் வெவ்வேறு தோற்றங்களில் காட்சி அளித்தாலும் ஒன்றே ஆகும்.

"பரமார்த்தகா" என்று நான் குறிப்பிட்ட எல்லாம் கடந்த நிலை ஞானிகளுக்கு மட்டுமே உரித்தானது. இரண்டாவதாக, நான் குறிப்பிட்ட ''வ்யவஹாரிகா'' என்ற உணர்வு, சாஸ்திர விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, நன்னடத்தையும், நல்லொழுக்கத்தையும் கடைபிடித்து, எதை தள்ள வேண்டும், எதை ஏற்றுக்கொள்ள வேண்டும்! என்ற நிலையை உணர்ந்து முக்தியை நோக்கி மனதைச் செலுத்தும் நிலையாகும்.

மூன்றாவதாக, பொய்மையை உண்மை என்று நினைத்துக் கொண்டு, அறிவை மழுங்கச் செய்து அறியாமையில் மூழ்கும் நிலையே "ப்ரதிபாஸிகா" என்ற நிலையாகும்.

'ப்ரதிபாஸிகா" என்ற உணர்வைக் கொண்டு இருப்பவர்கள் அறியாமையிலும், "வ்யவாஹாரிகா" என்ற உணர்வைக் கொண்டு இருப்பவர்கள் அறிவைப் பெற்றவர்களாகவும், "ப்ரமார்த்தகா" என்ற உணர்வைக் கொண்டு இருப்பவர்கள் ஞானிகள் என்பதையும் நாம் நன்கு இப்போது உணர முடிகிறது!

மேற்கூறிய இவை ஒவ்வொன்றும் வேறான உணர்வைக் கொண்டு இருந்தாலும், அவை மூன்றிலும் இருப்பது ஒரே ஆத்மாதான். ஒரு அரசன், அவனுடைய அதிகாரி, அவனுடைய சிப்பாய் இவர்கள் மூவரும் அதே இராஜ்யத்தின் அங்கங்கள் ஆவார்கள். அந்த இராஜ்ஜியத்தை பாதுகாக்கும் பணி அவர்கள் மூவருக்கும் உண்டு. ஆனால் அவர்களிலும் வித்யாசம் உண்டு. அரசன் யானையில் ஊர்வலம் வருவான். அதிகாரி குதிரையில் நகர்வலம் வருவான். சிப்பாய் நடந்து இவ்விருவரின் பின்னால் செல்பவன். யானையில் ஊர்வலம் வரும் அரசன் அவன்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விருப்பங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்வான். அவனுடைய மக்கள் யாவரும், அந்த நாட்டு சட்டதிட்ட விதிப்படி நடந்து கொள்ள வேண்டும்.

அந்த அரசனைப் பின்தொடர்ந்து அதிகாரியும், அந்த அதிகாரியை பின்தொடர்ந்து அந்த சிப்பாயும் செல்ல வேண்டும். இவர்கள் அனைவருடைய கடமைகளும் வித்தியாசப்படும். ஆனால் அனைவரும் அந்த அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும். அரசன் ஒரு நாள் இறந்துவிடுவான். ஆனால் அரசாங்கம் என்றும் அப்படியே இருக்கும் அரசனின் வாரிசு, பதவியேற்றாலும் அதன் சட்டதிட்டங்களும், அவ்வாறே செயல்படும். அரசாங்க சட்டங்களை வாங்கவோ, எவரும் விற்கவோ இயலாது.

எந்த அரசாங்கத்தில் அரசன் அரியணையில் அமர்ந்திருக் கிறாரோ, அதே அரசாங்கத்தில் அதிகாரி அவருக்கு உதவுபவராக, அவருக்கு கீழே அமர்ந்திருக்கிறார். அந்த அதிகாரிக்கு அருகில் காவல் செய்யும் கடமையைச் செய்ய சிப்பாய் நின்று கொண்டு இருக்கிறான். அரசன் எல்லா சலுகைகளையும் அனுபவிக்கிறான். ஆனால் சிப்பாய் ஒரு சில சலுகைகள் மட்டுமே அனுபவிக்க இயலும். "இதைப்போலவே ஆத்மாவை உணர்ந்த வரும், தன்னிலை அறிந்தவருமான ஒருவர், ப்ரம்மத்துடன் ஐக்கியமாகிறார். எவருக்கு அந்த அனுபவமும், பாக்கியமும் கிடைக்கிறதோ, அவற்றை வைத்துக்கொண்டு, அவர் ப்ரம்மத்துடன் ஐக்கியமாகிறார்.

நானாசாஹேப் குறுக்கிட்டு "பாபா ஒரு அரசாங்கத்தின் சட்டமானது எவ்வாறு எல்லோருக்கும் வெவ்வேறு வகைகளில் பலனை அனுபவிப்பதற்கு துணை செய்கிறது? ஒரே சட்டத்தை

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வைத்துக் கொண்டு ஒருவர் அதிக பலன்களையும், மற்றவர் குறைவான பலன்களையும் அனுபவிக்கிறார் என்றால், அச்சட்டங்களின் ஒருமுகத்தன்மை பாதிக்கப்படுமல்லவா!" என்று கேட்டவுடன், பாபா மிகச் சரியாக கூறினாய் நானா, என்றார்! சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான்! ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பலனைத் தருவதாகத் தோற்றமளிக்கிறது. அதே கருத்தை நாம் மெய்ஞான உணர்வு நிலைக்கும் ஒப்பிடலாம். மெய்ஞான உணர்வு என்பதை வகையாகப் பிரிக்க இயலாது. அது ஒன்றே ஆகும். ஆனால் மனிதர்கள் தங்களுடைய அறிவுக்கும், பக்குவத்திற்கும் ஏற்ப அடைந்திருக்கும் தகுதியை வைத்தே மெய்ஞான உணர்வு வேறுபடுகின்றது.

உதாரணமாக, நாம் தண்ணீர் நிரப்பிய பானைகளை எடுத்துக் கொள்வோம்! நதியில் தெரியும் ஆகாயத்தின் அதே பிம்பத்தை தண்ணீர் நிரப்பிய பானைகளிலும் காண இயலும்! பானைகள் பெரியதாகவும் அல்லது சிறியதாகவும் இருக்கலாம். பகற்பொழுதில் ஆகாயம் தன்னுடைய பிம்பத்தை, நதியிலும் வெளிப்படுத்தும், பானையிலும் வெளிப்படுத்தும், இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நதியில் தெரியும் ஆகாயத்தின் பிம்பம் பெரியதாகவும், அங்கு வைக்கப்பட்ட பானையில் தெரியும் ஆகாயத்தின் பிம்பம் சிறியதாக தெரியும்! அவ்வளவுதான் ஆகாயத்தில் எந்த பிரிவினையும் ஏற்படவில்லை? புரிந்ததா நானா? அதே நிலையில் மெய்ஞான உணர்வும் பரந்து விரிந்துள்ளது. ஆனால் இவ்வுலகம் மாயையால் சூழப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது. ப்ரம்மமும், மாயையும் இணைந்து உருவாக்கியதுதான் இந்த உலகம்" என்றார் பாபா.

நானாசாஹேப் பாபாவிடம், பாபா அப்படியென்றால் இந்த மாயா எவ்வாறு உருவாக்கப்பட்டது? யார் உருவாக்கினார்கள்?

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எப்போது இந்த உலகிற்கு வந்தது? எங்கிருந்து வந்தது? தாங்கள் இப்பிரபஞ்சம் முழுவதும் மெய்ஞான உணர்வுகளால் சூழப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டீர்கள்! அவ்வாறு இருப்பின் மாயா எவ்வாறு முளைத்தது? என்று கேட்டவுடன் பொறுமையின் வடிவமான பாபா, அன்போடு நானாவை நோக்கி, "நானா நான் உனக்கு இந்த மாயா எங்கிருந்து எப்போது வந்தது என்று கூறுகிறேன்! கவலைப்படாதே! பொறுமையாக கவனமாக கேள்! இவை இரண்டும் உணர்வுடன் ஒன்றாக இணைந்த ஒன்று. எவ்வாறு சர்க்கரையிலிருந்து இனிப்பை பிரிக்க இயலாதோ அதைப்போல மெய்ஞான உணர்விலிருந்து மாயாவைப் பிரிக்க இயலாது. எவரால் சூரியனையும், அது தரும் ஒளியையும் பிரிக்க இயலும்?" அதே வகையில் மாயாவும் ப்ரம்மமும் இரண்டற கலந்தது.

இக்கருத்தை இன்னும் எளிமையாக உனக்கு விளக்குகின்றேன்! சூரியன் மற்றும் சூரிய ஒளி இவை இரண்டும் இரண்டு சொற்கள்! ஆனால் இவை இரண்டையும் சேர்க்கும் போதுதான் சூரியன் என்ற வடிவம் ஏற்படுகிறது! நாம் சூரியனின் தன்மையால் அதனுடைய குணங்களை இரண்டு வகையாக காண்கிறோம்! வெப்பம் மற்றும் ஒளி என்று இரண்டு வகையான குணங்களைக் கொண்டதுதான் சூரியன். வெப்பம் என்பது சுடும் தன்மை, ஒளி என்பது ஒளிரும் தன்மை, இவ்விரண்டு தன்மை களைப் போன்றே மாயாவும், பிரம்மமும் ஆகும். ஒரேயொரு வித்யாசம் என்னவென்றால், மாயாவிற்கு முடிவு உண்டு. ஆனால் ப்ரம்மத்திற்கு முடிவு இல்லை. மெய்ஞான உணர்வு அழிவற்றது. அதற்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. மாயா அல்லது ப்ரக்ருதி என்ற இயற்கையால் இந்த உலகம் (சிருஷ்டி) உருவாக்கப்பட்டது. ப்ரம்மம் என்பது புருஷ் என்றும் மாயா என்பதை

NOT FOR SALE

ப்ரருக்தி என்றும் கூறுவர். புருஷ் மற்றும் ப்ரருக்தி பற்றிய தெளிவான அனுபவங்களை ஞானி ஸ்ரீ ஞானதேவ் எழுதிய "அமிர்தானுபவ்" என்ற நூலில் அற்புதமாக விவரிக்கப்பட்டுள்ளது.

அதனுடைய இரகசியங்களை நான் உனக்கு கூறுகிறேன் கேள்! தன்னிலை அறிதல் என்ற குகைக்குள், ஒருவர் சென்றபிறகு அறியாமையாகிய பயத்தில் திரும்பி வரக்கூடாது! அக்குகையின் ரூபத்தில் அதனுள் உற்சாகமாக, ஆடிப் பாடிப் பேரின்ப நிலையை அனுபவிக்க வேண்டும்! காரணம் ப்ரம்மம், ஆத்மாவோடு இணைந்துள்ளது. ஆனால் மாயாவை இந்த உலகில் உருவாக்கியதும் ப்ரம்மமே ஆகும்! ஓ நாராயணா! நீ இந்த மாயாவைப் பற்றி அவ்வளவு சாதாரணமாக எடை போடாதே! அது கடலைவிட ஆழமானதும் அளவற்றதும் ஆகும்.

"நான்" என்ற உணர்வு மாயாவால் தோற்றுவிக்கப்படுகிறது! நான் என்ற மாயை உண்மையல்ல! ஒருமுறை மாயா தன் சக்தியின் மூலம் நம் மீது அதன் வலையை விரித்துவிட்டால், உண்மைக்கும் பொய்மைக்கும் வித்தியாசமே தெரியாது. மாயாவிற்கு இரண்டு முக்கிய குணங்கள் உண்டு. உண்மையையும், நாம் காணும் உலகையும் மாயா முற்றிலும் மறைத்து விடும். பொய்மையையும், நம் கண்ணுக்கு தெரியாததையும் மட்டுமே மாயா வெளித்தோற்றமாக காண்பித்து நம் ஞானத்தை சூன்யமாக்கிவிடும்.

இவ்வுலகில் வாழும் அனைவருமே மாயாவினால் ஏமாற்றப்படுபவர்கள்! ஆகையால் தங்களை சுற்றியுள்ள மாயத்திரையை விலக்கி, உண்மையை உணர முடியாமல் தவிக்கின்றனர். ஒரு வேலைக்காரனின் கனவில் தோன்றி இந்த மாயா, அவனை அரசனாக ஆக்கி அதிகாரத்தை வழங்குகிறது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அவனுக்கு கிடைத்த இத்தகைய கனவுக்காட்சியின் மூலம், அவன் மதிமயங்கி, மாயாவால் தான் ஒரு சாதாரண வேலைக்காரன் என்பதை மறக்கிறான். மாயா அவனுடைய இயல்புத் தன்மையை மறக்கச் செய்கிறது!

மாயாவின் இந்த சக்தியால் அந்த பணியாள் தன்னுடைய உண்மையான பதவியை மறந்து தன்னை அரசனாக நினைத்துக் கொள்கிறான். மாயா அவன் புத்தியில், உண்மை நிலையை மறைத்து பொய்யான ஒரு தோற்றத்தை அவனுக்குள் ஏற்படுத்தி விடுகிறது! இவ்வாறு பிரம்மத்தை உணர முடியாமல், சத்தியத்தை ஒப்புக்கொள்ள முடியாமல் மாயா என்பவள் மனிதர்களை திணறச் செய்கிறாள்! ஆகையால் நாமும் மாயாவிற்கு அடிமையாகி இந்த உலகத்தையும் அதன் ஜீவராசிகளையும் நிரந்தரமானது என்று நம்பிக்கொண்டுள்ளோம்.

இந்த மாயத்திரையை கிழித்து உண்மையான பிரம்மத்தை உணர வேண்டுமானால், மெய்ஞான உணர்வுகளால் மட்டுமே அது சாத்தியமாகும்! அத்தகைய உணர்வுகள், உண்மையை அறிந்தால் மட்டுமே நம்மால் புரிந்து கொள்ள இயலும். அப்போது நாம் விழித்துக் கொண்டு, நாம் தான் இந்த உலகம் என்று தெரிந்து கொள்வோம்! தண்ணீரில் உள்ள அழுக்குகள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு தூய்மையான நீராக ஆக்கப்படுவதைப் போல நாமும் மெய்ஞான உணர்வினால் மாயா என்ற குப்பையை களையும்போது நாம் யார் என்ற உண்மையை அறிந்து கொள்ள இயலும்!

ஓ நாராயணா! நான் கூறிய இக்கருத்துக்களை நன்றாக நினைவில் நிறுத்தி, உண்மை நிலையை அறிய இறைவனை ப்ரார்த்தனை செய்வாயாக!

NOT FOR SALE

நம் ஆத்மாவே உண்மையானது. இது நான் சொல்லும் வார்த்தையாகும்! ஆத்மாவை புரிந்து கொண்டு அதை உணர வேண்டும்! ஆத்மாவைப் பற்றிய ஆழமான சிந்தனை தமக்கு ஏற்படும்போது அதன் மகத்துவத்தை நம்மால் அறிய இயலும். இறைவனைப் பற்றியும், இறை உணர்வுகளைப் பற்றியும் ப்ரம்மத்தைப் பற்றியும்உணர வேண்டுமானால் முதலில் நம்முடைய ஆத்மாவைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆத்ம பலத்தால் அறிய முடியாதது இவ்வுலகிலும் அதற்கு அப்பாலும் எதுவுமே இல்லை.

மெய்ஞான உணர்வை நமக்குள் ஏற்படுத்தும் இத்தகைய கருத்துக்களை அற்புதமாக நமக்கு எடுத்துரைத்து நம் அறியாமையை நீக்கி நமக்கு வழிகாட்டியாக திகழ்கின்ற சத்குரு சாய்நாதரை நாம் அனைவரும் நன்றியுணர்வுடன் பணிவோமாக!.

இத்தகைய உபதேச அமிர்தத்தைப் பருகிய வைத்யா, சாத்தே, சந்தோர்கர், நிமோண்கர் பேரே, மாருதி, நூல்கள் மற்றும் அங்கு குழுமியிருந்த பக்தர்கள் அனைவரையும் நோக்கிய பாபா என் அன்புக்குரியவர்களே! இந்த அறிவுரையை ஒவ்வொருவரும் தங்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்! இது எப்போதும் உங்களை நேர்வழியில் கொண்டு செல்வதற்கு துணையாக நிற்கும்! என்றார். அனைவரும் நன்றியுணர்வுடன் பாபாவின் பாதங்கள் பணிந்து விடைபெற்றனர்.

சூரியனின் ஒளிக்கதிரைப் போன்ற அறிவுக் கண்திறக்கும் வேளையில் எவ்வாறு அறியாமை என்ற இருள் நம்மை சூழ இயலும்? "என் ஆசானே! சத்குருவே! தேவாதி தேவா! சாயி பாபாவே! தயை கூர்ந்து இக்குழந்தையை தங்களின் மடியில் ஒரு ஓரத்தில் இடமளித்து, உங்களின் கருணை எப்போதும் என்மீது பொழிந்து கொண்டிருக்குமாறு என்னை ஆசீர்வதியுங்கள்!"

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தாஸ்கணுவாகிய அடியேன் எழுதிய இந்த "சந்த்கதா அமிர்தம்" (SANTH KATHAMRITH) என்ற நூலை தங்களின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்!

இந்த "சாயி குருசரித்திரத்தை" பாராயணம் செய்யும் அடியவர்களுக்கு, ஆயிரம் அசுவமேத யாகங்களை நிகழ்த்திய பலனை பாபா தந்து அருள்வார் என்பதை சத்குருவின் இச்சந்நிதானத்தில் நின்று கொண்டு தாஸ்கணுவாகிய நான் உறுதியளிக்கிறேன்! இதற்கு பாபாவே சாட்சியாவார்!

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE



## அத்தியாயம் - 5

ஓ கணேசா! முழுமுதற் கடவுளே!

ஸ்ரீ கஜானனா! ஓ கேசவா! ஓ பாண்டுரங்கா! முதலும் முடிவும் அற்றவரே! இவ்வுலகை சிருஷ்டித்தவரே! முழுமையின் வடிவமே! வேதங்களும் உன்னை புகழ்வதற்கு வார்த்தைகள் இன்றி தவிக்கின்றன. இது மட்டுமல்ல! தங்களைப் புகழ வேறு வார்த்தைகள் தோன்றாமல் ஆச்சர்யத்தில் ஸ்தம்பித்து நிற்கின்றன! நான் எவ்வாறு உம்மைப் பற்றி கூற இயலும்? ஓ கருணையின் வடிவமே! இப்பிரபஞ்சம் முழுவதும் கதிர்களை விரித்து, சுடர்விட்டு பிரகாசிக்கும் சூரியனாகிய உங்கள் முன், நான் ஒரு சாதாரண மின்மினிப்பூச்சியாவேன்! பரந்து விரிந்த சமுத்திரமாகிய தங்களின் முன் நானொரு சிறு குட்டையாவேன்! இப்பொழுது நான் உங்களின் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்!

ஓ கருணைக் கடலே! கேட்டதையெல்லாம் தரும் கற்பக விருட்சமே! எல்லோரின் இதயங்களிலும் நிறைந்தவரே! பேரின்பத்தின் வடிவமே! அறுபத்தி நான்கு கலைகளின் அதிபதியே! மூன்று உலகங்களிலும் தாங்கள் அறியாத ஒன்று என்பது எதுவுமே இல்லை! தங்களுடைய அடியவர்களைக் காப்பதற்காகவே, இந்த மனித அவதாரம் எடுத்து வந்துள்ளீர்! என்பதை நாம் அறிவோம்! அநாதைகளின் புகலிடமே! பாபாவாகிய உங்களின் தெய்வீக அருளைப் பொழிவதற்காக தங்களின் அடியவர்கள் ஒவ்வொருவரின் வீட்டு வாயிற் கதவுகளையும் தட்டுவதை என்னால் காணமுடிகின்றது!

ஓ மாதவா! நீ எனக்கு உதவ மறுத்து விட்டால், அது உன் புகழுக்கும் பெருமைக்கும் ஊறு விளைவிப்பதாகும்! ஆகையால் உடனே உன் கைகளை தன் தலையில் வைத்து ஆசீர்வாதம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வழங்குவாயாக! என்னைப் பெற்ற தாயைப் போன்றவரே! பண்டரிபுர பாண்டுரங்கா! சாயி நாதா உன்னைத்தவிர வேறு எவரிடம் இத்தகைய அனைத்து சித்திகளும் சேவகம் செய்ய முடியும்? உன் அடியவர்களைக் காப்பாற்றுவாயாக!

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜாம்பவாவி என்ற ஒரு சிறிய அழகிய கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் ஸ்ரீவத்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த கேசவராவ் என்பவர் வசித்து வந்தார். அவர் ஒரு தீவிர வைஷ்ணவர். தன்னுடைய உடல் முழுவதும் வைஷ்ணவ சின்னத்தை இட்டுக் கொண்டிருப்பார். தினமும் செய்யக்கூடிய பூஜாவிதி முறைகளை, ஒரு நாளும் ஒரு குறையும் நேராமல் பக்தியோடு செய்து வந்தார். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் கேசவராவ் ஆவார். அவர் மனதில் ஒரே ஒரு குறை வெகு ஆண்டுகளாக இருந்தது. இத்தகைய தீவிரமான பக்தரான அவர் தனக்கு புத்திர பாக்கியம் இன்றி நீண்டகாலம் வருந்தினார். அவர் சதா சர்வ காலமும் ஸ்ரீவேங்கடேஸ்வர பெருமாளை தனக்கு புத்திர பாக்கியம் அளிக்குமாறு வேண்டிக் கொண்டிருப்பார். அதற்காக அவர் பல்வேறு யாகங்களும், குல தெய்வ பூஜை வழிபாடுகளையும் செய்து கொண்டு வந்தார்.

ஒரு நாள் அவருக்கு ஒரு கனவுக் காட்சி கிடைத்தது. அக்காட்சியில் மழைமேகம் சூழ்ந்து கொண்டு இருக்கும் ஆகாயம் போன்று கருமை நிறத்துடன் ஒருவர் காட்சி அளித்தார். அவர் கண்கள் தாமரை மலர்கள் போன்று விரிந்து காணப்பட்டன. உயரமான உருவத்தைக் கொண்ட அவரது பரந்து விரிந்த தோள்களும் உடையவராக இருந்தார். அவரது அகண்ட மார்பில் ஸ்ரீவத்ஸம் என்று சொல்லப்படும் முத்திரையுடன் கூட பிரம்மாண்டமாக காட்சி அளித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல



அவரது முகம் புன்னகையோடு மலர்ந்து காணப்பட்டது. அவர் புனிதமான மஞ்சள் பட்டுத்துணியை அங்கவஸ்திரமாக அணிந்திருந்தார். அவருடைய பெரிய நெற்றியின் நடுவில் கம்பீரமாக திருமண் என்று சொல்லப்படும் நாமக்கீற்று ஒளி வீசியது. அவரது கழுத்து, சமுத்திரத்தின் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட வலம்புரிச் சங்கைப் போன்று அழகுடன் தோன்றியது. அவரது சங்குக் கழுத்தில் வைஜயந்தி என்று சொல்லக்கூடிய ஆபரணங்களுடன், இதர கரத்தில் சங்கும் மறுகரத்தில் சக்கரமும் வீற்றிருந்தன. அவருடைய வலக்கரம் எப்போதும் என் பக்தர்களை நான் காப்பேன் என்று உறுதி கூறுவது போல அபயக்கரமாக காட்சி அளித்தது. ஓ! இதற்கு மேலும் அவரைப்பற்றி எடுத்துச் சொல்ல என்னிடத்தில் வார்த்தைகள் இல்லை! அவர் வேறு யாரும் அல்ல! ஸ்ரீமகாவிஷ்ணுவே ஆவார்!

ஸ்ரீமகாவிஷ்ணு, கேசவராவ் அவர்களின் தீவிர பக்தியில் ஆனந்தம் கொண்டு அவரை ஆசீர்வதித்தார். ஓ குழந்தையே! புத்திரபாக்கியம் உனக்கு, இல்லை என்று நீ இவ்வாறு ஏங்க வேண்டிய அவசியமில்லை! சென்ற ஜென்மத்தில் காசி என்ற புனித தலத்தில் தோன்றி இறைப்பணியை தீவிரமாகச் செய்த இராமானந்தா என்பவர் தன்னுடைய சத்கர்மாவின் (நற்காரியங்களின்) பலனாக, உமக்கு மகனா வந்து பிறப்பார். அவர் உலகைக் காத்து இரட்சிப்பதற்காக உமது மகனாக பிறக்க உள்ளான் என்பதை நீ நினைவில் கொள்வாயாக என்றார்! ஆனால் கேசவராவ் ஸ்ரீவிஷ்ணு பகவானிடம், ஹே ப்ரபு! தம் வாழ்வில் இளமைப் பருவத்திலேயே சந்யாசியாகும். ஒரு குழந்தையை நான் பெறுவதால் என்ன பயன்?

அவன் விரைவிலேயே சந்யாசியாகி விட்டால், ஒரு வாரிசு அற்ற என் குடும்ப நிலை என்ன ஆகும்! உங்களின் ஆசிர்வாதம் பழங்கள் அற்ற ஒரு மரத்தைப் போல், தண்ணீரற்ற ஒரு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


குளத்தைப்போல, நிலவற்ற இரவைப் போல, வாசனை அற்ற திரவியத்தைப் போல எனக்கும் என் குடும்பத்திற்கு ஒரு பலனையும் அளிக்கப் போவதில்லை! என்று கேசவராவ் மனம் வருந்தி புலம்பினார். ஸ்ரீ மகாவிஷ்ணு சிரித்துக் கொண்டே, கேசவா கவலைப்படாதே! உனது மகன் சந்யாசிகள் போன்று உலகத்தில் சேவை செய்வான் என்று தான் கூறினேன்.

ஆனால் அவன் இல்லற வாழ்க்கையும் வாழ்வான் என்று நான் உனக்கு உறுதி அளிக்கிறேன்! பைதான் என்ற கிராமத்தை, உலகமே போற்றும்படி செய்த ஏக்நாத் என்ற சாதுவைப் போலவும், மங்கன்வேடா என்ற கிராமத்தை அனைவரும் நினைவில் நிறுத்திய தாமாஜி என்ற புனிதமான உள்ளம் கொண்டவரைப் போலவும் உன் மகனும் எல்லா செல்வங்களையும் பெற்று, சிறப்புடன் இருப்பான் என்று நான் உனக்கு ஆசீர்வாதம் வழங்குகின்றேன்! என்றார் கருணையே வடிவமான ஸ்ரீமகாவிஷ்ணு. அதுமட்டுமல்லாமல் கனவிலேயே கேசவராவிற்கு ஒரு தேங்காயும் ப்ரசாதமாக அளித்தார். காலையில் கண்விழித்த கேசவராவ் தாம் கண்ட கனவை நினைத்து ஆனந்தம் பொங்க தன் மனைவியை அழைத்தார்.

NOT FOR SALE

கேசவராவ் தன் மனைவியிடம், "கருணையின் உருமான ஸ்ரீவேங்கடேசபெருமாள் நமது குறையைத் தீர்த்து வைக்கத் தீர்மானித்து விட்டார்! நேற்றிரவு எனது கனவில் அற்புதமாக காட்சி அளித்த அவர், நமக்கு ஒரு புத்திரன் பிறப்பான் என்று ஆசீர்வதித்து, இத்தேங்காயையும் ப்ரஸாதமாக அளித்தார் என்று கூறினார். தன் கணவரின் கைகளில் இறைவனால் அளிக்கப்பட்ட ப்ரஸாதத்தை கண்டதும், அவர் மனைவி மனம் நெகிழ்ந்து, ஸ்ரீமகாவிஷ்ணுவிற்கு நன்றி செலுத்தி, இருவரும் நமக்கு பிறக்கப்போகும் புத்திரன் இவ்வுலகிற்கு நல்வழியைக் காட்டக் கூடியவனாகவும் இருப்பான் என்பது நம் பெருமாளின் வாக்காகும்! ஆகையால் இனியும் நீ

கவலை கொள்ள வேண்டியதில்லை!" என்று அன்புடன் கூறினார்.

கேசவராவும் அவரது மனைவியும் இடைவிடாது ஸ்ரீவேங்கடேச பெருமாளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தனர். மகான் ஸ்ரீராமானந்தா, கேசவராவ் மனைவியின் வயிற்றில் கருவாக உதித்தார். அவருக்கு ஏழாவது மாதம் ஆகியிருந்த சமயம், தன் கணவரிடம், "ஸ்வாமி, நாம் அரண்மனைக்குச் சென்று, அரசரிடம் தானியங்களை தானமாகப் பெற்று வருவோம்! ஏனெனில், ஸ்ரீமகாவிஷ்ணுவின் அருளால் பிறக்கும் இக்குழந்தையின் பொருட்டு, நம் இல்லத்தில் அன்னதானம் செய்ய வேண்டும்! அது மட்டுமல்லாமல் தர்ம காரியங்களுக்கும் நம்மால் இயன்றதை அளிக்க வேண்டும்! என்று வேண்டினாள். கேசவராவும், இறைப்பணியையும், நற்காரியங்களையும் ஒரு குறையும் இல்லாமல் செய்து வந்தார். அதன் விளைவாக ஒன்பதாவது மாதம் ஸ்ரீ இராமானந்த மகான் அடுத்த பிறவி எடுத்து இத்தம்பதியினருக்கு புத்திரராகப் பிறந்தார்.

ஸ்ரீராமானந்தரின் முன் ஜென்ம வாழ்க்கை இறைவனுக்காகவே சமர்பிக்கப்பட்டிருக்கிறது. அவர் சாதுக்களுக்கு எல்லாம் சாதுவாக திகழ்ந்தார். அத்தகைய மகான் தனது நற்காரியங்களின் வினைப்பயனாக, பக்திமானாகிய கேசவராவ் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். அவருக்கு தக்க நேரத்தில் "கோபால்" என்று பெயர் சூட்டப்பட்டது. பிறக்க இருந்த கோபால் என்ற உத்தம குழந்தைக்கான எல்லா ஏற்பாட்டையும் பண்டரிபுர பாண்டுரங்கன் முன்னரே செய்து வைத்திருந்தார்? உரிய வயது வந்ததும் கோபால் என்ற தெய்வீக புத்திரனுக்கு அவனது பெற்றோர் திருமணமும் செய்து வைத்தனர். இப்பொழுது "கிருஹஸ்தாஸ்ரமம்" என்று சொல்லக்கூடிய இல்லற வாழ்க்கை என்ற தர்மத்தை, கடைபிடித்து வாழத் துவங்கினார். அவருடைய மனது எப்போதும்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நான் இவ்வுலகத்தாருக்கு பயனுள்ளவனாக மாறுவதற்கு இன்னும் நிறைய நற்காரியங்களைப் புரிய வேண்டும் என்பதையே யோசித்தவண்ணம் இருந்தார். அவர் ஒரு நாள் சேலாவாடி (Salawadi) என்ற கிராமத்திற்குச் சென்றார். அந்நிகழ்வு இறைவனால் தீர்மானிக்கப்பட்டதாகும். அவரால் சேலாவாடி என்ற கிராமமே உலகப் புகழ்பெற்று விளங்குகின்றது. அங்கே தங்குவதற்கு, வசதியான இடம் எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை. ஒரு சில குடிசைகள் காலியாக இருந்தன. ஆனால் அவையும் கீழே விழுந்து விடும் அபாயத்தில் மிகவும் சேதமாக காணப்பட்டன.

ஒளி நிறைந்த அவருடைய முகத்தைக் கண்டதும் அக்கிராமவாசிகள், அவரிடம் தங்கள் கைகளைக் கூப்பி வணங்கி "மகராஜ் தாங்கள் ஒரு மகாராஜாவா அல்லது இளவரசரா இல்லை இறைவனின் தூதரா என்பதை நாங்கள் அறியவில்லை!" ஆனால் தாங்கள் தங்குவதற்கு வசதியான ஒரு இடம் கூட எங்களுடைய கிராமத்தில் இல்லை! தங்களுடைய இத்தோற்றமானது பெரிய சத்திரங்களும், குதிரைகளும், பணியாட்களும், நிச்சயமாக தங்களுக்குத் தேவை என்பதை எங்களுக்கு உணர்த்துகிறது! ஆனால் இவையாவுமே இங்கு இல்லை! பகவான் ஸ்ரீ கிருஷ்ணா பசு மாட்டின் தொழுவத்தில், ஆனந்தமாக உறங்கினார். ஆனால் அவர் கோகுலத்தின் தலைவிதியையே மாற்றி அமைத்தார்.

கோகுலத்தையும் அதன் இடையர்களையும் உலகமே போற்றும் அளவிற்கு அன்பிலும், பண்பிலும், செல்வத்திலும் சிறந்தவர்களாக மாற்றினார்! அதே போன்று தாமும், இக்கிராமத்தில் வாழ்ந்து, இக்கிராமத்தையும் இங்கு வாழும் மக்களின் நிலையையும் மாற்றுமாறு வேண்டுகிறோம்! ஸ்ரீகிருஷ்ணாவைப் போன்றே கோபால்ராவ் என்ற தாங்களும், எங்களின் தெய்வமாவீர்! ஏனென்றால் தங்களின் சிரசைச்சுற்றி ஒளிரும் ஒளியும், தங்களுடைய தோற்றமும், தாங்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மிகப்பெரியவர் என்பதை எங்களுக்கு எடுத்துரைக்கின்றன! இந்த ஏழை கிராமத்தையும், வறுமையில் வாடும் இம்மக்களையும் தாமே காப்பாற்ற வேண்டும்! தம்மால் எங்களின் இந்நிலை மாறும் என்று தீவிர நம்பிக்கை கொண்டுள்ளோம்! இனி தாமே எங்களுடைய குரு ஆவீர்.

கோபால்ராவ் சேலாவாடி மக்களின் கோரிக்கையை மனமுவந்து ஏற்றார். அவர் அங்கு ஏதாவது ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்க எண்ணினார். அவருக்கு சேவைபுரிய அங்கே பதினெட்டு (18) வகையான தொழில் செய்வோர் காத்துக் கொண்டிருந்தனர்.

அவர்களில் அந்தணர்கள், மரவேலை செய்பவர்கள், பொற்கொல்லர்கள், பானை செய்பவர்கள் போன்ற அனைவருக்கும் வீடுகள் கட்டித் தருவதற்காக இலவசமாக மனைகளை வழங்கினர். வேறு எந்த ஜமீன்தாரும், நிலச்சுவான் தாரும் செய்யாததை கோபால்ராவ், அம்மக்களுக்காகச் செய்தார். தேவலோக மலரான பாரிஜாதம் தன்னுடைய அற்புத மணம் கமழும் தன்மையால், அனைத்து தேவர்களையும் மகிழச் செய்வதைப் போல, கோபால்ராவ் என்ற அரசருக்கு இணையான மகான், அக்கிராம மக்களை மகிழச் செய்தார்.

அவர் அக்கிராமத்தின் பெயரை சேலு என்று மாற்றினார். அவருடைய புகழ் அனைத்து இடங்களிலும் பரவியது. அவர் ஆற்றிய நற்காரியங்களுக்கான பலனாக அவர் அரசாங்கத்தால் ஜிந்துர் (JINTUR) மாநிலத்தில் தேஷ்முக் ஜாகீர் என்று மிக உயர்வாக கருதப்படும் பதவியைப் பெற்றார். அவர் அக்கிராமத்தின் ஜாகிர்தாராக நியமிக்கப்பட்டார். ஜாகிர்தார் என்பவர் அரசருடைய சார்பில் வருமானவரியை வசூல் செய்யும் பணியையும், சட்டம், ஒழுங்கு, நீதியை அக்கிராமத்தில் காப்பாற்றுபவராகவும் இருக்க

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வேண்டும். கோபால்ராவ் தேஷ்முக் அப்பணியை மிகவும் சீரிய முறையில் ஆற்றினார்.

அந்நாட்களில் ஜாகிர்தார் என்ற பதவியை ஏற்றவர்கள் நல்லொழுக்கமற்றவர்களாக இருந்தனர். அரசரின் சார்பில் காரியம் ஆற்றுவதால் அவர்களிடம் அதிகாரமும், ஆணவமும் மிகுந்து காணப்பட்டன. மக்களுடைய வரிப்பணத்தைச் சுரண்டி தங்களுடைய உல்லாச கோரிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் பல பெண்களை திருமணம் செய்து கொண்டனர். வரி வசூல் என்ற பணியை காரணமாகக் கொண்டு வறுமையில் வாடியவரைக் கூட பலவந்தமாக வற்புறுத்தி வசூல் செய்தனர். சமுதாயத்தில் தாம் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றிருந்த காரணத்தால், அவர்களிடம் ஒரு தர்மமும் இருக்கவில்லை. பொதுமக்கள் அரசரை விட இத்தகைய ஜாகிர்தாரிடத்தில் மிகவும் பயம் கொண்டிருந்தனர். ஆனால் கோபால்ராஜ் தேஷ்முக் இதற்கு மாறானவர். அவர் ஜாகிர்தார் என்ற பதவியை மக்களுக்கு சேவைபுரிய மட்டுமே பயன்படுத்தினார். அவருடைய கிராமத்தில் உள்ள அனைவருமே தம்மைக் காக்க வந்த தெய்வமாக கோபால்ராவை போற்றி வணங்கினார்கள்.

NOT FOR SALE

ஒரு சமயம் கோபால்ராவ்வின் வாழ்க்கையில், ஒரு பெரிய திருப்புமுனை ஏற்பட்டது. அதைப்பற்றி அறிந்து கொள்ளப்போகும் நாம் அனைவரும் நிச்சயமாக அதிர்ச்சியடைவோம் என்பது உறுதி. ஒரு மாலை நேரத்தில், கோபால்ராவ் தன்னுடைய இருப்பிடம் நோக்கி நடந்து கொண்டிருந்தார். சூரியனின் சுட்டெரிக்கும் கதிர்கள் தன்னுடைய தன்மையை விடுத்து, மேற்கே மெதுவாக இறங்கி அஸ்தமனமாகும் நேரம் அது. பசுக்கள் யாவும் தங்களின் இல்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரம் அது. இத்தகைய அற்புதமான மாலைப்பொழுதை கோபால்ராவ்

தனிமையில் ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டு இரசித்தார். அப்பொழுது அவருக்கு அருகில் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண் சிறிது நேரம் இளைப்பாறுவதற்காக அங்கே அமர்ந்தாள். ஒரு சில விநாடிகள் அவளை நோக்கிய கோபால்ராவ், தன் மனதில் இப்பெண் எவ்வளவு ஆழமாக இருக்கிறாள் என்று நினைத்தார்.

ஆனால் அடுத்த விநாடி, தன்னுடைய மாபெரும் தவறை உணர்ந்தார். இறைவா! நான் என்ன காரியம் செய்து விட்டேன்! மனதாலும் பிறர் பெண்களின் அழகைக் காண்பது தவறல்லவா! நான் இத்தகைய தவறை எவ்வாறு புரிந்தேன்! என்று மனம் பதைத்து தன் இல்லத்திற்கு சென்று இறைவனின் திருவுருவம் முன்னர் நின்று கொண்டு, ஓ வேங்கடேசா! உன்னுடைய திவ்யமான அழகை மட்டுமே காண வேண்டிய இக்கண்களால், இன்று ஒரு பெரும் பாவம் புரிந்துவிட்டேன்! இனியும் இக்கண்களைக் கொண்டு உன்னை எவ்வாறு காண்பேன்? மாயாவின் சதியால், நான் என் மதியை இழந்து விட்டேன்! இத்தகைய பாவம் செய்த தனது கண்களை இழப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை! என்னை தயை கூர்ந்து மன்னப்பீராக! என்று வேண்டி இரண்டு ஊசிகளை எடுத்து தன் இரண்டு கண்களிலும் பாய்ச்சிக் கொண்டு விட்டார்! ஒரு ஞானியான அவர் எவரும் நினைத்துக் கூட பார்க்க இயலாத ஒரு செயலைச் செய்துவிட்டார்.

ஓ பாண்டுரங்கா! இப்பிறவியில் நீ எனக்களித்த வாய்ப்பை நான் தவறாக பயன்படுத்தி விட்டேன்! என்று கூறி கதறி அழுதார். கோபால்ராவ், இத்தகைய கொடூர தண்டனையைத் தமக்குத்தாமே வழங்கிக் கொண்டார் என்ற செய்தி, காட்டுத்தீ போல அக்கிராமம் முழுவதும் பரவியது. அக்கிராமவாசிகள் அனைவரும் திரண்டு இத்தகைய மாபெரும் மகானை தரிசிக்க வந்தனர். அவர்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தங்கள் கைகளைக்கூப்பி வணங்கி, "மகராஜ் தாங்கள் இத்தகைய ஒரு காரியம் புரியலாமா? இவ்வுலகத்திற்கே ஒளியாக திகழ்ந்த நீங்களே உங்கள் கண்களை இருளில் மூழ்கச் செய்து விட்டீர்கள்! இனியும் நீங்கள் இந்த உலகத்தை எவ்வாறு காண்பீர்கள்?" என்று கதறி அழுதனர். அவரது மனைவியும், மகனும் இச்செய்திக் கேட்டு மிகவும் வருந்தினர். அவர்கள் சேலு கிராமத்திற்கு விரைந்து வந்தனர். அவரது மனைவி அவரிடம், "ஸ்வாமி! இப்படிப்பட்ட தண்டனை தங்களுக்கு வழங்கும் அதிகாரத்தை, தாம் எங்கிருந்து பெற்றீர்கள்!" என்று கேட்டார். அதற்கு விடையளித்த கோபால்ராவ் "மக்களின் நடத்தையை கவனிப்பாயாக! சத்தியத்தை புறம் தள்ளி, பொய்யை ஏற்றுக்கொள்கின்றனர்! என் கண்களும் இத்தகைய மாபெரும் குற்றத்தைப் புரிந்தன. ஆகையால்தான் அக்குற்றத்திற்கு உரிய தண்டனையை வழங்கினேன்" என்றார்.

அவரைச் சுற்றி இருந்த கிராமவாசிகள் சிலர் ஒரு வேளை இந்த ஜாகிர்தாருக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ! இல்லையெனில் எவரேனும், தம்முடைய கண்களை தாமே குத்திக் கொள்வார்களா? என்று பேசிக் கொண்டனர். ஆனால் ஸ்ரீவேங்கடேச பெருமாள், அந்த அற்புதத்தை அவரிடம் நிகழ்த்தினார். கோபால்ராவ் ஆன்மீகம் தொடர்பான மறை நூல்களை படிக்கும் போதும், தினமும் செய்யும் அவருடைய பூஜைகளின் போதும், அவருக்கு பார்வை நன்றாகத் தெரியும் படியான அற்புத வடிவத்தை அளித்து விட்டார். பகலில் மட்டுமல்ல, வேதாச்சாரங்களை கற்கும் வேளையில் இரவுப்பொழுதிலும் அவருக்கு நன்றாகப் பார்வை தெரியுமாறு வரத்தை அளித்து தன் பக்தனை காப்பாற்றினார்.

கோபால்ராவ் தம் பார்வை இழந்ததால், உலக நிகழ்வுகள் எதுவும் தம்மை பாதிக்காததால், தம்மை முற்றிலும் இறைவனிடம் சமர்ப்பித்தார். இரவும், பகலும் தொடர்ந்து பூஜை, தியானம், மந்திர

NOT FOR SALE

உச்சாடனங்களில் ஈடுபட்டார். வெகு விரைவில் கோபால்ராவ் மகா ஞானியாக போற்றப்பட்டார். சேலு என்ற கிராமம் கோபால்ராவ் அவர்களின் பெயரால் மிகவும் பிரசித்தி அடைந்தது.

அவர் பல அற்புதங்களை நிகழ்த்த துவங்கினார். ஒரு நாள் அவரைக் காண வந்த பாவையிழந்த ஒரு பெண், அவர் முன் கைகள் தொழுது வணங்கினாள். அவளை அவளுடைய உறவினர் ஒருவர் அழைத்து வந்திருந்தார். அவள் கோபால்ராவ் அவர்களிடம் "மகராஜ் நான் ஒரு பிறவி குருடியாவேன்! என்னைக் காப்பாற்ற தங்களைத் தவிர வேறு எவரும் இல்லை! பிறவிலேயே இந்த உலகத்தைக் காணும் பாக்கியத்தை இழந்த நான், தற்போது உங்கள் உதவியை நாடி வந்துள்ளேன். எனக்கு இவ்வுலகை காண வேண்டும் என்று ஆசை ஏற்படுகிறது.

ஒருவர் பார்வை இல்லாதவராக இருந்தால், அவர் உடலில் உள்ள மற்ற அனைத்து உறுப்புக்களும் பயனற்றவையே! ஆனால் கருணையே இல்லாத, இறைவன் என்னுடைய இரு கண்களில் இருந்து, பார்வையை பறித்துக் கொண்டு இந்த உலகை காண இயலாதபடி செய்துவிட்டார்! எல்லா வேதங்களும், சாஸ்திரங்களும், மகான்களால் முடியாத செயல் எதுவும் இல்லை என்று கூறுகின்றன! அத்தகைய கருணையை தங்களிடம் எதிர்பார்த்து, நான் இங்கு வந்துள்ளேன். தயை கூர்ந்து என்மீது இரக்கம் காட்டுங்கள்! இல்லையெனில் நான் தங்களின் பாதங்களை விடப்போவதில்லை! என்று கூறி கோபால்ராவ் அவர்களின் பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டாள். கோபால்ராவ் பொறுமையோடு சிரித்துக்கொண்டே "பெண்ணே நான் உனக்கு பார்வை அளிக்கிறேன், ஆனால் அப்பார்வை உனக்கு கிடைத்தால் அதன் மூலம் நீ என்ன செய்வாய் என்பதை எனக்குச் சொல்வாயாக!" என்றார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இத்தகைய ஆனந்தம் அளிக்கக் கூடிய சொற்களைக் கேட்ட அப்பெண் “மகராஜ் என் கணவர் எனக்கு பார்வை இல்லாத காரணத்தால் என்னிடம் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்ளவில்லை! என் குடும்பத்தை நல்வழியில் என்னால் நடத்த இயலவில்லை எனக்குப் பார்வை கிடைத்து விட்டால், என் கணவருடன் இல்லற வாழ்வில் மகிழ்ச்சியோடு ஈடுபடுவேன்! என்றாள்.” கோபால்ராவ் இதைக் கேட்டு இடி இடித்தது போல சிரித்தார். ஆண்களும், பெண்களும் இந்த உலக வாழ்க்கையை எவ்வாறு நிரந்தரம் என்று நம்பிக்கைக் கொண்டுள்ளனர்? கோபால்ராவ் மகராஜ் அவர்களின் அற்புதம் துவங்க ஆரம்பித்தது.

அவர் தன் பணியாளை அழைத்து, ஒரு கையளவு மிளகாய் பொடியை எடுத்து வரச் சொன்னார். அவன் அவ்போது தான் அவர்கள் வீட்டுக் கொல்லைப் புறத்தில் நன்கு காய்ந்த மிளகாய்களைப் பொடி செய்து கொண்டிருந்தான். அவன் ஒரு கை நிறைய மிளகாய் பொடியை கொண்டு வந்து மகராஜ் அவர்களிடம் கொடுத்தான். மகான் கோபால்ராவ் மகராஜ், கருணையோடு தன் கைகளால் அந்த மிளகாய்ப் பொடி முழுவதையும் அப்பெண்ணின் கண்களில் தூவினார். என்ன அற்புதம்! மிக மென்மையான நரம்புகளை உடைய விழித்திரையில் ஒரு தூசி விழுந்து விட்டால் கூட, நம் கண்கள் துடித்து சில மணி நேரங்கள் பார்வையே தெரியாமல் துன்பப்படுவோம்! ஆனால் இம்மகான் ஒரு கை நிறைய மிளகாய்ப் பொடியைத் தூவி, அப்பெண்ணின் கண்களில் பார்வை வரவழைத்து காண்போர் அனைவரையும் வியக்கச் செய்தார். இதுவே மகான்களின் மகத்துவமாகும்!

இதுமட்டுமல்ல! இதைப்போன்ற பல வியாதிகளை குணப்படுத்தி இருக்கிறார். இறைவன் அவருக்கு அளித்த அனைத்து சித்திகளையும் அவர் கருவில் உதித்தபோதே

NOT FOR SALE

அளித்துவிட்டார். அவர் எதைப்பற்றியும் இலட்சியம் செய்ததில்லை. சதா சர்வகாலமும் இறைவழிப்பாட்டிலேயே ஈடுபட்டிருந்தார்.

## பாபாவின் வருகை குறித்த தகவல்

நம் சத்குரு சாயி நாதரின் வருகை குறித்த தகவல், மிக விரைவிலேயே கோபால்ராவ் அவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் அத்தகைய ஆனந்தச் செய்தி கிடைக்கவிருக்கின்றது. ஒருமுறை கோபால்ராவ் மகராஜ் அவர்கள் தன்னுடைய குடும்பத்தினருடன் காசிக்கு வருகை தந்தார்.

அவருடன் காசிக்கு வருவதற்கு பண்டிதர்கள், வேலையாட்கள், உணவு சமைக்க உதவும் பொருட்கள், உணவு சமைக்கும் பணியாட்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் விரும்பியதால் அனைவரோடும் மகான் கோபால்ராவ். காசிக்கு வருகைதந் தந்தார். அவர்கள் வரும் வழியில் இரவுப் பொழுதானதால், ஒரு கிராமத்தில் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்தகைய சக்தி வாய்ந்த மகானின் வருகையால், மகிழ்ந்த அக்கிராமவாசிகள் அனைவரும், அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர்.

மகான் கோபால்ராவ் தங்குவதற்காக, அவ்வூரிலேயே ஒரு பெரிய வீட்டை கிராமவாசிகள் அவருக்கு அளித்தனர். ஆனால் அப்பெரிய வீடு பூத பிசாசுகளின் விடுதியாக திகழ்கின்றது என்பதை எவரும் அவரிடம் உரைக்கவில்லை. எல்லோரும் இரவு உணவை முடித்துக்கொண்டு தமக்கு அளிக்கப்பட்ட இல்லங்களுக்கு சென்று, உறங்க ஆரம்பித்தனர். நடுநிசியானதும், ஒரு பயங்கரமான உருவம் மகராஜ் அவர்களின் முன்னால் வந்து நின்றது. அச்சமயம் மகராஜ் பலகையில் அமர்ந்து கொண்டு, தியானம் செய்து கொண்டிருந்தார். அப்பூதம் பயந்து சற்று விலகி நின்று, மகராஜ்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்களைப் பார்த்து கூக்குரலிட்டது. "தாம் ஏன் என்னுடைய வீட்டிற்குள் நுழைந்தீர்கள்" என்று கேட்டது. மகராஜ் பொறுமையுடன் "எது உன்னுடைய வீடு!" உன்னுடைய அகங்காரமும், தான் என்ற உணர்வுமே, உன்னை இந்நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது! இந்த வீடு மண், கல், இரும்பு மற்றும் மரத்தால் கட்டப்பட்டது. நான் கூறிய இத்தகையப் பொருட்களில், நீ எதை உருவாக்கினாய் என்று சொல்! உனக்கு சம்பந்தமே இல்லாத ஒன்றை, நீ எப்படி உன்னுடையது என்று சொல்ல முடியும்! அவருடைய சத்தியமான வார்த்தைகளைக் கேட்ட அப்பூதம் ஆத்திரத்தில் தன் கைகளைக் கொண்டு அவரை தாக்க எண்ணம் கொண்டது. மகராஜ் தாம் கொண்டு வந்திருந்து அபிஷேக நீரை, சிறிதளவு எடுத்து அதை அப்பூதத்தின் மேல் தெளித்தார். உடனே அப்பூதத்திற்கு தன் முன் ஜென்ம வினை நினைவிற்கு வந்தது.

அது மகராஜ் அவர்களைப் பணிந்தது. "மகராஜ் தயை கூர்ந்து இந்த நிலையிலிருந்து, எனக்கு முக்தி அளியுங்கள்!" நான் சென்ற ஜென்மத்தில் வட்டிக்கு பணம் அளிக்கும் ஒரு கொடுமையான வட்டிக்காரனாக இருந்தேன்! என்னிடம் அளவுக்கு அதிகமாக செல்வம் இருந்த போதும், நான் எவருக்கும் ஒரு ரூபாய் கூட தானமாக அளிக்கவில்லை! என் செல்வத்தைக் குறித்து நான் மிகவும் கர்வம் கொண்டிருந்தேன்! என் மனைவியின் கருவைக் கலைக்கச் செய்து அவளை என் இல்லத்திலிருந்து பலமுறை வெளியேற்றி இருக்கிறேன்! அவருக்கு குழந்தை பிறந்தால், அக்குழந்தையைப் பராமரிப்பதற்காக என் செல்வத்தை செலவிட வேண்டுமே என்ற காரணத்தால் குழந்தை வரத்தைக் கூட சாபமாகக் கருதினேன்! என் மனைவியை, பலமுறை அவளது பிறந்த வீட்டிற்கு துரத்தி, அவளுக்குத் தேவையான உணவு மற்றும் உடைகளுக்கானத் தொகையை அவர் பெற்றோரிடமிருந்து பெற்று வருமாறு வற்புத்தி இருக்கிறேன்!

NOT FOR SALE

எனக்கு ஒரு இளைய சகோதரன் இருந்தான். அவனையும் அன்பு செலுத்தி கவனிக்காமல், துன்புறுத்தி வீட்டை விட்டு வெளியேற்றினேன்! செல்வத்தின் மீதுள்ள மோகத்தால் எனது தந்தையின் திவசத்தைக் கூட முறையாகச் செய்யாத பாவியானேன்! இவ்வாறு பலரையும் துன்புறுத்தி, பலரையும் ஏமாற்றி நான் சேர்த்து வைத்த செல்வத்தை, ஒரு பானையில் இட்டு இந்த வீட்டில் புதைத்துள்ளேன்! இத்தகைய முறையில் செல்வம் சேர்த்ததால், நான் மிகவும் கோரமான இறப்பைச் சந்தித்தேன்.

இப்பொழுது நான் சேர்த்து வைத்த செல்வம் நிரந்தரமானது என்ற எண்ணம் என்னைவிட்டு சென்று விட்டது! நான் பாவத்தின் வழியில் சென்று சேர்த்த இச்சொத்தையெல்லாம், தர்ம காரியங்களுக்குச் செலவிட வேண்டுகிறேன்! தயை கூர்ந்து இச்செல்வத்தைத் தாமே எடுத்துச்சென்று, தர்ம காரியங்களுக்கு அளித்துவிடுங்கள்! நான் செய்த இப்பாவத்தால் ஆவியாக அலைந்து கொண்டிருக்கிறேன்! இப்பொழுது மகானாகிய உங்களின் தரிசனம் கிடைத்த பிறகு எனக்கு நிச்சயம் முக்தி கிடைக்கும் என்று நம்புகிறேன்! ஆதலால் தயை கூர்ந்து என்னை இந்நிலையில் இருந்து விடுவியுங்கள் ஸ்வாமி! என்று மன்றாடி வேண்டிக் கொண்டது.

"நான் உங்களிடம் சரணடைந்த பிறகு என்னைக் காப்பாற்றாமல் போனால் பழி உங்களுக்கல்லவா நேரும்! ஆதலால் கருணையோடு என்னை மன்னித்து முக்தி அளியுங்கள்" என்று வேண்டியவுடன் மகராஜ் அப்பூதத்தின் மீது இரக்கம் கொண்டார். மகான்கள் முன்னால் நிற்பவர்கள், நல்லவர்கள் ஆனாலும், தீயவர்களானாலும் மன்னிப்பு வேண்டியவர்களுக்கு உடனே வழங்கும் தயாள மனம் கொண்டவர். அவர் அப்பூதத்தின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மறுநாள் காலை, அவர்கள் புறப்படுவதற்கு முன் அச்செல்வத்தையும் ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு, அனைவரும் காசியை நோக்கிச் சென்றனர். அவர்கள் புறப்படும் வேளையில் அக்கிராமவாசிகள் அனைவரும் மகராஜ் அவர்களின் பாதங்களை நமஸ்கரித்தனர். "மகராஜ், இதுவரை இந்த வீட்டில் தங்கிய எவரும் மறுநாள் உயிரோடு திரும்பியதில்லை! ஆனால் நீங்கள் மகான் என்பதை நாங்கள் அறிவோம்! ஆதலால் தங்களால் இந்த வீட்டிற்கும், எங்களின் கிராமத்திற்கும் விடுதலை கிடைக்க வேண்டுமென்றதால், தங்களை இங்கு தங்கும்படி கூறினோம்" என்று கூறியவுடன், மகராஜ் "முன்தினம் இரவில் பூதத்துடன் நடந்த உரையாடல் முழுவதையும் அம்மக்களிடத்தில் விவரித்தார்".

அனைக் கேள்வியுற்ற அம்மக்கள் மனம் மகிழ்ந்து "இன்று முதல் எங்கள் கிராமத்தில் அனைவருக்கும் நிம்மதியான வாழ்வை அளித்த மகராஜ் அவர்களை நாங்கள் என்றுமே மறவோம்!" என்று கூறி உற்சாகமாக காசிக்கு வழியனுப்பி வைத்தனர்.

காசிக்கு சென்றவுடன் கோபால்ராவ் மகராஜ் அவர்கள், தாம் கொண்டு வந்த அப்பூதத்தின் செல்வத்தை, ஏழை எளிய மக்களுக்கு விநியோகித்தார். அதனால் அப்பூதம் தன் நிலையை விடுத்து, முக்தி அடைந்தது. மகராஜ் காசி, ப்ரயாக் (Prayag) சென்று பின்னர் சரயு நதிக்கரையில் அமைந்த அயோத்திக்குச் சென்று தரிசனம் செய்தார். அங்கிருந்து குருக்ஷேத்திரம், பிருந்தாவன், கோகுலம், மதுரா, துவாரகா, சோம்நாத், பைத்தான் மற்றும் ஜுனாகர் (Junagarh) சென்று மகான் மேத்தாவை தரிசித்தார். அங்கிருந்து அஹமதாபாத் சென்று சுராக்ஷாவின் தர்காவிற்கு (Suragsha's Dargah) சென்று தரிசித்தார்.

NOT FOR SALE

அங்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. தர்காவிற்கு மகராஜ் சென்றதும் அவருடன் வந்த மற்றவர்கள், குலப்பெருமை காரணமாக தர்காவிற்குள் நுழையவில்லை. அவர்கள் அனைவரும், மகராஜ் தர்காவில் நுழைந்ததைப் பார்த்து அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர் இன்னும் பல அற்புதங்கள் அங்கே நிகழவிருந்தன. அத்தர்காவில் போர்த்தப்பட்டிருந்த சால்வை மற்றும் அவ்விடம் முழுவதும் வியர்வையால் நனைந்தது போல முழுவதுமாக ஈரமாக காணப்பட்டது. அடுத்த விநாடி அத்தர்காவின் உள்ளிருந்து கம்பீரமாக ஒரு குரல் வெளிப்பட்டது.

அது மகராஜ் அவர்களிடம் "சலாம் அலைக்கும்! ராமானந்த மகிரிஷியே! நீங்கள் தற்பொழுது, கோபால்ராவ் தேஷ்முக் என்ற உருவத்தில், சேலு கிராமத்தில் வாழ்ந்து வருகிறீர்கள்! கருணையின் திருவுருவமான நீங்கள் எவ்வாறு என்னை மறந்தீர்கள்? தாங்கள் வசிக்கும் சேலு கிராமத்தில் இருந்து, சுமார் 10 மைல் தூரத்தில் அமைந்த மனாவத் (Manawat) கிராமத்தில் தங்களுடைய முன் ஜென்ம சீடரான மகான் கபீர்தாஸரின் அடுத்த பிறவியாக ஒரு இஸ்லாமிய பக்கிரியின் வளர்ப்பு மகனாக வந்து சேர்ந்துள்ளார்! அக்குழந்தையையும், அதை அழைத்து வந்த தாயையும் காப்பாற்ற வேண்டியது உனது கடமை!" என்றது. தர்காவில் இருந்து ஒலித்த சத்திய அருள்வாக்கை கேட்ட அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். இத்தகைய உரையாடல் மகான்களுக்கு இடையில் மட்டுமே நிகழக்கூடியது என்பதை உணர்ந்து கொண்டனர். கோபால்ராவ் மகராஜ் அவர்கள் இப்பிறவியில் இந்துவாக இருந்தபோதும் அவர்களை மரியாதைகளோடு வழியனுப்பி வைத்தனர்.

கோபால்ராவ் மகராஜ் தனது முன் ஜென்மத்தில் ஸ்ரீஇராமானந்தராக இருந்தவர் என்பதை முன்னரே கண்டோம்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அப்போது அவருடைய சீடராக அவதரித்தவர் மகான் கபீர்தாஸர். கபீர்தாஸரே, நம் சத்குரு ஸ்ரீஷீரடி சாய்நாத் மகராஜ் ஆக உருவெடுத்துள்ளார்.

மகான்களுக்கு மதம் என்பது ஒரு பொருட்டே அல்ல. இவை யாவற்றையும் கடந்தவர்களே மகான்கள். மகராஜ் அங்கிருந்து புறப்பட்டார். சுராக்ஷாவின் தர்காவில் நடந்த இத்தகைய அற்புத நிகழ்வை மஹிபதி என்பவர் பக்த லீலாம்ருதத்தின் நாற்பத்தி மூன்றாவது (43) அத்தியாத்தில் குறிப்பிட்டுள்ளார். உலகமே போற்றும் பாபாவின் வருகையை இந்நிகழ்வு அனைவருக்கும் எடுத்துரைத்தது.

NOT FOR SALE

கோபால்ராவ் மகராஜ் தனது இல்லத்திற்கு திரும்பியபோது அவரது மகன் லக்ஷ்மண்ராவ் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு, கோபால்ராவ் மகராஜ் அவர்களின் மனைவியும், அவரது மருமகளும் (லக்ஷ்மண்ராவின் மனைவி) கதறி அழுதனர். இளமையிலேயே விதவையான லக்ஷ்மண்ராவின் மனைவி செய்வதறியாது திகைத்தார். கோபால்ராவ் மகராஜ் அவர்கள் முக்காலத்தையும் உணர்ந்தவர். அவருக்கு அங்கு என்ன நடக்கப்போகிறது என்பதை முன்னரே அறிவார்.

அவர் மிகவும் பொறுமையுடன் அவரது மருமகளிடம் "குழந்தையே இவ்வுலக வாழ்க்கை நீர்க்குமிழியைப் போன்றது! அந்த நீர்க்குமிழி இன்று உடைக்கப்பட்டது! சுவற்றில் தீட்டிய வர்ணம் எப்போதும் நிரந்தரமாக இருப்பதில்லை! அதைப் போன்று வரைபடத்தில் வரையப்பட்ட நீரை எவராவது பருகி தம் தாகத்தை தீர்த்துக் கொள்ள இயலுமா? இவ்வுலகம் ஒரு மாயை! நீ பார்த்துக் கொண்டிருப்பது எல்லாமே ஒரு நாளில் அழியக்கூடியதே! இது ஒரு மாய வித்தை! உண்மையாக ஒருவரும் பிறப்பதும் இல்லை! இறப்பதும் இல்லை! இந்த உறவுகள் அனைத்தும் மாயையின்

தோற்றங்களே ஆகும்! ஏரியில் நீர் இருக்கும் போது மட்டுமே சூரியனின் பிரதிபலிப்பை அந்நீரில் நாம் காண இயலும். அந்நீர் வற்றி காய்ந்து விட்டால் சூரியனே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? இந்நிகழ்வும் அதைப் போன்றதே! எதற்காக நீ கண்ணீர்விட்டு அழுது புலம்புகிறாய்! அதில் ஒரு பயனும் இல்லை. லஷ்மண் தான் பிறந்த நோக்கம் நிறைவேறி தன் சரீரத்தை துறந்துவிட்டான். இப்பொழுது நீ உன்னுடைய கவனத்தை உனது குழந்தையிடம் செலுத்துவாயாக!" என்ற ஆறுதலான வார்த்தைகள் லக்ஷ்மண்ராவ் மனைவியை சமாதானம் அடையச் செய்தது. கோபால்ராவ் தன் மகனுக்குரிய அந்திம கிரியைகளை முறையாக ஆற்றினார்.

சமா, தமா, உபராதி, திதிக்ஷா, ச்ரத்தா மற்றும் சமாதானா போன்ற ஆறுவகைக் குணங்களையும் கொண்டிருந்தவர் மகராஜ் ஆவார். தொலைதூரத் தேசங்களில் இருந்து, கோபால்ராவ் மகராஜ் அவர்களை தரிசிக்க மக்கள் திரண்டு வந்தனர். அவர் தீர்க்க இயலாத வியாதிகளை தீர்த்து வைத்தார். அனைவருக்கும் வாழ்க்கை நெறியை கற்றுக் கொடுத்தார். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார்.

ஒரு நாள் ஒரு பக்கிரியின் மனைவி மனாவத் என்ற கிராமத்தில் இருந்து, மகராஜ் அவர்களை தரிசிக்க, சேலு கிராமத்திற்கு வந்தார். இப்பொழுது நாம் இந்நிகழ்வை பொறுமையுடன் கருத்தூன்றி கேட்க வேண்டும்! அந்தக் பக்கிரியின் மனைவி, கிழிந்த உடையுடன், போதிய உணவின்றி, மெலிந்த தேகமும் கொண்டு சுமார் 50 வயதைத் தொட்டிருப்பார். தோளில் ஒரு துணிப்பையைத் தொங்க வைத்துக் கொண்டிருந்தாள். தன் இரண்டு கைகளையும் கூப்பி மகராஜ் அவர்களை வணங்கினாள். அவளுடைய முதுகில் ஒரு ஐந்து வயது குழந்தை அமர்ந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


கொண்டிருந்தது. அக்குழந்தையே, தர்காவில் ஒலித்த குரலில் அறிவிக்கப்பட்ட கபீர்தாஸரின் அடுத்த பிறவியாகும்.

அக்குழந்தை ஒரு ரொட்டியை ருசித்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தது. ஏழைகளுக்கு ரொட்டி என்பது மிகப்பெரிய விருந்திற்கு சமானமாகும். அவருடைய வேலையாட்கள் அப்பெண்மணியை மகராஜ் அவர்களின் இருப்பிடத்திற்குள் நுழைய அனுமதிக்கவில்லை. மரத்தில் வசிக்கும் குரங்குகள், எவ்வாறு வழிப்போக்கர்களுக்கு துன்பம் விளைவிக்குமோ அவ்வாறு மகராஜ் அவர்களை தரிசிக்க வருவோர் போவோரை வேலையாட்கள் விரட்டிக் கொண்டிருந்தனர்.

NOT FOR SALE

அத்தாய் தன் குழந்தையைத் தூக்கித் தரையில் வைத்துவிட்டு, மகராஜ் அவர்களை நமஸ்காரம் செய்தாள். அவள் அக்கோட்டை கதவுகளுக்கு வெளியே அமர்ந்து கொண்டு இருந்தாள். உள்ளே நுழைவதற்கு காவலாளிகள் அனுமதி மறுத்தனர். அவள் தன் கைகள் கூப்பித் தொழுது “மகராஜ்! என் கணவர் இறந்து ஐந்து வாரங்களே ஆகின்றது! நான் இப்போது ஒரு விதவையாவேன்! நீங்கள் தாம் எங்களை காப்பாற்ற வேண்டும்! அவர் இறப்பதற்கு சில விநாடிகளுக்கு முன்னால், என்னிடம் சேலு என்ற இந்த கிராமத்திற்கு வந்து தங்களை தரிசிக்குமாறு கூறினார்! அதுமட்டுமல்ல என் வாழ்நாளின் இறுதி கட்டம் வரை, நான் தம்மால் காத்து இரட்சிக்கப்படுவேன்! என்று கூறி தன் உயிரை நீத்தார்! இதுவே சத்தியம்! அதுமட்டுமல்ல, அவர் இக்குழந்தையை தங்களிடம் அளித்து மிகவும் பத்திரமாக பாதுகாக்கும்படி கூறினார்! என்றாள்.

அவள் கூறியது அனைத்தையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த மகராஜ், மிக்க மகிழ்ச்சியோடு, “கபீர்தாஸரின் அன்னை, கபீரை என்னிடத்தில் அழைத்து

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வந்திருக்கிறாள்'' என்று உற்சாகத்துடன் கூறிவிட்டு, தன் இருக்கையை விட்டு எழுந்து அத்தாய் இருக்குமிடத்தைத் தேடி ஓடிவந்தார். மகராஜ் அத்தாயினுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு ஆறுதல் கூறினார். அவர்கள் அத்தாயிடம் "தாயே நான் தங்களின் வருகைக்காக ஆவலுடன் இத்தனை காலமாக காத்துக் கொண்டிருக்கிறேன்! தங்களின் வருகை குறித்த தகவலை பல மாதங்களுக்கு முன்னால், தர்காவிலிருந்து ஒலித்த அருள் வாக்கைக் கொண்டு, அறிந்து கொண்டேன்! நீங்களும் உங்கள் குழந்தையும் சந்தோஷமாக எங்களது இல்லத்தில் வாழலாம்!" என்றார்.

ஆச்சர்யமாக மகராஜ் அவர்களைக் கண்டதும் அக்குழந்தை பேச ஆரம்பித்தது. அக்குழந்தை கூறிய வார்த்தைகள் மிகுந்த பக்குவமடைந்தவரின் வார்த்தைகளைப் போன்றே அமைந்து இருந்தது. அக்குழந்தை மகராஜ் அவர்களிடம் ''இனியும் ஏன் என் தாய் என்னைக் காக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்! எப்பொழுது நான் இந்த இடத்தில் காலடி எடுத்து வைத்தேனோ, அப்பொழுதே இத்தாய்க்கு என்மீதுள்ள அதிகாரமும், பொறுப்பும் முடிந்து போய் விட்டது! இனி என்மீது சகல அதிகாரங்களையும், உரிமையும் கொண்டவர் தாமே ஆவீர்!'' என்று அந்த ஐந்து வயது குழந்தை கூறியவுடன் அனைவரும் ஆச்சர்யமடைந்தனர்.

மகராஜ் அவர்களும் தாம் வாக்கு அளித்தபடி அத்தாயையும் அவரது மகனையும், ஒரு தனி அறையில் தங்கச் செய்து, அவர்களை சிறப்பாக கவனித்துக் கொள்ளும்படி ஆணையிட்டார். மகராஜ் அக்குழந்தையிடம் மிக அதிகமாக அன்பு பாராட்டினார். எப்போதும் அக்குழந்தையை தன்னுடன் வைத்துக் கொண்டார். இதை கவனித்துக் கொண்டிருந்த மகராஜ் அவர்களின்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


உறவினர்கள், அக்குழந்தை மீது மிகுந்த பொறாமை கொண்டனர். இத்தனை ஆண்டுகளாக நம்மீது ஏற்படாத அதிகமான அன்பை ஏன் இக்குழந்தையிடம் வெளிப்படுத்த வேண்டும்? என்று ஆத்திரமும் ஏற்பட்டது. சில ஆண்டுகளில் அக்குழந்தையின் தாயாரும் இறந்துவிட்டார்.

இப்பொழுது அத்தாயார் இறந்த பிறகு, அக்குடும்பம் முழுவதும், அந்தக் குழந்தையை மகராஜ் அவர்களிடம் இருந்து எப்படியாவது பிரித்து விட வேண்டும் என்று திட்டங்கள் தீட்டினர். மகராஜ் அவர்கள் முக்காலமும் உணர்ந்தவர். ஆகையால் அக்குழந்தையை காப்பாற்ற ஒரு தீர்மானம் மேற்கொண்டார். ஒரு நாள் மகராஜ் அவ்வூருக்கு மிக அருகில் உள்ள காட்டுக்கு அக்குழந்தையை அழைத்துச் சென்று, மூன்று அல்லது நான்கு மாதங்கள் அக்குழந்தையோடு அங்கேயே தங்கிவிட்டார். இத்தகைய நிகழ்வு அவரது உறவினர்களை மிகவும் ஆத்திரமடையச் செய்தது. அவர்களில் ஒரு சிலர், அக்குழந்தையின் தாய் ஏதோ ஒரு சித்துவேலை செய்து அக்குழந்தை மீது இவ்வளவு அக்கறையும், பாசத்தையும் ஏற்படச் செய்து விட்டாள்! என்று சிலர் நினைத்தனர். அவரது உறவினர்களும், நண்பர்களும், அக்குழந்தையின் தாயார் இறப்பதற்கு முன், ஏதோ ஒரு மந்திர சக்தியை உபயோகித்து அதன் மூலம் மகராஜ் அவர்களை, தன் குழந்தையை பிரியாமல் இருக்கச் செய்துவிட்டாள் என்றும் நினைத்தனர். ஆகையால் தான் மகராஜ் ஒரு விநாடி கூட, ஊர், பெயர் தெரியாத அக்குழந்தையை, விட்டு விலகவில்லை என்றும் பேசிக்கொண்டனர். மகராஜ் பிறப்பால் ஒரு அந்தணர்! அதுமட்டுமல்லாமல் ஒரு தீவிர வைஷ்ண குடும்பத்தில் பிறந்தவர்! அக்குழந்தையோ இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவன் என்று தெரிய வருகிறது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவ்வாறு இருக்க மகராஜ், ஏன் அக்குழந்தையை தீவிரமாக நேசிக்கிறார்? இத்தகைய தாழ்வான சிந்தனைக்கு தூபம் போடுவது போல ஒரு சிலர், அக்குழந்தை கபீர்தாஸரின் அடுத்த ஜென்மம் என்று கூறவே, தீவிர இந்துக்களான அவர் உறவினர்களும், நண்பர்களும், பணியாட்களும் மிகவும் ஆத்திரமடைந்தனர். அவர்களின் அறியாமையும் ஆத்திரமும் அக்குழந்தையைக் கொன்றுவிடும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. அக்குழந்தையை காட்டுக்குள்ளேயே வைத்துக் கொன்று விடுவோம் வாருங்கள்! இதுவே ஒரே வழியாகும்! அப்போது தான் மகராஜ், அக்குழந்தையை மறந்து, நம் இருப்பிடம் திரும்புவார் என்று கொடூரமான முடிவை மேற்கொண்டு அதற்கேற்ற ஆயத்தப் பணிகளை செய்யத் துவங்கினர்.

NOT FOR SALE

அவர்கள் ஒரு குழுவாகச் சென்று காட்டை அடைந்தனர். அங்கு பல இடங்களில் தேடிய பின், ஒரு இடத்தில் மகராஜ் அவர்களுக்கு பின்னால் அக்குழந்தை உறங்கிக் கொண்டு இருப்பதைக் கண்டனர். மகராஜ் அவர்களுக்குத் தெரியாமல், அக்குழந்தையை மட்டும் எவ்வாறாவது கொன்றுவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினர். அவர்கள் கண்களில் ஒரு செங்கல் தென்பட்டது. அக்கல்லை எடுத்து வந்து நேராக அக்குழந்தையின் தலைக்குக் குறி வைத்து அக்கூட்டத்தில் ஒருவன் எறிந்துவிட்டான்.

மகராஜ் அவர்களின் கருணை அக்குழந்தையை வாழ வைத்தது. ஆனால் அவர்கள் வீசிய அச்செங்கல் மகராஜ் அவர்களின் தலையில் வேகமாக மோதி விழுந்தது. இக்காட்சியை எழுதுவதற்கு என் மனம் பதைக்கின்றது. மகராஜ் அவர்களின் தலை உடைந்து அவர் முகம் முழுவதும் இரத்தம் பீறிட்டது. மகராஜ் வலியால் துடித்தார். அவர் அப்போதும் எழுந்து உட்கார்ந்து அங்குள்ள எலுமிச்சை மரத்தின் ஒரு காயை எடுத்து அடிப்பட்ட

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இடத்தில் வைத்து கட்டுப் போட்டுக் கொண்டார்.

ஆனால் அந்த மகான் மீது கல்லெறிந்ததால், எறிந்தவன் அந்த இடத்திலேயே விழுந்து மரணமடைந்தான்! மகாத்மாக் களுக்கு துன்பம் விளைவித்தவர்கள், எவராக இருந்தாலும், அவர்கள் தலைமுறையினரும் அப்பாவத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்பது உறுதியாகும். இதற்குள் அக்குழந்தை எழுந்துவிட்டது. நடந்த அனைத்தையும் பார்த்து விட்டு கதறி அழுதது. தன்னுடைய குருவிற்கு ஏற்பட்ட இரத்த காயத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தது. அப்போது அக்குழந்தைக்கு சுமார் பன்னிரண்டு வயது ஆகியிருந்தது. அவன் மகராஜ் அவர்களின் முன்னால் தன் கைகள் தொழுது, "மகராஜ் தாங்கள் மிகச் சிறந்த பக்திமான் மற்றும் கருணை நிறைந்தவர்! நீங்கள் இறைவனிடம் அதிகமான வரங்களை வாங்கி வந்துள்ளீர்கள்! இருப்பினும் இந்த ஏழைக் குழந்தையால்தான் தாங்கள் இத்தகைய துன்பத்தை தாங்க நேர்ந்தது? இதற்குக் காரணம் நானே ஆவேன்! அதனால் இப்பொழுதாவது என்னை உங்கள் பார்வையிலிருந்து விலக்கி, இந்த இடம் விட்டு துரத்திவிடுங்கள்! சஜ்ஜனகடாவின் சமர்த்த இராமதாஸ ஸ்வாமிகள் தன்னுடைய சீடர்களின் ஒருவனை, கல்யாண் என்ற தன்னுடைய இடத்திலிருந்து தோமாகா என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார். காரணம் மற்ற சீடர்களின் பொறாமையே ஆகும்! அதே போன்று தாங்கள் இச்சிறுவனையும் எங்கேயாவது அனுப்பி விடுங்கள்" என்று மன்றாடி வேண்டினான் அச்சிறுவன்!

மகராஜ் பொறுமையுடன், "மகனே நான் இன்றும் இப்புவியில் வாழப்போவது ஒரு சில மணி நேரங்கள் மட்டுமே! எனக்கு மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது! அது இந்த செங்கல்லின் ரூபத்தில் வந்துவிட்டது! நான் என்னிடத்தில் உள்ள அனைத்தும்

NOT FOR SALE

உனக்கு தரும்வரை சேலு கிராமத்தை நோக்கி செல்லப் போவதில்லை. அப்போதுதான் நீயாரென்பது இந்த முட்டாள்களுக்குத் தெரியவரும்! உன்னுடைய ஆற்றலை இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! ஆகையால் எனக்கு சமயம் மிகக் குறைவாக உள்ளதால் இப்போது நான் கூறுவதைக் கேள்!"

அதோ பார். அந்த கிராமத்திற்குச் செல்! அங்கு ஒரு ஆதிவாசி செங்கல் நிறத்தில் ஒரு பசுவை வைத்திருப்பான்! அவனிடம் சென்று எனக்கு சிறிதளவு பால் வேண்டும் என்று கேட்டு வாங்கி வா! நீயே அந்த பசுவின் பாலைக் கறந்து எடுத்துக்கொண்டு வா! அந்தப் பாலை குடித்தால் என் உடல்வலி குறைந்து நலமாவேன்.

ஆனால் சமயம் தாழ்த்தி வராதே! சென்ற உடனே இங்கு திரும்ப வேண்டும்! என்று கூறியவுடன், சிறுவன், மகராஜ் அவர்களின் கட்டளையை ஏற்றுக்கொண்டு, உடனே அக்கிராமத்தை நோக்கி ஓடினான். அவர் கூறிய ஆதிவாசியையும், பசுவையும் கண்டான். அவன் பணிவோடு ஆதிவாசியிடம் "ஐயா தயை கூர்ந்து இந்த பசுவின் பாலை சிறிதளவு கறந்து எனக்குத் தாருங்கள்! என் குருநாதர் உடல் நலக்குறைவினால் துன்புற்று இருக்கிறார்" என்றான். அவன் கூறியதைக் கேட்ட ஆதிவாசி மிகவும் ஆச்சரியமடைந்தான். அவனுடைய பெயர் அஹுல்லா என்பதாகும். அவன் அச்சிறுவனிடம் "என்ன இந்தப் பசுவிடம் இருந்தா? உன் குருநாதர் பால் கறந்து எடுத்துவரும்படி கேட்டார். இப்பசு மலட்டுத்தன்மை அடைந்து பல வருடங்கள் ஆகிவிட்டது! இப்பசுவை நான் எனது நிலத்தில் விவசாய காரியத்திற்காக பயன்படுத்திக் கொண்டு இருக்கிறேன்!" என்றான். அது மட்டுமல்லாமல் அவன் உடனே விரைந்து அப்பசுவை கட்டி இழுத்துக்கொண்டு அச்சிறுவன் காட்டிய இடத்தில் குருநாதர் மகராஜ்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அவர்களை தரிசித்தான். அவரிடம் "ஸ்வாமி என்னை மனித்து விடுங்கள்! இப்பசு மலட்டுத் தன்மையுடையது. பதினைந்து வருடங்களாக இது எனக்கு பால் தரவில்லை! இப்பசுவால் இனி எந்தப் பலனும் இல்லை ஸ்வாமி!" நான் உண்மையை மட்டுமே உரைக்கிறேன்! என்பதை உங்களுக்கு நிரூபிக்கவே, இப்பசுவை இவ்விடம் அழைத்து வந்தேன்! என்றார்.

தன் தலையில் பலமாக அடிப்பட்ட நிலையிலும் மகராஜ் பொறுமையாக அவன் கூறுவதைக் கேட்டு, "நீ ஒரு முட்டாள், உனக்கு இந்தப்பசுவின் சாமர்த்தியம் புரியவில்லை! இப்பசு இதனுடைய பாலை, பதினைந்து வருடங்களாக மறைத்து வைத்துள்ள கதை உனக்குத் தெரியுமா? ஒரு பாத்திரத்தைக் கொடு! நானே பாலைக் கறந்து கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு பாத்திரத்தை பசுவின் மடியில் வைத்து மகராஜ் தன்னுடைய புனிதமான கைகளால் அப்பசுவின் பின்பக்கத்தை தொட்டார். அவ்வளவுதான் அங்கு நடந்த அற்புதத்தை வருணிக்க வார்த்தைகளே இல்லை! பதினைந்து வருடங்களாக மலடான அப்பசு மிகவும் சுவையான, கெட்டியான பாலைப் பொழிந்து, அதனால் அப்பாத்திரம் நிறைந்து வழிந்தோடியது.

NOT FOR SALE

அந்தக் காட்சியைக் கண்ட ஆதிவாசி செயலிழந்து, பேச்சின்று, சொல்வதற்கு எதுவும் வார்த்தைகள் நாவிலிருந்து வராமல், அப்படியே அசையாமல் நின்று கொண்டு இருந்தான். அப்பாத்திரத்திலுள்ள பாலை மகராஜ் தன் கைகளால் தொட்டு அச்சிறுவனுக்கு வழங்கினார். "இப்பொழுது நீ இப்பாலை முழுவதும் குடித்துவிடு!" பின்னர் உடனே விரைந்து இந்த இடத்தைவிட்டு புறப்படு! இந்த பக்கம் உள்ள எந்த கிராமங்களுக்கும் செல்லாதே! மேற்குப் பகுதியை நோக்கி செல்வாயாக! அங்கு காணப்படும் புனித கோதாவரி நதிக்கு தென்புறமாக செல்வாயாக!

நினைவிருக்கட்டும்! முதலில் இங்கிருந்து விரைந்து புறப்பட வேண்டும்! என்று கூறி, தன் தலையில் உள்ள கட்டை அவிழ்த்து அச்சிறுவனின் தலையைச் சுற்றிக் கட்டினார்.

அவர் அச்சிறுவனிடம் "நான் உனக்கு அளித்த இந்த சிறு துணி உனக்கு பெரும் பெயரையும் புகழையும் அளிக்கவல்லது!" இதை நன்றாக நினைவில் கொள்வாயாக! அம்மலட்டுப் பசுவிலிருந்து நான் உனக்களித்த மூன்று குவளை அளவு பாலானது கர்மா, பக்தி மற்றும் ஞானம் ஆகும்! நீ குடித்த அந்தப் பாலில் புனித மந்திரங்களை எழுதியுள்ளேன்! இந்நிகழ்விற்கு பின்னர் மெய்ஞானத்தை நீ அடைவாய்! என்றார். அச்சிறுவன் மகராஜ் அவர்கள் முன் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு, அப்பாலைப் பருகினான்! என்ன அற்புதம் பாலைப் பருகியதும் முன்னர் அவன் கண்ட உலகம் முழுவதையும், தற்போது வித்யாசமாக உணர்ந்தான். அச்சிறுவன் பிரம்ம நிலையை அடைந்திருந்தான்.

இதுவே குருவின் திருவருளாகும். மகராஜ் அச்சிறுவனை தனது மார்போடு அணைத்துக் கொண்டார். அவர் "மகனே நீ உனது முற்பிறவியில் கபீர்தாஸராக இருந்தாய்! இப்பிறவியில் இந்த உடலை பெற்றுள்ளாய்! நீ உனது முற்பிறவியில் உனது அக வாழ்வைத் துறந்து, பிரம்மச்சாரியான வாழ்வைத் தேர்ந்தெடுத்தாய்! மகனே! இந்த உலகையும், இறைவனையும் வேறு என்று கருதாதே! எப்போதும் உன் மனதில் இறைவனை மட்டுமே நினைத்துக்கொண்டிரு! நீ எப்போதும் பேரானந்தத்தில் திளைப்பாய்! நான் முற்பிறவியில் ஸ்ரீராமானந்தராகப் பிறந்தேன்!

ஆகையால் முற்பிறவியில் நான் உனக்கு குருவாவேன்! அப்போது நாம் இருவரும்காசியில் இருந்தோம்! நான் என்னுடைய இப்பிறவியில் சந்யாச வாழ்க்கையை தேர்ந்தெடுத்த காரணம் நீயே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆவாய்? உனது முற்பிறவி முழுவதும் தியாகத்திலேயே கழித்தாய்! முற்பிறவியில் கபீர் என்ற பெயரில் மிகச்சிறந்த சூஃபி (SUFI) பாடகராகவும், கவிஞராகவும் இருந்தாய்! இனி இப்பிறவியில் நீ எப்போதும் அமைதியாகவே இரு! சில சமயங்களில் தேவைப்பட்டால் சுருக்கமாக உரையாற்று! நீ ஞானத்தைத் தேடி பல இடங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. நீ அமர்ந்திருந்த இடத்திலேயே, உன்னை முழுமையாக சரணடைவோர்களுக்கு முக்தி நிலையை வழங்குவாயாக!

"நான் இப்போது சேலு கிராமத்திற்கு சென்று சமாதி நிலையை அடையப்போகிறேன்! இவ்வுலகில் நான் அவதரித்த உத்தேசம் இத்துடன் நிறைவு பெறுகிறது!" அவர் இவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, மறைந்திருந்து யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அவரது பணியாட்கள் ஓடி வந்து அவரது காலில் விழுந்தனர். அவர் "இப்பொழுது ஏன் வெட்கத்தால் உங்கள் அனைவரின் தலையும் கவிழ்ந்து இருக்கின்றது?" என்று கேட்டவுடன் அவர்கள் அனைவரும் கதறி அழுதனர். "மகராஜ் நாங்கள் மிகப் பெரிய பாவிகள்! எத்தகைய பாவத்தைத் தங்களுக்கு இழைத்துவிட்டோம்! எங்களுடன் கூட வந்த வயதில் சிறிய ஒரு பணியாள் எங்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அச்செங்கல்லை தூக்கி எறிந்தான்! ஆனால் அவன் உடனே இறந்து விட்டான்! தவறு எங்களுடையதே! தயை கூர்ந்து அவனுக்கு உயிர் அளிக்க வேண்டுகின்றோம்! ப்ரபு! தயை கூர்ந்து அவனை மன்னியுங்கள்! இதைக்கேட்ட மகராஜ் தன் இரு கைகளையும் விரித்து, "இப்பொழுது என்னிடத்தில் எந்த சக்தியும் இல்லை! நீங்கள் செங்கல் எறிந்து கொல்ல நினைத்த இச்சிறுவனிடம் தற்போது எல்லாச் சக்திகளும் நிறைந்துள்ளன! உங்களுக்கு அவசியமெனில் இச்சிறுவனிடம் கையேந்தி பிச்சை கேளுங்கள்!" என்றாள் மகராஜ்.

தங்களுடைய தவறை உணர்ந்து கொண்ட அவர்கள் உடனடியாக அச்சிறுவனின் முன்னால் மண்டியிட்டனர். "ஓ சிறுவனே உங்களின் பெயர் தெரியாததால் நாங்கள் உங்களை பாபா என்று அழைக்கின்றோம்! பாபாவே! நீங்கள் நிறைந்த முழுமதிப் போன்ற அறிவனை உடையவர். எங்களுடைய கோரிக்கையை தயை கூர்ந்து நிறைவேற்றுவீராக! எங்களுடன் இங்கு வந்த இந்த இளைஞனை கருணையோடு மன்னித்து உயிர் பிச்சை வழங்குவீர்களாக!" பாபா என்று என்று அழைக்கப்பட்ட அச்சிறுவன் அவர்களின் கோரிக்கையைக் கேட்டதும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் போல மகராஜ் அவர்களை நோக்கினான்!

மகராஜ் அவனுடைய நெற்றியில் ஒரு குறியிட்டு, இறந்த அந்த இளைஞருக்கு உயிர் அளிக்குமாறு கூறினார். அவர் அனைவரிடமும் ஒரு உறுதி வாக்கினைத் தெரிவித்தார்.

இங்கு என்னைச் சுற்றி இருப்பவர்களின் முன்னிலையில் நான் இந்த வாக்கினை உறுதி செய்கின்றேன்! இந்த விநாடி முதல் இச்சிறுவன் எனது மகனாவான்! இனியும் என்னுடைய பணியைத் தொடர்ந்து புரிவான்! என்னுடைய சார்பாக இவன் காரியங்களை ஆற்றுவான்! இதைக் கேட்ட அச்சிறுவன் உடனே தன் குருவான மகராஜ் அவர்களின் காலடியில் இருந்து சிறிது மண்ணை எடுத்து, அவரை வேண்டி, இறந்தவனின் நெற்றில் இட்டான்.

என்ன அற்புதம்! அத்தனை நேரமாக அங்கு இறந்து கிடந்த உடல், உயிர்பெற்று ஏதோ தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல எழுந்து உட்கார்ந்து விட்டான்! அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அனைவரும் அச்சிறுவனின் மகிமையை உணர்ந்து கொண்டனர். அவர்கள் குருவையும் அவரது சிஷ்யரான மகத்துவம் நிறைந்த பாலகனையும் தங்களின் சிரசின் மேல் சுமந்து கொண்டு அங்கிருந்து சேலு கிராமம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அடுத்த நாள் ஏகாதசி தினத்தன்று குரு மகராஜ் அனைவரையும் அழைத்து தனது சரீரத்தை விட்டுச் செல்வதற்குச் சமயம் நெருங்கியதாக கூறினார். அவர் "எனக்கு ப்ரியமானவர்களே நான் இப்போது வைகுந்தம் செல்ல வேண்டிய சமயம் வந்துவிட்டது. நான் ஸ்ரீஹரியிடம் செல்லும் வேளையில் ஒரு அத்தி மரம் இந்த இடத்தில் வளர இருக்கிறது! அம்மரத்தின் அடியில் ஐந்து அடி ஆழம் தோண்டினால், அங்கு சாம்பல் நிறத்தில் ஒரு மூர்த்தி வெளிப்படும்! அத்திருவுருவம் நான்கு தோள்களைக் கொண்ட ஸ்ரீவேங்கடேஸ்வரரே ஆவார்! அந்த திருவுருவத்தை அங்கேயே நீங்கள் ப்ரதிஷ்டை செய்ய வேண்டும்! அதற்கு மேல் ஒரு ஆலயம் எழுப்ப வேண்டும்! என்னுடைய சமாதி அந்த ஆலயத்தை நோக்கிய வண்ணமே இருக்க வேண்டும்! எனக்காக மற்றொரு சமாதியை கட்ட வேண்டாம்! இவ்வாறு கூறிய மகராஜ் தான் தன்னுடைய ப்ராணனை நீத்த பிறகு கூட தம் ஆராத்யநாதனாகிய ஸ்ரீவேங்கடேச பெருமானை நோக்கிய வண்ணம் சமாதியில் அமர கோரிக்கை விடுத்து அனைவரையும் அழைத்து அவரவர் புரிய வேண்டிய கடமைகளை எடுத்துரைத்தார்.

NOT FOR SALE

அதன் பின்னர் அவர் நீராடி வந்து காயத்ரி ஜபம் செய்தார். பகவத் கீதையை சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்தார். அவர் அனைவரையும் தனது அருகில் அழைத்து ஸ்ரீமன் நாராயணனின் திருநாமத்தை தொடர்ந்து உச்சரிக்கக் கூறினார். அனைவரும் ஸ்ரீமன் நாராயண நாமம் உச்சரிக்கத் துவங்கினர். மகராஜ் அவர்களின் கருணையான பார்வை அங்கே சற்று தொலைவில் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்த, அவரது சிஷ்யரான அந்த பாலகனை நோக்கிச் சென்றது. சிறிது நேரம் அப்பாலகனை நோக்கிவிட்டு உடனடியாக தன்னுடைய மேலாடையை கழற்றி அப்பாலகரிடம் எறிந்தார். அதை அப்பாலகனை அணிந்து கொள்ளச் செய்தார். அவரிடம் தான் விடை பெறுவதற்கான நேரம்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


வந்து விட்டது என்பதை உணர்த்தினார்.

மகராஜ் உரத்த குரலில்

ஜெய ஜெய நாராயண ஸ்ரீ ஹரி
ஹே வேங்கடேசா! புட்டானஹரி!
பாஹிமாம்! பாஹிமாம்' முரளி!

என்ற இத்திருமந்திரத்தை மூன்று முறை கூறியவுடன், அவரின் ஆத்மா சரீரத்தை விட்டுச் சென்று வைகுண்டத்தை அடைந்தது. அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தும் அவர் கூறியவாறே நடந்தேறியது. அனைவரும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு ஆலயம் எழுப்பினர். மிகவும் பிரம்மாண்டமான முறையில் அவ்வூர் மக்கள் திரண்டு வந்து ஆலயத்தில் மூர்த்தியின் உருவத்தை ப்ரதிஷ்டை செய்தனர்.

அந்த பக்கிரியான இளம் பாலகர் தனது குரு இறக்கும் தருவாயில் தமக்களித்ததை, தன் மேலாடையாக அணிந்து கொண்டார். அவர் தமக்குக் கட்டளையிட்டவாறு, அவர் கூறிய திசையை நோக்கி தம் பயணத்தைத் துவங்கினார். அவ்வாறு துவங்கிய அப்பயணம், இறுதியாக ஷீரடி என்ற கிராமத்தை அலங்கரித்து பின்னாளில் உலகமே போற்றிய அப்பாலகர் வேறு யாருமல்ல! சத்குரு ஸ்ரீ சாய்நாத் மகராஜ் அவர்களே ஆவார். பாபாவின் வருகை மற்றும் அங்கிருந்து புறப்பட்ட தகவல், அனைத்தும் சேலு கிராமத்தில், மகராஜ் ஸ்ரீ கோபால்ராவ் தேஷ்முக் அவர்களின் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்த ஸ்ரீசீனிவாசராவ் எடுத்துரைத்தார். சேலுவைச் சுற்றியுள்ள அனைத்து கிராமவாசிகளும், ஒவ்வொரு வருடமும் மகராஜ் கோபால்ராவ் தேஷ்முக் அவர்களின், மகாசமாதிக்கு வருகை தருவது இன்றளவும் வழக்கமாக இருந்து வருகின்றது. அது மட்டுமல்லாமல் அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் அந்த ஆலயத்திற்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வருகைதந்து, மகராஜ் அவர்களின் அனுக்ரஹம் பெற்றுச் செல்வது வழக்கம்.

மகராஜ் ஸ்ரீகோபால்ராவ் தேஷ்முக் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட மாபெரும் மகானாகிய பாபாவின் பாதங்களை பணிந்து வணங்குகின்றேன்! திருப்பதிக்கு செல்ல இயலாதவர் களும், சேலு கிராமத்திற்கு வருகை தந்தால் ஸ்ரீவேங்கடேச பெருமானின் முழுமையான ஆசீர்வாதத்தையும் அனுக்கிரஹத்தையும் பெற இயலும்!

தாஸ்கணுவாகிய நான் இந்த "பக்தி சாரஅம்ருத்" என்ற புனித நூலில் இருந்து தொகுத்து வழங்கிய கருத்துக்களை பக்தியுடன் பாராயணம் செய்தவர்கள் தங்களின் வாழ்வில் பேரானந்தத்தையும், முக்தி நிலையையும் அடைவார்கள் என்பது சத்குருவின் வாக்காகும். இந்த நூல் ஹரி என்று அழைக்கப்படும் ஸ்ரீமகாவிஷ்ணுவிற்கும், ஹரன் என்று சொல்லும் ஸ்ரீமகாதேவருக்கும் சமர்ப்பிக்கின்றேன்! தன் பக்தர்களுடைய துயரங்கள் அனைத்தையும் நீக்கி அவர்கள் இறைவனின் ஆசீர்வாதத்தை பெறுவார்கள் என்பது இறைவனின் சங்கல்பமாகும்.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE



## அத்தியாயம் - 6

முதன்மைக் கடவுளான ஸ்ரீகணேசரே உம்மை போற்றுகின்றேன்! முடிவில்லாத பரப்பிரம்மமே! மூலாதார மூர்த்தியே! முழு முதற்கடவுளே! மற்ற தெய்வங்களை துதிக்கும் பக்தர்களையும் விடாது, ஆட்டி வைக்கும் மாயை என்பது உன் பக்தர்களை ஒன்றும் செய்ய இயலாமல் பணிந்து விடுகின்றது.

ஓ பாண்டுரங்கா! எல்லா புகழும் உன்னதாகவே ஆகட்டும்! இப்பிரபஞ்சத்தின் தலைவனான உன்னை எல்லா வேதசாஸ்திரங்களும் போற்றிப் பாடுகின்றன! ஆதிநாயகனே! உன்னால் இயலாத காரியம் இவ்வுலகில் எதுவுமே இல்லை! வேதங்கள் உன்னை பிரம்மமாகக் கருதுகின்றன. இஸ்லாமியர்கள் உன்னை அல்லா இலாஹியாக நினைத்துப் போற்றுகின்றனர். ஜைனர்கள் உன்னை அரிஹந்தாகப் போற்றுகின்றனர்! உன்னுடைய அவதார நோக்கமே எல்லா உயிர்களுக்கும் முக்தி அளிப்பதற்காகவே ஆகும். உன் அடியவர்களின் வேண்டு கோளுக்கு இணங்கி ஒற்றைச் செங்கல்லின் மேல் நின் கொண்டு, அவர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தாய்!

ஓ பாண்டுரங்கா! பண்டரிநாதா! இந்த பக்தன் உன் திருவடிகளை சரணடைந்து என்னைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறேன். உன்னிடம் பணிவுள்ள பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை தந்தருள்பவரே! சாதுவான குணமுடையவர்களுக்கு, பலஹீனம் அடைந்தவர்களுக்கும் நீ உற்ற தோழனாக ஆறுதல் அளித்து அவர்களை காப்பாற்றுபவன் ஆவாய்! இவ்வுலக வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கும் கஷ்டங்களிலிருந்து எம்மைக் காத்து அருள்வாய்!

சாய் குருசரித்திரத்தை பக்தியுடன் படித்துக் கொண்டிருக்கும் பக்தர்களின் பாதம் பணிந்து, பாபாவின் லீலைகளையும்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகிமைகளையும் கேட்டு வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன்!

எவர் ஒருவரின் பெயரைக் கேட்டாலே நம் பாவங்கள் அனைத்திலுமிருந்து முக்தி பெறுவோமோ அந்த மகாத்மா, ஒப்பில்லா கருணைக் கடல், ஸ்ரீ சாய் பாபாவின் மகிமைகளைக் கேட்போம்!

மகாத்மாக்களின் சரித்திரம் எப்போதும் உன்னத ஆற்றல் உடையதும், புனிதமானதும் ஆகும். அத்தகைய சரித்திரத்தைப் படிப்பவரை வைகுந்தத்திற்கு, எவ்விதத் தடையுமின்றி நேரடியாக நம்மை அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றதாகும். மகான்களின் பெயரை நம் செவிகளில் கேட்கும்பொழுதே அது நம்மை அறியாமலேயே நம்மை உண்மையான பாதையில் அழைத்துச் செல்லும்!

அத்தகைய ஒரு மகான் ஷீரடிக்கு வருகை தந்துள்ளார்! அவர் அந்த கிராமத்தில் பிறந்தாரா? அவர் பிறந்த இடம் யாது? அவர் எங்கிருந்து ஷீரடிக்கு வருகைதந்து அப்பிரதேசத்தை புனிதமாக்கினார்! அவருடைய பூர்வீகம் யாது? என்பதையெல்லாம் எடுத்துரைக்க இந்த சாதாரண அடியேனால் எவ்வாறு இயலும்?

NOT FOR SALE

ஸ்ரீ சாய்பாபா என்ற மகாத்மா, சுகர், வசிஷ்டர் மற்றும் ஜைமினி போன்ற ரிஷிகளுக்கு இணையானவர். நாம் முன்னரே கண்டவாறு, இம்மகான் தம்முடைய குருவின் உத்தரவிற்கு கீழ்படிந்து 'சேலு' என்ற கிராமத்தை விட்டு, மேற்கு முகமாக தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தார்! அவ்வாறு தொடங்கிய அப்பயணம் ஔரங்காபாத் என்ற இடத்தில் வந்தடைந்தது. அப்பிரதேசத்தில் அமைந்த ஒரு பெரிய காடு, இம்மகானை மிகவும் கவர்ந்தது. தன்னை மிகவும் கவர்ந்த அந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் தங்குவதற்கு விரும்பினார். அப்பிரதேசத்தில் முன்னர்

யாதவ அரசர்களால் ஆளப்பட்ட இடமாகும். அவ்விடம் தௌலதாபாத் (தேவகிரி) என்று அழைக்கப்படும் இடத்திற்கு மிக அருகில் அமைந்திருந்தது.

அவ்விடத்தில் தான், ஸ்ரீ ஏக்நாத் மகராஜ் அவர்களின் குருவான ஸ்ரீ ஜனார்தன ஸ்வாமி வாழ்ந்தார். ஸ்ரீ சாய்பாபா மாபெரும் ரிஷிகளைப் போன்ற அச்சிறு வயதிலேயே, அந்த அடர்ந்தக் காட்டுப் பிரதேசத்தில் தனியாக ஏகாந்தமாக அமர்ந்து கொண்டிருந்தார். அவ்விடத்தில் இரவும், பகலும் தியானம் செய்து பேரானந்த நிலையில் மூழ்கியிருந்தார். ப்ரம்மத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பு வேறு எவருக்குமே சாத்தியமாகாத ஒன்றாகும். இடைவிடாது பல மாதங்கள் அத்தகைய பரவச நிலையில் மூழ்கி இருந்தார்!

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் சந்துபாய் என்ற ஒரு வணிகன், அப்பிரதேசத்தில் காணாமல் போன தன்னுடைய குதிரையைத் தேடிக் கொண்டு வந்தார். அவ்விடத்தில் தனியாக அமர்ந்து கொண்டு தியானத்தில் இருந்த ஸ்ரீ சாய் பாபாவை பார்த்தவுடன், ஒரு இனம் புரியாத பக்தி உணர்வு அவரை ஆட்கொண்டது. வயதில் சிறியவராகத் தோன்றும் இவர் இத்தகைய அடர்ந்த கானகத்தில், புலன்களை அடக்கி தவம் இருக்கும் ரிஷிகளுக்கு இணையானவர்! இவர் ஒரு சாமான்ய மனிதராக இருக்கவே இயலாது! இவர் யார் தேவதையா! ரிஷியா! அல்லது மந்திரவாதியா!

ஏன் இத்தகைய காட்டுப்பகுதியில், மனித சஞ்சாரமே இல்லாத இந்த இடத்தில், கொடிய விலங்குகள் நடமாடும் ஆபத்தான பகுதியில், ஆனந்தமாக அமர்ந்து கொண்டு, தவ நிலையில் இருக்கிறார்! இக்காட்சியைக் காணும் என் கண்களின் முன்னால் இவ்வாறு அமர்ந்து கொண்டிருக்கும் இவர் யார்? நான்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இப்போது என்ன செய்ய வேண்டும்? இவரால் எனக்கு ஏதாவது துன்பம் நேருமா? நான் இங்கிருந்து ஓடிவிட வேண்டுமா? அல்லது என் மனம் கவர்ந்த குதிரையை தேட வேண்டுமா? நான் என்ன செய்வேன்?. இத்தகைய மன எண்ணங்களால் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தார் சந்துபாய் என்ற வணிகர்! அவர் மனதில் நாம் இங்கிருந்து எப்படியாவது தப்பி ஓடி விட வேண்டும் என்று நினைத்து ஓடுவதற்கு தயாரானார்! அவர் சிறிது தூரம் சென்று கொண்டிருக்கும் போது! ஒரு குரல் அவர்கள் செவிகளில் பலமாக ஒலித்தது! அவர் ஒரு விநாடி நின்று திரும்பி, அக்குரல் வந்த திசையில் பார்த்தார்! அது நம் சத்குரு ஸ்ரீ சாய் பாபாவின் தெயவீகமான குரலாகும்.

ஸ்ரீ சாய்பாபா, அன்பு சகோதரா! நான் சாத்தானோ அல்லது தீய சக்தியோ அல்ல! தேவதையும் அல்ல! நான் ஒரு ஏழை பக்கிரி ஆவேன்! பயங்கொள்ளத் தேவையில்லை! உன் மனதில் எந்த சந்தேகத்திற்கும் இடம் அளிக்காதே! இங்கே வா! நீ மிகவும் சோர்ந்து போய் இருக்கிறாய்! சிறிது நேரம் ஹூக்கா பிடித்து உன் சோர்வைப் போக்கிக் கொள்! பிறகு நீ செல்லலாம் என்றார்! அவர், மெதுவாக பாபாவின் அருகில் வந்து சற்று விலகி அமர்ந்து கொண்டார். பாபா சில்லிம் என்ற புகைக் குழாயை, புகைப்பதற்காக தயார் செய்தார். சந்துபாய் புகைக் குழாயில் புகைப் பொருளை நிரப்பி, பாபாவின் கையில் அளித்தார். அவர் பாபாவிடம் மகராஜ் நான் புகைப் பொருளைக் குழாயில் அடைந்து விட்டேன்! ஆனால் நெருப்புக்கு எங்கே செல்வது? என்று கேட்டார். பஞ்ச பூதங்களையும் கட்டுப்பத்தும் வல்லவர் நம் சாய் சாய் மகராஜ் என்பதை அப்போது அவர் அறியவில்லை.!

சந்துபாய் மேலும் பாபாவிடம், ஓ மகராஜ்! நான் தீ மூட்டக்கூடிய குச்சிகளை எனது வீட்டிலேயே வைத்து விட்டேன்!

NOT FOR SALE

இப்போது நாம் என்ன செய்வது என்றார். சந்துபாயின் இப்பேச்சைக் கேட்டதும் உரக்கச் சிரித்தார் பாபா. அவர் சந்துபாயிடம் "ஓ சந்துபாய்! உனது கண்களும், புத்தியும் இவ்வுலக இச்சைகளில் ஈடுபட்டதால், செய்வதறியாது செயலிழந்து தவிக்கின்றது!" அக்னி என்ற பஞ்ச பூதங்களில் ஒன்றான சக்திவாய்ந்த தேவதையானவன்! இந்த ப்ரபஞ்சம் அனைத்திற்கும் அடிப்படையான ஆதாரமானவன்! அக்னி இவ்வுலகம் முழுவதையும் சூழ்ந்து உள்ள ஒன்றாகும்! தீயின் நாக்கு ஒரு விநாடியில் உலகம் முழுவதையும் ஆக்கிரமிக்கும் சக்தியை உடையது! அத்தகைய நெருப்புக்காக நீ ஏன் கவலைப்படுகிறாய்?

பாபா தன்னுடைய லீலைகளைத் துவங்கினார். தன் சட்காவால் (கைத்தடி) தரையில் சிறிது தோண்டியவுடன், என்ன அற்புதம்! ஒரு நெருப்புத் துண்டு பூமியிலிருந்து மேலே எழுந்து வந்தது. பாபா அதை எடுத்து சில்லிம் குழாயை பற்ற வைத்தார். புகைக் குழாய் நன்றாக பற்ற வைக்கப்பட்டவுடன், அந்த நெருப்புத் துண்டை மீண்டும் மண்ணில் சேர்த்துவிட்டார். இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சந்துபாய் அதிர்ச்சியில் உறைந்து போய் கூறுவதற்கு வார்த்தைகள் எதுவுமின்றி, பாபாவையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உடனே இத்தகைய மகானை காண்பதற்கு, நான் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்து, அவருடைய பாதங்களில் தன் தலையை வைத்து வணங்கினார். அவர், பாபாவிடம், ஓ மகராஜ்! நீர் அற்புத ஆற்றல் உடையவர் நீங்கள் தெய்வத்தின் அவதாரமாகத் தான் இருக்க முடியும்! என்னுடைய முன் ஜென்ம வினையின் பலனாகவே நான் தங்களை தரிசிக்கும் பாக்யம் பெற்றேன்!

நான் நான்கு நாட்களாக உண்ண உணவின்றி, என்னுடைய குதிரையைத் தேடி இவ்விடத்தில் அலைந்து கொண்டிருக்கிறேன்! காணாமல் போன அக்குதிரையின் மேல்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நான் மிகவும் அன்பு கொண்டுள்ளேன்! அக்குதிரையை நான் துருக்கியில் இருந்து வாங்கி வந்தேன்! மிகவும் அன்பான, சாதுவான அக்குதிரை, இக்காட்டில் எங்கோ தொலைந்துவிட்டது. என் மனம் கவர்ந்த குதிரை காணாமல் போனதால் எனக்கு உணவு எந்த சுவையும் அளிக்கவில்லை! மனம் மிகவும் சோர்ந்து போய் விட்டேன்!

ஓ மகராஜா! தங்களை தரிசித்தவுடன், என் சோர்வு நீங்கியதாக உணர்ந்து கொண்டேன்! என்று வேதனையுடன் கூறினார். பாபா மிகவும் அன்புடன், சந்துபாய், இதற்காக ஏன் மனம் வருந்தமுற்று அலைகிறாய்? இப்போது, உடனே நீ சென்று அப்பக்கம் இருக்கும் அடர்ந்த மரங்களின் நடுவில் தேடுவாயாக! அங்கு உன் குதிரை மிகவும் பத்திரமாக ஒரு குறையுமின்றி புல்லை மேய்ந்து கொண்டிருக்கிறது என்றார்!

NOT FOR SALE

இந்த மனிதர்களின் குணங்கள், மிகவும் விசித்திரமானதாக உள்ளது. அவர்கள் எப்போதும் உலகப்பொருட்கள் மீதே மிகுந்த மோகம் கொண்டு, அவற்றின் பின் சென்று கொண்டிருப்பதையே தங்களுடைய தலையாய பணி என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். தங்களின் குழந்தையைக் காணவில்லை என்றாலோ, அல்லது தன் வீடு கொள்ளையடிக்கப்பட்டது என்றாலோ துக்கம் பீறிட்டு அழுது புலம்புகிறார்கள்!

கீழே சிந்திய பாலுக்காக அழுது என்ன பயன்? ஓ பைத்தியக்கார மனிதரே! எங்கும் நிறைந்திருக்கும் மாயையின் விளையாட்டைப் பார்த்தாயா! எப்போதும் படைத்தவனை நினைவில் கொள்! அல்லா இலாஹி எல்லோரையும் இரட்சித்து காப்பார்! இறைவன் இவ்வுலகில் மகிழ்ச்சிகளுக்கெல்லாம் மொத்த குத்தகை வியாபாரி ஆவார்! அவரே உண்மை! சத்தியம்! நிரந்தரம்! அவரைத் தேடுவதில் நீ முயற்சி எடுக்காவிட்டால் இவ்வுலகத்தில்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வலியும், வேதனைகளும், லாபமும், நஷ்டமும் தொடர்ந்து ஏற்பட்டு அக்கவலை உன்னை மன நிறைவோடு இருக்கச் செய்யாது!

சந்தோஷத்தின் அருமையை உணரவேண்டுமானால் வலியின் துக்கத்தை அனுபவித்தே ஆக வேண்டும். கொளுத்தும் வெயில் காலத்தில் உலவிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, நல்ல மழை பெய்யும்போது அது தேனைவிட இனிமையானதாகத் தோன்றும்! காணாமல் போன ஒரு குதிரைக்காகப் பல நாட்களாக அழுது புலம்பும் நீ, உன்னைக் எப்போதும் காப்பாற்றிக் கொண்டிருக்கும் இறைவனை ஒரு கணமாவது நினைத்துப் பார்த்தாயா? உன்னுடைய செய்கையைப் பற்றி சிறிது சிந்தித்துப்பார்? எல்லாம் வல்ல இறைவனுக்கு குறைவாக மதிப்பளித்து, சிறிது நாட்களில் அழியப்போகும் ஒரு குதிரைக்கு மிக உயர்ந்த மதிப்பளிக்கின்றாய்!

இவற்றையெல்லாம் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்த சந்துபாய் "மகராஜ் நீங்கள் எல்லா ஞானத்திற்கும் உறைவிடம் ஆவீர்! கல்வி அறிவற்ற ஒரு ஏழைக்கு எவ்வாறு இத்தகைய விஷயங்கள் புரியும்?" என்று கூறிவிட்டு, அப்புதரில் தனது ப்ரியமான குதிரையைக் கண்டதும் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார். அவர் அதனருகே சென்று, அதை பத்திரமாகப் பிடித்துக் கொண்டு வந்தார்! அக்குதிரையை பல நாட்களாகத் தேடி கண்டடைந்ததால், சந்துபாயின் ஆனந்தத்திற்கு ஒரு அளவே இல்லை.

அவர் அக்குதிரையை அழைத்துக் கொண்டு பாபாவிடம் வந்தார். பாபாவிடம் பணிந்து, தம் குதிரையில் அமர்ந்து கொண்டு தன்னுடைய இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். "என்னுடைய வீட்டில் உள்ள பெரியோர்களையும், உறவினர்களையும் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்!" என்று வேண்டினான்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபா புன்னகைத்து, "நான் யாரென்று உனக்கு தெரியுமா! நான் ஒரு ஏழைப்பக்கிரி ஆவேன்! உன்னுடைய குதிரையையும் வண்டியையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்! என்றார். நாளையோ அல்லது நாளை மறுநாளோ நான் உனது இல்லத்திற்கு வருகிறேன்! ஆனால் இன்று என்னை வற்புறுத்தாதே!" என்றவுடன் சந்துபாய் மகிழ்ந்து பாபாவின் பாதங்களில் பணிந்து வணிங்கிவிட்டு, தன் குதிரை தன்னிடம் வந்து சேர்ந்ததை நினைத்து உற்சாகமாக அக்குதிரையில் ஏறி தன் இல்லம் சென்று சேர்ந்தார்.

சந்துபாயின் இல்லத்தில் அவருடைய உறவினர்களும் நண்பர்களும், அவர் காணாமல் போன குதிரையோடு வந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அவர்கள் அனைவரும் "இது எவ்வாறு சாத்தியமாயிற்று? வெகு நாட்களுக்கு முன்னால் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் காணாமல் போன குதிரையை நீ எவ்வாறு கண்டு கொண்டாய்?" என்று சந்துபாயிடம் வினவினர். சந்துபாய் "நான் ஒரு அவுலியாவைக் கண்டேன்! (அவுலியா என்ற சொல் இஸ்லாமிய மதத்தில் மகான் என்பதன் பொருளைக் குறிக்கும்) அவரிடம் அற்புதமான சக்திகள் நிறைய உள்ளன! அவருடைய கருணையால் எனக்கு என் குதிரை கிடைத்து விட்டது! அதுமட்டுமல்ல! அவர் நெருப்புக்கு உத்தரவிடுபவர்! தனது சட்காவால் தரையை அடித்து நெருப்புத் துண்டத்தை வரவழைத்தார்! அவருடைய முகத்தில் காணப்பட்ட பிரகாசத்தை என்னால் வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க இயலாது! அவர் நாளை நம் இல்லத்திற்கு வருவதாக எனக்கு வாக்களித்துள்ளார். இன்று அல்லாவின் கருணையால் எனக்கு அந்த மாபெரும் அவுலியாவின் தரிசனமும், ஆசீர்வாதமும் கிடைத்தது என்று பாபாவின் பெருமைகள் பற்றி, சந்துபாய் கூறியதும் அங்கிருந்த அனைவரும் இப்படி ஒரு அவுலியா இருக்கிறாரா என்று வியப்பில் ஆழ்ந்தனர்.

NOT FOR SALE

அடுத்த நாள் தாம் வாக்களித்தபடியே சந்துபாயின் இல்லத்திற்கு பாபா சென்றார். அது தூப்கேடா (Dhupkeda) என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. அந்தக் கிராமவாசிகள் அனைவரும் பாபாவைக் காண ஆவலுடன் வந்து அவரின் தரிசனம் பெற்றனர். அவர்கள் மிகவும் ஆச்சர்யமடைந்து இவர் யார்? இந்துவா! இஸ்லாமியரா! என்று நினைத்து விவாதித்துக் கொண்டனர். அவர்களில் ஒரு சிலர் இந்துவாகவும், பலர் இஸ்லாமியர்களாகவும் இருந்ததால் அவரவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பாபா காட்சி அளித்தார். அதுவே அவர்களின் வியப்பிற்கு காரணமாகும். அவரைக் காண வந்த இந்துக்கள் அவர் ஒரு சித்தர்! யோகி என்று அழைத்தனர். அவரைக் காண வந்த இஸ்லாமியர் அவரை தங்கள் அவுலியா என்று நினைத்தனர். ஆனால் அனைவருக்கும் பாபா ப்ரியமானவராக விளங்கினார்.

பாபா எவ்வாறு ஷீரடிக்கு வந்தார் என்பதை நாம் இப்போது காணலாம்! சந்துபாயின் மனைவியின் சகோதரனுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மணப்பெண் ஷீரடியைச் சேர்ந்தவர், ஆதலால் சந்துபாயும், அவரது உறவினர்களும், பாபாவை தம்முடன் ஷீரடிக்கு வருமாறு அழைத்தனர். இந்நிகழ்வு ஏற்கனவே பாபாவால் தீர்மானிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். பாபாவின் ஷீரடி வருகை ஒரு மகத்துவமான பணியை உத்தேசித்ததே என்ற கருத்தை இப்போது நாம் அனைவரும் அறிவோம். அன்று ஷீரடி வந்த பாபா அதன் பிறகு, தனது மகா சமாதி நிலை ஏற்படும் வரை, ஷீரடியை விட்டுவிட்டு வேறு எங்குமே செல்லவில்லை! அது இறைவனால் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். பாபா கல்யாண கோஷ்டியுடன் ஷீரடியில் காலடி எடுத்து வைத்த நேரம், அக்கிராமம் மும்மூர்த்திகளால் ஆசீர்வதிக்கப்பட்டது. ஷீரடி சாயி என்ற கிருஷ்ணரை தன்னகத்தே கொண்டதால், ஷீரடியும் கோகுலத்திற்கு இணையானதாகும். எவ்வாறு ஸ்ரீஆஞ்சநேயர், அக்னியால்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இலங்கையை புனிதமாக்கினார். அவ்வாறே பாபாவின் வருகையால் ஷீரடி என்ற சிறிய கிராமத்திற்கு, உலகம் முழுவதிலும் இருந்து புனித யாத்திரையாக மக்கள் இன்றளவும் வருகை தந்து கொண்டுள்ளனர்.

பாபா, ஷீரடியில் அக்கிராமத்தின் எல்லையைக் காத்து நிற்கும் கண்டோபா என்ற காவல் தெய்வத்தின் ஆலயத்தில், முதன் முதலாக தம் திருவடிகளை எடுத்து வைத்தார். அப்பொழுது சிறந்த பக்தரும், பல தலைமுறையிலும் பாபாவுடன் தொடர்பு கொண்ட அடியவரான மஹல்சாபதி என்று அழைக்கப்படும் எளிமையான, தூய உள்ளம் கொண்ட பக்தரே, முதன் முதலாகப் பாபாவை "வாருங்கள் சாயி" என்று அழைத்தார். அச்சந்திப்பிற்கு முன்னால் பாபாவை அவர் ஒரு இஸ்லாமியராக கருதியதால், ஆலயத்திற்குள் வருவதை தடுத்துவிட்டார். அவ்வப்பொழுது சாயி பாபா அவரிடம் "மஹல்சாபதி, சர்வசக்தி வாய்ந்த இறைவன் ஒருவனே! இந்த இரண்டு வகைப்பட்ட மனிதர்களையும் படைத்தவன். இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என்ற பெயர்கள் மட்டுமே மனிதர்கள் வைத்துக்கொண்டதாகும். இதுவே சத்தியம். இறைவனுடைய படைப்பில் எல்லோரும் ஒன்றே! பக்தி மார்க்கத்தில் தீவிர உபாசனை செய்பவர்கள், ஒரு போதும் மதங்களுக்கு பெரிய அளவில் மகத்துவம் அளிக்கமாட்டார்கள்! அவர்கள் மதத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களை பிரித்துப் பார்க்க மாட்டார்கள்!"

பிற மதங்களைச் சேர்ந்தவரிடத்தில் நாம் சகிப்புத் தன்மையோடு பழக வேண்டும்! ஒருபோதும் வெறுப்பையும் வித்தியாசத்தையும் வெளிப்படுத்தக் கூடாது! மஹல்சாபதி, உன்னை நீயே சீர்திருத்திக்கொள்! எல்லோரையும் படைத்த இறைவனை ஒருவனாகவே காண்பாய்! அவரே அல்லா இலாஹி மற்றும் அவரே மகா விஷ்ணு! கண்டோபா ஒருவரே என்பதையும் அவரே எல்லா உயிர்களையும் காத்து அருள்கிறார் என்பதையும்

NOT FOR SALE

நன்றாக உணர்ந்து கொள்! இந்த சத்தியத்தை உணர்ந்தவர்கள் ஒருபோதும் மதங்களையும் மனிதர்களையும் வேறுபடுத்தி காணமாட்டார்கள். இவ்வுலகில் ஆலயங்களும், மசூதிகளும் நிறைய இருந்தாலும் அவற்றை ஒன்றாகக் கருதும் உயர்ந்த சிந்தனை ஒரு சிலருக்கே உள்ளது.

இறைவன் எந்த ஆலயத்தையும், எந்த மசூதியையும் நிர்மாணிக்கவில்லை! ஆனால் ஆலயங்களும் மசூதிகளும் உன்னை இறைவனை நோக்கி அழைத்துச் செல்வதற்காகவே கட்டப்பட்டுள்ளன என்பதை நீ மறக்கக் கூடாது! நான் உனக்கு தொல்லை அளிப்பதற்காக இங்கு வரவில்லை.

உன்னுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறேன்! ஆகையால் தொலைவில் நின்று கொண்ட கண்டோபாவை தரிசனம் செய்கிறேன்! பரப்பிரம்மத்தின் வடிவமான சாயி பாபா இவ்வாறு கூறிய வார்த்தைகள் மஹல்சாபதிக்கு மட்டுமல்ல, மதங்களை காரணம் காட்டி மனிதர்களை துன்புறுத்தும் அனைவருக்காகவும் தான் என்பதை நாம் உணர வேண்டும்.

பாபா மேலும் மஹல்சாபதியிடம் "நான் உனக்கு ஒரு உண்மைக் கதையை கூற விரும்புகிறேன்! தாழ்ந்த குலம் என்று கருதப்பட்ட ஒரு குலத்தில் பிறந்தவரே சோகா மேலோ என்ற ஹரிபக்தர் ஆவார்! ஆனால் அவர் உயர் குலம் என்று கருதப்படும் அந்தண குலத்தைக் காட்டிலும் நூறு மடங்கு உயர்ந்தவர். உயர்ந்த குலத்தவர் என்பதன் பொருள் தெரியுமா உனக்கு? இறைவனின் தாமரைத்திருவடிகளை அடைவதற்காக, இரவும் பகலும் தூய அன்புடன், நல்ல உள்ளத்தோடு, பிரார்த்தனை செய்பவர்கள் அனைவருமே உயர் குலத்தவர் ஆவார்கள்!"

அத்தகைய தூய குணங்கள் அற்றவர்கள் உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும், அவர்கள் தாழ்ச்சியுற்றவர்களே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆவார்கள்! உள்ளம் தூய்மையாக இருந்தால் மட்டுமே கண்களால் காணும் யாவுமே தூய்மையாகத் தெரியும்!

இத்தகைய அமுத மொழிகளை சத்குரு பாபாவின் மூலம் கேட்கும் பாக்கியம் பெற்ற மஹல்சாபதி, பேரானந்தம் அடைந்தார். அவர் உடனடியாக, பாபாவின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்தார். "ஓ சாயி! நீங்கள் உண்மையான ஞானத்தின் திறவுகோல்! நான் என்னுடைய பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியமே தற்போது தங்களை தரிசிக்கும் பாக்கியத்தை அளித்தது! பாபா தயை கூர்ந்து ஷீரடியை விட்டு எங்கும் செல்லாதீர்கள்! தாங்கள் இங்கேயே இருந்து அனைவருக்கும் நல்வழி காட்டுங்கள் என்று மஹல்சாபதி வேண்டினார்! பாபாவும் அதற்குச் சம்மதித்தார். பாபா மசூதியில் பல ஆண்டு காலம் தங்கியிருந்தார். பல மணிநேரம் வேப்ப மரத்தடியின் கீழ் தனியாக அமர்ந்து கொண்டு இருப்பார்."

NOT FOR SALE

துனி (Dhuni) என்று அழைக்கப்படும் முப்பத்தி முக்கோடி தேவர்களின் இருப்பிடமான, அக்னியை ஆவாஹனம் செய்து தன் உள்ளங்கையை காதுகளின் மேல் வைத்துக்கொண்டு கால்களை மடக்கி, கைமுட்டியை அதன்மேல் வைத்துக்கொண்டு, கண்களை பாதி மூடியும், ஆனந்தமாக கருணையே உருவான தாயின் வடிவில் த்வாரகாமாயி என்ற ரூபத்தில் அவர் வீற்றிருக்கும் அழகை வார்த்தைகளால் வருணிக்க இயலாது. இக்கோலத்தில் பல மணிநேரங்கள் தொடர்ந்து பாபா அமர்ந்திருப்பதும் உண்டு. தம்மைச்சுற்றி என்ன நடந்தாலும், தமது சிந்தனை சிறிதும் சிதைந்துவிடாமல், ஏகாந்த வைராக்கிய நிலையைப் பெற்றிருந்தார் பாபா. அது அத்தகைய எளிதான செயலன்று. எப்போதும் ஆத்மாவில் இறைவனோடு தொடர்பு கொண்டிருந்தார். ஒரு நாளைக்கு ஐந்து வீடுகளுக்கு மட்டுமே உணவுக்காக கையேந்தி செல்வார்! அவர் வாமன், சாகாராம், கணபதி, குமார், தாதியாபே, நந்து மற்றும் சஹஸ்ரநாம் அவர்களின் இல்லங்களுக்குச் சென்று

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யாசகம் கேட்பதை பல மாதங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார். இது எத்தகைய பாக்கியம்! மேற்கூறியவர்கள் அனைவரும் பூர்வ ஜென்மத்தில் மிகுந்த புண்ணியங்கள் செய்தவர்கள்! இல்லை எனில் இத்தகைய மாபெரும் மகானுக்கு உணவளிக்கும் பாக்கியம் வேறு எவருக்கு கிட்டும்!

ஒரு நாள் பாபா, தன் தர்பாரில் அமர்ந்திருந்த போது தேவிதாஸ் என்ற பக்தர் பாபாவிடம் உலகப் பொருட்களின் மீது பற்று அற்ற தன்மையை அறிவுறுத்த வேண்டினார். பாபா சிரித்துக் கொண்டே அவரிடம் "பற்றின்மை என்ற சொல்லின் பொருளே மிகவும் கடினமானது. முதலில் பெண்களைக் குறித்த சிந்தனைகளை கைவிட வேண்டும்! ஏனெனில் அது எல்லாவற்றிலும் ஆபத்தானது" என்றார். அற்கு உதாரணமாக, பிரம்மரிஷியான விஸ்வாமித்திரரை உதாரணம் காட்டினார். அவர் தேவிதாஸிடம் "மாபெரும் தவம் செய்த ரிஷியான விஸ்வாமித்திரர் அவர்களின் நிலை என்ன என்பதை நீ அறிவாயா?"

அவருக்கு தேவலோகத்து பெண்ணிடம் ஏற்பட்ட ஒரு சிறிய மயக்கம் பல ஆண்டுகளாக செய்து வந்த, அவரது தவத்தையே கலைத்துவிட்டது! ஒருவன் குடும்பத்தில் உள்ள பற்றை களைந்து ஒருவேளை வெளியூருக்கு ஓடிவிட்டாலும், எங்கிருந்தாலும் தன்னுடைய உள்ளத்தில் ஆசைகளை சுமந்து கொண்டிருந்தால், அவன் எப்படி பற்றற்ற நிலையை அடைய இயலும்? தர்மத்தை அவன் ஆற்றியே ஆகவேண்டும். புலனடக்கத்துடன் வாழக் கற்றுக் கொண்டால் தாம் இருக்கும் இடத்திலேயே இறைவனின் தரிசனம் பெற முடியும்! பற்றைக் களைந்து விட்டவர்கள் போல நடிக்கும் சிலர், உண்மையாகவே பற்று அற்றவர்களாக ஆக இயலாது. பல வழிகளை நோக்கிச் செல்லும் மனதை உள்நோக்கி திருப்பி ஆத்மாவின் இறை தரிசனம் பெறுவதற்கு மனக்கட்டுப்பாடும்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தியானமும் அவசியமாகும்! தான் என்னும் கர்வம் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும்!

**புனித வேப்ப மரம்**

பாபா நெடுங்காலமாக புனித வேப்ப மரத்தடியில் எவ்வாறு அமர்ந்து கொண்டிருந்தார் என்பதை பற்றிக் காண்போம்! இக்கதை நிச்சயம் நமக்கு முக்தி நிலையை அளிக்கவல்லது. அவருடைய இல்லத்திற்கு திரையோ, சுவரோ எதுவுமே இருந்ததில்லை. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளுமே அவர் இல்லத்தின் நான்கு சுவர்கள் ஆகும்.

வேப்பமரத்தில் இருந்து கீழே உதிர்ந்துவிழும் இலைகளே அவர் அமர்ந்திருக்கும் ஆசனமாகும். அரசர் பர்த்ருஹரி என்பவர், ஆழ்மனத்தின் சிந்தனையில் எப்போதும் இருப்பவர்களுக்கு, ஆசைகள் எதுவுமே இருக்க இயலாது என்றார். அதுபோன்றே நம் சாயிநாதரும், அவர் அவதரித்த காரணமே இவ்வுலகை காப்பாற்றவே ஆகும். இந்த உலக உயிர்கள் யாவும் அவருடைய உலகமாகும்.

பாபாவின் குடும்பம் இந்த இயற்கையே ஆகும். அக்குடும்பம் முழுவதும் பலவகையான இயற்கையின் ரூபங்களில் அமைந்துள்ளன. அவை வடிவமே நம் கண்களுக்குத் தெரியாது. ஆகையால் அறிவுக்கண் திறந்து யோசிக்கும் பொழுது பாபா தனிமையாக இருக்கிறார் என்று கூறவே இயலாது! தைரியம் என்பதே அவரது தந்தையாகும்! மன்னிக்கும் கருணை அவருடைய அன்னையாகும்! எத்தகைய சூழ்நிலையிலும் அவர் காக்கும் அமைதியே அவரது துணைவியாகும்! அன்பே அவரது சகோதரியாகும். நேர்மையான சிந்தனை அவரது சகோதரர்! இந்த பூமியே அவரது படுக்கை அறையாகும்! எப்போதும் ஆத்மாவில் பரவச நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், தம்மை நாடிவரும் அடியவர்களின் துயர்களைப் போக்க ஒரு நாளும் அவர்

NOT FOR SALE

தவறியதில்லை. கௌதம புத்தரைப் போல அவர் எப்போதும் தியானத்தில் இருந்தாலும் கண்கள் விழித்த நிலையிலேயே, அவரது புலன்கள் தம் பக்தர்களைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டே இருக்கும்! பற்றற்ற நிலையை அவர் அடைந்திருந்தாலும், பற்றுள்ள மனிதர்களுக்காக அவர் தன்னையே வருத்திக் கொள்ளும் கருணை, வேறு எங்குமே காண இயலாது?

கடுமையான குளிரிலும், மழையிலும் அவர் வேப்ப மரத்தடியில் அமர்ந்திருந்த போதும், நாலா புறங்களிலும் வீசும் காற்றே அவரது போர்வையாக இருந்தது. அக்காற்றுப் போர்வையில் காணப்படும் அலங்கார வேலைப்பாடுகள், ஆகாய நட்சத்திரங்களைக் கொண்டு செய்யப்பட்டதாகும்! பிரம்மம் என்ற ஞானமாகிய தேனை அவர் பருகியபடியே இருந்தார்!

ஞானமும், பற்றற்ற நிலையும் அவர் வீட்டிற்குள் எடுத்து வைக்கும் இரண்டு அடிகளாகும். ஞானம் என்ற உறைவாளை இடையிலும், அன்பு என்ற போர்வையை தோள்களிலும் சுமந்து கொண்டிருந்த பாபாவின் இல்லமே, மோட்சத்திற்கு வழிகாட்டும்.

பாபாவை தரிசிக்க வருகை தந்தவர்கள் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் அல்லது ஒன்றுமே இல்லாத ஆண்டியாக இருந்தாலும் அவர் முன்னர் எந்த வேறுபாடும் இன்றி, கைகள் தொழுது நின்று கொண்டிருக்கும் காட்சியை, காண்பதற்காகவே அனைவரும் ஷீரடிக்கு வருகை தரவேண்டும்! அவருடைய தர்பாரில் அவர் சக்ரவர்த்தி ஆவார். யோகிகளுக்கெல்லாம் யோகீஸ்வரரானவர் நம் சாய் மகராஜ் ஆவார். சாயி என்ற இத்தகைய சக்ரவர்த்தியின் பெயரை கூறினால் மட்டுமே பயம் என்பதும், ஆடம்பரம் என்பதும் நாம் அறியாமலேயே நம்மைவிட்டு ஓடிவிடும்.

எவ்வாறு சூரியனின் கதிர்கள் பட்டவுடன் அறியாமை என்ற இருள் விலகி ஓடுவதைப் போல, பாபச் செயல்களும், தீய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எண்ணங்களும் அருகில் கூட வராது. உள்ளத்தில் தீய எண்ணங்களைச் சுமந்து கொண்டு, வெளியில் தூய்மையான எண்ணம் கொண்டவராக, போலியாக நடிக்கும் தன்மையும், நம் மகராஜ் அவர்களின் அருகில் கூட நெருங்க இயலாது. தமது முன்னால் நிற்பவர் எவராக இருந்தாலும், அவர் மனதின் எண்ணங்களைத் துல்லியமாக படிக்கும் ஆற்றல் உடையவர் நம் சாயி ஆவார். ஆகையால் தீய எண்ணங்களை மனதில் தேக்கி வைத்துக்கொண்டு எவரும் ஷீரடிக்கு வந்து தரிசனம் பெற இயலாது. அவை சிங்கத்தைக் கண்டவுடன் நாய்கள் பயந்து ஓடுவதைப் போல ஓடிவிடும்.

மனிதர்களை ஆட்டிப்படைக்கும் ஆறு பகைவர்களாக காமம், கோபம், பேராசை, மாயை, கர்வம், பொறாமை போன்றவை பவித்திரமான அக்னியின் முன்னர் நிற்க இயலாது. பணத்தின் மீது மோகம் கொண்டு, எவருக்கும் உதவாமல் கஞ்சத்தனமாக இருக்கும் குணம், வெட்கம் அறியாது, அடக்கமும் அறியாது. தம்முடைய இரும்புப் பெட்டியை பாதுகாப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும்! இத்தகைய தீய எண்ணங்களை மனதில் இருந்து அகற்றாமல் கண்டோபா ஆலயத்தில் தியானம் செய்ய நாம் அமர்ந்து கொண்டால், நம்முடன் சேர்ந்து இத்தீய எண்ணங்களும் அமர்ந்து கொள்ளும். அவை நம்மை ஒரு நொடிப்பொழுதும் தியானிக்க விடாது.

ஆனால் கண்டோபா, ஈசனுக்கு இணையாவார். அவர் இத்தகைய தீய எண்ணங்களை உதைத்து தள்ளிவிடுவார். மேற்கூறிய ஆறு பகைவர்களும், பாபாவின் நிழலைக் கூட தரிசிக்க முடியாது. பாபா அவற்றை மீண்டும் உயிர்த்து எழாதவாறு வேரோடு சாய்த்து விடுவார். பன்றிகள் தாம் வசிக்கும் இடத்தில் தூய்மையானவற்றை, வெறுத்து ஒதுக்கி, கழிவுகளை மட்டுமே

மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளும். ஆனால் பாபாவின் தர்பாரில் கழிவுகளைப் போன்ற தீய எண்ணங்களுடன் எவர் வரினும் அவர்களின் தீய எண்ணங்கள் அவரைவிட்டு நீண்ட தூரம் ஓடிவிடும்.

இதுவரை சாதுக்களில் சக்ரவர்த்தியாக விளங்கும் சாயி மகராஜ் அவர்களின் தர்பாரில், நல்ல எண்ணங்கள் கொண்டவர்கள் மட்டுமே அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற முடியும் என்பதைக் கண்டோம்! "சிவ லீலாம்ருத்" என்ற சிவ சரித்திரத்தில், அரசன் தஸரனாவின் பாவங்கள், சிவனின் திவ்ய தத்துவத்தின் மகிமையால் காகம் என்ற வடிவெடுத்து பறந்து விட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கைலாயத்தில் ஈசனின் திருவருளால் மன்னர் தஸரனா, தான் செய்த பாவங்களுடன் நுழைய முற்பட்ட போது, அவனுடைய பாவகர்மம் ஒரு காக்கையின் வடிவம் எடுத்து அவனை விட்டு நீங்கி பறந்து விட்டது என்று குறிப்பிட்டதன் மூலம் இறைவனின் சந்நிதானத்தில் மட்டுமே நம்முடைய பாவ மூட்டைகள் பொசுக்கப்படுகின்றன என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

சாயி குருசரித்திரத்தின் இந்த அத்தியாயத்தை படித்துக் கொண்டிருப்பவர்களின் பாவ கர்மங்களும், எவ்வாறு மன்னன் தஸரனாவின் பாவங்கள், காக்கை வடிவம் எடுத்து, அவனை விட்டு விலகி ஓடியதோ, அதைப்போன்று சாயி குருசரித்திரத்தின் இந்த அத்தியாயத்தை படித்துக் கொண்டிருக்கும் பக்தர்களின் பாவ கர்மங்களும், சாயி மகராஜ் அவர்களின் கருணையால் அவர்களை விட்டு விலகி ஓடிவிடும் என்ற வாக்குறுதியை சாயி தர்பாரில் தாஸ்கணுவாகிய நான், பக்தர்கள் அனைவருக்கும் அளிக்கின்றேன்! மற்றும் தாஸ்கணுவாகிய நான் ஒரு கல்வி அறிவற்ற சாதாரண ஒரு ஏழைப்பாடகன், ஆதலால் ஸ்ரீ சாயி மகராஜ் அவர்களின் பற்றற்ற தன்மையை விளக்குவதற்காக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

போதுமான வார்த்தைகள் என்னிடம் இல்லை! நேரில் காண்பதற்கு ஒரு ஏழை பக்கிரியைப் போன்று தோற்றம் அறிக்கும் சாயி மகராஜ் பிரம்மத்தின் முழுமையான தோற்றத்தின் வெளிப்பாடே ஆவார்.

## கங்காகீர் புவா

ஒரு வேளை நான் சாயி மகராஜ் அவர்களை, ஏழை பக்கிரி என்று, அவர் விரும்புவது போல அழைத்தால், அதுவும் சரியான கருத்து அல்ல! ஏனெனில், செல்வத்தின் கருவூலமான ஸ்ரீமஹாலெட்சுமி, ஸ்ரீசாயி நாதரின் இல்ல வாசலில் காத்துக்கொண்டு இருக்கிறார்! ஒருவேளை நான் அவரை செல்வந்தர் என்று அழைத்தால், அதுவும் சரியான கருத்து அல்ல! ஏனெனில் அவர் தினமும் தம் கைகள் நீட்டி யாசகம் பெற்றே உணவு உண்டார்!

ஒரு சமயம் சாயி மகராஜ் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்காக, அவ்வூர் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தார். இயற்கையோடு நம் மகராஜ் அவர்களுக்கு இருந்த உறவு மிகவும் போற்றத்தக்கது ஆகும்.

கங்காகீர் புவா ஒரு பெரிய சாது ஆவார். அவர் ஒரு உண்மையான சந்நியாசியும் ஆவார். "வார்கரி சம்ப்ரதாயம்" என்று சொல்லக்கூடிய பண்டரிபுரத்திற்கு ஊர்வலம் செல்லும் குழுவில் இடம் பெற்று இருந்தார். ஆனால் அவர் சைவ சம்ப்ரதாயத்தின்படி ருத்ராக்ஷ மாலைகளும் அணிந்திருந்தார். பொதுவாக வார்கரி என்ற சம்ரதாயத்தை சேர்ந்தவர்கள், தீவிர வைஷ்ணவத்தை ஆதரிக்கும் குழுவினர், ஆதலால் அவர்கள் ருத்ராக்ஷத்தை அணிய மாட்டார்கள். மற்றும் "தாஸபோதா" என்ற சமர்த்த ரமதாஸரின் நூலை அவர்கள் எவருமே படித்ததில்லை. ஆனால் கங்காகீர் புவா, மிகுந்த சகிப்புத்தன்மையைக் கொண்டிருந்தார்.

NOT FOR SALE

பாபா கூறியது போல கங்காகீர் புவா, அனைத்து மதங்களின் பிரதிநிதிகளையும் ஒருவராகவே காணும் ஞானத்தைப் பெற்று இருந்தார். அத்தகைய மகானாகிய கங்கா கீர்புவா, ஷீரடியைச் சேர்ந்த கிராமவாசிகளிடம் சத்குரு ஸ்ரீசாயி மகராஜ் அவர்களின் பெருமையை எடுத்துரைத்தார். அவர் மக்களிடம் "சாயி என்ற நவரத்தினமும் தங்களிடம் இருக்கும்போது, நீங்கள் ஏன் அவரை புரிந்து கொள்ளாமல் எல்லா இடங்களிலும் தேடி அலைகிறீர்கள்? தனது வீட்டில் தட்டு நிறைய பதார்த்தங்களையும், சுவை மிகுந்த இனிப்பு பண்டங்களையும் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவன் பிற வீடுகளில் நின்று கையேந்த வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? புனித மாதாவான கங்கா தேவியின் நதியை தரிசிக்கச் சென்ற ஒருவன் அதில் நீராடாமல் வருவானா? எவருக்கும் ஈடு இணை இல்லாத ஒப்பற்ற மாணிக்கமாகிய ஸ்ரீசாயி மகராஜ் இங்கே இருக்கிறார்! நீங்கள் இன்னும் இவரின் ஆசி பெறாமல் எல்லா தெருக்களிலும் சாதுக்களை தேடி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்!

நிறைந்த தெய்வீக ஆற்றலில் பரந்து விரிந்த ஆகாயத்திற்கு இணையாவார் நம் சாயி மகராஜ்! ஒளியென்னும் ஞானத்தால் சூரியனுக்கு ஒப்பாவார் நம் சாயி மகராஜ்! மலைகளில் இமயமலைக்கு நிகரானவர்! ஷீரடி வாழ் மக்களைக் காப்பாற்ற இங்கு வருகை தந்திருக்கும் இத்தெய்வம் பற்றி இதுவரை நீங்கள் யாரும் எவ்வாறு அறியாமல் இருந்தீர்கள்? மகராஜ் அவர்களின் வருகையால் ஷீரடி என்ற இக்கிராமம், உலகப் புகழ் பெற்று விளங்குகின்றது. இவர் நம்முடன் இருக்கும் வரையில் நம்மை ஒரு தீமையும் அணுகாது! ஆகையால் இவரை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டியது மக்களாகிய உங்கள் கடமை.

இவருக்கு செய்யும் சேவை மும்மூர்த்திகளுக்குச் செய்யும் சேவைக்கு நிகரானது. இவருக்குச் சேவை செய்யத்தவறியவர்கள் துன்பக்கடலில் மூழ்குவது நிச்சயமாகும்! இவ்வாறு கூறிவிட்டுக்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கங்காகீர் புவா, பாபாவின் மசூதிக்குச் சென்று அமர்ந்து கொண்டார். ஸ்ரீசாயிநாதரின் தரிசனம் பெற்ற கங்கா கீர்புவா மனம் முழுவதும் பேரானந்தம் கொண்டார். கங்கா கீர்புவா அவர்களுக்கும் நம் சத்குரு சாயிநாதருக்கும் ஏற்பட்ட சந்திப்பு, புனித கங்கை, கோதாவரி மாதாவுடன் இணைந்த சந்திப்பாகும். தேவர்களின் தலைவரான தேவேந்திரனும் செல்வத்தின் அதிபதியான குபேரனும் சந்திப்பதை போன்ற விசேஷமானதாகும்.

சாது கங்காகீர் புவா, மசூதியில் நுழைந்ததும் பாபா மகிழ்ந்து, இன்று தேவாலயம், மசூதிக்கு வந்திருக்கிறது! என்று கூறினார். கங்கா கீர்புவாவை சகல மரியாதைகளுடன் பாபா அழைத்தார். சாதுக்கள் இருவரும் அமர்ந்து தம் உரையாடலை துவங்கினர். பாபா அவரிடம் "நாம் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்! வைகுந்தத்தில் ஆனந்தமாக நம்மை தங்க வைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீஹரியின் குடும்பமே நம் குடும்பமாகும். நம்மை இவ்வுலகத்திற்கு அனுப்பி வைத்த ஸ்ரீஹரி, இங்குள்ளவர்களின் தவறான சிந்தனைகளையும், ஒழுக்கமற்ற செயல்களையும் எடுத்துக்கூறி இவர்களை திருத்தி நல்வழிப் படுத்துவதுதான் நமது பூலோக யாத்திரையின் நோக்கமாகும்" என்று நமக்கு அறிவித்துள்ளார்.

ஆனால் இம்மக்கள் தங்களை திருத்திக் கொள்ள மறுக்கின்றனர். தனி ஒருவனின் தவறான சிந்தனை, ஒரு சமூகத்தின் சிந்தனைகளையும் சீரழிக்கின்றன. அவன் தன்னுடைய தொற்று வியாதியை அனைவருக்கும் வாரி வழங்கி விடுகின்றான். பால்குன் என்று எழைக்கப்படும் பங்குனி மாதத்தில், சாவடியில் நடனம் ஆடுவதற்காக விலை மாதுக்களை, பக்தி என்ற பெயரில் அழைத்து வந்து, கச்சேரி செய்து, அக்காட்சியை ஒட்டுமொத்த கிராமமும் சேர்ந்து இரசிக்கின்றது! ஒரு குதிரை எவ்வாறு தன்னுடைய கடிவாளத்தை இழந்தால், தாறுமாறாக ஓட

NOT FOR SALE

ஆரம்பிக்குமோ, அதைப் போலவே இம்மக்களும் நடன மாதுக்களின் அழகை இரசிப்பதில், தங்களின் தலையாய கடமையாகக் கருதுகின்றனர். இக்காலக் கட்டங்களில் தம்முடைய கடமைகளைக் கூட இவர்கள் புறக்கணிக்கின்றனர். கண்கள் எத்தகைய காட்சியைக் காண நேரிட்டாலும், அக்காட்சி ஆத்மாவின் ஏகாந்தத்தைப் பாதிக்கக் கூடாது. பார்ப்பதற்கும், இரசிப்பதற்கும் வித்தியாசங்கள் நிறைய உள்ளன.

இத்தகைய செயல்களால் இறைவனைத் தேடும் தம்முடைய நோக்கத்தையே இவர்கள் மறந்துவிட்டனர்.

ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் இறைவனை மகிழ்விக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு உரத்தக் குரலில் பேசிக்கொண்டும், மது அருந்திக் கொண்டும், ஆபாச நடனங்கள் ஆடிக்கொண்டும், சிவப்பு நில குலால் பொடியை அனைவரின் கண்களிலும் தூவிக் கொண்டும் கொண்டாடுகின்றனர்! இச்செயல் ஒருபோதும் இறைவனை மகிழ்விக்காது!

இவர்களின் இந்த அறியாமையைப் போக்க, ஸ்ரீஹரி நம்மைப் போன்ற சாதுக்களின் தலையில், பால்குவளைகளைச் சுமந்து கொண்டு வந்து, இம்மக்களின் அறியாமை பற்றி எடுத்துரைத்து நாம் கொண்டு வந்த பாலைப் பருகச் செய்யுமாறு நமக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஆனால் என் தலையிலுள்ள பால் குவளையின் மேல் கற்களால் அடித்து, அக்குவளையை உடைக்க முற்படுகின்றனர். எனக்கு சித்தபிரமை ஏற்பட்டுள்ளதாக நினைத்து என்னைப்பார்த்து சிரிக்கின்றனர். சிலர் எனக்கு அன்பளிப்பை அளித்து விட்டு, என்னை கௌரவிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். மற்றும் ஒரு சிலர், விழாக்காலங்களில் போதை தரும் வஸ்துக்களை உண்டு, தங்களிடம் என்னுடைய ஆவி பேசுவதாகக் கூறி, மக்களை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நம்ப வைக்கின்றனர்! போதையால் அவர்கள் உளறுவதைக் கேட்டு மற்றவர்கள் அனைவரும் அப்போதைக்கு அடிமையாகின்றனர்! மற்றும் ஒரு சிலர் மூடத்தனமாமன வேதாந்தவாதிகளாக அலைகின்றனர்!

இவர்களும் ஒரு வகையில் வேதாந்தம் என்ற போதையில் தங்களின் நிலையை உணரத் தவறியவர்களே! இதில் ஒரு வியப்பு என்னவென்றால் திருவிழா என்ற பெயரில், போதை தரும் பானங்களை தயார் செய்து விட்டு, சாய்நாத் மகராஜ் அவர்களுக்கு ஜெய்! என்று சொல்லி என்னை சாட்சியாக வைத்து துர்ச் செயல்களை புரிகின்றனர்! நான் அவர்களுக்கு ஞானம் என்னும் பாலைத் தருவதற்காகவே இங்கு வந்துள்ளேன்! ஆனால் அவர்கள் என்னைக் காரணம் காட்டி, போதை தரும் பானங்களைப் பருகி எனது நோக்கத்தையே திசை திருப்புகின்றனர்! உண்மைக்கு எவ்வித மரியாதையும் இங்கு அளிக்கப்படுவதில்லை! பொய்களை மட்டுமே உண்மை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர்!

பாபாவின் இத்தகைய அமுத மொழிகளைக் கேள்வியுற்ற கங்காகிர் புவா "மகராஜ் என்னுடைய முயற்சிகளும், பலமுறை இவர்களிடம் தோல்வி அடைந்து விட்டன! இவர்களில் தப்பிப் பிழைத்த ஒரு சிலரையாவது, உண்மையான வழியில் அழைத்துச் செல்ல முயன்றும், அடியேனால் இயலவில்லை! இவர்கள் அனைவரும் ஒன்று கூடி என்னை பைத்தியக்காரன் என்று முடிவு செய்துள்ளனர்! இங்கு நடந்து கொண்டிருப்பதை தவிர்க்கவோ, தடுக்கவோ என்னால் இயலவில்லையே இதற்குக் காரணம் என்ன ஸ்வாமி!" என்று வருத்தமுற்று பாபாவிடம் கூற, பாபா "கவலைக் கொள்ளத் தேவையில்லை, எவருக்கு கர்மபலன் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றதோ அவர்களின் சிந்தனையில், எத்தகைய புத்திமதிகளும் கூறுவதற்கு வாய்ப்பே இல்லை! எவர்

NOT FOR SALE

சத்தியத்தை உணர விரும்புகின்றனரோ அவர்கள் நம்மைத் தேடி நிச்சயம் வருவார்கள்! அவ்வாறு நம்மை நாடி வருவோர்களுக்கு உதவி செய்வதே தர்மமாகும்" என்றார்.

சாதுக்கள் எப்போதும் தங்களைப் பற்றி சிந்திப்பதே இல்லை. மக்களை நல்வழிப்படுத்த எத்தகைய சோதனைகளையும் ஏற்றுக்கொள்கின்றனர். இத்தகைய சாதுக்களின் கூட்டுறவு ஒருவருக்கு ஏற்படுமானால் அவர்கள் வாழ்வில் மிக உயர்ந்த நிலையை அடைவது உறுதியாகும்.

சாது கங்காகிர் புவாவும், சத்குருசாய் மகராஜ் அவர்களும் நீண்ட நேரம் பொது நலனைக் குறித்த கருத்துக்களைப் பற்றி உரையாடினர். பாபா, கங்காகிர் புவாவிற்கு அன்புடன் விடை கொடுத்தார்.

கங்காகிர் புவா மனநிறைவுடன் பாபாவின் ஆசியைப் பெற்றுக் கொண்டு தன்னுடைய மார்க்கத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பணியைத் துவங்கினார்.

கங்கா கிர்புவா மசூதியைவிட்டு சென்ற பிறகு, பாபா அங்கு தனிமையில் அமர்ந்திருந்தார். பாபா, எப்பொழுதும் தன் அடியவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்த வேளையிலும், ஆத்மாவில் பிரம்மத்தோடு ஐக்கியமான நிலையில் இருப்பார். அவர் கங்காகிர் புவாவிடம் கூறிய, அனைத்தும் கலியுகத்தின் பிரபாவங்கள், அதாவது தற்போதைய சூழ்நிலை கலியுகத்தின் ஆரம்பத்தைக் குறிப்பதாகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். பங்குனி மாதத்தை கலியுகமாகவும், போதை தரும் வஸ்துக்களை தீய குணங்களுக்கும், உண்மையான ஞானத்தை குவளையில் நிரப்பப்பட்ட பாலுக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

பாபாவின் உபதேசங்களும், அறிவுரைகளும் வித்தியாச

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


மாகவும், தனித்தன்மை கொண்டதாகவும் விளங்கும். தாஸ்கணுவாகிய நான் அதை விளக்குவதற்கு தகுதியற்றவன் ஆவேன்! அது என்னுடைய ஞானத்திற்கு அப்பாற்பட்டதாகும்! சில சமயங்களில் பாபா சிலருடன் இயல்பாகச் சிரித்துக் கொண்டு உரையாடுவார். ஆனால் அதே உரையாடல், வேறு சிலரின் கேள்விகளுக்கும் விடையாக அமையும்.

பாபாவின் அற்புதத்தைப் பலரும் கூறியிருக்கிறார்கள். சிலர் தம்முடைய சந்தேகங்களை, பாபா தீர்த்து வைப்பாரா என்ற ஐயங்களுடன் அவர் முன்னால் நிற்கும் போது, மனதைப் படிக்கும் ஆற்றலுடைய நம் சாய் மகராஜ் அவர்கள் கேட்காமலேயே துல்லியமாக விடையளித்திருக்கிறார்.

NOT FOR SALE

பாபாவின் அணுகுமுறை மிகவும் நூதனமானது. தம்மைக் காண வந்தவர்களை ஒருபோதும் அவர் நிராசை அடையச் செய்தது இல்லை. மனம் நிறைய பாரங்களை சுமந்து கொண்டு வருபவர்கள், பாபாவை தரிசித்துவிட்டு செல்லும் வேளையில் தாம் கொண்டு வந்த பாவ மூட்டைகள் தம்மை விட்டு விலகியதையும், தம் மனம் காற்றில் மிதப்பது போன்ற உணர்வையும் அனுபவித்துள்ளனர்.

ஒரு சமயம் ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே ஸ்வாமிகள்) என்ற மாபெரும் மகான், கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள ராஜமஹேந்திரவரம் என்ற இடத்தில் தமது சாதுர்மாஸ்ய விரதத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்தார். அவர் ஒரு தலைசிறந்த தத்தாத்ரேய பக்தராவார். சமஸ்கிருதத்தில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். பல்வேறு அற்புதங்களை ஸ்ரீதத்தரின் கருணையால் அவர் நிகழ்த்தியுள்ளார். ஸ்ரீதேம்பே ஸ்வாமிகள் பாரத தேசம் முழுவதும் கால்நடையாகவே பயணம் செய்து தர்மத்தை எடுத்துரைத்து, அறநெறியை மக்களுக்கு

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

போதித்து வந்தார். அவர்தம் கால்களில் பாத அணிகளைக் கூட அணிய மாட்டார்.

நான்கு வேதங்களில் பழமையானதும், மிகவும் பிரசித்தி பெற்றதுமான ரிக்வேதம் அவர் வருகையால் புத்துயிர் பெற்றது. அவருடைய ஞானம் அளவில்லாத ஒன்றாகும். அவர் தன்னிலை அறிந்த மகான் ஆவார். ஸ்ரீதத்தரின் வாக்கிற்கிணங்க, அவதரித்த அவர் பிறவியிலேயே ஞானியாகத் திகழ்ந்தார். நாந்தேட் மற்றும் பல பகுதிகளில் இருந்தும் அவரை தரிசிக்க, ராஜ மகேந்திர வரத்திற்கு வந்திருந்தனர். தற்போதைய ராஜமுந்திரி என்று அழைக்கப்படும் பகுதி, முன்னொரு காலத்தில் ராஜ மகேந்திரவரம் என்று அழைக்கப்பட்டது. புனித கோதாவரி நதிக்கரையில் "தவலேஸ்வரம்" (Dhawaleswaram) என்ற பகுதியில் அந்நதியானது ஏழு ஓடைகளாக பிரிந்து வந்ததால் அவை சப்தமுகி என்று அழைக்கப்படுகின்றது.

ஏழு ஓடைகளும் ஏழு ஸ்வரங்களைப் போன்று அற்புதமான சங்கீத ஒலியை எழுப்பும் தன்மையைக் கொண்டன. அவற்றின் கரையில் பல்வேறு வகையான பறவைகள் பல பிரதேசங்களில் இருந்தும் வந்து பெரிய மரங்களில் கூடு கட்டி வாழ்கின்ற இடமாக விளங்கியது. இத்தகைய இயற்கையின் அழகோவியமாகத் திகழ்ந்த இந்நதிக் கரையில் நமாமி கங்கா என்று மந்திரங்களும் மற்றும் வேத கோஷங்களும், ப்ரார்த்தனைகளும் பண்டிதர்களால் நிகழ்த்தப்படுவது வழக்கமாகும்.

குறிப்பு : அச்சமயத்தில் புண்டலிகராவ் மற்றும் அவரது நண்பர்களுடன் ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதியை தரிசிக்க வந்திருந்தனர். (புண்டலிகராவ் என்பவர் வேறு யாருமல்ல, ஸ்ரீதாஸ்கணு மகராஜ் அவர்களின் இயற்பெயராகும். இந்நூலின் ஆசிரியர் தம்மைத்தாமே பெயரிட்டு அழைத்துக் கொள்வது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கர்வமான செயல் என்பதால் தமது இயற்பெயரை முன்னிறுத்தி நடந்த நிகழ்வை விவரிக்கிறார்).

ஸ்ரீதேம்பே ஸ்வாமிகளின் ஆசிர்வாதம் பெற்றவுடன் அவர் அனைவரின் நலனையும் குறித்து அன்புடன் விசாரித்தார். ஸ்ரீதேம்பே ஸ்வாமிகளுடன் நடந்த உரையாடலில் ஷீரடி என்ற பெயர் வந்ததும் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் மிகவும் உற்சாகமாக "என்னுடைய சகோதரர் பாபா வசிக்கும் புனித இடமாகும்" என்றார்.

"ஸ்ரீசாய் பாபா, முகம்மதியர் என்று நீங்கள் எல்லோரும் நினைத்தாலும், அவர் என் ப்ரியமான சகோதரர் ஆவார். என்னுடைய மூத்த சகோதரருக்கு என் வணக்கத்தைத் தெரிவியுங்கள்! நானும், நீங்களும் பிறப்பால் அந்தணர்களாக இருந்தாலும், இஸ்லாமியர்களும் நம்முடையவர்களே ஆவார்கள். நம்முடைய முன்னோர்களில் பல மகாத்மாக்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் அறிவுரையை கேட்டு நடந்தால், நமக்குள் பிரிவினை என்பது வீணான கற்பனையே" என்பதை நாம் உணர்ந்து கொள்வோம்!

உண்மையாகக் கூற வேண்டுமானால் நாம் எல்லோரும் ஒரே இனம் தான்! இப்பிரிவினைகள் யாவும் நம்மால் உருவாக்கப்பட்டதே ஆகும். வெளித்தோற்றத்தில் நம் கண்களுக்கு புலப்படுவபவை அனைத்தும் உண்மையல்ல! அவ்வாறு வெளித்தோற்றத்தை வைத்து மதப்பிரிவினைகளை தீர்மானிப்பவர்கள் ஒன்றும் அறியாத மூடர்கள் ஆவார்கள்!

இங்கு யாரும் ஸ்ரீசாய் பாபாவை என்னுடைய சகோதரர் என்று கூறுவதைக் கேட்டு ஆச்சரியப்படத் தேவையில்லை! நீங்கள் ஷீரடிக்குச் சென்று, அம்மகான் ஒரு இஸ்லாமியர் என்று நினைத்துக் கொண்டு, அவரை தரிசிக்காமல் வருவீர்களேயானால் என்னுடன் நட்புறவு கொள்ள வேண்டிய அவசியம் இல்லை!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உங்களை ஒரு உயர்ந்த அந்தணராக நினைத்துக் கொண்டு, அவரை வேறுபடுத்திப் பார்க்கும் எண்ணம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் என்னுடன் உரையாடுவதையும் நான் விரும்பவில்லை! இப்பொழுதே நீங்கள் புறப்பட்டுச் செல்லலாம்!

ஒரு மகானைப் பற்றிய உயர்வான எண்ணங்கள், மற்றொரு மகானுக்கு மட்டுமே ஏற்படக் காரணம்? நம் ஸ்ரீசாய் மகராஜ் அவர்களின் மகிமையை ஸ்ரீதேம்பே ஸ்வாமிகள் நன்கு உணர்ந்து கொண்டதே ஆகும். ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதி என்று அழைக்கப்படும் ஸ்ரீதேம்பே ஸ்வாமிகள் புண்டலீகராவை (அதாவது இத்திவ்ய சரித்திரத்தை எழுதிய ஸ்ரீ தாஸ்கணு) நோக்கி நான் சொல்வதை நீ ஏற்கிறாயா! என்று கேட்டார்.

புண்டலீகராவ் (ஸ்ரீதாஸ்கணு மகராஜ்) தன் இரு கைகளையும் கூப்பி, ஸ்ரீதேம்பே ஸ்வாமிகளிடம் "ஸ்வாமி! இந்த மாதத்திற்குள் நாங்கள் ஷீரடி செல்ல இருக்கிறோம்! நிச்சயமாக தாங்கள் கூறுவதை மனப்பூர்வமாக ஏற்கிறோம்! என்றார். ஸ்ரீதேம்பே ஸ்வாமிகள் மிகுந்த ஆனந்தம் கொண்டார்! அவர் மிக்க மகிழ்ச்சி, விரைவில் சென்று அம்மகானை தரிசித்து நமஸ்காரம் செய்வீர்களாக! நீங்கள் செல்லும் போது. என்னுடைய சார்பில் இத்தேங்காயை பாபாவின் கைகளில் சமர்ப்பித்து என்னுடைய சகோதரரிடம் என் பணிவான வணக்கத்தையும், என் அன்பையும் தெரிவிப்பீர்களாக!" என்று சொல்லி புண்டலீகராவின் கைகளில் ஒரு தேங்காயை ஸ்ரீதேம்பே ஸ்வாமிகள் அளித்தார்.

அவர் மேலும், "நான் ஒரு தீட்சை பெற்றுக் கொண்ட சந்நியாசியாதலால், மனிதர்கள் எவரையும் நமஸ்காரம் செய்யத் தேவையில்லை. ஆனால் பாபா இந்த விதிமுறைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் ஆவார். அவர் வெளித்தோற்றத்தில் ஒரு இஸ்லாமிய ஏழை பக்கிரியைப் போன்று தோன்றினாலும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உண்மையான ஞானியாவார்! அவரை வணங்குவதற்கு எந்த சம்ப்ரதாயமும் குறுக்கே நிற்க வேண்டிய அவசியம் இல்லை! இத்தகைய உணர்வான மொழிகளை, நம் சத்குரு ஸ்ரீசாய்நாத் மகராஜ் அவர்களைப் பற்றி கூறியதைக் கேட்டு மகிழ்ந்த புண்டலீகராவ் மற்றும் அவரது நண்பர்களும், ஸ்ரீதேம்பே ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றனர். அந்த மாத இறுதியில் அவர்கள் அனைவரும் ஷீரடி செல்வதற்காக மன்மாட் இரயில் நிலையம் இறங்கினார்கள்.

ஆனால் அங்கிருந்து கோபர்காவ் செல்லும் வண்டி, அன்று தாமதமாக வருவதாக தகவல் கிடைத்தது. அதனால் அவர்கள் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தில் உணவருந்தி விட்டு செல்வோம் என்று தீர்மானித்தனர். அவர்கள் இரயில் நிலையத்தின் அருகில் இருந்த கிணற்றின் அருகில் சென்று, தாங்கள் கொண்டு வந்திருந்த சிவ்டா (Chivda) என்று சொல்லப்படும் வறுத்த அவலை உண்டனர். அவ்வுணவில் மிளகாய் பொடி நிறைய கலந்துள்ள காரணத்தால், அவர்கள் கொண்டு வந்திருந்த சில தேங்காய்களை உடைத்தனர். அதிலிருந்து தேங்காய் துண்டுகளை வறுத்த அவலில் கலந்து உண்டனர்.

அப்போது, அவர்கள் அறியாமல் செய்த ஒரு தவறுக்காக, பின்னாளில் மிகுந்த மன வருத்தத்தை அடைய நேரிட்டது. அவர்கள் உடைத்த தேங்காய்களில் ஒன்று, ஸ்ரீதேம்பே ஸ்வாமிகளால், சத்குருசாய் மகராஜ் அவர்களுக்கு காணிக்கையாக அளிக்கப்பட்ட தேங்காயாகும்! அதை அவர்கள் அறியவில்லை. அனைவரும் கோபர்காவ் இரயில் நிலையத்தில் இருந்து மத்தியான நேரத்தில் ஷீரடியை சென்றடைந்தனர்.

அவர்கள் பாபாவின் தரிசனத்திற்காக காத்துக் கொண்டிருந்தனர். அப்போது பாபா, புண்டலீகராவ் என்று

NOT FOR SALE

அழைக்கப்படும் ஸ்ரீதாஸ்கணு அவர்களிடம் இது நியாயமா? எவரேனும் வாக்களித்தால் அவ்வாக்கை மீறுவது குற்றமில்லையா? என்னுடைய சகோதரன் வாசுதேவன் எனக்காக ஒரு தேங்காயை உன்னிடம் கொடுத்தனுப்பியுள்ளான்! நீ எவ்வாறு அதை மறந்தாய்? எனக்கு அளித்த தேங்காயைக் கொண்டு வா! என்றார்.

பாபா நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் அறிவார்! அவர் முக்காலங்களையும் உணர்ந்தவர். அத்தேங்காய் மன்மாடிலேயே உடைக்கப்பட்டதையும் அவர் நன்கு அறிவார்! அவர் புண்டலீகராவ் என்ற ஸ்ரீதாஸ்கணுவிடம் "உன்னுடைய அலட்சியப் போக்கினால் இன்று நீ என்னுடைய பொருளை தொலைத்து விட்டாய்! இத்தகைய கெட்ட பழக்கங்களை நீ கொண்டுள்ளதால் அத்தகைய பழக்கங்களின் காரணமாகவே இத்தவறு நடந்திருக்கின்றது!" பாபாவின் கோபாவேசத்தைக் கண்டதும் நடுங்கிய புண்டலீகராவ் (ஸ்ரீதாஸ்கணு) முகம் வெளிறி, வெட்கத்தால் பேச்சு வராமல் துக்கம் தொண்டையை அடைக்க, செய்வதறியாது தனது தலையை தாழ்த்தி பாபாவின் முன் மண்டியிட்டு அவரிடம் "மகராஜ் தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே! தங்களுக்காக அளிக்கப்பட்ட காணிக்கையை, நாங்கள் உபயோகப்படுத்தி விட்டோம்! இன்று ஒரு பெரிய பாவத்தை நான் தங்களுக்கு இழைத்தேன்! தேவாதி தேவா! தயை கூர்ந்து கருணையோடு என்னை மன்னியுங்கள்! நீங்கள் சம்மதித்தால் நான் மற்றொரு தேங்காயை இதற்குப் பதிலாக கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு புண்டலீகராவ் எழுந்து மற்றொரு தேங்காயை எடுத்துவர புறப்பட்டார்.

பாபா உடனே அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார். தம்மை நீண்ட தொலைவில் இருந்து தரிசிக்க வந்தவர், மனம் வருந்துவதை பாபா விரும்பவில்லை! அவர் எனக்கு வேறு தேங்காய் வேண்டாம்! அது என்னுடைய சகோதரன், எனக்காக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அன்புடன் அளித்த தேங்காய்க்கு இணையாகாது. வீட்டுக் கிணற்றில் இருந்து எடுக்கப்பட்ட சாதாரண தண்ணீரும், புனித கோதவரி நதி நீரும் எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும்? போகட்டும் விட்டுவிடுங்கள்! நடந்தது நடந்தவையாகவே இருக்கட்டும்! நீங்கள் அனைவரும் என்னுடைய குழந்தைகள் ஆவீர்கள்! நான் ஏன் தங்களிடம் கோபம் கொள்ள வேண்டும்? என்று அன்புடன் கூறினார். அனைவரும் இத்தகைய அன்பான வார்த்தைகளால் கண்ணீர் சிந்தி, பாபாவின் அன்புக்கு வேறு எதுவுமே ஈடு இணையாக இயலாது என்பதை பரிபூர்ணமாக உணர்ந்து கொண்டனர்.

இன்றைய நாட்களில் டெலிகிராப் (Telegraph) வசதிகள் இருக்கின்றன. அன்றைய பொழுதில் (1910) எவ்வித வசதிகளும் இல்லை. ஆனால் மகான்களுக்கு ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள எந்த விதமான கருவியும் தேவைப்படுவதில்லை. அவர்களின் தொடர்பு ஆத்மாவில் நிகழக் கூடிய ஒன்றாகும்.

இந்த சாய்குரு சரித்திரத்தை அன்புடனும், பக்தியுடனும் படித்துக் கொண்டிருக்கும் பக்தர்களே! மகான்களின் திருவுருவம் முழுவதும் அன்பினாலேயே உருவாக்கப்பட்டது! எவர் ஒருவருக்கு இதயத்தில் அன்பும், புத்தியில் ஞானமும் இல்லாமல், அவற்றை இருப்பதாக காண்பித்து நாடகம் ஆடுகிறார்களோ, அவர்கள் எல்லா தீய எண்ணங்களுக்கும் முழுமையான உரிமையாளர் ஆவார்கள்.

இறைவனை யாரும் கண்களால் காண இயலாது. அவருக்கு உருவமே இல்லை. ஆனால் நாம் கண்களால் பார்க்கக் கூடிய இறைவன் ஸ்ரீசாயிபாபா ஆவார். அவர் பேசும் தெய்வமாவார். சச்சிதானந்த நிலையை அடைந்த அவர் இறைவனின் அவதாரமாக, இப்புவியில் தோன்றி, தன் பக்தர்களை, பாவச் சூழலில் இருந்து காப்பாற்றி, அவர்களை சத்தியமான பாதைக்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அழைத்து செல்வதையே தமது சங்கல்பமாகக் கொண்டுள்ளார். சாயி அன்பின் திருவுருவமாவார்.

ஓ சாயி! ஓ சத்தியமான குருவே! ஓ மகராஜ், தாஸ்கணு தன்னுடைய இதயத்தில், எப்போதும் தங்களை நிறுத்திக் கொண்டிருப்பார். இச்சாயிகுரு சரித்திரத்தை பக்தியோடு பாராயணம் செய்தால், மகான்கள் அனைவரும் நம்முடைய வாழ்க்கையின் சரியான பாதையைக் காண்பித்து அதன் வழியே நாம் பின்பற்றவும் துணை நிற்பார்கள் என்பது உறுதியாகும்.

இந்த அத்தியாயம் ஸ்ரீஹரிஹரனுக்கு காணிக்கை ஆக்குகின்றேன். இந்த அத்தியாயம் பக்தி சாராம்ருத் (Bhakti Saraamrit) என்ற நூலின் 52வது அத்தியாயமாக, நம் சாயி மகராஜ் அவர்களின் லீலைகளை விவரித்துள்ளது. தாஸ்கணுவாகிய நான், சாயிநாதரின் பக்தர்களுக்கு எடுத்துச் செல்வதை என் கடமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE



நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# அத்தியாயம் - 7

முழுமுதற் கடவுளே! ஸ்ரீகணேசரே! உம்மைப் போற்றுகின்றேன்! நீரே மூலாதார மூர்த்தியாவீர் !

நீர் எவராலும் வெல்ல இயலாதவர்! எப்போதும் வெற்றியைத் தன்னகத்தே கொண்டவர்! பிரம்மத்துடன் பிரிக்க இயலாத அன்பிற்கு ஐக்கியமானவரே! உம்மைப் போற்றுகின்றேன்!

ஓ பண்டரிநாதா! பாண்டுரங்கா! நீயே பரிபூரண பரப்பிரம்மம் ஆவாய்! உன்னைப் போற்றுவதற்கு தேவையான வார்த்தைகள் என்னிடத்தில்இல்லை! உம்மை துதித்துப் பாடுவதற்கான ஞானமும் எனக்கில்லை! ஓ தேவாதி தேவா! இவ்வுலகில் உள்ள அனைத்து தீய குணங்களையும் ஒருசேரப் பெற்றிருக்கும் நான் எவ்வாறு உமது தெய்வீக ஆற்றலை போற்ற இயலும்! பணமோ! பொருளோ! வீடு, தோட்டம் போன்ற சொத்துக்களோ! தங்கமோ! வைரமோ ரொக்கமோ! இருக்கும் அளவிற்கு நான் செல்வந்தனும் இல்லை. தீய எண்ணங்கள் என்னையும் ஆட்டிப் படைக்கின்றது. ஓ ஸ்ரீஹரி! என்னைப் போன்ற ஒரு பாவிக்கு நீ எவ்வாறு உன் கருணையைப் பொழிவாய்?

இடிபாடுகள் நிறைந்த ஒரு இல்லத்திற்கு அருகில் கூட எவரும் செல்லமாட்டார்கள்! இதுவே அறியாமையில் மூழ்கியுள்ள இவ்வுலக மக்களின் இயல்பாகும். ஓ ராமா! உன்னுடைய இயல்பு இதற்கு முற்றிலும் மாறானது! ஓ கிருஷ்ணா! தவறு செய்தவர்கள் மனிதர்களின் நீதி மன்றத்தால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் இறைவனுடைய தர்பாரில் அவர்கள் மன்னிக்கப்பட்டு அவர்களுக்கு தங்குவதற்கு வீடும், உண்பதற்கு தானியங்களும் அளிக்கப்படுகின்றது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


ஓ தேவா! அளவில்லாத அன்பை, நீ உன் பக்தர்களிடம் வெளிப்படுத்தியதால் இவ்வுலகில் அதிர்ஷ்டம் இல்லாதவர்களும், வாழ்வில் எல்லா முயற்சிகளிலும் தோல்வியைத் தழுவியவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர்.

சர்வேஸ்வரர் வில்வ இலைகளை மனம் விரும்பி தமது ஆடையாகத் தரித்துள்ளார். ஆனால் நாம் வில்வ இலைக்கு மகத்துவம் அளிக்கிறோமா! இல்லையா! என்பதைப்பற்றி அவருக்கு என்ன கவலை இருக்க முடியும்! நாம் பாராட்டும் சுகந்த நறுமணத்தை ஒரு போதும் வில்வ இலைகளில் நுகர இயலாது. அவ்வாறு ஒரு வாசனையும் அற்ற வில்வ மரத்தின் இலைகளையும் பகவான் சங்கரர் ஆனந்தமாக தனது ஆடையில் தரித்துள்ளார். எங்களைக் காப்பாற்றும் ஸ்ரீஹரியே! கோகுலத்தில், மாடு மேய்க்கும் யாதவ குலச் சிறுவன் பெண்ட்யா (Pendya) தான் சுவைத்துவிட்டு அளித்த, ஒரு சிறு ரொட்டித் துண்டைக்கூட, அதைக்காட்டிலும் நூறு மடங்கு சுவை தரக்கூடிய, உணவிற்கு இணையாக நீ மகிழ்ச்சியோடு உண்டாய்!

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தபோது அதிலிருந்து வெளிவந்த கொடிய ஆலகால விஷத்தைக் கண்டு அனைவரும் அஞ்சி ஓடினர். ஓ சர்வேஸ்வரா!, அவ்விஷம் இவ்வுலகை அழித்துவிடக்கூடாது என்பதற்காக கருணையோடு அவ்விஷத்தை நீ உட்கொண்டு இவ்வுலகை காத்து இரட்சித்தாய்! அவ்வாறே எம்மையும் காக்க வேண்டுகிறேன்! ஓ நாராயணா! நீ என்னைக் காப்பாற்றாவிட்டால் இவ்வுலகம் உன்னை பழிக்கும்! ஆகையால் உன்னுடைய புகழுக்கு களங்கம் நேர வேண்டாம் என்பதால் நீ கருணையோடு என்னை காப்பாற்றியே ஆக வேண்டும்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## குருஸ்தான் (GURUSTHAN)

முதலில் வேப்பமரத்தடியில் நீண்ட காலம் தங்கியிருந்த ஸ்ரீசாயி மகராஜ் பின்னர் திரு. டாங்லேயின் வேண்டுகோளை ஏற்று மசூதியில் தங்கத் துவங்கினார்.

ஒரு சமயம் பாபா வேப்ப மரத்தடியில் அமர்ந்து கொண்டிருந்த போது ஒரு மகத்துவமான சம்பவம் நடைபெற்றது. அச்சம்பவத்தை நாம் இப்போது காணலாம்!

பாபாவிற்கு முன்னால், தரையில் சில பக்தர்கள் தங்களின் கைகளைக் கூப்பி தொழுதவண்ணம் அமர்ந்திருந்தனர். அப்பொழுது பாபா அவர்களிடம், "ஓ கிராமவாசிகளே! இந்த இடத்திற்கு அருகில் ஒரு சமாதி உள்ளது! அதைத் தோண்டும் முயற்சியில் தயவு செய்து ஈடுபடாதீர்கள்! அவ்வாறு முயற்சித்தால், அவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாக வேண்டிவரும்! என்றார்.

அப்பொழுது அங்கு இருந்த பக்தர் ஒருவர், "ஸ்வாமி! நீங்கள் கூறிய இடம் இஸ்லாமியர்களின் இடுகாடு ஆகும்! இடுகாட்டில் சமாதிகள் ஆயிரக்கணக்கில் இருக்கும். இதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்? தாங்கள் ஏன் இவ்வாறு கூறுகிறீர்கள்?" என்றார். உடனே அங்கிருந்த மற்றொருவர், "அவர் கூறிய இடுகாடு, அங்கிருந்து சிறிது தொலைவில் உள்ளது!" என்று கூறினார். வேறு சிலர் அதை மறுத்தனர். அவர்களின் வாக்குவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பாபா, தம் கைகளை காண்பித்து சற்று நேரம் அமைதி காக்கும்படி சைகையால் கூறினார். அவர்கள் அனைவரும் ஸ்வாமியின் ஆணையை ஏற்று அமைதி அடைந்தனர். பாபா, அவர்களை நோக்கி உண்மையின் தத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக விரும்பினால் முதலில் விவாதத்தையும், கூக்குரலிடுவதையும் விட்டுவிடுங்கள்!

NOT FOR SALE

உண்மையை தெரிந்து கொள்ளாதவர்கள் விவாதிப்பதால் ஒரு பயனும் இல்லை! பக்திமார்க்கத்தில் விவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை! தண்ணீரும் அக்னியும் ஒன்றாகக் கலந்ததால் உருவானதே இந்த பூமியாகும். இவை இரண்டுமே பவித்திரத் தன்மைக்கு உதாரணங்களாக விளங்குகின்றன.

இவ்வாறு பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்ட இந்த சிருஷ்டியில், பல்வேறு உயிர்கள் படைக்கப்பட்டன! அந்த உயிர்களிடமும் இறைத்தன்மை அடங்கியுள்ளது! அவ்வாறு தன்னுள் அடங்கிய இறைத்தன்மையை உணர்ந்தவரே தன்னிலை அறிந்தவர் ஆவார்!.

இவ்வுலகில் படைக்கப்பட்ட எல்லா ஜீவராசிகளும் பூமியில் இருந்து வெளிவந்தவையே ஆகும்! அவ்வாறு பூமியில் இருந்து வெளிவந்த உயிர்கள், அனைத்தும் மீண்டுமே பூமியிடமே சென்று சேர்கின்றன!.

ஆகையால் இப்பூமியின் ஒவ்வொரு கையளவு மண்ணிலும் மனிதரோ, விலங்கோ, பறவையோ, சிறிய பூச்சியோ இத்தகைய ஏதாவது ஒரு உயிரின் இறந்த உடல், நிச்சயமாக கலந்தே இருக்கின்றது. பூமியானது தன்னிலிருந்து பிறந்த உயிர்கள் மரணித்த பின்னர், அவற்றோடு மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டு, அவை யாவற்றையும் தனதாக ஆக்கிக் கொண்டு, மீண்டும் மீண்டும் உயிர்களைத் தருகின்றது!

இப்படி இருக்கையில் நீங்கள் இப்பூமியில் ஒரு இடத்தில் மட்டுமே சமாதி இருப்பதாக ஏன் வீணாக கற்பனை செய்கின்றீர்கள்! சமாதி இடம், இடுகாடு, சுடுகாடு என்று ஒரு குறிப்பிட்ட இடத்தை எவருமே தீர்மானிக்க இயலாது. இப்பூமியே ஒரு சமாதி நிலையம் தான்! இறந்த உடலை எரித்த பிறகு எஞ்சிய சாம்பலும் பூமியிடமே சென்று கலக்கின்றது! ஆகையால் அறியாமையை விலக்குங்கள்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

முன்னொரு காலத்தில் "கபீர் என்ற மாபெரும் மகான், புனித கங்கை நதிக்கரையில் தன் சரீரத்தைத் துறந்தார்! அப்போது இந்துக்களும் இஸ்லாமியர்களும் அம்மகானின் உடலை எரிப்பதா! புதைப்பதா என்ற சர்ச்சையில் மிகப்பெரிய கலவரத்தில் ஈடுபட்டார்கள். அங்கிருந்த இரு பிரிவினரும் மகான் கபீர் தங்களுடைய இனத்தைச் சார்ந்தவர், ஆதலால், தங்களின் குல வழக்கத்திற்கேற்ற வகையில் சடங்குகள் நிகழ்த்தப்பட வேண்டும்!" என்ற தீவிர வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தம் வாழ்க்கையை இறைவனுக்காக சமர்ப்பித்த மகானாகிய பக்த கபீர்தாஸர் சரீரத்தை துறந்த பின்னரும், தமது அடியவர்கள் அறியாமையினால் சண்டையிட்டுக் கொள்வதை, அவர் மனம் விரும்பவில்லை! கபீர்தாஸர் இரு தரப்பு மக்களையும் சமாதான வழியில் நடத்திச் செல்பவர். ஆகையால் தமது தெய்வீக ஆற்றலால் கபீர்தாஸர், தமது சரீரத்தை துளசி இலைகளாகவும், மல்லிகை பூக்களாகவும், தினை இலைகளாகவும் மாற்றினார். இந்துக்கள் மகிழ்வோடு, புனிதமான துளசி இலைகளை, கபீர்தாஸரின் சரீரமாக நினைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இஸ்லாமியர்களும் மிக்க மகிழ்வோடு தமது அவுலியாவான (மகான்) கபீர்தாஸரின் சமாதியிலிருந்த, மல்லிகை மற்றும் தினை மலர்களை தமது குல வழக்கப்படி ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். அனைவரையும் சமமாக நேசித்த அம்மாபெரும் மகான், இரு பிரிவினருக்கும் மன நிறைவை அளித்தார்.

மகான்களை எப்பிரிவினரும் சொந்தம் கொண்டாட இயலாது. பிரிவினைகளையும், பேதங்களையும் களைவதற்காக அவதாரம் எடுத்தவர்களே மகான்கள் என்பதை நாம் உணர வேண்டும். மானுட உருவில் அவதரித்த மகான்கள் ஏதாவது ஒரு குலத்தில் தோன்றினாலும், அக்குலத்திற்கும் மகான்களுக்கும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எவ்வித பந்தமும் இல்லை. அவர்கள் அவதரித்த நோக்கம் அவர் தோன்றிய குலத்தை செழிக்க வைப்பதற்காக அல்ல! மகான்கள் அனைவரையும் பாரபட்சமின்றி வழிநடத்திச் செல்பவர்கள் என்பது தான் உண்மையாகும்.

இவ்வாறாக மகான் கபீர்தாஸர் தாம் வாழ்ந்த காலத்திலும், தமது சரீரத்தை துறந்தபிறகும் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை தெளிவாக்கினார். அவருடைய சமாதியில் அவர் நிகழ்த்திய அற்புதங்களை, கவிஞர் மஹிபதி, "பக்திமாலா" மற்றும் "பக்தவிஜயம்" என்ற நூல்களில் மிகச் சிறப்பாக விவரித்துள்ளார். அம்மகானின் சமாதி நிலையைக் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் இந்துக்களிடம் இல்லை. இஸ்லாமியரிடமும் இல்லை. அவ்வதிகாரம் இறைவனிடம் மட்டுமே உள்ளது. இறைவன் தன்னுடைய சங்கல்பத்தின் வழியாகவே காரியங்களை ஆற்றுபவர். அத்தகைய செயல்கள் மனிதர்களால் கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாத அசாதாரணச் செயல்களாகும்.

கபீர் என்ற மாபெரும் மகான் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியாகவும் அல்லா இலாஹியாகவும் போற்றப்படுபவர். பக்தி மார்க்க வழியில் மிகப்பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தினார். அம்மகானுக்கு என் சிரம் தாழ்ந்த நமஸ்காரங்கள்!

கபீர்தாஸருடைய சரீரம் மாற்றம் அடைந்த இடத்தில் இருந்து துளசி இலைகளை எடுத்துச் சென்று, இந்துக்கள் சாஸ்திர விதிகளின்படி அவற்றை புனித கங்கையில் மந்திர உச்சாடனங்கள் செய்து புனித கங்கையில் கரைக்கப்பட்டது. இச்சம்ப்ரதாயம் இன்றளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புனித கங்கையில் கரைக்கப்பட்ட உடலுக்கு சமாதி எழுப்பும் வழக்கம் இல்லை. ஆகையால்தான் கபீர்தாஸருக்கு இன்றுவரை கங்கை நதிக்கரையில் சமாதி எழுப்பவில்லை!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மல்லிகை மற்றும் தினை பூக்களை எடுத்துச்சென்ற இஸ்லாமியர்கள். இத்தேசம் முழுவதும் கபீர்தாஸருக்கு நினைவஞ்சலி செலுத்தும் இடங்களில் அவற்றை வைத்து வணங்கினார்கள். கபீர்தாஸர் வாழ்ந்த காலத்தில் இந்தியா இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. நவாப் என்று அழைக்கப்படும் மன்னர்கள், இந்த தேசத்தை ஹஸ்தினாபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். அன்றைய ஹஸ்தினாபுரம் இன்று டில்லி என்று அழைக்கப்படுகிறது.

கபீர்தாஸரின் மகாசமாதியில் நடந்த விவாதத்தில் பங்கெடுத்த ஒரு இஸ்லாமியர் அங்கிருந்து மல்லிகை மற்றும் தினை மலர்களை கொண்டுவந்து, மகான் கபீர்தாஸருக்கு இந்த இடத்தில் ஒரு சமாதியைக் கட்டினார்!

இந்துக்களையும், இஸ்லாமியர்களையும் ஒரே இனமாகத் தீர்மானித்த ஈடு இணையற்ற மகான் ஸ்ரீகபீர்தாஸர் என்னுடைய குரு ஆவார்! அன்று அச்சமாதியில் என்ன நடந்தது என்பதை நான் நன்கு அறிவேன்! ஆகையால் இங்குள்ள கபீர்தாஸரின் சமாதிக்கு அருகில் நான் வசித்து வருகிறேன்! இந்த சமாதியின் அற்புத தெய்வீக ஆற்றலை என் வார்த்தைகளால் விவரிக்க இயலாது! இங்கு நான் அமரும் இடத்தை வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சுத்தம் செய்து, சுகந்த வாசனை தரும் திரவியங்களை அல்லது ஊதுபத்திகளை ஏற்றி வைத்து வழிபடுபவர்களுக்கு இறைவனின் பரிபூரண கருணையும், ஆசிர்வாதமும் நிச்சயம் உண்டு. இவ்வாக்கு நான் இந்த சமாதியில் இருந்து கொண்டு அளிக்கும் வாக்காகும் என்றார் பாபா.

ஸ்ரீசாயி குருசரித்திரம் என்ற இப்புனித நூலை படித்துக் கொண்டிருக்கும் பக்தர்களுக்கு தாஸ்கணுவின் "பக்த லீலாம்ருதம்" மிகுந்த சந்தோஷத்தையும், செல்வத்தையும் அளிக்க வல்லதாகும்.

NOT FOR SALE

சாய் குருசரித்திரம் என்ற திவ்ய சரித்திரத்தை பாபாவின் அனைத்து லீலைகளுடன் விவரிப்பது அடியேனால் எவ்வாறு இயலும்? ஒரு சாதாரண விட்டில்பூச்சி எவ்வாறு பெரிய மலையைக் கடக்க இயலும்?

## தீக்ஷித்திற்கு காட்சி அளித்த சாயி பாண்டுரங்கன்

NOT FOR SALE

நாம் இப்போது தீக்ஷித்திடம் பாபா நிகழ்த்திய அற்புதத்தைக் காணலாம்! இந்நிகழ்வைப் படித்தவர்கள் தங்கள் மனதில் நிரந்தரமாகக் குடிகொண்டு இருக்கும் மாயை என்பதில் இருந்து விடுதலைப் பெறுவீர்கள்!

ஹரிபாபு என்ற அந்தணர் அநேக மொழிகளிலும் புலமை பெற்ற பண்டிதர் ஆவார். எவ்வாறு தேனீக்கள் தமக்கு ஆதாரமான உணவை பெறுவதற்காக தாமரை மலரையே தம் புகலிடமாக்கி அங்கேயே தங்கி இருப்பதைப் போல, ஹரிபாபு தீக்ஷித்தும், பாபாவின் தாமரைத் திருவடிகளிடம் சரணடைந்து, ஷீரடியிலேயே சில நாட்கள் தங்கி இருந்தார். பாபாவின் கருணையினால் தம்முடைய ஆளுமையில் வித்தியாசமான மாற்றங்களைக் கண்டார். தீக்ஷித் இதற்கு முன்னர் மிகவும் தீவிரமாக எதிர்க்கும் குணம் உள்ளவராகவும், இரக்கமும், கருணையும் அற்றவராகவும் இருந்தார். ஆனால் பாபாவின் தொடர்புக்கு பின்னர், அவருடைய நடவடிக்கைகளில் அவருக்கே தெரியாத பல நல்ல மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதை அவரால் நன்கு உணர முடிந்தது.

ஒரு நாள் காலைப்பொழுதில், ஹரிபாபு தன்னுடைய அறையில், அமர்ந்து கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று அவருடைய இதயம் முழுவதும் மகிழ்ச்சியில் திளைக்க ஆரம்பித்தது. அவர் தம் கண்களை மூடிக்கொண்டு இருந்த

அவ்வேளையிலும் பேரானந்தத்தில் இருந்தார். என்ன அற்புதம்! பாபா அவரது காட்சியில் பாண்டுரங்கனாகத் தோன்றினார். மனதை மயக்கும் கருநீல வண்ண நிறத்தில், பசுமையான துளசி மாலையை அணிந்து கொண்டு, தமது கைகள் இரண்டையும் இடையில் கம்பீரமாக வைத்துக்கொண்டு ஒற்றைச் செங்கல்லின் மேல் ஆனந்தமாக நின்று கொண்டிருந்த பாண்டுரங்கனை காணும் சௌபாக்கியம் தீக்ஷித் அவர்களுக்கு கிடைத்து விட்டது. இதைவிட வேறு என்ன மகத்துவம் அவருக்கு வேண்டும்? அவருக்கு தியானத்தில் காட்சி அளித்த விட்டல், அழகான மஞ்சள் பட்டுத்துணியை அணிந்திருந்தார். அவருடைய சிரசில் வண்ண மயில் இறகுகள் காணப்பட்டன. அவரது தேகம் முழுவதும் நறுமணமிக்க சந்தன வாசனை கமழ்ந்தது.

ஸ்ரீஹரியான பாண்டுரங்கனின் இக்காட்சியைக் கண்ட ஹரிபாபுவின் மனம் மிகவும் உற்சாகம் அடைந்தது. அவர் இக்காட்சி நமது சத்குருவான பாபாவின் கருணையினாலேயே கிடைத்தது என்பதை அறிந்து கொண்டார். அவர் தாம் இத்தகைய அற்புதக் காட்சியைப் பெற, எத்தகுதியும் திறமையும் அற்றவர் என்றாலும் பாபாவின் கருணையால் இது சாத்தியமாயிற்று என்று எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தார்.

தீக்ஷித் தம் வாழ்நாளில் தாம் காண ஏங்கிய அத்திருக் காட்சியை, தியான நிலையில் கண்டதால், இதைவிட வேறு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று இருக்கவே இயலாது என்று மனப்பூர்வமாக உணர்ந்தார். அடுத்த நாள் காலை தீக்ஷித், இக்காட்சியை தமக்கு அளித்ததற்காக பாபாவிடம் நன்றி தெரிவிக்க அவர் ஷீரடி புறப்பட்டார். அவர் மசூதியை அடைந்ததும் பாபா அவரிடம் என்ன தீக்ஷித்; அண்ணா, உம்முடைய இச்சை இன்று தீர்ந்ததா? விட்டோபா பாட்டீலை கண்டீரா! அவரே எல்லா மகான்களுக்கும்

NOT FOR SALE

மகாத்மா ஆவார். அவரைப்பற்றி எடுத்துக் கூறுவதற்கு, வேதங்களில் கூட போதுமான வார்த்தைகள் இல்லை மற்றும் அவரே இப்பிரபஞ்சத்தை காப்பவர் ஆவார்! இதைக்கேட்ட தீக்ஷித் தமது கைகளைக் கூப்பி தொழுது, தங்களுடைய மாயலீலைகளை யார் தான் அறிய முடியும்? மேலும் அதை முழுவதும் உணரும் பக்குவமும் தங்களிடமே உள்ளது! தாய் ஒருத்தி தன் குழந்தைகள் வேண்டிய பொருள் யாது? அது நன்மை பயக்குமா அல்லது தீமை விளைவிக்குமா என்பதை நன்கு அறிவாள்! தாமே எங்களுடைய தாய் ஆவீர்! நாங்கள் தங்களுடைய குழந்தைகள் ஆவோம்! ஆகையால் ஏன் கவலை கொள்ள வேண்டும்! தங்களுடைய பாதங்களின் மேல் அசைக்க இயலாத பக்தி உணர்வு இருந்தாலே போதுமானது! அந்த நம்பிக்கையே நான் உங்களிடத்தில் பரிசாக எதிர்பார்க்கிறேன்! அடியேனுக்குக் கிடைத்த ஸ்ரீஹரியான பாண்டுரங்கனின் தரிசனம் தம்முடைய அளவில்லாத கருணையால் மட்டுமே என்பதை நன்கு அறிவேன்!

ஒரு திருவிழாவில் பொம்மலாட்ட நிகழ்ச்சியைப் பார்த்து பாராட்டிய மக்கள், அந்த நாடகத்தில் ஆடிய பொம்மைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பார்களா! இல்லையே! அப்பொம்மைகளை அற்புதமாக இயக்கிய பொம்மலாட்டக்காரனைத் தானே பாராட்டுவார்கள்!

தங்களைக் காட்டிலும் ஒரு மிகச் சிறந்த பொம்மலாட்டக்காரர் வேறு எவரும் இருக்க இயலாது! நாங்கள் அனைவரும் தங்களின் கைகளில் உள்ள பொம்மைகள் ஆவோம்! எங்களால் இயன்ற வேலைகளை நாங்கள் செய்தாலும் அதை செய்து முடிப்பதும் தாமே என்பதையும் நான் அறிவேன் ஸ்வாமி! நான் தங்களிடம் வேண்டுவது ஒன்றே ஆகும்! அது யாதெனில் என் கண்களின் பார்வைப்படும் இடத்தில் எல்லாம், தாம் எனக்குக் காட்சி அளிக்க

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வேண்டும் என்றார் தீக்ஷித். எத்தகைய மிகச்சிறந்த வரத்தை பாபாவிடம் கேட்டுப்பெற்று இருக்கிறார் என்பதை நினைக்கும் பொழுதே வியப்பாக உள்ளது.

பாபா அத்தகைய வரமும் சமயம் வாய்க்கும்பொழுது உன்னை வந்து அடையும்! அதனால் அவசரப்பட வேண்டாம்! சிறிது நேரம் பொறுமையாக இரு! என்றார். இன்று இந்த அற்புதக் காட்சியைக் கண்டபிறகு தீக்ஷித், நானா சாஹேப் சந்தோர்கரைக் காட்டிலும் தீவிர பக்தியை பாபாவிடம் கொண்டிருந்தார். தன் மனதை ஒருமுகமாக்கி உள்நோக்கி தியான நிலையைத் துவக்கினார். அவர் கண்ட காட்சி தமது சத்குருவின் கிருபையால் மட்டுமே நிகழ்ந்தது என்பதால் கரும்புத் தோட்டத்தில் அமர்ந்து கொண்டு எவ்வாறு கரும்பு சாற்றை அருந்தாமல் ஒருவனால் இருக்க இயலும்? புனித கங்கை நதிக்கரையில் அமர்ந்து கொண்டிருந்தவனுக்குத் தாகம் தீர்க்க தண்ணீரைத் தேடி வேறு எங்கே செல்ல வேண்டும்? வாசனை திரவியத்தை வைத்துக் கொண்டிருப்பவன் அதன் நறுமணத்தை நுகராமல் எப்படி இருப்பான்? அதைப்போல பாபா என்ற சத்குரு தம்மிடையே இருக்கும்போது ஹரிபாபு தீட்சித் எதற்கு கவலை கொள்ள வேண்டும் என்று எண்ணி தம் கவலைகளை துறந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

NOT FOR SALE



## மேகா

குஜராத்தி அந்தணரான மேகா என்பவர், பாபாவை சிவனாகவே வழிபட்டார். அவர் தினமும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, குளிர்ந்த நீரில் நீராடி விபூதி எனப்படும் சாம்பலை உடல் முழுவதும் பூசிக்கொண்டு, மான் தோலில் அமர்ந்து கொண்டு தீவிரமாக தியானம் செய்வார். அவர் ஒரு நாளைக்கு மூன்று முறை பாபாவை தரிசிக்க மசூதிக்கு செல்வார். அவர் பாபாவை சிவனாக வழிபட்டதால் சதா சர்வ காலமும் பஞ்சாக்ஷரி மந்திரமான நமசிவாய என்பதை இரவும் பகலும் தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருப்பார். தினமும் அதிகாலை நீராடி, அவ்விடத்திலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள புனித கோதாவரி நதியில் இருந்து நீரை சுமந்து கொண்டு வந்து பாபாவின் பாதங்களுக்கு அபிஷேகம் செய்வார்! அதன் பின்னர் சிவனுக்கு மிகவும் ப்ரியமான வில்வ இலைகளை பாபாவின் பாதங்களில் வைத்து பூஜிப்பார். எவராவது மேகாவிடம், ஏன் அபிஷேகம் செய்வதற்காக தொலைதூரம் நடந்து சென்று நீரை எடுத்துவர வேண்டும்? என்று கேட்டால் மேகா உடனே நீங்கள் பாபாவை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அவர்தான் நான் வணங்கும் சர்வேஸ்வரர்!

நான் அவரை ஈசனாகவே காண்பதால், என் ஈசனுக்கு சாதாரண நீரில் அபிஷேகம் செய்ய இயலாது. ஆகையால் நான் தினமும் புனித கோதாவரி நதிக்கரைக்குச் சென்று நீர் எடுத்து வருகிறேன் என்று சொல்வதைக் கேட்டு மேகாவின் பக்தியை எண்ணி பலரும் வியப்படைந்தனர். பாபா, மேகாவின் எளிமையான, தூய்மையான பக்தியால் பெரிதும் கவரப்பட்டார்.

மேகாவின் இக்கூற்றை கேட்ட வேறு சிலர் தாங்கள் பாபாவை விட்டலாகவே காண்பதாகக் கூறினர். பாபா

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


உண்மையான அன்போடும், தூய பக்தியுடனும் எவர் தம்மை பூஜிக்கிறார்களோ, அவர்களின் மனம் விரும்பிய கடவுளின் தோற்றத்திலேயே அவருக்கு காட்சி அளிப்பார் என்பது தான் உண்மை. இஸ்லாமியர்களுக்கு பாபா மாபெரும் அவுலியாவாக காட்சி அளித்தார். தமது பக்தர்களின் விருப்பத்திற்கேற்ப தம்மை அவர்கள் வணங்குவதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு தமது ஆசீர்வாதத்தையும் அளித்தார். இதுவே சத்குருவின் தயாள குணமாகும். அவர் தமது பக்தர்களிடமும் எந்த பாகுபாடும் பார்த்தது இல்லை!

## செங்கல்லின் கதை

பாபா எப்போதும் ஒரு செங்கல்லை தம்மிடம் வைத்திருப்பார். அச்செங்கல்லை, அவர் தன் வாழ்க்கையைக் காட்டிலும் மிகவும் விரும்பினார். அச்செங்கல்லையே தம் தலையணையாக வைத்துக் கொண்டு உறங்குவார். இதைக் கவனித்த நானாசாஹேப் சந்தோர்கர் ஒருமுறை பாபாவிடம் பாபா "ஏன் இந்த செங்கல்லை தலையணையாக வைத்துக் கொண்டு உறங்குகிறீர்கள்? இது தலைக்கு மிகவும் வேதனையைத் தரும்! நான் தங்களுக்கு மிருதுவான தலையணையைத் தயாரித்துத் தருகிறேன்! இச்செங்கல்லைத் தூர எறிந்து விடுங்கள்!" என்றார்.

பாபா "நானா நீ எனக்காக ஆயிரம் தலையணைகளை தைத்துக் கொடுத்தாலும், அவை யாவுமே இச்செங்கல்லுக்கு நிகராகாது! இச்செங்கல் என்னிடம் எப்படி வந்தது என்று உனக்கு தெரியாது! இது என்னுடைய குரு, எனக்களித்த விலைமதிக்க இயலாத பரிசாகும்! என் குருவை இச்செங்கல்லால் சிலர் தாக்கினர். அவர் சிரசில் மோதிய இச்செங்கல்லை அவர் எனக்குப் பரிசாக அளித்தார்! உனக்கு இச்செங்கல்லின் மகிமைப்பற்றி ஒன்றும்

NOT FOR SALE

தெரியாது. அதனால் இதை எறியச் சொல்கிறாய்! இவ்வுலகில் இச்செங்கல்லை விட விலையுயர்ந்தது எனக்கு எதுவும் இல்லை! இச்செங்கல் தான் என்னுடைய தியானத்திற்குரிய பொருளாகும்! இதுவே எனது தியானமும் ஆகும். இச்செங்கல் என்று உடைகிறதோ அன்று என்னுடைய உலகப்பயணம் முடிவடையும்! எனது குருவின் பாதங்களில் வைத்து நான் எடுத்து வந்த என்னுடைய அதிர்ஷ்டமே இந்தச் செங்கல்லாகும்! இச்செங்கலை நான் தலைக்கு அடியில் வைத்து உறங்கும்போது எனது குருவின் பாதங்களை, எனது சிரசில் ஸ்பரிசித்து அவர் ஆசீர்வாதம் செய்வதாகவே நான் உணர்கிறேன்! இதன் மூலம் நான் எனது குருவிற்கு தினமும் நமஸ்காரம் செய்கின்றேன்! நானா! நீங்கள் அனைவரும் அதிகாலையில் வந்து என்னை வணங்கும்போது நான் அந்த வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் எனது குருவிற்கே சமர்ப்பிக்கின்றேன்.

இச்செங்கல்லை என்னிடம் அளித்த அவர், எவ்வாறு புண்டலீகன், பாண்டுரங்கனுக்கு ஒரு செங்கல்லை அளித்து, அவரை அதன் மீது நிற்கச் செய்தானோ! அதைப்போலவே, நீயும் என்னை அச்செங்கல்லின் மீது பாதங்கள் வைக்க வேண்டுகின்றாய்! பாண்டுரங்கன் இச்செங்கல்லின் மேல் சிறிது நேரம் நின்றார்! ஆனால், நீ உன்னுடைய தீவிர பக்தியால், காலம் முழுவதும், என்னை இச்செங்கல்லின் மேல் நின்று கொண்டே இருக்கச் செய்துவிட்டாய்! என்றார். சமாதியில் இருக்கும் எனது குருவின் சரீரம் இச்செங்கல்லின் உள்ளேயும் இருக்கிறது என்றும் பாபா கூறினார்.

இதுவே சத்தியம்! என்னுடைய சத்குரு ஸ்ரீவேங்கடேச பெருமானோடு இணைந்து விட்டார். அவரே இப்போது ஸ்ரீவேங்கடேஸ்வரராக எனக்குக் காட்சி அளிக்கிறார்! நன்றாக

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இச்செங்கல்லை உற்றுப்பார்! இதில் ஸ்ரீவேங்கடேஸ்வரரின் பாதச் சுவடுகள் பதிந்துள்ளதை பார்! இதன் காரணமாகவே நான் என்னுடைய குருவை வெங்குசா என்று அன்புடன் அழைக்கின்றேன்! வெங்குசா என்பது ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் சுருக்கமாகும்! இச்செங்கல்லின் ஆற்றல் அளவிட இயலாதது! நானா, இப்போது இச்செங்கல்லின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டாயா! என்றார் பாபா. தமது குருவின் பாதங்கள் அச்செங்கல்லில் கண்டு வணங்கும் பாபா, அச்செங்கல்லின் நிழலைக் கூட வணங்கத் தவறுவதில்லை. நானா சாஹேப்பும் அவருடன் பாபாவை தரிசிக்க வந்தவர்களும் பாபாவை நமஸ்காரம் செய்து விடைபெற்றனர். பாபாவின் தீவிர பக்தரான நானா சாஹேப் 1923இல் புனேயில் தம் சத்குருவான பாபாவின் திருவடிகளை சென்றடைந்தார்.

## ரத்தன்ஜி

நர்ந்தேட்டைச் சேர்ந்த ரத்தன்ஜி சாஹேப் ஒருமுறை தனது குடும்பத்ினருடன் பாபாவை தரிசிக்க ஷீரடி சென்றார். பார்சி இனத்தைச் சேர்ந்த ரத்தன்ஜி, அமைதியான குணமுடைய எளிமையான பக்தர் ஆவார். பாபாவை தரிசிக்க செல்வதால் அன்று அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரது மனம் உற்சாகத்தில் துள்ளிக்குதித்தது. ஷீரடிக்கு புறப்படும் அன்றைய தினத்தில் தனது நண்பர்களை அழைத்து தேநீர் விருந்திற்கு ஏற்பாடு செய்தார். ரத்தன்ஜியிடம் ஏராளமான செல்வம் இருந்தாலும், அவர் எப்பொழுதும் எளிமையாகவே வாழும் பண்பு நிறைந்தவர். அவருடைய நண்பர்களும் எல்லா சமயத்தைச் சாந்தவர்களாகவும் இருந்தனர். சிலர் அந்தணர்களாகவும், சிலர் முகமதியர்களாகவும் மற்றும் சிலர் இதர வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். பல்வேறு மதத்தைச் சேர்ந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அவர்கள் மிகவும் ஒற்றுமையாகவும், ஒருவர் மற்றவரிடம் மிகுந்த அன்புடையவர்களாகவும் இருந்தனர். எவ்வாறு ரோஜா மலர்களும், மல்லிகை மற்றும் இதர மலர்களும் அருகாமையில் பூத்து மகிழ்கின்றதோ அதைப்போல ரத்தன்ஜியின் நண்பர்களும் மிகவும் நட்புறவோடு இருந்தனர்.

பூமித்தாயானவள் தன் மீது முளைக்கும் பூச்செடிகளில் எல்லா வகையான பூக்களையும் பூக்கவைக்கின்றாள். ஆயினும் அவள் பூக்களுக்குள் பாரபட்சம் பார்ப்பது இல்லை. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஒரே மதத்தினரிடையே பல பிரிவினைகள் ஏற்பட்டு சண்டையும், சச்சரவுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சுகபோகங்களுக்கு அடிமையாகி பிறர் பொருளைக்கவரவும், பெண்களையும், குழந்தைகளையும் துன்புறுத்துவதையும் மிக இயல்பாக, எவ்வித உறுத்தலும் இன்றி செய்து கொண்டிருக்கின்றனர்.

அரசகுல சத்திரியர்களைப் பார்த்து, அந்தணர்கள் தூற்றுகின்றனர். அவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் என்றும், ஆனால் தங்களுக்கு இணையாக வெளிக்காட்டிக் கொள்கின்றனர் என்றும் அந்தண குலத்தில் தோன்றாமல் ஞானத்தை எவ்வாறு அடைய இயலும் என்றும் சத்திரியர்களைத் தூற்றுகின்றனர்.

சத்திரியர்கள் இதற்குப் பதிலாக அந்தணர்கள் யாரும் உண்மையான குலவழி வந்தவர்கள் இல்லை. ஒரு ரிஷி தாழ்ச்சியடைந்த குலம் என்று அக்காலத்தில் கூறிய ஒரு குலத்தில் மகனாகப் பிறந்தார்! மற்றொரு ரிஷியின் அன்னையும், தந்தையும் வேறான மதங்களைச் சார்ந்திருக்கின்றனர். வேத ரிஷி என்று அனைவராலும் போற்றப்பட்ட வியாசரிஷி ஒரு தாசி குலப்பெண்ணிற்கு மகனாக பிறந்தார். மீன் பிடிக்கும் குலத்தைச்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சேர்ந்த வால்யாவின் வாரிசு வால்மீகி ஆவார். புராணங்களையும், காவியங்களையும், உபநிடதங்களையும் எழுதிய அந்தணர்கள், சத்திரியர்களுக்கு பல்வேறு நிபந்தனைகளையும், கட்டுப்பாடு களையும் விதித்து விட்டனர் என்று அந்தணர்களை குறை கூறுகின்றனர்.

இவை இரண்டிலும் சேராத பிற வகுப்பினர் இவ்விரு வகுப்பினரின் கூற்றையும் நிராகரிக்கின்றனர். மேற்கூறிய இரு வகுப்பினருமே திருடர்கள் என்று மூன்றாவது தரப்பில் விவாதிக்கின்றனர். அரச குலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், குல குருக்களான அந்தணருக்கும் நல்ல உறவு தழைத்துக் கொண்டிருக்கும் வேளையில் இத்தகைய வேறுபாடுகள் அவர்களிடையே இருந்ததில்லை. ஆனால் தற்போது அவ்விருவரில் யார் உயர்ந்தவர் என்ற போட்டி நிலவி வருகிறது. ஆகையால் இவ்விரு குலத்தவரும் ஒருவர் மீது ஒருவர் புழுதியை வாரி இறைத்துக் கொள்கின்றனர் என்பது மூன்றாவது வகுப்பினரின் குற்றச்சாட்டாகும்.

NOT FOR SALE

சத்திரியர்கள் செய்த திருட்டுகளையும், பாவங்களையும் அந்தணரான பண்டிதர்கள் மூடி மறைத்து அவர்களுக்கு உதவி செய்கின்றனர். அந்தணர்கள் புராணங்களை படைத்து அதில் இரண்டு முறை வாமன அவதாரத்திலும், பரசுராம அவதாரத்திலும் பகவான் அந்தணராக பிறப்பதாகக் கூறுகின்றனர். அதேபோன்று இருமுறை சத்திரியர்களாக பிறப்பதாகவும் (ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர்) கூறுகின்றனர். ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணரும் தெய்வ அவதாரங்களாக இருப்பினும் அவர்களுடைய குருவாகியவர்கள் அந்தணர்களே என்ற கருத்தில் பெருமை பேசுகிறார்கள். இது எவ்வாறு உள்ளதெனில் ஒளி வீசிப்பிரகாசிக்கும் சூரியன் ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கு விளக்கின் வெளிச்சத்தைத்

தேடிப் போவதைக் குறிக்கிறது. கௌதம புத்தர் அரசகுலத்தில் பிறந்த போதும், அக்குலத்தை அவர் வெறுத்து புத்த சமயத்தை வேரூன்றச் செய்தார். பசவன்னா என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அந்தணரும், பக்தி மார்க்கத்தில் இறைவனை அடைய குலம் ஒரு தடையாக இருக்கவே கூடாது என்ற காரணத்தால் அந்தக் குலத்தை வெறுத்தார். இவ்வாறெல்லாம் வைசியர்களும் மற்ற குலத்தவரைப் பற்றி தூற்றுகின்றனர்.

அவர்கள் சத்திரியர்களும், அந்தணர்களும் எவ்வாறு இணைந்து ஒருவரை ஒருவர் போற்றிக் கொள்கின்றனர் என்பதை ஒரு ஒட்டகமும், கழுதையும் ஒன்றுடன் ஒன்று உரையாடிக் கொள்வதை மேற்கோள் காட்டுகின்றனர். ஒரு கழுதையும் ஒரு ஒட்டகமும், மிகவும் ப்ரியத்துடன் ஒற்றுமையாக இருந்தபோது ஒட்டகம், கழுதையைப் பார்த்து "ஓ கழுதையே! உன் குரல் மனிதர்களை மட்டுமல்ல தேவதைகளையும் கவர்ந்து பூமிக்க இழுக்க வல்லதாகும்!."

உன் இனிய குரலில் மயங்கி சொர்க்கத்தை துறந்து தேவதைகளும் இந்த பூமிக்கு வந்துவிடுவார்கள்! அத்தகைய அழகிய குரல் வளத்தை உடையவர் நீயாவாய்! என்று கூறு கழுதையும் மகிழ்ந்து "ஓ ஒட்டகமே! என் குரலை நீ மிகவும் போற்றினாய்! மிக்க மகிழ்ச்சி! ஆனால் உன்னுடைய அழகு இருக்கிறதே! அதை நான் எவ்வாறு வர்ணிப்பேன்! உனது அழகு முகத்திற்கு முன்னால் மனிதனும் வெட்கித் தலைகுனிவான்! அத்தகைய அழகை உனது முகத்தில் நான் காண்கிறேன்! என்று ஒட்டகத்தைப் பார்த்து கூறியதாம்! இவ்வாறு எத்தகுதியிலும் சேராத இவ்விரு மிருகங்களும் உரையாடுவதைப் போன்று சத்திரியர்களும் அந்தணர்களும் நட்புறவு கொண்டிருந்ததாக வைசியரான மூன்றாவது தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர்."

NOT FOR SALE

சாயி குருசரித்திரத்தை பக்தியுடன் கருத்தூன்றி படித்துக் கொண்டிருக்கும் பக்தர்களே! நான்கு பிரிவினரும் தங்களுக்குள் யார் உயர்ந்தவர் என்ற போட்டியில் தங்களுடைய கடமையைச் செய்ய தவறி விட்டனர்! ஒரு பூந்தோட்டத்தில் பல வகையான மலர்களும் மலர்ந்து, காண்போரின் மனதை கவர்கின்றன. ஆனால் அம்மலர்கள் நிறம், மணம், வடிவம் இவற்றால் வேறுபட்டாலும் அவை ஒன்றோடொன்று போட்டியிடுவதில்லை. ஒன்றையொன்று புறம் கூறுவதில்லை. அங்கு சண்டையோ சச்சரவோ எதுவுமின்றி மனதிற்கு ஆனந்தத்தையும் அமைதியையும் அளிக்கின்றன! அவை ஒன்றையொன்று அழிக்க திட்டமிடுவதில்லை. அதைப்போன்றே பல்வேறு வகைப்பிரிவினர் இச்சமூகத்தில் வாழ்ந்தாலும், அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து சமூக முன்னேற்றத்தில் தங்களுடைய பங்கினை அளித்தால் தான் இச்சமுதாயம் மேன்மை அடைய முடியும்!

இந்துக்களில் பல்வேறு வகுப்பினர்கள் உள்ளனர். இஸ்லாமியர்கள் இரு தரப்பட்ட வகுப்பினர் உள்ளனர். அதே போன்று கிறிஸ்தவ சமயத்திலும் நிறைய வகை பிரிவினர் உள்ளனர். ஜைன சமயத்திலும் இரு வகையினர் உண்டு. இதே வகைப்பிரிவுகள் மனிதர்களில் மட்டுமல்ல பறவைகள், விலங்குகள் மற்றும் எல்லா உயிர்களிடமும் உள்ளன. ஆனால் பறவைகளும், விலங்குகளும் குலப்பெருமை பேசுவதில்லை! இவர்கள் அனைவரும் ஒன்றே என்ற எண்ணம் ஏற்பட்டு உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டை ஒழித்து வாழ வேண்டும்.

நாவிதர்களை குல வேறுபாட்டால் இச்சமூகம் புறந்தள்ளி வைத்தது. ஆனால், அந்தணரின் பூணூல் இடும் சடங்கில், அவர் தலைமுடியை எடுக்கும் பணி முதல், விதவைகளின் தலைமுடியை வழிப்பது வரை நாவிதர் மட்டுமே செய்யக்கூடிய கடமையாக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விளங்கியது. நாவிதர் இல்லையெனில் மேற்கூறிய இவ்விரண்டு சடங்குகளும் அந்தணர் குலத்தில் நடைபெற வாய்ப்பே இல்லை.

குறிப்பு : (அக்காலத்தில் பால்ய விவாகம் அங்கீகரிக்கப்பட்டதால் சிறு பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடத்தப்பட்டு, அவள் கணவன் இறந்தால் அப்பெண் குழந்தைக்கு தலைமுடி மழிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் விதவைக்கான கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டிய விதிகள் இருந்தன) அத்தகைய சடங்குகளை நிகழ்த்தவும் நாவிதர்களின் உதவியின்றி அந்தணர்களால் இயலாது?

அத்தகைய நாவிதர்களை எவ்வாறு தாழ்ச்சியுடையவர்கள் என்று கூற இயலும்! ஒரு தாய் தன்னுடைய குழந்தையின் கழிவுகளை பொறுமையுடன் சுத்தம் செய்கிறாள். கழிவுகளை சுத்தம் செய்பவர் தாழ்ச்சி குலத்தவர் என்று கூறினால், இவ்வுலகத்தில் உள்ள தாய்மார்கள் அனைவருமே தாழ்ச்சி குலத்தவர்கள் என்று கூற இயலுமா? இம்மண்ணில் பிறந்த அனைவருமே தமது அன்னையின் கருவில் உதித்தவர்களே! அதில் எத்தகைய வேறுபாடும், எந்த பிரிவினிடத்திலும் இல்லை. அதே சமயம் இவ்வுலகை விட்டு ஆத்மா பிரியும்போதும் அனைவரும் சென்று சேரும் இடமும் இப்பூமியே ஆகும். அங்கும் எந்த பாகுபாடும் இல்லை. இவ்வாறு இருக்க இடைப்பட்ட வாழ்நாளில் மட்டுமே ஏன் பிரிவினைகளை வளர்த்துக் கொண்டு அறியாமையால் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்?

நால் வருண கொள்கைகளும் புருஷஸுக்தத்தில் குறிப்பிட்டுள்ள வகையில், அவரவர் தம் கடமைகளை மட்டுமே வைத்து வகுக்கப்பட்ட மற்றும் பின்பற்றப்பட்ட விதிகளாகும். குலத்தை அடிப்படையாகக் கொண்டு நால் வருணக் கொள்கைகள் உதிக்கவும் இல்லை! இக்குலத்தைக் காரணம் காட்டி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அக்கொள்கைகள் திணிக்கப்படவும் இல்லை. இப்பூமியில் பிறந்த அனைவருக்கும் அவரவர் விரும்பிய தொழிலைப் புரிய சகல சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிலை, இவர்தான் புரிய வேண்டும் என்று எந்த சாஸ்திரமும் கட்டாயப்படுத்துவதில்லை.

இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகம் ஒரு அழகான தேவாலயமாகும். இந்த ஆலயத்திற்காக அவரவர் தங்களின் பங்கை எல்லா காலகட்டங்களிலும் அளித்துக் கொண்டு வருகிறார்கள். வைசியர்கள் தர்மத்தை பரப்புவதில் தங்களின் பங்கை அளித்தனர். ஸ்ரீஆதி சங்கராச்சாரியார் இவ்வுலகம் என்ற தேவாயலயத்தில், நல்ல ஒழுக்கங்கள் என்ற பாயை விரித்து, நன்னடத்தை என்ற கதவுகளை ஸ்தாபித்தார். தீய சிந்தனைகளைக் களைந்து நற்சிந்தனை வளர வால்மீகி முனிவர் திரைச்சீலைகளை அமைத்தார். தர்ம சாஸ்திரங்கள் இவ்வாலயத்திற்கு வர்ணமாக ஒவ்வொரு மகாத்மாவும், சமூகம் என்ற இந்த ஆலயத்திற்கு தன்னால் இயன்ற பங்கை அளித்து, மக்களை நல்வழிப்படுத்தியும், தர்மத்தை நிலை நாட்டியும் வந்தன.

தர்ம நெறி காக்கப்பட்டதால், மக்கள் அமைதியுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால் ஸ்ரீசங்கராச்சாரியாரின் காலத்திற்குப் பிறகு தர்மம் சீர்கேடானது. அப்பொழுது இச்சமூகத்தைக் காப்பாற்ற இறைவன் நிறைய மகான்களை அவதரிக்கச் செய்தார். சாது துக்காராம் போன்ற ஞானிகள் குல பாகுபாட்டை ஒழிப்பதற்காக அவதரித்தவர்கள். அவர்கள் கர்மா என்ற விளக்குகளை பக்தி என்ற ஞானத்துடன், நேர்மையாகிய எண்ணெய் ஊற்றி நம்பிக்கை என்ற திரியை ஏற்றி வைத்தனர்.

ஆனால் அவையாவும் இக்காலத்தில் பலனில்லாமல் போய்விட்டன. ஆறு பகைவர்கள் என்று நான் குறிப்பிட்ட காமம், கோபம், பேராசை, பெருமை, பொறாமை, பயம் இவற்றால்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அழுக்குகளை இச்சமூகம் என்ற ஆலயத்தில் சேமித்து வைத்துவிட்டனர். ஆகையால் இச்சமூக ஆலயத்தின் புனிதத்துவம் கெட்டுவிட்டது.

ஆகையால் பக்தர்களே! நான் தங்கள் அனைவருக் காகவும் கைகள் தொழுது இறைவனை வேண்டுகிறேன்! இந்தச் சமூக ஆலயத்தை சுத்தம் செய்வதற்காக அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும்.

பாபாவின் அடியவரான தாஸ்கணுவாகிய நானும் உங்களில் ஒருவனாவேன்! என்னுடைய பூர்வ ஜென்ம நற்காரியங்களின் விளைவாகவே இன்று நான் உங்களின் முன்னர் உரையாடிக் கொண்டிருக்கிறேன். இச்சமூக ஆலயத்தில் ஏற்பட்ட ஜாதிச் சண்டைகள், கருத்து வேறுபாடுகள், பழிவாங்கும் உணர்வுகள் இவை போன்ற குப்பைகளை துடைப்பதால், அவற்றை களைந்து தூர எறியும் பணியில் நானும் எனது பங்கை அளிக்க விரும்புகின்றேன்! ஆகையால் சமூக ஆலயத்தை சுத்தம் செய்ய உதவும் துடைப்பமாக என்னை பயன்படுத்திக் கொள்ளுமாறு சாய் மகராஜ் அவர்களின் பாதங்களில் நமஸ்கரித்து வேண்டுகிறேன்! இதுவே இந்த தாஸ்கணுவின் ப்ரார்த்தனையாகும்.

நாம் இப்பொழுது திருவாளர் ரத்தன்ஜியின் இல்லத்திற்கு செல்வோம்! அங்கு அவர் தம் நண்பர்கள் அனைவருக்கும் அளித்துக் கொண்டிருக்கும் தேநீர் விருந்தில், நாமும் கலந்து கொள்வோம்! வாருங்கள்! அங்கு என்ன நடைபெறுகிறது என்பதைக் காண்போம்!

அனைவரும் விருந்தில் உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்த நேரம், ஒரு மகாத்மா அங்கே வந்தார். அவர் பெயர் மௌலா சாஹேப் என்பதாகும். அவர் எப்போதும் கோதாவரி நதிக்கரையில் உலவிக் கொண்டிருப்பார். அவருடைய முகத்தில்

NOT FOR SALE

தெரிந்த அதீத ஒளியும், வசீகரமும் அனைவரையும் வியக்க வைத்தது. ரத்தன்ஜி மிகவும் மகிழ்ந்து, மௌலா சாஹேப்பிற்கு நல்ல முறையில் வரவேற்பு அளித்து, தங்களுடன் அமர்ந்து கொள்ளுமாறு வேண்டினார். அத்தேநீர் விருந்தின் முடிவில் ரத்தன்ஜி, மௌலா சாஹேப்பிற்கு ஒரு சால்வை போர்த்தி கையில் தேங்காய் அளித்து அவரிடம் ஆசீர்வாதம் வேண்டினார்.

அதுவரை பொறுமையாக இருந்த மௌலா சாஹேப் திடீரென்று, "ரத்தன்ஜி இனியும் காலம் தாமதிக்காதே! உடனடியாக ஷீரடிக்குப் புறப்படு! பாபாவை தரிசிக்கும்போது என்னுடைய வணக்கங்களைத் தெரிவிப்பாயாக! பாபாவிற்கு இணையான ஒருவரை தேடிக் கண்டுகொள்வது மிகவும் கடினமாகும்! ஒருநாள் பாபாவின் முழு ஆற்றலையும் நீ உணர்வாய்! என்று ரத்தன்ஜி தமது மனதில் நினைத்த ஆசைகள் அனைத்துமே பூர்த்தி அடையும் சமயம் வந்து விட்டதாகவும் கூறினார். இவ்வாக்கைக் கேட்ட ரத்தன்ஜி மிகவும் ஆனந்தமடைந்தார்." மௌலா சாஹேப் கூறியவாறே ஷீரடிக்கு உடனடியாகப் புறப்பட்டார்.

ரத்தன்ஜி ஷீரடியை அடைந்ததும், பாபாவை தரிசித்து வணங்கினார். பாபா ரத்தன்ஜியைப் பார்த்ததும் உற்சாகமாக "ஓ ரத்தன்ஜி நீ வந்து விட்டாயா!" நான் இன்று உன்னை நினைத்தேன்! அந்த நிமிடத்திலேயே உன் துயரங்கள், தொல்லைகள் உன்னைவிட்டு நீங்கிவிட்டன! நீ இனியும் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்! அது சரி! நீ எனக்கு ஐந்து ரூபாயை தட்சிணையாக அளிப்பாயாக! அத்தொகையில் மூன்று ரூபாயும், பன்னிரெண்டு அணாக்களும் ஏற்கனவே அளித்துவிட்டாய்!. அதைத் தவிர்த்து அந்த ஐந்து ரூபாயில் மிஞ்சியிருப்பது ஒரு ரூபாவும் நூறு அணாக்களுமே ஆகும்! அதை மட்டும் நீ இப்போது அளித்தால் போதுமானது என்றார் பாபா. ரத்தன்ஜி இதுவரை தாம் ஷீரடி வந்ததும் இல்லை. பாபாவை நேரடியாக தரிசித்ததும்

NOT FOR SALE

இல்லை. அவ்வாறு இருக்க நான் எப்போது இவருக்கு, மூன்று ரூபாவும், 12 அணாக்களும் அளித்திருக்க இயலும்! ரத்தன்ஜி மனம் குழம்பியதைப் பார்த்த பாபா, ரத்தன்ஜி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்! ஷீரடிக்கு புறப்படும் சமயம் நான் உன்னைத் தேடி வரவில்லையா? என்றார். ரத்தன்ஜி மேலும் குழப்பத்துடன் நாந்தேட் திரும்பினார். ரத்தனிஜி தமது இல்லம் திரும்பிய பிறகு தன்னுடைய வரவு செலவு கணக்கு பேரேட்டை எடுத்துப் பார்க்கும் பொழுது என்ன ஆச்சரியம்! ஷீரடி புறப்படுவதற்கு முன்னர் தம்மைக்காண வந்த மௌலா சாஹேப் அவர்களுக்கு தாம் அளிந்த விருந்தின் கணக்கை சரிபார்த்தார். அதில் சரியாக மூன்று ரூபாய் பனிரெண்டு அணாக்கள் தாம் மௌலா சாஹேப்பிற்கு தேநீர் விருந்து குறிப்பைப் பார்த்துவிட்டு, அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. எல்லா மகான்களின் உருவிலும் நான் இருக்கிறேன் என்று பாபா கூறியதை நினைவு கூர்ந்து ஆனந்தம் அடைந்தார். அது மட்டுமல்லாமல் மௌலா சாஹேப் தம்மிடம் ஷீரடிக்கு விரைந்து புறப்பட கூறியதும், தம்முடைய சார்பில் பாபாவிற்கு வணக்கங்களை தெரிவிக்க கூறியதையும் நினைத்து மிகவும் வியப்படைந்தார். மகான்கள் வெவ்வேறு இடங்களில் பிறந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்கள். அவர்களுக்குள் எந்த பேதமும் இல்லை என்ற உண்மையை பாபா, ரத்தன்ஜிக்கு மட்டுமல்ல சாயி குருசரித்திரத்தை படித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் அறிவுறுத்துகிறார்.

பாபாவின் கருணையால் ரத்தன்ஜிக்கு குழந்தைகள் பிறந்தன. சாய் பாபா என்ற கற்பக விருட்சம் நம்முடன் இருக்கும்போது வேறு என்ன குறை நமக்கு இருக்க முடியும்?

சாயி குரு சரித்திரத்தை பக்தியுடன் படித்துக் கொண்டிருக்கும் அடியவர்கள் அனைவருக்கும் தாஸ்கணுவின் அன்பான ஒரு வேண்டுகோள், என்னவென்றால் இனியாவது விழித்துக்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


கொள்ளுங்கள்! மதம், குலம் இவற்றின் காரணமாக ஒருவரை வெறுப்பதும், அவமரியாதை செய்வதும் நம்முடைய வளர்ச்சிக்கு ஒருபோதும் உதவாது என்பதை நாம் அனைவரும் மனப்பூர்வமாக உணர வேண்டும்.

மாபெரும் மகான்களான சாது ஸ்ரீஞானேஷ்வர், நர்ஸி மேத்தா, ஏக்நாத், துக்காராம் சாவதாமாலி, கபீர், கோரா கும்பார், போதலே, சமர்த்த ராமதாஸ் இவர்களைப் போன்றே நம் சத்குரு சாயி பாபாவும் மிகப்பெரிய யோகீஸ்வரர் ஆவார்! இம்மகான்களுக்குள் எந்தவித பேதமும் இல்லை! மேற்கூறிய எல்லா சாதுக்களின் உருவத்திலும் நின்று பக்தர்களை ஆசீர்வதிக்கும் சத்குரு ஸ்ரீசாயி பாபாவை நமஸ்கரிக்கின்றேன்!

NOT FOR SALE

ஒரு சமயம் தாஸ்கணுவாகிய நான் சாயி பாபாவின் முன் அமர்ந்திருந்தேன். பாபாவின் மீதுள்ள அளவு கடந்த பக்தியாலும், அன்பாலும் அவர் மீது மிகுந்த உரிமை எடுத்துக்கொண்டுள்ள பக்தர்களில் நானும் ஒருவனாவேன்! அப்போது நான் பாபாவிடம் ஏதாவது ஒரு அற்புதத்தை எனக்கு காண்பிக்குமாறு வேண்டினேன்! அவர் மீதுள்ள பக்தியால் நான் அவரை அன்று வற்புறுத்தவே செய்தேன்! பாபா நம் அனைவருக்கும் அன்னையாவார்! ஆகையால் நம் இச்சைகளை நிச்சயம் பூர்த்தி செய்வார் என்ற நம்பிக்கையுடன் அவரிடம் பாபா இன்று புனிதமான தினமாதலால், தாங்கள் ஒரு அற்புதத்தை இந்த அடியவனுக்காக நிகழ்த்த வேண்டும் என்று உரிமையுடன் வேண்டினேன்.

பாபா உடனே தமது கால் கட்டை விரலில் இருந்து கங்கை நீரை பெருகி ஓடச் செய்தார்! அதை ஸ்பரிசிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. இதைவிட எனக்கு வேறு என்ன கிட்ட இயலும்?

பாபா இதே போன்று எண்ணற்ற அற்புதங்களை, நம்பவே இயலாத அசாதரணமான நிகழ்வுகளை மிகவும் எளிமையாக

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அமர்ந்து கொண்டு நிகழ்த்திக் காட்டும் ஆற்றல் பெற்றவர். அவர் நிகழ்த்திய அற்புதங்களில் ஒருபோதும் அவர் பெருமிதம் கொண்டது இல்லை.

1918இல் ஷிமோலங்கண் என்று அழைக்கப்படும் விசேஷ வைபவம், பாபா தன் சரீரத்துடன் இறுதியாக பங்கெடுத்த விழாவாகும். இவ்விழா, மாதா துர்கை அசுரர்களை அழித்து, மக்களைக் காப்பாற்றிய வெற்றி விழாவாக, ஒவ்வொரு ஆண்டும் விஜயதசமி தினத்தில் கொண்டாடப்படுகிறது. மாதா துர்கையின் வெற்றி விழாவை கொண்டாடும் விதத்திலும், தம்மையும், தமது கிராமத்தையும் பீடித்திருந்த துர்சக்திகள் நீங்கிச் செல்வதற்காகவும், அனைவரும் தெய்வத்திருவுருவத்துடன் தமது கிராம எல்லையை தாண்டும்படியான இவ்விழாவை, கொண்டாடும் வழக்கமாக கொண்டிருந்தனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த புண்ணிய தினத்தில், பாபா என்ற மனித உருவில் அவதரித்த தெய்வம் தம் சரீரத்தை துறந்தார் என்ற உண்மையை ஷீரடி வாழ் மக்களால் உணர முடியாது தவித்தனர். பாபா தமது உடலை மட்டுமே துறந்தார்.

பாபாவின் உடலுக்கு இந்துக்களும், இஸ்லாமியர்களும் இணைந்து இறுதி மரியாதை செலுத்தும் வண்ணம் வைக்கப்பட்டிருந்தது. பாபா தமது சரீரத்தை தியாகம் செய்த பின்னரும் தமது மதம் குறித்து எவரும் சர்ச்சையில் ஈடுபடக்கூடாது என்ற நோக்கத்தில் ஸ்ரீதாஸ்கணுவாகிய அடியேனுடைய கனவில் காட்சி அளித்து தான் மகா சமாதி அடைந்து விட்டதை உணர்த்தினார்!

கனவில் நான் கண்ட அந்த அற்புதக் காட்சியை அனைவருக்காகவும் எடுத்துரைக்க விரும்புகின்றேன்! ஸ்ரீசாய்பாபா, ஸ்ரீராம அவதாரத்தின் நாயகனாக விளங்கிய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீராமரின் உருவத்தில் வைகுண்டத்திற்கு செல்லும் அந்த காட்சியைக் கண்டேன்! அக்காட்சியை விவரிக்க என்னிடத்தில் போதுமான வார்த்தைகள் இல்லை!

ஸ்ரீஹரியாக சாயிபாபாவை கண்ட நான், அவருடைய ஷிமோலங்கண் என்ற ப்ரபஞ்ச எல்லையை கடந்த யாத்திரை என்பதை அறிந்து கொண்டேன்!

ஸ்ரீவைகுண்டத்தில் மகாவிஷ்ணு எவ்வாறு தமது சரீரத்தை துறந்த மாபெரும் நீதிமான்களும், தர்மவான்களும், ரிஷிகளான சனகர், சனந்தர், சுகர், ப்ரஹலாதர், கன துருவர், விபீஷணர், நாரதர், தும்புரு, மாருதி, சபரி, சுக்ரிவர், நந்த கோபர்கள், யசோதா, பீமன், அர்ஜுனன், தர்மராஜன், ஸ்ரீசங்கரா, மாத்வாச்சாரியா, ராமானுஜர், நவநாராயணர்கள் என்று அழைக்கப்படும் மச்சநாதர், கோரக்கர், கஹினிநாதர், சோபானதேவர், செங்தேவர், நாமதேவர், கோராகும்பார், தாமாஜிபந்த், துளசிதாஸர், தோஹிதாஸ், ஏக்நாத்மகராஜ், சாவதாமாலி, போதாலேபுவா, ஸ்ரீசமர்த்த இராமதாஸ், துக்காராம் மகராஜ், சோகாமஹர், நர்ஸிமேத்தா மற்றும் கமலதாஸர் முதலியவர்களோடு ஸ்ரீசாய்பாபாவையும் வரவேற்று அழைத்துச் சென்றார்.

NOT FOR SALE

பாபாவின் வைகுண்ட வருகையைப் பற்றி அறிந்த கமலதாஸர் ஓடிவந்து சத்குருவின் பாதங்களைத் தழுவிக் கொண்டு "ஓ என் தந்தையே தாங்களின் வைகுண்ட வருகைக்காக நாங்கள் அனைவரும் எத்தனை நாட்களாக காத்திருந்தோம்!" என்று எண்ணி நான் மிகுந்த ஆனந்தம் கொள்கிறேன். அவர் கூறியதைக் கேட்ட அனைத்து ரிஷிகளும், மகான்களும் கமலதாஸரிடம் தம்முடைய தந்தையான கபீர் மகராஜ் இன்று நம் ஆத்மாவோடு இணைந்துவிட்டார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வைகுந்த உலகத்தில் உற்சாகமாக துந்துபியோடும், திவ்ய மந்திரங்களும், இசையும் ஒலிக்கும் வேளையில் நம் சத்குரு ஸ்ரீசாய்பாபா, ஸ்ரீமன் நாராயணருடன் இணைந்தார்.

அடியேன் கனவில் கண்ட இந்த அற்புதக் காட்சியை காகிதத்தில் முழுமையாக வரைவது மிகவும் கடினமான செயலாகும்!

பாபாவின் உடல் வைகுந்த உலகத்திற்கு சென்ற இக்காட்சியை, கனவில் கண்ட நான், அவரது திருவடி தாமரை மலர்களுக்கு எனது நமஸ்காரத்தைச் செய்து, திருவாளர் காகா சாஹேப் தீட்சித் அவர்களால் பெருமளவு அடியவர்கள் சூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, இறுதியாக ஸ்ரீமான்பூட்டியின் வாதாவில் வைக்கப்பட்டது. ஸ்ரீகோபால் முகுந்த பூட்டி மிகுந்த செல்வந்தர். ஆனால் அதேநேரம் பாபாவின் பரம பக்தரும், மகான்களின் சேவைக்காக தம்மையே அர்பணித்துக் கொண்டவராவார். அவருடைய வாதாவில் பாபாவின் உடல் வைக்கப்பட்டு இன்று உலகம் முழுவதும் ஷீரடி என்ற புனித ஸ்தலத்திற்கு சென்று அவரது மகா சமாதியை தரிசிக்கச் செய்த புண்ணியம் பெற்றவர் ஸ்ரீமான் பூட்டியாவார், பாபாவின் அன்பைப் பெற்ற அடியவர்கள் ஷீரடியில் மகா சமாதியை தரிசித்த பின்னர் அவரது அற்புதங்களை இன்றளவும் தங்களது வாழ்க்கையில் நிகழ்வதைக் கண்டு, அத்தகைய அற்புதங்கள் குறித்து அனைவரிடமும் பகிர்ந்து கொண்டும் வருகின்றனர்.

ஆனால் எவருமே இன்றுவரை பாபா ஷீரடியை விட்டுச் சென்று விட்டதாகவோ அல்லது இவ்வுலகை விட்டுச் சென்றதாகவோ கருதவில்லை. அவ்வாறு ஒரு வேளை எவராவது பாபா தம்மைவிட்டுச் சென்றதாக நினைத்துக் கொண்டிருந்தால் அது அவர்களின் அறியாமையாகும். பாபா என்ற மகான் பிறப்பும்,

இறப்பும் அற்றவர். முடிவில்லாதவர். அழிவற்ற ஆற்றலை உடையவர். அவர் எல்லா வேறுபாடுகளையும் கடந்தவர் ஆவார். பரந்து விரிந்த கடலைப் போன்ற ஞானத்தை உடையவர்.

எவ்வாறு ஸ்ரீசமர்த்த இராமதாஸருக்கு ஸ்ரீகல்யாண் என்பவர் முக்கிய சிஷ்யராக இருந்தாரோ, அவ்வாறே சாயிபாபாவிற்கு ஸ்ரீநானா சாஹேப் சந்தோர்கர் திகழ்ந்தார். ஹரிபந்த், காகா தீஷித், ஸ்ரீமான்பூட்டி, மகாஜன், ஹர்தா சாதுபாய், கோவிந்தராவ் தாபோல்கர், பாபா தர்கட், மோரேஷ்வர் ப்ரதான், பாசாஹேப் பாடே, புருஷோத்தம்ராம் அவஸ்தே, ரகுநாத் டெண்டுல்கர், அவரது மனைவி சாவித்திரி பாய், மாலிகாவ் பக்கிரி, புரந்தரே, நானாசாஹேப் நிமோண்கர், தாத்யா பாடில், மாதவ்ராவ் தேஷ்பாண்டே, ராமசந்திர பாட்டில் போன்ற அனைவரும் பாபாவின் மிகுந்த அன்பைப் பெற்றவர்கள். மேற்கூறிய இவர்கள் மட்டுமல்ல நாம் அனைவருமே பாபாவின் அன்புக்குரியவர்களே ஆவோம்!

ஓ சாயி! நான் தங்கள் முன்னால் மண்டியிட்டு என்னைப் பாதுகாக்கவும் தங்களது கருணைக்கு நான் பாத்திரமானவனாகும் படியாகவும், என்னை மாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன். நான் தங்களின் பாதத்தில் படர்ந்த புழுதியில் ஒரு துளியாவேன்! இந்த உலகத்தின் பந்தங்களில் இருந்து விடுபடச் செய்த தாம் தம்முடைய பாதங்களில் இருந்து என்னைப் புறந்தள்ளி விடாதீர்கள் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்!

தாஸ்கணுவாகிய நான் எனது குருவான திரு. வாமன் சாஸ்திரி சமாதி அடைந்துவிட்டதால் அநாதைக் குழந்தைப் போல செய்வதறியாது தவிக்கின்றேன்! என்னையே என்னால் கவனித்துக் கொள்ள இயலாத அளவிற்கு பக்குவமற்றவனாக இருக்கின்றேன். ஆதலால் தாமே என்னை காத்து இரட்சிக்குமாறு வேண்டுகின்றேன்! எல்லா சாதுக்களின் ரூபத்திலும் நான் தங்களையே காண்கின்றேன்!


NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


எனது குருவான திரு. வாமன சாஸ்திரியும் தாமே ஆவீர்கள். அதுமட்டுமல்லாமல் என்னிடம் கண்டிப்பான அதே சமயம் அன்பைப் பொழியும் தந்தையாக தாம் விளங்குகின்றீர்கள்!

ஸ்ரீசாய் பாபாவின் தெய்வீக சரித்திரம் எல்லையற்றது. சமுத்திரத்தைப் போல மிகவும் ஆழமானது. அத்தகைய மகானின் லீலைகள் அனைத்தையும் விவரிப்பது என்பது எவருக்குமே சாத்தியமாகாத ஒன்றாகும். சாயி குரு சரித்திரத்தை பக்தியுடனும், நம்பிக்கையுடனும் படித்து பாராயணம் செய்யும் அனைவரும் தங்கள் வாழ்வில் எல்லா நலன்களையும் பெறுவார்கள் என்பது சத்தியமாகும். இதுவே சாயிபாபா என்ற தெய்வத்திடம் நான் சமர்ப்பிக்கும் கோரிக்கையாகும். சாயி குருசரித்திரத்தைப் பாராயணம் செய்தவர்கள் ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனைப் பெறுவார்கள் என்று பாபாவை சாட்சியாக நிறுத்தி அனைவருக்கும் அறிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

ஜெய் சாய்ராம்




NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், மகாராஷ்டிரா தேசத்தின் "சந்த்கவி" என்று அனைவராலும் போற்றப்படுகிறார். மகாராஷ்டிரா தேசத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் வாழ்ந்து வரும் புலம் பெயர்ந்த இந்தியர்கள் அனைவரிடத்தும், பக்தி நெறியை தீவிரமாக பரவச் செய்தவர்களில், ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றார்.

இறைவனின் கருணையை, எளிதில் அடையச் செய்யும், சர்வசக்தி வாய்ந்த மகான்களின் மகிமையை, ஸ்ரீ தாஸ்கணு இவ்வுலகிற்கு எடுத்துரைத்தார். ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், தம் வாழ்நாள் முழுவதும் மகான்களின் தொடர்பிலேயே வாழ்ந்தவர். அவர் அனைத்து மகான்களையும் போற்றி வணங்கினார். எவ்வாறு ஆகாயத்தில் இருந்து விழும் மழைநீர், மேடு, பள்ளம் பார்க்காமல் அனைத்துப் பகுதிகளிலும் சீராகப் பொழிந்து, அனைவரின் தாகத்தையும் தணிக்கின்றதோ அதைப்போல, ஸ்ரீ தாஸ்கணு பல மாபெரும் மகான்களின் திவ்ய சரித்திரங்களை, பாரபட்சமின்றி இவ்வுலகிற்கு அருளியுள்ளார். ஒருவேளை ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் இத்திருப்பணியை செய்திராவிட்டால் இன்று பல மகான்களைக் குறித்த வரலாற்றை நம்மால் அறிந்து கொள்ள இயலாது.

ஸ்ரீ தாஸ்கணு இத்திருப்பணியை நிறைவாகவும், சீரிய முறையிலும் செய்து முடிப்பதற்காக, தமது வாழ்நாள் முழுவதையும் தியாகம் செய்துள்ளார். தம் வாழ்நாளில் மகான்களையும், இறைவனையும் குறித்து சுமார் இரண்டரை லட்சம் கவிதைகளை எழுதியுள்ளார். ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களின், இம்மாபெரும் பணிக்கு, முழுமையான காரணமாக அமைந்தவர், நம் சத்குரு ஷீரடி ஸ்ரீ சாய்பாபா அவர்களே ஆவார்.

NOT FOR SALE

நம் சத்குரு சாய்பாபா அவர்கள், ஸ்ரீ தாஸ்கணு அவர்களின் அறிவையும், ஆற்றலையும் திசை திருப்பி, ஆன்மீகத்திற்குள் நுழைந்து இவ்வுலகம் முழுவதும் அவருடைய பெருமையை உணரச்செய்தவர்.

ஸ்ரீ தாஸ்கணு பல மொழிகளில் சொற்பொழிவாற்று வதற்கும், இலக்கணப் பிழையின்றி எழுதுவதற்கும், அற்புதமாக கவிதைகள் புனைவதற்கும், இளம்பருவத்திலேயே தேர்ச்சி பெற்று இருந்தார். அவர் நம் சத்குரு ஷீரடி ஸ்ரீ சாய்நாதருடன் கொண்டிருந்த நெருக்கமான உறவை, எவராலும் வெறும் வார்த்தைகளால் எடுத்துரைக்க இயலாது. பாபாவின் அளவு கடந்த அன்பும், கருணையும், ஆசிர்வாதமுமே ஸ்ரீ தாஸ்கணு அவர்களை "சந்த்கவி" என்ற பட்டத்திற்கு தகுதியாக்கியது. பாபாவின் மேல் ஸ்ரீ தாஸ்கணு எடுத்துக்கொண்ட உரிமையை வேறு எவரிடத்திலும் காண இயலாது. ஸ்ரீ தாஸ்கணு, பாபாவை அன்னையாகவும், தந்தையாகவும், உயிர்த் தோழராகவும், குருவாகவும் இறுதியாக தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டார்.

"காவல்துறையில்" சமான்ய பணியாளராக இருந்த, என்னை, உலகம் போற்றும் "சந்த்கவி" யாக உயர்த்திய பெருமை, ஸ்ரீ சாய்நாத் மகராஜ் அவர்களையே சாரும் என்று ஸ்ரீ தாஸ்கணு தமது கையேட்டில் பதிவு செய்துள்ளார்.

இப்போது நாம் ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்களின் வரலாற்றைக் காண்போம்!

1868 ஆவது ஆண்டில், தை மாதம் (ஜனவரி) 6ம் தேதி ஒரு புனிதமான ஏகாதசி தினத்தன்று, அகமத் நகரில் இருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள, அகோல்னர் என்ற இடத்தில், திருமதி சாவித்ரிபாய் என்ற அம்மையாருக்கும், திருவாளர் ஸ்ரீ தத்தாத்ரேய சஹறஸ்ரபுத்தே என்ற தூய்மையான, தீவிர விஷ்ணு பக்தருக்கும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பிறந்தவரே ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் ஆவார். குழந்தைப் பருவத்தில், அவர் ஸ்ரீ கணபதி தேவரைப் போன்ற பெருத்த வயிருடன், திடகாத்திரமான தேகத்துடன், தீர்க்கமான கண் பார்வையுடன் இருந்த காரணத்தால், அவரது தாத்தா அவருக்கு கணபதி என்று பெயர் சூட்டினார். பின்னாளில் கணபதி என்ற அந்த பெயர், நம் சத்குரு ஷீரடி சாய்நாதரால் அன்போடு கணு என்று அழைக்கப்பட்டது. பாபா, "கணு" என்று அன்புடன் அழைத்த காரணத்தினாலேயே பாபவின் தாஸரான "கணு", "தாஸ்கணு" என்று அனைவராலும் போற்றப்படுகிறார்.

ஸ்ரீ தாஸ்கணு பிறந்தது முதல், உடல் நிலை சரியில்லாமல், தனது அன்னையிடம் பால் அருந்தாமல் தொடர்ந்து அழுது கொண்டே இருந்தார். இதைக்கண்ட அவரது அன்னை தமது குலதெய்வமான "கண்டோபா" என்று அழைக்கப்படும், காவல் தெய்வத்திடம், மனதார ப்ரார்த்தனை செய்தார். தமது குடும்பத்தில் முதல் வாரிசான, ஸ்ரீ தாஸ்கணுவை காப்பாற்றுமாறு வேண்டியவுடன், என்ன அற்புதம்! குழந்தையின் அழுகுரல் நின்றது. உடல்நிலை சீரடைந்து, தன் அன்னையிடம் பால் அருந்தியது. இதைப் பார்த்த அவரது அன்னை, அக்குழந்தையிடம் ஒரு தெய்வீகத்தன்மை ஒளிந்திருப்பதை உணர்ந்து கொண்டார்.

ஸ்ரீ தாஸ்கணு, குழந்தைப் பருவத்திலேயே மிக அசாத்தியமான கற்பனைத்திறனைப் பெற்று இருந்தார். தமது தாய்மொழியான மராத்தியில், எல்லோரையும் குறித்து, விமர்சித்தும், பாராட்டியும், போற்றியும், கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அவரது குடும்பம் முழுவதும் பக்தி நெறியில் சிறந்து விளங்கியதால், ஸ்ரீ தாஸ்கணு இறை உணர்வுடன், பஜனைப்பாடல்களும், திவ்ய நாம சங்கீர்த்தனைகளையும், பக்தி நெறியூட்டும் கதைகளையும், கேட்டே வளர்ந்து வந்தார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மனம் முழுவதும் கவிதைகள் புனைவதிலும், பாடல்கள் எழுதுவதிலும், சிந்தனை இருந்த காரணத்தால், பள்ளிக்குச் சென்று மற்ற பாடங்களை பயில அவர் விரும்பவில்லை.

ஏழு வயது நிரம்பிய போதும் கூட, பள்ளிக்குச் செல்ல, சிறிதும் விரும்பாத காரணத்தால், அவரது பெற்றோர் கவலையுற்றனர். அகமது நகர் ஜில்லாவில், ஸ்ரீ தாஸ்கணுவின் குடும்பம், உயர்ந்த அந்தஸ்துடனும், அனைவரும் மிகுந்த மரியாதையுடன் வணங்கிப் போற்றிய ஒரு குடும்பமாகத் திகழ்ந்தது.

அக்குடும்பத்தின் முதல் வாரிசான ஸ்ரீ தாஸ்கணு, கல்வியில் நாட்டம் இல்லாமல், பாடல்களையும், கவிதைகளையும் எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு அவரது குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். ஒருவேளை பூணூல் இடும் சடங்கை செய்து விட்டால், தங்களது வாரிசு முறையாக கல்வி பயிலத் துவங்கி விடுவான் என்று நம்பிக்கையோடு அச்சடங்கையும் நிறைவேற்றினர்.

ஆனால், ஸ்ரீ தாஸ்கணு அதற்கும் அஞ்சவில்லை. தமக்கு விருப்பமில்லாத ஒன்றை, தாம் புரிய இயலாது என்று கூறிவிட்டார். ஒரு நாள் அவர் கல்வி பயின்ற பள்ளியில், ஒரு ஆசிரியர், மாணவ மாணவிகளிடையே பிரிவினை ஏற்படுத்தும் விதத்தில், மாணவர்களைப் பற்றி தவறாக விமர்சித்துவிட்டார். ஸ்ரீ தாஸ்கணுவால் அந்த விமர்சனத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆகையால் அப்பருவத்திலேயே, அந்த ஆசிரியர் செய்து தவறை, ஒரு பாடல் மூலம் அற்புதமாக அனைவருக்கும் பாடிக்காண்பித்தார். அவருடன் சக மாணவர்கள் அனைவரும் அந்தப் பாடலை கோஷ்ம் போட்டு பாடவும் செய்தனர். இதைக்கேட்டு ஆத்திரமடைந்த பள்ளி நிர்வாகம், தாஸ்கணுவை பள்ளியிலிருந்து நீக்கிவிட்டது. இந்நிகழ்வு அவரது குடும்பத்தினரை மிகவும் பாதித்தது. அவ்வூரில் மிகுந்த செல்வாக்குடன் இருந்த தமது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குடும்பத்திற்கு, ஸ்ரீ தாஸ்கணுவால் அவப்பெயர் நேரிட்டதே என்று அனைவரும் வருந்தினார்கள்.

இக்காரணங்களால், ஸ்ரீ தாஸ்கணு அவரது தாய்மாமாவின் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதற்கிடையில், ஸ்ரீ தாஸ்கணுவிற்கு இல்லத்திலேயே கல்வி கற்பிக்கலாம் என்று எண்ணி, ஒரு ஆசிரியரை நியமித்தனர். ஆனால் அவர் மிகவும் கண்டிப்பானவர். ஸ்ரீ தாஸ்கணு சரியாகக் கல்வி பயிலாத காரணத்தால், அவரை பலவாறு அடித்து துன்புறுத்த ஆரம்பித்தார். இதன் காரணமாகவே, கல்விச்சாலைக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணமே ஸ்ரீ தாஸ்கணுவிற்குத் தோன்றவில்லை.

ஸ்ரீ தாஸ்கணுவின் தாய்மாமாவான, திருவாளர் ஜனார்தனபந்த் என்பவர், சங்கம்நேர் மாவட்டத்தின் மல்லதாராக ஒரு பொறுப்பான பதவியில் இருந்தார். அவர் எவ்வாறாவது தாஸ்கணுவிற்கு கல்வி பயிற்சி அளித்து, அரசாங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியில் அமர்த்த வேண்டும் என்று விருப்பம் கொண்டார். ஆகையால் 1886 - 1889 இல் ஸ்ரீதாக்கூர் என்ற ஆங்கிலப் பேராசிரியரை நியமித்து தாஸ்கணுவை விசேஷமாக கவனித்து, கல்விப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார்.

NOT FOR SALE

ஆனால் தாஸ்கணுவின் சிந்தனையும், நாட்டமும் அவ்வூருக்கு புதிதாக வந்திருந்த நாடகக் குழுவின் மேல் மட்டுமே இருந்தது தமாஷா (TAMASA) என்று மராத்தியில் அழைக்கப்படும், அவ்வகை நாடகக் குழுவினர், தங்களின் பேச்சுத் திறமையால், அரசியல்வாதிகளையும், ஆங்கில ஏகாதிபத்தியத்தையும் விமர்சித்து பேசி, பாடல்களைப்பாடி மக்களைக் கவர்ந்தனர். தாஸ்கணுவிற்கு இக்கருத்தில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. அவர் முதன்முதலாக மராத்திய மொழியில் லாவணி என்று

சொல்லப்படும், சமூக சிந்தனை மிகுந்த கருத்துக்களை பாடல் வடிவமாக இயற்றிப் பாடத்துவங்கினார். அவருடைய இந்த முயற்சியை, அவரது நண்பர்கள் அனைவரும் வியந்து பாராட்டினர். சிறிதும் யோசிக்காமல், தன் மன எண்ணங்களை உடனுக்குடன், இலக்கணத்தோடு, அற்புதமான கவிதை வடிவில் இயற்றி பாடுவது என்பது மிகவும் கடினமான செயலாகும்.

ஸ்ரீ தாஸ்கணுவின் இத்திறமை அவ்வூர் முழுவதும் பரவியது. அவருடைய கவிதைகளை விரும்பிக் கேட்பதற்கென்றே எப்போதும் அவரைச் சுற்றி நண்பர்களும், நாடகக் குழுவினரும் குழுமியிருந்தனர். இச்செயல் அவருடைய கல்விப் பயிற்சியை வெகுவாகப் பாதித்தது.

அவருடைய தாய்மாமாவான திரு. ஜனார்தனபந்தின் செல்வாக்கையும், மரியாதையையும் குறைப்பதாக அமைந்துவிட்டது. அவருக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை! தாஸ்கணு ஏன் இவ்வாறு இருக்கிறான்! அவனுடைய வாழ்க்கையைக் குறித்தும், முன்னேற்றத்தைக் குறித்தும் சிறிதும் கவலையின்றி வேடிக்கையாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருக்கிறானே என்று மனம் வருந்தினார்.

இந்தியாவில் எந்த மாநிலத்தில் இருந்தாலும், தாஸ்கணு கல்வி பயிலமாட்டார் என்று கருதி, அவரை இங்கிலாந்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டன. ஆனால் தாஸ்கணு தன்னுடைய விருப்பத்திற்கு மாறான எச்செயலையும் புரிவதில்லை என்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்ததால், அம்முயற்சியும் தோல்வியடைந்தது. ஒருவர் தன்னுடைய வாழ்க்கையை தாமே தீர்மானிக்க வேண்டும் என்று நினைப்பதும் தவறு, அதே சமயத்தில் மற்றவர்கள் தீர்மானிக்கட்டும் என்று கருதுவதும் தவறாகும். நம்முடைய வாழ்க்கையை இறைவன்

NOT FOR SALE

மட்டுமே தீர்மானிப்பார். அந்த உண்மையை ஸ்ரீ தாஸ்கனுவிற்கு சத்குரு சாய்பாபா வெகு விரைவிலேயே தெளிவாக உணர்த்தும் சமயமும் வந்துவிட்டது. இறைவனுக்கு மட்டுமே தெரிந்த அந்த தெய்வ இரகசியத்தை சாமானிய மனிதர்களாகிய நாம் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?

ஸ்ரீ தாஸ்கனுவின் பெற்றோர்கள், தங்கள் புத்திரரை, அவரது மற்றொரு மாமாவான திருவாளர் பல்வந்த் சதாசிவம் என்பவரிடத்தில் அனுப்பி வைக்க திட்டமிட்டனர். திருவாளர் பல்வந்த் சதாசிவம், பரோடாவில் ஒரு உயர் அதிகாரியாக இருந்தார். அவர் தம்முடைய அலுவலகத்தில், தாஸ்கனுவிற்கு ஒரு பதவியை அளித்து, அவருக்கு வேலை செய்வதைக் குறித்து விவரங்களைக் கற்பித்தார். ஒருவேளை கல்வியில் நாட்டமில்லாதவர், வேலை பார்ப்பதில் விருப்பம் ஏற்பட்டால், ஒரு நல்ல நிலைக்கு தம்மை தயார் செய்து கொள்வார்! என்ற நம்பிக்கையோடு, ஸ்ரீ தாஸ்கனுவிற்கு ஒரு பணியையும் அளித்தார். விதியின் கைகளை யாரும் கட்டிப்போட இயலாது என்பதே சத்தியம்! அந்த வேலையிலும் ஸ்ரீ தாஸ்கனுவிற்கு விருப்பமில்லை. ஆதலால் அப்பணியையும் உதறிவிட்டார். ஆறு மாதங்கள் வரை ஸ்ரீ தாஸ்கனுவை மாற்றுவதற்கு மிகுந்த முயற்சியை மேற்கொண்ட அவரது மாமா, திடீரென்று தாஸ்கனு பரோடாவை விட்டுவிட்டு தனது ஊருக்கு சென்றதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்.

இப்பொழுது அவரது பெற்றோரின் அடுத்தக் கட்ட நடவடிக்கை துவங்கியது. தாஸ்கனுவிற்கு திருமணம் செய்து வைத்து விட்டால், அவர் தன் பொறுப்பை உணர்ந்து வருமானம் ஈட்டி தனது குடும்பத்தைக் கவனித்து கொள்வார் என்று நினைத்து அவருக்கு சரஸ்வதிபாய் என்ற குணவதியை, திருமணமும் செய்து வைத்து விட்டனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பொதுவாக பெற்றோர்கள், தங்கள் புத்திரர்களின் நடவடிக்கைகளை சரி செய்ய இயலாதபோது, திருமணம் செய்து வைத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று தீர்மானித்து விடுகிறார்கள். திருமணமாகி தன் கணவருடன், இல்லறத்தில் பல்வேறு கனவுகளோடு அடி எடுத்து வைக்கும் ஒரு பெண், தங்கள் புத்திரனை திருத்தி, பின்னர் அவருடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவாள் என்று ஆதிகாலம் முதல் இன்றுவரை எல்லா பெற்றோர்களும் நினைத்துக் கொண்டு தம்முடைய விருப்பத்தை அப்பெண்ணின் மீது திணித்து விடுகின்றார்கள்.

இதற்கு ஸ்ரீ தாஸ்கணுவின் துணைவியான சரஸ்வதிபாயும் விதிவிலக்கு அல்ல. இயற்கையிலேயே அமைதியான குணமுடைய சரஸ்வதிபாய், தன் கணவரின் இத்தகைய நிலையைக் கண்டு, அவர் மனம் புண்படும் விதத்தில், ஒரு வார்த்தைக் கூட கூறவில்லை. அதே சமயத்தில், தன் கணவரின் இலட்சியத்தை நிறைவேற்றுமாறு, சதாசர்வ காலமும் இறைவனை வழிபடுவதிலேயே தன் பொழுதை கழித்தாள். தன் கணவருக்கு ஒரு உயர்ந்த நிலையை அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்தார். அத்தகைய உயர்ந்த நிலையை ஸ்ரீ தாஸ்கணு ஆன்மீகத்தில் மட்டுமே தான் அடையவிருக்கிறார் என்பதை அப்போது ஒருவரும் அறியவில்லை. இதுவே விதியின் விளையாட்டாகும்.

ஒரு நாள் ஸ்ரீதாஸ்கணுவின் மாமாவின் மனைவி, மனம் பொறுக்க இயலாமல், ஸ்ரீ தாஸ்கணுவை கோபித்துக் கொண்டு அவமானப்படுத்தும் விதமாக பல சொற்களைக் கூறிவிட்டார். அதுவரை அந்த இல்லத்தில், அவரை எவரும் கடிந்து கொண்டதில்லை. தனக்கென்று ஒருவேளை உணவைக்கூட சம்பாதிக்க இயலாத நிலையில், திருமணமும் செய்து கொண்டு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கவிதைகளை எழுதிக் கொண்டிருப்பதும் பாடிக்கொண்டிருப்பதும் ஒரு ஆண்மகனுக்கு அவமானத்தை உண்டாக்கும் செயலாகும் என்று கூறிவிட்டார். இவ்வாறெல்லாம் மரியாதைக் குறைவாக பேசத்துவங்கியவுடன், அதுவரை பொறுமையாக இருந்த ஸ்ரீ தாஸ்கணு, இதுவும் இறைவனுடைய நாடகமே என்பதை உணர்ந்து கொண்டார், உடனடியாக வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

ஸ்ரீ தாஸ்கணு தமது கிராமத்தை விட்டு வெளியேறி, தம் நண்பரான திருவாளர் விஷ்ணுபந்த் என்பவரைத் தேடி வந்தார். ஸ்ரீ தாஸ்கணுவிற்கு அடைக்கலம் அளித்த திரு விஷ்ணுபந்த் அவருக்கு உறுதுணையாக இருந்தார். திருவாளர் விஷ்ணுபந்தின் இந்த பேருதவியை ஸ்ரீ தாஸ்கணு பின்னாளில், தாம் எழுதிய பல்வேறு கட்டுரைகளில் மனம் நெகிழ்ந்து, அவர் தமக்கு செய்த உதவியை தம் வாழ்நாள் வரை மறக்க இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ தாஸ்கணு, ஒரு பணியில் அமரும் சமயமும் வந்துவிட்டது. ஒரு நாள், அவர் கடைவீதியில் நடந்து கொண்டிருந்த போது, ஒரு ஆங்கிலேய காவல்துறை அதிகாரி அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலம், திரு.கென்னடி என்ற அந்த அதிகாரி, நம் தாஸ்கணுவின் குடும்பத்தின் செல்வாக்கையும், அந்தஸ்தையும் நன்றாக அறிந்தவர். அவர் தாஸ்கணுவை அழைத்து அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று விசாரித்தார். அப்போதுதான் ஸ்ரீ தாஸ்கணு அந்த அதிகாரியிடம், மனம் திறந்து, தனக்கொரு வேலை இல்லாமல் வருந்துவதாகவும், தமது குடும்பத்தினருக்கு இனியும் பாரமாக இருக்க தாம் விரும்பவில்லை என்றும் கூறினார். அவருடைய நிலையைக் கண்ட, அந்த அதிகாரி உடனடியாக அவரை தன்னுடன் வருமாறு கூறி அழைத்துச் சென்றார்.

NOT FOR SALE

காவல்துறை அலுவலகத்தில் ஸ்ரீ தாஸ்கணுவிற்கு ஒரு ஆச்சர்யம் காத்துக் கொண்டிருந்தது. அவர் அங்கு சென்றவுடன் அந்த அதிகாரி, காவல்துறையில் ஒரு அலுவலர் பதவி காலியாக இருப்பதாகவும், ஸ்ரீ தாஸ்கணுவிற்கு அப்பணியை ஏற்றுக் கொள்வதற்கு விருப்பம் இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறினார்.

இச்செய்தி ஸ்ரீ தாஸ்கணுவிற்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. உடனடியாக அப்பதவியில் சேர்ந்து தமது பணி எண் (பெ-727) என்பதையும் பெற்றுக் கொண்டுவிட்டார். அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட மாத சம்பளம் ரூ.9 ஆக இருந்தது. இந்நிகழ்வு ஸ்ரீ தாஸ்கணுவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவரது ஆன்மீக வாழ்க்கைக்கும் இதுவே வித்திட்டது.

ஷிரிங்கோண்டே (Shringonde) என்ற கிராமத்தில்தான் முதன்முதலாக ஸ்ரீ தாஸ்கணு காவல் துறையில் பணியில் ஈடுபட்ட இடமாகும். இப்பகுதி ஆலயங்கள் நிறைந்த ஒரு புண்ணியத் தலமாகும். இந்தப் புண்ணிய தலத்தில் தான் ஸ்ரீ தாஸ்கணு, தமது குருவான ஸ்ரீ வாமன் சாஸ்திரி அவர்களைப் பெற்றார்.

ஸ்ரீ வாமன் சாஸ்திரி, அப்பிரதேசத்தின் மிகச்சிறந்த பண்டிதர்களுள் ஒருவரும், தீவிர பக்தரும் ஆவார். அவர் சில சமஸ்கிருத நூல்களை தேடிக்கொண்டிருந்தபோது, அவை திருவாளர்.பனாகே (Shri Bhanage) அவர்களிடம் இருப்பதாக அறிந்து கொண்டார். திருவாளர்.பனாகே, ஸ்ரீ தாஸ்கணு பணிபுரிந்து கொண்டிருந்த ஷிரிங்கோடு பகுதியில் தான் வசித்தார். ஆதலால் திரு வாமன் சாஸ்திரி, திரு பனாகே அவர்களைக் காண்பதற்காக, ஷிரிங்கோடு பகுதிக்கு வருகை தந்தார். யாரை எவரிடத்தில் சேர்க்க வேண்டுமோ அது இறைவனுடைய தீர்மானம் ஆகும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இறைவனின் சங்கல்பத்தின்படி, காவல்துறை அதிகாரிகள், ஸ்ரீ தாஸ்கணுவை, ஸ்ரீ வாமன் சாஸ்திரி அவர்களுக்கு துணையாகச் செல்லுமாறு பணித்தனர். தமது அலுவலகத்தின் சார்பில் பணியாற்றுவதனால், காக்கிச் சீருடையில் ஸ்ரீ தாஸ்கணு திருவாளர் வாமன்சாஸ்திரி அவர்களைக் காண்பதற்கு வருகை தந்தார். அதுவரை அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததே இல்லை.

அவர்களின் முதல் சந்திப்பிலேயே, ஸ்ரீ வாமன் சாஸ்திரி அவர்களுக்கு ஸ்ரீ தாஸ்கணுவின் கடமையுணர்வு, அவர் மீது ஒரு மரியாதையை ஏற்படுத்தியது. ஆனால் ஸ்ரீ தாஸ்கணு, திரு வாமன் சாஸ்திரியின் பணி குறித்து ஒரு சிறிதும் அக்கறை இல்லாதவராக இருந்தார். திரு வாமன் சாஸ்திரியின் தெய்வீகமான பணியை அவர் உணர்ந்து கொள்ளவில்லை. ஒரு நாள் ஸ்ரீ வாமன் சாஸ்திரி, ஷிரிங்கோண்டேவிற்கு வரவேண்டியிருந்தது.

திரு.வாமன் சாஸ்திரி அவர்களுக்குத் துணையாகச் செல்ல வேண்டிய பணி, ஸ்ரீ தாஸ்கணுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ, அன்று திரு வாமன் சாஸ்திரி அவர்களால் ஷிரிங்கோடுவிற்கு வருகை தர இயலவில்லை. அன்று மதிய உணவிற்காக, அமர்ந்து கொண்டிருந்த ஸ்ரீ தாஸ்கணு அவர்கள், திரு வாமன் சாஸ்திரி வருவதாக வாக்களித்துவிட்டு, வராமல், அவரது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருப்பதாகவும், இத்தகைய மனிதர்களுக்கெல்லாம் தாம் துணையாக செல்ல வேண்டியிருக்கிறதே! என்று கேலியாக பேசிவிட்டார்.

ஆனால் அதுவரை திரு வாமன் சாஸ்திரியை, ஸ்ரீ தாஸ்கணு பார்த்தது கூட இல்லை. விரைவிலேயே திரு.வாமன் சாஸ்திரியின் முழுமையான ஆற்றலை உணர்ந்து கொண்டார். இத்தகைய ஒரு வேத சாஸ்திர வித்தகரை, தாம் தவறாக இகழ்ந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பேசியதை எண்ணி, மனம் வருந்தி திரு.வாமன் சாஸ்திரியிடம் மன்னிப்பு வேண்டினார். திரு.வாமன் சாஸ்திரி அவர்களுக்கு, ஸ்ரீ தாஸ்கணுவின் கடமையுணர்வு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. இரவு வெகுநேரம் வரை, ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், திரு. வாமன் சாஸ்திரிக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து, பக்தியுடன் பணிவிடை செய்து கொண்டிருந்தார்.

தினமும் இரவுப் பொழுதில், ஸ்ரீமத் பாகவதத்தைப் படித்த பின்னரே, திரு வாமன் சாஸ்திரி உறங்கச் செல்வது வழக்கம். ஒரு நாள் நீண்ட நேரம் கண்விழித்து, ஸ்ரீமத் பாகவத புராணத்தைக் கருத்தூன்றி படித்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடாக, அவருடைய கண்களில் நீர் இருந்து கண்ணீர் வழிந்தோடியதைப் பார்த்த ஸ்ரீ தாஸ்கணு மகராஜ், மிகுந்த ஆச்சரியமடைந்தார். அவருடைய மனதில், இவரை நாம் குருவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

NOT FOR SALE

ஆனால் திரு.வாமன் சாஸ்திரி, ஸ்ரீ தாஸ்கணுவின் கோரிக்கையை அப்போது ஏற்கவில்லை. இறுதியாக திரு வாமன் சாஸ்திரி, தாம் ஷிரிங்கோடுவிற்கு வந்த பணி முழுமையாக நிறைவடைந்து, விடைப்பெற்றுச் செல்வதற்கு முன்னால், ஸ்ரீ தாஸ்கணுவிற்கு சில பரிசுகளை அளித்தார். ஆனால் ஸ்ரீ தாஸ்கணு அப்பரிசுகளை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அவர், திரு. வாமன் சாஸ்திரியிடம், "இவ்வுலகப் பொருட்களின் மீதான ஆர்வத்தைக் காட்டிலும், தம்முடைய சீடராக என்னை ஏற்றுக் கொள்வதையே, அடியேன் விரும்புகின்றேன்!" என்றார். ஆரம்ப காலத்தில், ஸ்ரீ தாஸ்கணுவின் கோரிக்கையை ஏற்க மறுத்த திரு வாமன் சாஸ்திரி, தற்பொழுது ஸ்ரீ தாஸ்கணுவின் முழுமையான, உண்மையான, சமர்ப்பணத்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் திரு.வாமன் சாஸ்திரி, ஸ்ரீ தாஸ்கணுவிடம்,

தாம் சிலகாலம் மட்டுமே, ஸ்ரீ தாஸ்கணுவிற்கு குருவாக இருக்க இயலும் என்றும், தம்முடைய காலம் முடிந்த பிறகு ஸ்ரீ தாஸ்கணு, ஷீரடியில் வாழ்கின்ற ஸ்ரீ சாய்பாபாவை மட்டுமே குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிட்டார். ஸ்ரீ தாஸ்கணுவும் அவருடைய உத்தரவை ஏற்றுக்கொண்டார்.

இக்காலக் கட்டங்களில், தம்முடைய நடவடிக்கைகளில் முற்றிலும் மாறுபட்டு, தாம் ஒரு முழுமையான பக்திமானாக மாறிவிட்டதை உணர்ந்தார். அதுவரை கேளிக்கை, கூத்து, நாடகங்கள், பாடல்கள் என்று சென்று கொண்டிருந்த தமது வாழ்க்கை, மெதுவாக திசை திரும்பியதை உணர்ந்து கொண்டார். திரு வாமன் சாஸ்திரி அவர்களின் காலமும் முடிந்து விட்டது. இனி தனக்கு ஸ்ரீ சாய் பாபாவே துணை என்பதை, திரு வாமன் சாஸ்திரி முன்னரே அறிவித்து விட்டதால், ஷீரடிக்கு வருகை தந்தார்.

திரு.வாமன் சாஸ்திரிக்கு வாரிசுகள் இல்லை. ஆகையால் தாம் இறப்பதற்கு முன்னால், ஸ்ரீ தாஸ்கணுவின் வருங்காலத்தை நினைத்து, தமது சொத்துக்கள் முழுவதையும் ஸ்ரீ தாஸ்கணுவின் பெயருக்கு மாற்றி உயில் வரைந்து விட்டார். தம்முடைய சீடர் ஸ்ரீ தாஸ்கணு ஒருவேளை, உத்யோகத்தை விட்டு விட்டு, பக்திமார்க்கத்தில் முழுமையாக சென்று விட்டால், அவருடைய நடைமுறை தேவைகளை யார் பூர்த்தி செய்வார்கள்? ஆகையால் ஸ்ரீ தாஸ்கணு தம்முடைய காலத்திற்கு பின்னால் துயரப்படக்கூடாது என்ற கருணையுடன் தமது அனைத்து சொத்துக்களையும், ஸ்ரீ தாஸ்கணுவிற்கு எழுதி கொடுத்துவிட்டார்.

ஆனால் ஸ்ரீ தாஸ்கணுவின் சிந்தனை, சொத்துக்களின் மேல் இல்லை. அவர் நிறைய நூல்களைப் படிப்பதிலும், படைப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆகையால் ஸ்ரீ தாஸ்கணு, திரு.வாமன் சாஸ்திரியின் சொத்துக்களின் மீது தமக்கு

NOT FOR SALE

சிறிதும் நாட்டமில்லை என்பதை அனைவருக்கும் உணர்த்த ஒரு செயலைச் செய்தார். அவருடைய அச்செயல், அவரை திரு வாமன் சாஸ்திரி அவர்களுக்கு இணையாக, ஸ்ரீ தாஸ்கணுவை உயர்த்தியது. ஸ்ரீ தாஸ்கணு தமக்கு அளிக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதையும் திரு. வாமன் சாஸ்திரியின் மனைவியிடம், அளித்துவிட்டார். திரு. வாமன் சாஸ்திரியின் மனைவியிடம் தமது குருவின் நினைவாக, அவர் பூஜித்து வந்த பாண்டுரங்கனின் திருவுருவச்சிலை மட்டுமே தமக்கு வேண்டும் என்று கேட்டார். ஸ்ரீ தாஸ்கணுவின் இத்தகைய நேர்மையான குணத்தையும், குரு பக்தியையும் கண்டு மகிழ்ந்த திரு. வாமன் சாஸ்திரியின் துணைவியார், அவருக்கு தம் கணவர் பூஜித்து வந்த பாண்டுரங்கனின் திருவுருவச் சிலையை வழங்கினார். மிகுந்த பக்தியுடன், அச்சிலையைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீ தாஸ்கணு, அச்சிலைக்கு தமது குருவைப்போன்றே அனைத்து ஆராதனை வழிபாடுகளை முறையாக செய்யத் துவங்கினார்.

நாம் இப்பொழுது ஸ்ரீ தாஸ்கணு அவர்களின் ஷீரடி வருகை எவ்வாறு நிகழ்ந்தது என்பதைக் காண்போம்!

திரு. நானாசாஹேப் சந்தோர்கர் என்ற அரசாங்க அதிகாரி, பூர்வ ஜென்மத்தில் மிகவும் புண்ணியம் செய்தவர். அக்காரணத்தினாலேயே நானா என்று பாபாவால் அன்போடு அழைக்கப்பட்ட திரு.நானா சந்தோர்கர், அரசாங்கத்தின் மிக உயர்ந்த பொறுப்பில் இருந்தவர். ஆனால் அவர் பாபாவிடம் கொண்டிருந்த தூய்மையான அன்பு, அவரை எப்போதும் ஷீரடியிலேயே அமர்ந்து கொண்டிருக்கச் செய்து விட்டது. பாபா பலமுறை நானா சந்தோர்கரை "உன் வீட்டிற்குச் சென்று உன் கடமையைச் செய்! இங்கேயே இருக்கத் தேவையில்லை!" என்று விரட்டியபோதும் நானா, பாபாவை பிரிய மனமின்றி ஷீரடிக்கு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டு வந்துவிடுவார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாவின் பாதங்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டிருப்பதை விட, இவ்வுலகில் வேறு என்ன ஆனந்தம் ஒருவருக்கு கிடைத்துவிட முடியும்! என்று உறுதியான நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவர் அரசாங்கத்தின் உயர்ந்த பதவி வகித்த காரணத்தால், எங்கு சென்றாலும் அவருக்கு துணையாக காவல்துறையில் இருந்து ஒரு உதவியாளர் எப்போதும் உடன் வருவது வழக்கமாக இருந்தது.

ஒரு முறை நானா சந்தோர்கர், ஷீரடிக்கு வருகை தந்தபோது, நானாவிற்கு உதவியாக காவல்துறையில் இருந்து, நம் ஸ்ரீ தாஸ்கனு மகாராஜ் அவர்களை செல்வதற்காக பணித்தனர். இந்த நிகழ்வே, ஸ்ரீ தாஸ்கனு பாபாவை, முதன்முதலாக சந்திப்பதற்கும், பின்னாளில் பாபாவின் புகழை, மகாராஷ்டிர தேசம் முழுவதும் பரவச் செய்வதற்கும், பாபாவின் அருளால் "சந்த்கவி" என்ற, பட்டம் பெற்று அனைவரும் போற்றிப் பாராட்டப்படுவதற்கும் காரணமாக திகழ்ந்தது.

NOT FOR SALE

எப்பொழுதெல்லாம் நானா சந்தோர்கர், ஷீரடிக்கு பாபாவைக்காண வருகை தருகிறாரோ, அப்போதெல்லாம் ஸ்ரீ தாஸ்கனுவை, அவருடைய உதவியாளராக அழைத்துக் கொண்டு வருவார். தாஸ்கனு ஆரம்ப காலத்தில், பாபாவின் மீது நம்பிக்கையற்றவராகவே இருந்தார். சந்தோர்கரின் பாதுகாப்பு கருதி, காவல்துறையைச் சேர்ந்த ஒரு அலுவலராக கடமையாற்றுவதற்காகவே ஷீரடிக்கு வருவது வழக்கம். நீண்ட நாட்கள் பாபாவை அவர் எதுவும் கேட்கவில்லை. பாபாவின் ஆணையையும் ஏற்கவில்லை. அவ்வாறு ஏற்காத காரணத்தால் விளைந்த துன்பங்களைக் கண்டு, பாபாவை சத்குருவாகவும், தெய்வமாகவும் ஏற்றுக் கொண்டார்.

பாபாவின் ஆற்றலை, பரிபூரணமாக உணர்ந்து கொண்ட பின்னரே, அவரை சத்குருவாக, இறுதியில் தெய்வமாகவும்

ஏற்றுக்கொண்டார். அதனால் அவர் பல சோதனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

பாபாவிற்கு, தாஸ்கணுவின் பரீட்சை செய்து ஏற்றுக் கொள்ளும் குணம் நன்றாகத் தெரியும். நானாவின் வற்புறுத்தலின் பேரில், தாஸ்கணு பலமுறை ஷீரடிக்கு வந்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது! ஒவ்வொரு முறையும் தமது நடவடிக்கைகளில், சில மாற்றங்கள் ஏற்படுவதை மெதுவாக உணரத் துவங்கினார். ஆனால் அவருடைய மனம் பாபாவிடம் பூரணமாக சமர்ப்பணம் செய்வதற்கு இடமளிக்கவில்லை.

தாஸ்கணு, தமாஷா என்ற நாடகக் குழுவில், பெண்வேடம் தரித்து ஆடிப்பாடும் அழகைக் காண அவ்வூர் மட்டுமல்ல, அக்கம் பக்கத்து ஊர்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதுவதைக் கண்டு, அவருடைய காவல்துறை மேலதிகாரிகளும் வியந்துள்ளனர். முக்கியமாக சமூக அவலங்களையும், தவறு செய்தவர்களை கேலி செய்து சித்தரித்து, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் அவருடைய பாடல்கள் அமைந்திருக்கும்.

ஸ்ரீ தாஸ்கணு பாபாவை தமது குருவாக ஏற்றுக்கொண்ட போதும் கூட, பாபா கூறிய இரண்டு முக்கிய செயல்களை அவர் புரியவில்லை. முதலாவதாக "தமாஷா" நாடகக் குழுவில் பெண்வேடம் தரித்து, சமூக அவலங்களை கேலியாக சித்தரித்துப் பாடுவதை விட்டுவிடுமாறு உத்தரவிட்டார். முதலில் யோசித்தாலும், பின்னர் இச்செயல், பெண்மையை அவமதிக்கும் செயலாக இருந்த காரணத்தால், பாபா கூறியதை ஏற்றுக்கொண்டு பெண்வேடம் தரிப்பதை நிறுத்திவிட்டார்.

இரண்டாவதாக, காவல்துறையில் பணியாற்றிய தாஸ்கணுவிற்கு உலகமே வியந்து போற்றும் "சந்த்கவி" என்ற பட்டம் கிடைக்கவிருப்பதால், அப்பணியை விட்டு, முழுமையாக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆன்மீகத்தில் ஈடுபடுமாறு கட்டளையிட்டார். பாபா, தாஸ்கணுவின் எல்லா ஜென்ம கணக்குகளையும் நன்றாக அறிவார். ஆகையால் தாஸ்கணுவின் இப்பிறவியில், அவர் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடைவார் என்பதை பாபா தனது ஞானதிருஷ்டியால் உணர்ந்து கொண்டார். ஆகையால் அவர் வகித்து வந்த காவல்துறை உதவியாளர் பணியை விட்டுவிடுமாறு பலமுறை கூறியும் தாஸ்கணு அக்கருத்தை ஏற்கவில்லை.

பாபா அவரிடம் ''கணு, நீ இத்துறையிலிருந்து வெளியேறுவதே உனக்கு நல்லது'' என்றார். இதைக் கேட்ட தாஸ்கணு பாபாவிடம் "பாபா நான் காவல்துறை, ஆய்வாளராக பதவி ஏற்க வேண்டும்! அப்பதவியை ஏற்றுக்கொண்டபின் ஒருவருடம் அப்பதவியில் இருந்துவிட்டு, பிறகு நிச்சயமாக இப்பணியை துறந்து விடுவேன்" என்றார்.

பாபா சிரித்துக் கொண்டே, "கணு அப்பதவி உனக்கு நிச்சயமாக கிடைக்காது!" இது என்னுடைய வாக்கு என்றார். தாஸ்கணு பாபா கூறியதன் உட்கருத்தை அப்போது ஏற்கவில்லை.

பாபாவின் வார்த்தைகளை மீறியதால், பல்வேறு துயரங்களுக்கு ஆளானார். ஒருமுறை தனது உயர் அதிகாரிகளின் உத்தரவைப் பெறாமலேயே, நிஜாமின் ஆதிக்கத்தில் இருக்கும் அண்டை மாநிலத்தில் அமைந்த ஒரு ஆலயத்திற்குச் சென்று தரிசித்து வந்தார். பல நாட்களாகவே அவருடன் பணியாற்றிய காவல்துறை பணியாளர்கள், தாஸ்கணுவின் மீது மிகுந்த காழ்ப்புணர்ச்சியோடு இருந்தனர். அதன் காரணம், தாஸ்கணு ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டிருந்ததால், சக பணியாளர்களோடு சேர்ந்து செல்வதும், அவர்களோடு தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதுமான செயல்களில் ஈடுபடவிரும்பவில்லை. பல சமயங்களில் தனிமையை விரும்பினார்.

NOT FOR SALE

தாஸ்கணுவுடன் பணியாற்றியவர்கள், இம்முறை எப்படியாவது தாஸ்கணுவின் மீது புகார் செய்து, அவரை சிறையில் அடைத்துவிட வேண்டும்! பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, கோதாவரி நதியின் மறுகரையில் காத்துக் கொண்டிருந்தனர். தாஸ்கணுவிற்கு தற்பொழுது தம்முடைய நிலை குறிந்து நன்றாகப் புரிந்து விட்டது! இச்சமயத்தில் அனைவரும் தமக்கெதிராக கூடிவிட்டனர்! தாம் நிச்சயமாக மாட்டிக்கொள்வோம்! உயர் அதிகாரிகளின், அனுமதியின்றி சென்ற காரணத்தால், தமது பணியும் பாதிக்கப்படும்! என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். இப்பொழுது அவர் தப்பிக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி, பாபாவை சரணடைய வேண்டியதுதான்! பாபா மட்டுமே இச்சிக்கலில் இருந்து தம்மை விடுவிக்க முடியும்! என்று புரிந்து கொண்டார்.

தாஸ்கணு உடனடியாக தனது குதிரையிலிருந்து கீழே குதித்து, கோதாவரி நதிக்கரையில் நின்று கொண்டு, இரண்டு கைகளாலும் நதிநீரை எடுத்துக் கொண்டு, "புனித கோதாவரி மாதாவே, என் சத்குரு பாபாவிடம் உன் மீது ஆணையாக, நான் வேண்டிக் கொள்வது இதுவே!" என்னை இத்தகைய பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டால், நான் பாபா கூறியது போலவே எனது பணியை விட்டுவிடுகிறேன்! என்றார்.

பாபா கருணையே உருவான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஆவார். அவர் மன்னித்த காரணத்தால், என்ன ஆச்சர்யம்! தாஸ்கணு அக்கரைக்குச் சென்றவுடன், அவரை பிடிக்க வந்த காவல்துறை அதிகாரிகள் எங்கோ புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். இந்நிலையில், அவ்வூர் மக்கள் கணுவிடம், "ஐயா எங்கள் ஊரில் மிகப்பெரிய கொள்ளையர் கூட்டத் தலைவன் ஒருவன் பதுங்கியுள்ளான்! அவன் இருக்கும் இடத்தை நாங்கள் அறிவோம்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


தாங்கள் அவனையும் அவன் கூட்டத்தையும் கைது செய்யுங்கள்!, எங்கள் ஊரில் உள்ள அத்தீய சக்திகளை அப்புறப்படுத்துங்கள்" என்று வேண்டினார்கள்.

தாஸ்கணு, உடனடியாக அக்கிராமத்திற்குள் நுழைந்து, கொள்ளையர் கூட்ட தலைவனை, கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார். அவ்வூர் மக்கள் காவல் நிலையத்திற்கு வருகைதந்து, அனைவர் முன்னிலையிலும் தாஸ்கணுவை பாராட்டி வணங்கிவிட்டுச் சென்றனர். அவருடைய மேலதிகாரிகள், அவரிடம் "உத்தரவின்றி நதியைத் தாண்டி, ஒரு நாள் முழுவதும் சென்று வர காரணம் என்ன?" என்று கேட்டனர். தாஸ்கணு சிறிது கூட யோசிக்காமல், கொள்ளையர் கூட்டத்தைப் பிடிக்கவே, தாம் அங்கு சென்றதாக கூறிவிட்டார். அவர் கூறியவாறே அவனும் பிடிப்பட்டுக் கொண்டதால், தாஸ்கணுவின் மேல் காவல்துறைக்கு சந்தேகம் எழவில்லை! ஆனால் அவர் மீது புகார் செய்த சக பணியாளர்கள் அனைவரும், இது எவ்வாறு சாத்தியம்! என்று வியந்தனர். தாஸ்கணு தப்பித்தது மட்டுமல்ல, அவர் செய்த சாதனையைப் பாராட்டி, அவருக்கு பதவி உயர்வு விரைவில் கிடைக்கவிருப்பதாக தகவல் ஒன்று வந்தது. இத்தகவலை கேள்வியுற்றதும், தாஸ்கணுவின் மனநிலை மாறிவிட்டது. தமக்கு பதவி உயர்வு கிடைக்கவிருக்கும் இந்த நேரத்தில், பணியை துறக்க அவர் விரும்பவில்லை. கோதாவரி நதிக்கரையில் பாபாவிற்கு தாம் அளித்த வாக்கு நினைவிற்கு வந்தது. இம்முறையும் பாபா தம்மை மன்னித்துவிடுவார் என்று எண்ணிக் கொண்டு தமது பணியைத் தொடர்ந்தார்.

அடுத்த நாள் தாஸ்கணு, ஒரு பணியின் நிமித்தம் ஷீரடியைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவருடைய குதிரை ஷீரடியைக் கடந்து செல்லும் போது, அதன் எல்லையில்

NOT FOR SALE

நின்றுவிட்டது. தாஸ்கணு பாபாவின் கட்டளையை நிறைவேற்றாத காரணத்தால் பாபாவை காண அச்சம் அடைந்தார். ஆகையால், விரைந்து ஷீரடியின் எல்லையைத் தாண்ட விரும்பினார். ஆனால் பாபாவின் உத்தரவை மீறி மரத்தின் இலை கூட அசையாது என்ற காரணத்தால், ஷீரடியின் எல்லைப் பகுதியிலேயே அவருடைய குதிரை நின்றுவிட்டது. ஆச்சர்யமாக பாபா தாஸ்கணுவிற்கு எதிரில் வந்து நின்றார். அவர் தாஸ்கணுவிடம், "கோதாவரி நதிக்கரையில் புனிதமான நதியின் நீரை கைகளில் ஏந்தி அளித்த வாக்கு என்னவாயிற்று? அளித்த வாக்கை காப்பாற்றாவிட்டால் மேலும் உன்னை துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும்! எச்சரிக்கை செய்வதற்காகவே இங்கு வந்தேன்!" என்றார். இதைக் கேட்ட தாஸ்கணு, "பாபா! என்னை மன்னித்து விடுங்கள்! நான் மிகவும் விரும்பும் காவல்துறை ஆய்வாளர் பதவியை பெற்று, ஒரே ஒரு வருடத்தில் அப்பணியை துறந்துவிடுகிறேன்! இது எனது வாக்கு!" என்றவுடன், பாபா "கீழ்படியாமல் இருந்த காரணத்தால் விரைவில் மிகப்பெரிய துன்பத்தை எதிர் நோக்கப் போகிறாய்! எச்சரிக்கை செய்வதற்காகவே இங்கு வந்தேன்! உன்னுடைய நலனில் என்றுமே அக்கறை கொண்டிருப்பவன் நானாவேன்!" என்று கூறி சென்றுவிட்டார்.

பாபா கூறியதன் பொருளை தாஸ்கணுவால் அப்பொழுதும் புரிந்து கொள்ள இயலவில்லை. காரணம், பதவி அவர் கண்களை மறைத்துவிட்டது.

1898 ஆம் ஆண்டு, அந்நகரில் தீவிர கொள்ளைக் காரர்கள் ஊடுருவி விட்டனர். அவர்களது இயக்கம், காவல்துறையை விட பெரியதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் இருந்தது. அத்தகைய கொள்ளையர் கூட்டத் தலைவர் "கானாபில்" (Kanabhil) என்ற பெயருடையவன்! அவன் மிகவும் திறமைசாலி.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அவன் தாஸ்கணுவுடன் தன்னைப் பிடிக்க வந்த மூன்று காவல்துறையினரையும் சுட்டுக் கொன்று விட்டான். இப்போது எஞ்சியவர் தாஸ்கணு ஒருவரே ஆவார். அவரையும் கொல்வதற்கு கானாபில் என்ற கொள்ளைக் கூட்டத் தலைவன் திட்டம் தீட்டினான். ஆனால் தாஸ்கணு, பாபாவின் அருளால் தப்பித்து விட்டார். அவரை எவ்வாறு அக்கொள்ளையனிடமிருந்து பாபா தப்பிக்கச் செய்தார் என்ற அற்புதத்தை நாம் இப்போது காண்போம்.

தாஸ்கணு, முதலில் தமது நண்பர்களுடன் காவல்துறையின் சீருடையோடு சென்று, கானாபில் என்ற கொள்ளையர் கூட்டத் தலைவனை பிடிப்பதற்காக தயாரானார். ஆனால், திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது! அவ்வூர் மக்கள் காவல்துறையின் உடையில் சென்றால், ஒரு வேளை, அத்திருடனுக்கு பயந்து அவனைக் காட்டிக் கொடுக்காமல் அமைதியாக இருந்து விடுவார்களோ என்று சிந்தித்தார்! சிறிது நேரத்தில் பாபாவின் அகத்தூண்டுதலால் ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டினார்.

திருடனைப் பிடிக்க, தாஸ்கணு, தமது திட்டத்தை செயலாற்றினார். அவ்வூரில் உள்ள குழந்தைகளுக்கு "ஹரிகதை" மற்றும் பஜனைப் பாடல்கள் முதலியவற்றை சொல்லித் தரும், ஒரு உபன்யாசம் செய்பவராக, பஜனைப் பாடல்களைப் பாடும் ஒரு பாகவதராய், வேஷமிட்டு அவ்வூரில் நுழைந்தார். அன்று அவர் மனதில் அவ்வாறு தோன்றச் செய்ததை பாபா, தாஸ்கணுவின் வாழ்நாள் முழுவதும் அத்திருப்பணியை செய்வதற்கு அருளினார். சிறுவர் சிறுமியர் அனைவருக்கும், தினமும் அவ்வூரில், ஹரி கதையைக் கூறத்துவங்கினார். பின்னர் அவ்வூர் குழந்தைகளிடம் அன்பாக உரையாடி, அங்கு தங்கியிருந்த கொள்ளைக்காரனின் விலாசத்தைப் பெற்றுவிட்டார்.

NOT FOR SALE

கானாபில் என்ற கொள்ளையர் தலைவன், அவ்வூரில், குறிப்பிட்ட இடத்தில் பதுங்கி உள்ள தகவலை அறிந்ததும், உடனடியாக தாஸ்கணு, அங்கிருந்து வெளியேறினார். அவர் தமது உயர் அதிகாரிகளிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்து அவனைச் சுற்றி வளைத்து பிடிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து விட்டார்.

ஆனால் அத்திருடன் கைது செய்யப்படுவதற்கு முன்பு ஒரு இரவுப் பொழுதில் தாஸ்கணு இருக்கும் இடம் தேடி வந்து அவருடைய கழுத்தைப் பற்றிக் கொண்டு விட்டான். அவன் "என்னைப் பற்றிய தகவலை, காவல்துறைக்கு தெரிவிக்கிறாயா! அவர்கள் என்னைக் கைது செய்வதற்கு முன்னால், நான் உன்னைக் கொல்லப்போகிறேன்!" என்று ஆக்ரோஷமாக தனது பிடியை இறுக்கினான்.

NOT FOR SALE

தாஸ்கணு, தனது மூச்சே நின்று விடுவதைப் போல உணர்ந்தார். நாம் நன்றாக மாட்டிக்கொண்டு விட்டோம்! இனியும் இவனிடமிருந்து தப்பிக்க இயலாது! இதற்கு ஒரே தீர்மானம் பாபாவை சரணடைய வேண்டியதுதான்! பாபாவால் மட்டுமே இச்சூழ்நிலையில் தமது உயிரைக் காப்பாற்ற இயலும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்.

தாஸ்கணு உடனே பாபாவை நினைத்து "ஓ சாயி என்னை மன்னித்துவிடு! இம்முறை, நீங்கள் என்னை காப்பாற்றிவிட்டால், நான் நிச்சயமாக, தங்களுக்கு அளித்த வாக்கினை நிறைவேற்றுவேன்!" என்று நினைத்து முடித்த வேளையில், என்ன ஆச்சர்யம்! தன்னை காவல்துறையிடம் சிக்க வைத்த தாஸ்கணுவை, எவ்வாறாவது அழித்துவிட வேண்டும் என்று பல நாட்கள் தீட்டி, தாஸ்கணு இருக்கும் இடம் ஓடி வந்தவன், திடீரென்று மனம் மாறி, தாஸ்கணுவிடம் "இப்போது நான் உன்னைக்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொல்லப் போவது இல்லை! இனியும் என்னைக்குறித்து தகவல் சேகரித்தால் நான் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்!" என்று கூறி தாஸ்கணுவின் கழுத்தில் இருந்த தனது பிடியை, தளர்த்திக் கொண்டு, அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டான். பாபாவின் இத்தகைய அற்புதத்தை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை! தம்மை கொல்ல வந்தவன் மனதை, ஒரு விநாடியில் மாற்ற வேண்டுமென்றால், சர்வ சக்தி வாய்ந்த பாபாவின் ஆற்றலை எவ்வாறு எடுத்துக் கூற இயலும்? ஆனால் விதி வலியது என்ற காரணத்தால் நம் தாஸ்கணு மகராஜ் அவர்கள், பாபாவிற்கு அளித்த வாக்கை நிறைவேற்றவில்லை! இன்னும் சிறிது நாட்களில் காவல்துறை தம்மை கௌரவித்து, உயர் அதிகாரி என்ற ஸ்தானத்தையும், மரியாதையையும் அளிக்கவிருப்பதால், அதன் பிறகு தமது பணியை, ராஜினாமா செய்து விடுவோம்! என்ற காரணத்தால் அவர் அளித்த வாக்கை நிறைவேற்றவில்லை.

இம்முறை தாஸ்கணு, திருடர்களிடம் சிக்கவில்லை. காவல்துறையிடமே சிக்குண்டு சிறைக்கு செல்லும் அளவிற்கு, மிகப்பெரிய பிரச்சினையில் மாட்டிக்கொண்டு விட்டார். இத்தகைய ஆபத்தில் இருந்தும், பாபாவின் கருணையால் அவர் எவ்வாறு தப்பித்தார் என்பதை நாம் இப்போது காணலாம்!.

தாஸ்கணுவின் உயர் அதிகாரி, ஒருமுறை, தாம் ஒரு பணி நிமித்தமாக செல்ல வேண்டியிருப்பதால், தாஸ்கணுவை காவல்துறை அலுவலகத்தின், அன்றைய பொறுப்பாளராக, நியமித்துச் சென்று விட்டார். இப்பொழுது காவல்துறையின் முழுப்பொறுப்பும் தாஸ்கணு மகராஜ் அவர்களின் கீழ் இருந்தது. தாஸ்கணுவிற்கு, தனது இல்லத்திற்கு சென்று சிறிது நேரம் ஓய்வு எடுக்க வேண்டும் என்று தோன்றியது. ஆகையால் அவர் தமது அதிகாரத்தின் கீழ் பணிபுரியும் ஒருவரை, அன்று காவலுக்கு வைத்துவிட்டு, தமது இல்லத்திற்கு வந்துவிட்டார்.

NOT FOR SALE

அந்த சமயத்தில், ஒரு கிராமத்தில் இருந்து, காவல்துறைக்கு அபராதத் தொகை ஒன்று செலுத்த வேண்டியதன் காரணமாக, அக்கிராம (முன்சீப்) அதிகாரி, தமது மக்கள் செலுத்த வேண்டிய அபராதத் தொகை ரூ.32/- (முப்பத்திரண்டு ரூபாய்) வசூல் செய்து அற்கான இரசீதுடன், ஒரு அலுவலரிடம் அளித்து, காவல்துறை அலுவலகத்தில் சேர்த்துவிடுமாறு கூறிவிட்டார்.

அன்று அக்காவல்துறை அலுவலகம், நம் தாஸ்கணுவின் பொறுப்பில் இருந்தது. ஆனால் தாஸ்கணு, தமது உதவியாளர்களில் ஒருவரை பார்த்துக்கொள்ளுமாறு கூறி, தமது இல்லம் சென்று விட்டார். வசூலிக்கப்பட்ட தொகை ரூ.32/- ஐ, பெற்றுக்கொண்ட, அக்காவல்துறை அலுவலர், உயர்அதிகாரிகள் தற்சமயம் விடுப்பில் சென்று இருப்பதால், அதற்கான ரசீதை தாம் வழங்க இயலாது என்று கூறி, கிராம நிர்வாக அலுவலரை, சென்று வருமாறு உத்தரவிட்டார்.

NOT FOR SALE

இப்பொழுது அத்தொகையைப் பெற்றுக்கொண்ட காவல்துறை அலுவலருக்கு, பேராசை வந்து விட்டது. அக்காலத்தில் முப்பத்து இரண்டு ரூபாய் என்பது, மிகப்பெரிய தொகையாதலால், காவல்துறை அலுவலர் அப்பணத்தை தமது இல்லத்திற்கு எடுத்துச் சென்று விட்டார்.

நியாயமாக அத்தொகை, தாஸ்கணுவால் பெறப்பட்டு, இரசீது வழங்கப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் தாஸ்கணு, அப்பொறுப்பை வேறு ஒரு அலுவலருக்கு, எவ்விதமான அதிகாரபூர்வமான கடிதமும், கையெழுத்தும் இன்றி, காவல்நிலையத்தைப் பார்த்துக்கொள்! என்று சாதாரணமாக கூறி சென்று விட்டதால், இப்பொழுது தாஸ்கணுவிற்கு ஆபத்து நெருங்கி விட்டது.

தாஸ்கணுவிடம், இத்தொகை வசூலிக்கப்பட்ட விவரங்களைப் பற்றி, அந்த அலுவலர் எதுவுமே கூறவில்லை. ஆகவே

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


தாஸ்கனுவிற்கு இந்நிகழ்வைக் குறித்து ஒரு விபரமும் தெரியாது. சிறிது நாட்கள் கழித்து வசூலிக்கப்பட்ட தொகை விவரங்களை, காவல்துறை உயர் அதிகாரிகள் நோக்கும்பொழுது ரூ.32/- இன்னமும் வசூலிக்கப்படாமல் இருப்பதைக் கண்டுபிடித்தனர். உடனே, தமது அலுவலர் ஒருவரை, அத்தொகையைப் பெற்று வருமாறு கூறி அனுப்பி வைத்தனர். ஆனால் கிராம நிர்வாகி தாம் ஏற்கனவே அத்தொகையை வசூல் செய்து, அதற்கான இரசீதுடன், காவல்துறை அலுவலகத்தில் சேர்த்து விட்டதாக சாட்சியுடன் நிரூபித்துவிட்டார்.

உயர் அதிகாரிகள் உடனடியாக, அத்தொகை வசூலிக்கப்பட்ட அன்று பொறுப்பில் இருந்தவர் யார் என்பதை ஆராய்ந்தபோது, நம் தாஸ்கனுவிடம் அன்று அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வமாக அலுவலகக் குறிப்பில் பதிவிடப்பட்டதை அறிந்து கொண்டனர். தாஸ்கனுவிடம் இதுபற்றி விசாரித்தபோது, அவர் அதிர்ச்சியடைந்தார். தாம் அன்று வேறு ஒருவரை பொறுப்பில் அமர்த்தியதால், அவரே இத்தொகையை கையாடல் செய்து இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தார். தாம் செய்த ஒரு சிறு தவறு, எத்தகைய ஆபத்தை தமக்கு விளைவித்து விட்டது என்பதை தாஸ்கனு புரிந்து கொண்டார்.

இப்பொழுது தாஸ்கனுவிற்கு என்ன செய்வது என்று புரியவில்லை! அரசாங்கத்தின் விதிகளின் அடிப்படையில் பொறுப்பை வேறு ஒருவருக்கு, முறையாக கையெழுத்து இட்டு அளிக்கவில்லை. ஆகையால் அவரால் தனது மேலதிகாரிகளிடம், நடந்த நிகழ்வைப்பற்றி எடுத்துரைக்கவும் இயலாது. அவ்வாறே எடுத்துரைத்தாலும், பணிநேரத்தில் அலுவலகத்தில் இல்லாத காரணமாக, தம்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும், என்பதையும் தாஸ்கனு புரிந்துகொண்டார்.

NOT FOR SALE

தாம் அமர்த்திவிட்டுச் சென்ற, காவல்துறை அலுவலரிடம், அத்தொகையைப் பற்றி தாஸ்கணு ஒரு வார்த்தைக் கூட கேட்கவில்லை. தாஸ்கணுவின் தயாள குணமும், நேர்மையும் அவரைக் கட்டிப் போட்டு விட்டது. இத்தனை நாட்களாக, "எந்தப் பதவியின் மீது மோகம் கொண்டு, அப்பதவிக்காக என் சத்குருவான பாபாவிற்கு, நான் அளித்த வாக்கை பலமுறை மீறி, குற்றம் புரிந்தேன்! ஆனால் அப்பதவியே இன்று, என்னை புறக்கணித்துவிட்டது. பாபா! இனியும் நான், உங்களுக்கு அளித்த வாக்கினை காப்பாற்றாவிட்டால், நான் சிறை செல்வது உறுதி! என்னை மன்னித்து விடுங்கள் பாபா! நான் தங்களுக்கு அளித்த வாக்கை, இப்பொழுதே நிறைவேற்றுகிறேன்! என்னைக் காப்பாற்றுங்கள் தேவா! இந்த தாஸ்கணுவை புறக்கணித்து விடாதீர்கள்! சிசுபாலன் என்ற அசுரன் இழைத்த தொண்ணூற்றி ஒன்பது (99) தவறுகளை, ஸ்ரீ கிருஷ்ணர் கருணையோடு மன்னித்ததைப் போன்று, தாங்களும் என்னை மன்னிக்க வேண்டும் தேவா!" இவ்வாறெல்லாம் வேண்டிய தாஸ்கணு, தனது ராஜினாமா கடிதத்தை எழுதி, உயர் அதிகாரிகளிடம், விசாரணைக்கு முன்பாகவே அளித்து விட்டார்.

தாஸ்கணுவின் உயர் அதிகாரிகள், அவர் மீது மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தனர். தாஸ்கணு ஒரு நேர்மையான அதிகாரி என்பதை அவர்கள் அனைவருமே அறிவார்கள். ஆனால் அன்று பணி நேரத்தில், அலுவலகத்தை விட்டு சென்ற காரணத்தால், சட்டத்தின் முன்னால், தாஸ்கணுவும் ஒரு குற்றவாளியாக அறியப்படுகிறார். அவரது ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்ட மேலதிகாரிகள், தாஸ்கணு இத்தனை ஆண்டுகாலம் காவல்துறைக்கு செய்த சேவையைப் பாராட்டி அந்த அபராதத் தொகையையும் இரத்து செய்து விட்டு தாஸ்கணு அத்தொகையை செலுத்த வேண்டியதில்லை என்றும், அவர்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று தீர்மானிக்கப்பட்டது!. இதுவும் நம் சத்குரு பாபாவின் லீலையே ஆகும்.

இப்பொழுது தாஸ்கணு மகராஜ், பாபாவைத் தேடி, ஷீரடிக்கு வருகைதந்து அவருடைய பாதங்களை நமஸ்கரித்தார். அவர் பாபாவிடம், "ஓ பாபா! தாங்கள் கூறியதால், இன்று நான் என் பதவியை ராஜினாமா செய்து விட்டேன்! இனிமேல், என்னை நம்பியே ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கும் என் மனைவிக்கு, என்னால் பணம் அனுப்ப இயலாது! என்னுடைய வயிற்றையும் நிரப்புவதற்கு என்னிடம் எந்த விதமான சொத்துக்களும் இல்லை! இன்று முதல் எனக்கு அரசாங்க வருமானமும் வரப்போவதில்லை! நானும் எனது குடும்பமும் என்ன செய்யப் போகிறோம் என்று தெரியவில்லை பாபா!" என்று வருந்தினார்.

NOT FOR SALE

பாபா சிரித்துக் கொண்டே, "கணு, இவ்வாறு நீ புலம்ப வேண்டிய அவசியமே இல்லை! நான் இருக்கும்போது உனக்கோ, உன் குடும்பத்தினருக்கோ ஒரு குறையும் வராது! இது நான் உனக்கு அளிக்கும் வாக்கு!" என்றார். பாபா என்ற காக்கும் தெய்வம், அவர் அளித்த வாக்கிற்கேற்ப, தாஸ்கணு மகராஜ் அவர்கள் தம் பணியை 1904 இல் துறந்தது முதல், இறுதி மூச்சு நிற்கும் வரை, அவர்கள் குடும்பத்தினருக்கும், அவருக்கும் ஒரு குறையும் இல்லாமல் காத்து இரட்சித்தார்.

1919இல் ஸ்ரீ தாஸ்கணுவின் மனைவி காலமாகி விட்டார். தாஸ்கணுவிற்கு இல்லற வாழ்க்கையும் அமையவில்லை. புத்திரப்பேறும் இல்லை. அவர் இல்லற வாழ்க்கையில் ஈடுபட விரும்பவும் இல்லை. பாபா, தாஸ்கணுவை உபன்யாசம், கதாகாலட்சேபம் முதலிய திருப்பணிகளை ஆற்றுமாறு உத்திரவிட்டார். தாஸ்கணு, ஷீரடிக்கு எப்போது வருகை தந்தாலும், பாபா அவரை "ஸ்ரீ விஷ்ணு ஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்யக்

கூறுவார்!" பாபாவின் ஆசீர்வாதத்தால் ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் மகாராஷ்டிர தேசம் முழுவதும், பக்தி நெறியை பரவச் செய்த "சந்த்கவி" என்று போற்றப்பட்டார்.

ஸ்ரீ தாஸ்கணு மேடையில் கீர்த்தனைகளும், கதைகளும் கூறும்போது, முதலில் நம் பாபாவின் திருவுருவப்படத்தை வைப்பது வழக்கம்! அவர் உபன்யாசம் செய்யும்போது, பக்தர்கள் பக்தியோடு மௌனமாக, ஐந்து முதல் ஆறு மணி நேரம் வரை கூட பொறுமையாக அமர்ந்து உற்சாகமாக அனுபவித்து கேட்பார்கள்.

தாஸ்கணு மிகச்சிறந்த அறிவாற்றல் கொண்டவராதலால், பாபாவின் திருவுருவத்தை வைத்தவுடன், பாபாவைப்பற்றி உரையாடமாட்டார். ஒரு சபையில் நாயகராக வீற்றிருபவருக்கு அச்சபையின் நாடி தெரிய வேண்டும்! பக்தர்களுக்கு, அவர்கள் வேண்டியதை எவ்வாறு அளிக்கவேண்டும் என்பதையும் துல்லியமாக கணக்கிட்டால் மட்டுமே, அவர் சிறந்த பேச்சாளராக அங்கீகாரம் பெற இயலும்!

தாஸ்கணு தமக்கென்று, எந்த அங்கீகாரத்தையும் எவரிடமும் கேட்டுப் பெறவில்லை! அவர் தம் வாழ்நாளில் பல்லாயிரக்கணக்கான மேடைகளை சிறப்பித்திருக்கிறார்! ஆனால் தம் வாழ்நாள் முழுவதும், தமது பிரசங்கத்திற்காக, அவர் ஒருவரிடமும் ஒரு ரூபாய் கூட சன்மானமாக பெற்றதில்லை. இறைவனுடைய மகத்துவத்தையும், மகான்களின் மகிமையையும் எடுத்துக் கூறுவதே தமக்கு மிகப்பெரிய சன்மானம் என்று அனைவரிடத்தும் கூறுவார். ஆனால் அவர் எவரிடமும் எதுவும் யாசிக்காமலேயே, பாபா அவருடைய தேவைகளை பூர்த்தி செய்தார்! பாபா, தனது பக்தர்களுக்கு தான் அளித்த வாக்கை ஒரு போதும் நிறைவேற்றத் தவறியதில்லை.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


தாஸ்கனு, தன்னுடைய எல்லா உபன்யாச நிகழ்ச்சிகளிலும், பாபாவின் திருவுருவப் படத்தை வைத்துவிட்டு, பகவானின் மகிமைகளை முதலில் எடுத்துக் கூறுவார்! பின்னர் பகவானின் அவதாரங்களான மகான்களின் மகிமையைப் போற்றுவார்! சாது பக்த துக்காராம், ஞானதேவர், நாமதேவர் முதலியோரின் அற்புதங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, இறுதியாக இப்படிப்பட்ட இறை அவதாரங்கள், இன்றளவும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது! அத்தகைய இறைவனின் அவதாரத்தை நீங்கள் தரிசித்து, உங்கள் பாவங்களை போக்கிக் கொள்ள வேண்டுமானால், ஷீரடி என்ற கிராமத்திற்கு செல்லுங்கள்! அங்கே இத்திருவுருவத்தில் உள்ள பாபா என்ற தெய்வத்தின் அவதாரம், இன்றளவும் வாழ்ந்து கொண்டு, நம்மையெல்லாம் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கிறார்! ஆகையால் இனியும் காலம் தாழ்த்தாமல், ஷீரடி சென்று சாய்பாபாவை ஒருமுறை தரிசித்து வாருங்கள்! உங்களுக்கே அந்த உண்மை தெரியவரும்! என்று சொல்லி முடிப்பது வழக்கமாகும்.

தாஸ்கனுவின் பேச்சுகளால் கவரப்பட்டு, எப்படியாவது பாபாவை நேரில் தரிசித்து, ஆசிபெற அனைவரும் ஷீரடி வரத் துவங்கினர். அவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் ஷீரடிக்கு வந்து பாபாவின் ஆசியைப் பெற்றனர். பாபாவின் புகழை மகாராஷ்டிரா தேசம் முழுவதும் பரவச் செய்தவர் என்ற பெருமை ஸ்ரீ தாஸ்கனு மகராஜ் அவர்களையேச் சாரும். இத்தகைய புண்ணிய காரியங்களை, தாஸ்கனு மகராஜ் செய்த காரணத்தால், அவர் மேல் தொடரப்பட்ட மற்ற இரண்டு வழக்குகளிலிருந்தும் தப்பித்துவிட்டார்.

பாபாவின் கூட்டுறவில் இருந்த தாஸ்கனுவிற்கு, எதிர்பாராத விதமாய், ஒரு மிகப்பெரிய அற்புதம் ஒன்று நிகழ்ந்தது.

NOT FOR SALE

அதைப்பற்றி நாம் இப்போது காண்போம்! தாஸ்கணுவிற்கு நீண்ட காலமாக, 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, மகாராஷ்டிராவின் மிகப்பெரிய ஞானியான, சந்த் ஞானேஷ்வர் அவர்களின் அமிர்தானுபவம் (Amirthaanubhav) என்ற மிகச்சிறந்த நூலுக்கு விளக்கவுரை எழுத வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

ஆனால் இதைக்கேள்வியுற்ற பிற அறிஞர்கள், படைப்பாளர்கள் தாஸ்கணுவிடம் "இக்காரியம் சாத்தியமே இல்லை!" என்றும் மாபெரும் மகானாகிய ஞானதேவரின் உயர்ந்த படைப்பாகிய "அமிர்தானுபவம்" என்ற நூலுக்கு விளக்கவுரை எழுத தாஸ்கணுவிற்கு தகுதி இல்லை எனவும் விமர்சித்தனர்.

மனம் கலங்கிய தாஸ்கணு, விரைவாக ஷீரடி சென்று மசூதியில், சத்குரு பாபாவிடம் ப்ரார்த்தனை செய்தார். அவர் பாபாவிடம் "தேவா! காவல்துறையில், ஒரு சாதாரண பணியில் இருந்த என்னை, ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கும் தாங்கள், மனது வைத்தால், அடியேன் நிச்சயமாக இத்திருப்பணியை செய்ய இயலும்! இப்பணியை செய்வதற்குத் தேவையான ஞானத்தையும், தாங்களே தந்தருள வேண்டும்" என்றார்! அவரின் கோரிக்கைக்கு, பாபாவின் உத்தரவு கிடைத்தது.

வேறு என்ன வேண்டும்? மராத்திய மொழியில் மிக உயர்ந்த நூலாக கருதப்பட்ட, சாது ஸ்ரீ ஞானேஷ்வரின் "அமிர்தானுபவம்" என்ற நூலின் விளக்கவுரையை பாபாவின் கருணையால் மிகச்சிறப்பாக எழுதி முடித்தார். தாஸ்கணுவின் விளக்கவுரையை, அனைவரும் மனதார பாராட்டினார்கள். இதுவும் பாபாவின் லீலையே என்பதை தாஸ்கணு நன்கு உணர்ந்து கொண்டார். தாஸ்கணுவால், இச்செயலை செய்ய இயலாது என்று விமர்சித்த பண்டிதர்கள், இந்நூலை படித்தவுடன் தாஸ்கணுவை வியந்து பாராட்டி வாழ்த்தினர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இதே சமயத்தில் பாபாவின் மற்றொரு லீலையும், தாஸ்கணு மகராஜ் அவர்களிடத்தில் நிகழ்ந்தது. தாஸ்கணு, பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். சமஸ்கிருதத்தில் அமைந்த பல்வேறு நூல்களை, தெளிவாக கற்று உணர்ந்தவர். ஒரு நூலை கற்றவுடன், அதன் நுணுக்கங்களை ஆராய்ந்து பார்க்கும் திறமையானவர்.

இத்தகைய ஆற்றலைப் பெற்று இருந்தும், அவரால் "ஈஷாவாஸ்ய உபநிஷத்" என்று சொல்லக்கூடிய உபநிடதத்தில், அமைந்த செய்யுள் வரிகளின் முழுமையான அர்த்தத்தை உள்வாங்க இயலவில்லை. அவருக்கு அதைக்கண்டு மிகுந்த ஆச்சர்யம் ஏற்பட்டது. இவ்வளவு மிகச்சிறிய உபநிடதம் இவ்வளவு ஆற்றல் வாய்ந்ததாக, நுண்ணிய பொருள் கொண்டதாக, தம்மால் புரிந்து கொள்ள இயலாத தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதைக் கண்டார், அதன் தத்துவத்தை எவ்வாறாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது.

தக்க தருணத்தை நோக்கி காத்திருந்தார். தாஸ்கணுவின் காட்சியில் பாபா தோன்றியதால், அவர் உடனே பாபாவிடம் சென்றார். இந்நிகழ்வை பாபா எவ்வாறு கையாண்டார் என்பதை காணும் முன்னர், நாம் ஈஷாவாஸ்ய உபநிடதத்தின் மகிமையைக் காண்போம்! அது மிகச்சிறிய பகுதியாகத் தெரிந்தாலும், அந்நூல் முழுவதுமே, உயர்ந்த கருத்துக்களை எடுத்துக்கூறும் ஆழ்ந்த தத்துவங்கள் நிறைந்த ஒன்றாகும்! அதன் காரணமாகவே அறிஞர்கள் அனைவரும் ஈஷாவாஸ்ய உபநிடதத்தை போற்றியுள்ளனர்.

நம் தேசப்பிதா மகாத்மா காந்தி, ஈஷாவாஸ்ய உபநிடதத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்! அவர் அதை பலமுறை ஆர்வத்துடன் பயின்று, அதன் உயர்ந்த தத்துவங்களை மக்களுக்கு எளிமையாக போதித்தார். மகாத்மா காந்தி ஒருமுறை

NOT FOR SALE

ஆன்மீக நூல்களைப் பற்றி உரையாடும்பொழுது, ஈஷாவாஸ்ய உபநிடதத்தைப் பற்றி இவ்வாறு எடுத்துரைக்கிறார். "பக்தி மார்க்கத்தில், நம்மை அழைத்துச் செல்லும் வேத சாஸ்திரங்கள், புராண, இதிகாசங்கள் மற்றும் மிக உயர்ந்த ஞானத்தை போதிக்கும் நூல்கள் எல்லாமே நமக்குத் தெரியாமல் தொலைந்து அல்லது அழிக்கப்பட்டாலும் ஈஷாவாஸ்ய உபநிடதம் என்ற நூல் ஒன்று மட்டுமே இருந்தால், தொலைந்த அனைத்து நூல்களின் சாராம்சத்தையும் நம்மால் அறிய இயலும்! அதுமட்டுமல்ல, தர்மசாஸ்திர நூல்கள் மற்றும் நீதி நூல்கள் தொலைந்தாலும் கூட, ஈஷாவாஸ்ய உபநிடதம் ஒன்று மட்டுமே இருந்தால் அந்நூல் தொலைந்த தர்மசாஸ்திர நூல்களின் ஒட்டு மொத்த கருத்துக்களை எடுத்துக்கூறி, நம்மை வழிநடத்தும்!" இவ்வாறு நம் தேசப்பிதா மகாத்மா காந்தி ஈஷாவாஸ்ய உபநிடதத்தைப் பற்றி மிகவும் உயர்வாக குறிப்பிடுகிறார்.

ஆனால் ஈஷாவாஸ்ய உபநிடதத்தில், செய்யுளின் அமைப்பு மிகவும் சிக்கலான ஒன்று. அதன் ஒவ்வொரு வரியையும் தனித்தனியாகப் பிரித்து, பொருள் புரியுமாறு எழுதுவது இயலாத காரியம்! சொற்கள் சேர்ந்து இருக்கும் பொழுது ஒரு பொருளாகவும், அவற்றைப் பிரிக்கும் பொழுது வேறு பொருளாகவும் மாறும் தன்மை கொண்ட நூலாகும். இத்தகைய காரணங்களால் ஈஷாவாஸ்ய உபநிடதத்திற்கு விளக்கவுரை எழுதிய அனைத்து அறிஞர்களும், அவரவர்க்கு தோன்றிய அர்த்தங்களை எழுதிய புதுமையான நூலாக அது திகழ்கின்றது.

தாஸ்கணு மகராஜ் அவர்களுக்கு அதன் உட்பொருள் அல்லது உட்கருத்து என்ன என்பதை தெரிந்துகொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. இதற்கு ஒரே தீர்வு பாபாவின் பாதங்களைப் பற்றுவதே ஆகும் என்பதை உணர்ந்து கொண்டார். அவர் தமக்கு நிகழ்ந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பல்வேறு அற்புதங்களினால், பாபாவின் தெய்வ சக்தியை நன்றாக உணர்ந்திருந்தார். தாஸ்கணு, பாபாவிடம் சென்றபொழுது, அவர் எதுவும் கேட்காமலேயே "இதற்குப்போய் என்னிடம் வருவானேன்? மும்பையில், விலேபார்லே என்ற இடத்தில் அமைந்த காகா தீக்ஷித்தின் பங்களாவில், பணி செய்யும் பணிப்பெண், உன்னுடைய இக்குழப்பத்தை தீர்த்து வைப்பாள்! நீ உடனே புறப்பட்டுச் செல்வாயாக!" என்று உத்தரவிட்டார்.

இதைக்கேட்ட அங்கு அமர்ந்திருந்த அனைவருமே சிரித்தார்கள். "பாபா இன்று தாஸ்கணுவோடு விளையாட தீர்மானித்து விட்டார்! ஆகையால் தான், அறிவில் மிகச்சிறந்த தாஸ்கணு மகராஜ் அவர்களை, ஒரு வீட்டு வேலை செய்யும் பணிப்பெண்ணிடம், உயர்ந்த ஞான நூலின் விளக்கத்தை கேட்குமாறு கூறுகிறார்" என்று அனைவருமே தீர்மானித்துவிட்டு சிரித்தார்கள்.

ஆனால் தாஸ்கணு, பாபாவுடன் மிக நெருங்கிய கூட்டுறவில் இருந்த காரணத்தால், பாபாவின் சொல், செய்கை எல்லாவற்றிலும் உள்ள உண்மையை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆகையால் அவர் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல், உடனே தீக்ஷித்தின் இல்லத்திற்கு சென்றார். அங்கு அன்று உறங்கிய தாஸ்கணு, காலையில், ஒரு சிறு பெண்ணின் உற்சாகமான பாடலைக் கேட்டு எழுந்துவிட்டார். அந்த குரலுக்குரியவள், பாபா குறிப்பிட்ட அப்பெண்ணாகத்தான் இருக்க முடியும் என்று தீர்மானித்தார். தனது அறையில் இருந்து, எழுந்து வந்து நோக்கிய போது, தீக்ஷித் அண்ணாவின் வீட்டில், வேலை செய்து கொண்டே அப்பெண் இனிமையாக பாடிக்கொண்டிருந்தாள். அப்பாடலின் பொருள், ஒரு அழகிய ஆரஞ்சு நிற, ஜரிகை வைத்து தைக்கப்பட்ட வண்ண உடையைப் பற்றியதாக இருந்தது.

NOT FOR SALE

வண்ண உடையைப் பற்றி உற்சாகமாகப் பாடிய, அச்சிறுமியின் உடலில், கிழிந்த சாக்குத் துணியைப் போன்ற உடையைக் கண்டு, தாஸ்கணு மனம் வருந்தினார். திக்ஷித் அண்ணாவிடம், சிறிது தொகையை அளித்து அச்சிறுமிக்கு நல்ல உடை ஆரஞ்சு நிற வர்ணத்தில், ஜரிகை வேலைப்பாட்டுடன் ஒரு உடை வாங்கித்தருமாறு வேண்டினார். தீக்ஷித் அவர்களும் தாஸ்கணுவின் விருப்பத்தை நிறைவேற்றினார். அந்த வண்ண உடையைப் பார்த்து அச்சிறுமியின் மனம் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தது.

அன்று முழுவதும் அவள் தன்னிலையை இழந்திருந்தாள். ஆனால் அடுத்த நாள் அந்த உடையை பத்திரமாக பெட்டியில் வைத்துவிட்டு, தனது பழைய கந்தலான ஆடையை அணிந்து வந்தாள். ஆனால், என்ன ஆச்சரியம்! அவள் இப்பொழுதும் உற்சாகமாக, அதே பாடலைப் பாடிக் கொண்டு பணி செய்ய துவங்கினாள். தாஸ்கணு ஈஷாவாஸ்ய உபநிடதத்தின் முக்கிய கூறு என்ன என்பதை இப்போது புரிந்து கொண்டுவிட்டார்.

அச்சிறுமி, நினைத்து மகிழ்ந்து உற்சாகமாக பாடிய அந்த உடை, புறத்தில் இல்லை. அவளுடைய அகத்தில் நிலைத்திருந்தது. ஆகையால்தான் கந்தல் ஆடை அணிந்திருந்த போது இருந்த அதே சந்தோஷமும், உற்சாகமும், புதிய ஆடை அணிந்தபோதும் இருந்தது. மீண்டும் புதிய ஆடையைப் பெட்டியில் பத்திரப்படுத்தி விட்டு, பழையதை அணிந்தபோதிலும் அவளுடைய உற்சாகத்திற்கும், சந்தோஷத்திற்கும் எவ்வித குறையும் இல்லை. ஆகையால், மகிழ்ச்சி, உற்சாகம் இவையெல்லாம் நாம் பார்க்கும் பொருட்களில் இல்லை. காணும் கண்களிலும், இதயத்திலும் உறைந்திருக்கின்றது. இதன் மூலம் நமக்கு தெரியவரும் கருத்து என்னவெனில், ஆனந்தத்தை, உற்சாகத்தை வெளியில் தேடி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எப்பயனும் இல்லை! ஆத்மாவில் தேடும் ஆனந்தமே நிலையானது!.

வண்ண உடை என்ற சுகத்தை, அச்சிறுமி லட்சியம் செய்யவில்லை. ஆகையால் அன்று இரவே அந்த உடை பெட்டிக்குள் சென்றுவிட்டது. அச்சிறுமி தான், எப்போதும் அத்தகைய வண்ண உடைகளை அணிந்து கொண்டிருப்பதாக உள்ளத்தில் நினைத்து, அந்த நினைவுகளால் ஆனந்தம் அடைகிறாள்! இதுவே நிலையானது! புறத்தே நிகழும் நிகழ்வுகள் எல்லாம், சொற்ப நேரத்திற்கு கிடைக்கும் அற்ப சந்தோஷம். அனால் இதயத்தில் ஊற்றெடுக்கும் ஆனந்தம் அழிவில்லாதது, நிரந்தரமானது! நிலையானது! இக்கருத்தை முழுமையாக உணர்ந்து கொண்ட தாஸ்கணு, இத்தகைய எளிய வழியில், மிகப்பெரிய ஞான நூலாகிய, ஈஷாவாஸ்ய உபநிடதத்தை உணர வைத்ததற்கு பாபாவிற்கு மனதார நன்றி கூறினார்.

NOT FOR SALE

ஒருவருக்கு இறைவனே நேரடியாக, இவ்வுலகில் காட்சி அளித்து பல அற்புதங்களைச் செய்தாலும், அவரது கர்மா அவரை அனுமதிக்காவிட்டால், தனது கண்களால், நேரில் கண்ட இறைவனது திவ்ய ஸ்வரூபத்தைக் கூட, அவரால் நம்ப இயலாது. தாஸ்கணு, பாபாவுடன் தான் கொண்டிருந்த, புனிதமான உறவை, பாபா பலமுறை நேரடியாக நிரூபித்திருந்தாலும், பலகாலம் பாபாவை இறைவன் என்று தாஸ்கணு ஒப்புக்கொள்ளவில்லை. மகாசமாதி அடைந்த பின்னர், முதன்முதலாக சூட்சும ரூபத்தில் சென்று தாஸ்கணுவை ஷீரடி வரும்படி அழைக்கும்பொழுதான், பாபா பரமாத்மாவின் ஸ்வரூபம், மற்றும் பாபாவே தாம் வணங்கும் பண்டரிபுர பாண்டுரங்கன் என்பதை உணர்ந்து கொண்டார்.

ஆகையால்தான் அவர் தம்முடைய குறிப்பேட்டில் "பாபாவை விட்டல் என்றும், ஷீரடியை பண்டரிபுரம்" என்றும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குறிப்பிட்ட பின்னும் கூட! "ஏன் உள்ளத்தில், அவர் தான் விட்டல் என்ற உணர்வு அப்பொழுது எழவில்லை? "அவர் மகா சமாதி அடைந்து சூட்சும சரீரத்தில், என்னை அழைத்து, தமது உடல் மீது மலர்கள் தூவி, ஆரத்தி எடுக்கக் கூறினார்! அப்பொழுதுதான் பாபாவை பாண்டுரங்கனாக உணர்ந்தேன்!" என்றார்.

தாஸ்கணுவின் இந்த நேர்மையான குணம், பாபாவை மிகவும் கவர்ந்திருந்தது. தமது உள்ளத்தில் தோன்றியதை கூறினால் வெளியுலகில், தமது கௌரவம், பாதிக்கப்படும் என்று ஒருபோதும் அவர் நினைத்ததில்லை! தமக்குள் இருந்த பெருமை, கர்வமாக உருவெடுத்து, அது தம்மையே வேதனைக்கு உள்ளாக்கியதை தாஸ்கணு முழுமையாக உணரும் வேளையும் வந்துவிட்டது. அந்த அற்புத நிகழ்வையும் எவ்வித ஒளிவு மறைவுமின்றி, தாஸ்கணுவே இவ்வாறு தமது குறிப்பேட்டில் வெளிப்படுத்தி உள்ளார்.

ஒரு முறை, ஷீரடியில் இருந்த தாஸ்கணு பண்டரிபுரம் சென்று, பாண்டுரங்கனை தரிசிக்க ஆவல் கொண்டார். அவர் பாண்டுரங்கனையே தமது உயிராக நினைத்துக்கொண்டு பல ஆண்டுகள் பண்டரிபுரம் தொடர்ந்து சென்று தரிசித்து வருபவர், தாஸ்கணுவின் ஆர்வத்தை அறிந்து கொண்ட அவருடைய நண்பரும், எஜமானியாக இருந்தவரும், அவரை பாபாவிடத்தில் அழைத்து வந்தவருமான, திரு. நானாசாஹேப் சந்தோர்கர், தாஸ்கணுவிடம், ''ஷீரடி என்ற இப்புண்ணிய ஸ்தலத்தில் வீற்றிருக்கும் பாபாவே பாண்டுரங்கனாவார்! அவரை தரிசித்தாலே பாண்டுரங்கனை தரிசித்த பலன் கிடைத்துவிடும் என்றார்." தாஸ்கணுவிற்கு இக்கருத்து ஏற்புடையதாக இல்லை. காரணம் அவர் பாபாவை, மகானாக மட்டுமே பார்த்து வந்துள்ளார். இறைவனாகப் பார்க்கும் மனப்பக்குவத்தை தாம் பெறவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


தாஸ்கணுவின் மனநிலையை, எல்லாம் வல்ல இறைவனாகிய பாபா, நன்கு உணர்ந்து கொண்டார். பாபா, நாணாவிடம் "கணுவை பண்டரிபுரத்திற்கு போகச் சொல்," என்று கூறிவிட்டார். அதற்கு காரணம், தாஸ்கணு தம்முடைய உள்ளத்தில், "பாபா இறைவனுடைய அவதாரமாக இருந்தால், நான் பண்டரிபுரம் சென்று பாண்டுரங்கனை தரிசிப்பதை ஏன் தடுத்து ஷீரடியிலேயே அமரச்சொல்கிறார்!" என்று நினைத்து விட்டார். அவர் அவ்வாறு நினைத்த அடுத்த கணம், பாபா தாஸ்கணுவை பண்டரிபுரம் செல்லுமாறு உத்தரவு அளித்துவிட்டார்.

அப்பொழுது வியந்த தாஸ்கணு, பாபாவிடம் "பாபா தாம் எல்லோருடைய மனங்களையும் படிக்கத் தெரிந்தவர்! ஆற்றல் வாய்ந்த, தம்முடைய சாக்ஷாத்காரத்தைக் காண விரும்புகின்றேன்!" என்றார். அவர் கூறிய சாக்ஷாத்காரம் என்பதன் பொருள், பாபாவின் உண்மையான ஸ்வரூபத்தைக் காண விரும்பினார் என்பதே ஆகும். பாபா தாஸ்கணுவிடம் உடனடியாக பண்டரிபுரம் செல்லுமாறு உத்தரவிட்டார்.

தாஸ்கணுவும் பண்டரிபுரம் சென்று, பாண்டுரங்கனை ஆனந்தமாக தரிசனம் செய்துவிட்டு ஷீரடி வந்தார். தற்பொழுது அவர் பாபாவிடம், "தேவா இப்பொழுதாவது தங்களின் உண்மையான ஸ்வரூபத்தைக் காண விரும்பும், எனக்கு காட்சி தருவீர்களா!" என்று வேண்டினார். பாபா, சிரித்துக்கொண்டே, "கணு நீ பண்டரிபுரத்தில் பார்த்தாயே, அந்த பாண்டுரங்கனை என்னில் பார்க்க ஏன் தவிறவிட்டாய்!" என்று கூறியவுடன் தாஸ்கணு தமது தவறை உணர்ந்து கொண்டார். ஆனாலும் அவருடைய ஆழ்மனதில் பாண்டுரங்கனையும், பாபாவையும் ஒன்றாக பார்க்கத் தயங்கியதாக குறிப்பிடுகிறார், இதுவே பாபாவின் லீலையாகும். ஒருவர் உயர்வான ஞான நூல்களை கற்றுத் தெளிந்து, பிரசித்தி

பெற்றவராக அனைவராலும் போற்றப்படுபவராக இருந்தாலும் சத்குருவின் பாதுகைகளே, நம்மைக் காக்கும் என்ற எண்ணமே உயர்வான ஞானமாகும்! தாஸ்கணு தம்முடைய குறிப்பேட்டில் அத்தகைய உயர்ந்த ஞானத்தையும் தான் பாபாவிடம் இருந்தே பெற்றதாக குறிப்பிட்டுள்ளார். இதுவே சத்தியம்! குருவின் கருணை ஒருவரிடம் இருந்தால் அவர் மூடராக இருந்தாலும் மிகப்பெரிய ஞானி என்ற அந்தஸ்த்திற்கு உயர்த்தப்படுவார். இத்தகைய மனப்பக்குவத்தை அடைந்தவர்களே, ஞானிகள் என்று அனைவராலும் போற்றப்படுகின்றார்கள்.

தாஸ்கணு தாம் இத்தகைய பக்குவத்தை, பாபாவின் மகாசமாதிக்கு பின்னரே பெற்றதாக குறிப்பிடுகின்றார். 1919 இல் சத்குரு பாபா, மகாசமாதி அடைந்த பின்னர், ஒருநாள், தனது மனைவிக்கு திதி அளிக்கும்போது, ஒரு சாதுவை சந்தித்தார். அவர் சாதுவிடம் தம்முடைய சந்தேகம் ஒன்றை தெளிவுபடுத்துமாறு வேண்டினார். அவர் அந்தச் சாதுவிடம் "ஸ்வாமி, என் சத்குரு, பாபா வாழ்ந்த காலத்தில், அவரை இறைவனின் அவதாரமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அற்றவனாக இருந்தேன்! பாபாவும் அவருடைய அருகில் சென்ற பொழுதெல்லாம், ஆலயத்திற்குச் சென்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்யுமாறு கூறுவார்!" இதற்கு எல்லாம் என்ன காரணம்! என்று கேட்டார். அந்த சாதுவும் தாஸ்கணுவிடம் "இதற்கான விடையை நான் கூறுவதற்கு முன்னால் நான் உன்னை ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன்! என்றார்!" தாஸ்கணுவும் அதற்கு சம்மதித்தார்.

அவர் தாஸ்கணுவிடம், "எப்போதும் இறைவனின் லீலைகளைக் குறித்தே உபன்யாசம் செய்து கொண்டிருக்கும் உனக்குள் ஏன் (அஹங்காரம்) கர்வம் ஏற்பட வேண்டும்?" என்றார். தாஸ்கணுவும் துணிவுடன் "ஸ்வாமி கர்வமில்லாத பண்டிதர் என்று

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எவர் இருக்கிறார்கள்? அப்படியே நான் கர்வம் கொண்டிருந்தாலும் அதை நான் பாபாவிடம் என்றுமே வெளிப்படுத்தியது இல்லையே!" என்றார்.

சாது சிரித்துக்கொண்டே தாஸ்கணுவிடம், "நடந்த ஒரு நிகழ்வை நன்றாக யோசித்துப் பார்!" பாபாவிடம், நீ ஒருநாள் புனித கங்கை நதியை தரிசிக்க வேண்டும் என்று கூறி உத்தரவு வேண்டினாய் அல்லவா? என்றார். தாஸ்கணுவும் அதை ஆமோதித்தார். சாதுவும் தொடர்ந்தார்."அவ்வாறு கங்கா மாதாவைத் தேடி, வெகுதூரம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, பாபா தம் கால்கட்டை விரலில், கங்கா மாதாவை வரவழைத்தார் என்பது உனக்கு தெரியுமல்லவா?" என்றார். இக்கருத்தையும் தாஸ்கணு ஆமோதித்தார்.

NOT FOR SALE

"ஆம் தாங்கள் கூறுவது சரியே! ஆனால் இதற்கும் கர்வத்திற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்!" என்றார். சாதுவும் தாஸ்கணுவிடம், கேசவனின் பாதங்களையும், சர்வேஸ்வரனின் ஜடாமுடியையும், அலங்கரித்த கங்கா மாதாவை, தமது கால்கட்டை விரலில் வரவழைத்தபோது, நீ என்ன செய்திருக்க வேண்டும்? அப்புனித நீரை எடுத்து பருகியிருக்க வேண்டுமல்லவா! ஆனால் நீ செய்தது என்ன? அப்புனிதமான நீரை தலையில் மட்டுமே தெளித்துக் கொண்டாய்! கங்கா மாதாவை, சர்வேஸ்வரனே உனக்கு அளித்திருக்கும்போது அதை நீ பக்தியுடன் பருகியிருந்தால், அப்பொழுது மனப்பக்குவமும், ஞானமும் உனக்கு ஏற்பட்டிருக்கும்! குலப்பெருமை காரணமாக அந்நீரை தலையில் மட்டுமே தெளித்துக் கொண்டாய்!, இவ்வாறு சாது கூறிய சத்திய வார்த்தைகளை கேட்டதும் தாஸ்கணுவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர், அவருடைய இதயத்தை நனைத்தது. பாபாவின் பாதங்களே, பண்டரிபுர பாண்டுரங்கனின் பாதங்கள் என்று உணர்ந்து கொண்டார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பாபா தம்மை நம்பியவர்களுக்கும், நம்பாதவர்களுக்கும் மழைநீர் எவ்வாறு பாரபட்சமின்றி அனைவருக்கும் பொழிகிறதோ அதைப்போல அனைவர்மீதும் தமது கருணை மழையை பொழிந்தார்! அவர் தாஸ்கணுவின் உள்ளத்தில், ஒருவர் மீதும், காழ்ப்புணர்ச்சியும், வெறுப்பும் கொள்ளக்கூடாது என்பதை ஒரு அற்புதத்தின் மூலம் உணர்த்தினார். ஒரு நாள் ஷீரடியில், ஒரு பக்தர், தமது இல்லத்தில் நடந்த சுபநிகழ்விற்கு நன்றி தெரிவிப்பதற்காக, ஷீரா என்று அழைக்கப்படும், வெண்மை நிறத்தில் அமைந்த கேசரி என்ற உணவை தயாரித்து, மசூதியில் பாபாவிற்கு நைவேத்தியம் செய்துவிட்டு, தமது இல்லத்தில் அனைவருக்கும் அளித்தார். அப்போது பாபா, தாஸ்கணுவை அழைத்து, "கணு நீ ஷீராவை உண்டாயா?" என்று அன்புடன் வினவினார். அதற்கு பதில் அளித்த தாஸ்கணு, "இல்லை பாபா! நான் அவருடைய இல்லத்திற்கு செல்லவில்லை. காரணம்! அவர் எனக்கு எதிரி ஆவார். ஆகையால் தான் அவர் என்னை மட்டும் விருந்து உண்ண அழைக்கவில்லை!" என்றார்.

பாபா இதைக் கேட்டு சிரித்துவிட்டு, கணு, எதிரி என்று இவ்வுலகில் எவருமே இல்லை! எல்லோருடைய ஆத்மாவும் ஒன்றுதான்!. சரீரம் மட்டுமே வேறுவேறு ஆகும்! அவன் உன்னுடைய சரீரத்தை மட்டுமே புறக்கணித்தான்! ஆத்மாவை அல்ல! நமக்குத் தெரியாமலேயே, எப்போது வேண்டுமானாலும் சரீரம் நம்மை விட்டு பிரிந்து சென்று விடும்! ஆகையால் அவன், உன்னுடைய சரீரத்தை அழைக்கவில்லை என்று நீ வருந்தாதே! இக்கருத்தை நீ தெளிவாக புரிந்து கொண்டால், எவரையும் எதிரியாக நினைக்க மாட்டாய்! என்றார். தாஸ்கணு, பாபா தம்மை படிப்படியாக, தெய்வநிலைக்கு உயர்த்தியதை, பூரணமாக உணர்ந்து கொண்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நன்கு கற்றறிந்த அறிஞர்களும், பண்டிதர்களும் தமது ஞானத்தின் மீது கொண்ட கர்வத்தினால், தாம் தவறு செய்தால் கூட அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்பதை விரும்பாதவர்கள். அவ்வாறு மன்னிப்பு வேண்டுவதை கௌரவக்குறைவாக நினைக்கும் வழக்கமும் இன்றளவும் இருந்து வருகின்றது. ஆனால், தாஸ்கணு இதற்கு விதிவிலக்கு, ஒருமுறை தாஸ்கணு, ஒரு அடியவரை மனம் புண்படுமாறு பேசிவிட்டார். அந்த அடியவர் தூய்மையான, உண்மையான உள்ளம் கொண்ட பாபாவின் பக்தர் ஆவார். அவர் தம்மிடம், பணமும், பொருளும் இல்லாதக் காரணத்தால், தமது சரீரத்தை வைத்து, பாபாவிற்கு என்ன சேவைகள் செய்ய முடியுமோ, அதை குறைவின்றி செய்து வந்தார். தாஸ்கணு ஏதோ ஒரு காரணத்திற்காக, அந்த பக்தர் மீது அவர் மனம் புண்படுமாறு, சில சொற்களைக் கூறிவிட்டார்.

பாபா! அந்த நிகழ்வை அறிந்துகொண்டு, அவர் செய்தது தவறு என்று எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாமல், மிகப்பெரிய கவிஞரான தாஸ்கணுவை, அவருடைய கர்வத்தை அழிப்பதற்காக, அந்த அடியவரிடம் சென்று, கைகள் தொழுது மன்னிப்பு வேண்டுமாறு கூறினார். தாஸ்கணு, பாபாவின் சொல்லே வேதம் என்று நினைப்பவர்! ஆதலால் உடனடியாக சம்மதித்து, அதை நிறைவேற்றவும் செய்தார். அவர் அந்த அடியவரின் முன்னால், தமது சிரத்தைத் தாழ்த்தி, கைகள் தொழுது, மன்னிப்பு வேண்டினார். இந்த நிகழ்ச்சி தாஸ்கணுவின் உள்ளத்தில் மிகப்பெரிய பக்குவத்தை ஏற்படுத்தியது.

தாஸ்கணு மகராஜ் மிகப்பெரிய கீர்த்தனை பாடகர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் காவல்துறை பணியில் அமர்ந்த உடனே 1903 ஆம் ஆண்டு, அவரிடம் உள்ள கவிதை இயற்றும் திறமையை வைத்து, கணபதி விழாவில், மகாராஷ்டிரா சக்கரவர்த்தி

NOT FOR SALE

சத்ரபதிசிவாஜியை புகழ்ந்து, தேச விடுதலை உணர்வைத் தூண்டும் சில பாடல்களை இயற்றிப் பாடினார். அவருடைய அந்த பாடல்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக, மிகப்பெரிய புரட்சியைத் தோற்றுவித்தது. தாஸ்கணு, தேச விடுதலைக்காக பல பாடல்களை இயற்றி பாடியுள்ளார். இதை கவனித்த ஆங்கிலேயர்கள், தாஸ்கணுவை விசாரணைக்கு அழைத்தனர். விசாரணை செய்த அதிகாரி தாஸ்கணுவிடம் ''அரசாங்க காவல்துறையில் பணியாற்றும் நீ, அரசுக்கு எதிராக இத்தகைய பாடல்களை ஏன் பாடினாய்?'' என்று கேட்டார். தாஸ்கணு தம்முடைய வேலை பறிபோவதை உணர்ந்து கொண்டு அந்த அதிகாரியிடம் "ஐயா நான் ஒரு ஆசுகவி!" அதாவது யாரைப்பற்றி பாடவேண்டும் என்றாலும் உடனடியாக அவர்மீது கவிதைகள் எழுதி அவருக்கு முன்னால் பாடக்கூடிய திறமை உள்ளவன்! அவ்வாறு தங்களுக்கு என்மீது சந்தேகம் இருந்தால் தாங்கள் சோதனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள்! என்று கூறிவிட்டார்.

இதைக் கேட்ட அதிகாரி தாஸ்கணுவின் வார்த்தையை சோதித்து பார்க்க நினைத்தார். உடனே அவர் ''நீ கூறுவது உண்மையானால் என்னைப் பற்றியும் ஏதாவது ஒரு பாடலைப்பாடு!'' என்று கேலியாக வினவினார். ஆனால் தாஸ்கணுவோ, இறைவன் தமக்கு அளித்த ஞானத்தினால், தம்மை விசாரணை செய்ய வந்த அதிகாரியையும் புகழ்ந்து மிகச்சிறப்பாக அவரைப்பற்றி பாடல் ஒன்றை எழுதி பாடியும் காண்பித்துவிட்டார். இதைக்கேட்ட அந்த அதிகாரி தாஸ்கணுவை பாராட்டினார். தாஸ்கணுவும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொண்டார். இதற்குக் காரணம், பாபாவின் கருணையே என்பதை போகப் போக உணர்ந்து கொண்டார்.

தாஸ்கணுவின் இலக்கிய வளம் செறிந்த பாடல்களும், கதைகளும் இன்றளவும் மும்பை பல்கலைக்கழகத்தின்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக இணைத்துள்ளனர். அவருடைய பாடலின் கருத்துக்கள் யாவும், நம் பாரத தேசத்தில் அவதரித்த, பல்வேறு ஞானிகளைப் பற்றியதாகவே அமைந்திருந்தது. கவிதை வளம் செறிந்த அவருடைய பாடல்கள், மகாராஷ்டிர மக்களிடையே மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. அதன் காரணமாகவே, தாஸ்கணு மகராஜ், இப்போதைய "மஹிபதி" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுகிறார். மஹிபதி என்ற கவிஞர், சென்ற நூற்றாண்டில், நம் தேசத்தின் மாபெரும் மகான்களின் சரித்திரங்களை எழுதியுள்ளார்.

தாஸ்கணுவும் கவிஞர் மஹிபதியைப் போல, சாதுக்களையும், மகான்களையும் போற்றிப் பாராட்டி எழுதி வந்த காரணத்தால், அவரையும் "மஹிபதி" என்று மகாராஷ்டிர மக்கள் அழைத்தனர். அவர் ஷீர்டி சாய்பாபாவின் உத்தரவிற்கு ஏற்ப சாதுக்களின் வரலாற்றை எழுதினார். தாஸ்கணு தம்முடைய வாழ்நாளில் ஏறக்குறைய இரண்டரை இலட்சம் கவிதைகளை எழுதியுள்ளார். அவருடைய கவிதைகள் அனைத்தும், மக்களை பக்தி மார்க்கத்தில், வழி நடத்திச் சென்றது. நேர்மையும், சத்தியமும், இறைபக்தியும் அவருடைய போதனைகளாக அமைந்தன. அவருடைய கீர்த்தனைகளால் மகாராஷ்டிரா தேசத்தில் பாபாவின் புகழ் மேலோங்கி இருந்தது. அவர் தன்னுடைய பக்தி மார்க்க நெறியை சாயி மார்க்கமாகவே அனைவருக்கும் உணர்த்தினார்.

தாஸ்கணுவின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்ளும் போது, பாபாவிற்கும் அவருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நமக்கு தெளிவாக புலப்படுகின்றது. ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் 1962வது ஆண்டு, 26ஆம் தேதி, கார்த்திகை மாதம் சதுர்த்தி நன்னாளில், பண்டரிபுரத்தில் தனது குருவும், இறைவனுமான ஸ்ரீ சாய்நாதருடன் ஐக்கியமானார். அவருடைய மகாசமாதி நாந்தேடு மாவட்டத்தில், கோர்டே என்ற இடத்தில் அமைந்துள்ளது.

NOT FOR SALE

ஓம் சாய்ராம்

# ஸ்ரீ தாஸ்கணு இயற்றிய உலகப்புகழ்பெற்ற ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ்சரி

ஸ்ரீ குருப்யோ நமஹ! தாஸ்கணு மகராஜ் சாயிநாதரை போற்றுவதற்கும், துதிப்பதற்கும் தேவையான ஞானத்தை அருளுமாறு, சகல தேவதைகளிடமும் பணிவுடன் வேண்டுகிறார்! ஸ்ரீதத்தாத்ரேயரின் முழுமையான அவதாரமான, ஸ்ரீ சாயிநாதரை போற்றும் ஞானமும், பக்குவமும் தமக்கு இல்லை என்றும், அத்தகைய ஞானத்தை தமக்குத் தரவேண்டி, சகல தேவதைகளையும், தெய்வங்களையும் ப்ரார்த்தனை செய்கிறார்.

1. முதலில் மூலாதார மூர்த்தியும், முழுமுதற்கடவுளுமான ஸ்ரீ கணேச மூர்த்தியை துதிக்கின்றார். கணபதி தேவர் எல்லா செயல்களுக்கும், நிகழ்வுகளுக்கும் ஆதாரமாக இருக்கிறார். மயூரேஷ்வரர் என்றழைக்கப்படும் கணபதி தேவர், இவ்வுலகத்தில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும், நம்பிக்கையாக, சாட்சியாக இருக்கின்றார்! மயூரேஷ்வர் என்ற நாமம், சிந்து என்ற அசுரனை (சம்ஹாரம்) வதம் செய்யும் பொருட்டு, மயிலை வாகனமாக ஏற்றதால் ஏற்பட்ட காரணப் பெயராகும். சிந்து என்ற பெயருடைய அசுரன், தனக்கு உயிரளித்த, சூரியக் கடவுளிடம் இருந்து, தேவாமிர்தத்தை பருகியதால், எவராலும் தம்மை அழிக்க இயலாது என்ற ஆணவத்துடன் இருந்தான். அவனால் துன்புற்ற அனைத்து தேவர்களும், சர்வேஸ்வரனிடம் முறையிட, அன்னை பார்வதி தேவியின் வேண்டுகோளை ஏற்று, கணபதி தேவர், சிந்துவை, தமது ஆறு கரங்களால் வதைத்து அனைவரையும் காத்து இரட்சித்தார். அத்தகைய கௌரியின் புத்திரராகிய, அனைத்தும் அறிந்த, ஸ்ரீ கணபதி தேவர், அளவில்லாத ஆற்றலை, தன்னகத்தே கொண்டு பெருத்த வயிறோடு, கம்பீரமாக வீற்றிருப்பவரை தம்மைக் காத்து இரட்சிக்குமாறு வேண்டுகிறார்!

2. பூதகணங்கள் அனைத்திற்கும், முதல்வராகத் திகழ்பவர், சகல தேவதைகளுக்கும், தெய்வங்களுக்கும் முழுமுதற் கடவுளாகும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பெருமையை உடையவர்! ஆகையால் தான் சர்வேஸ்வரன், கணங்களுக்கெல்லாம் அதிபதியை கணாதிபதி என்ற பொருளில் கணேசர் என்ற திருநாமத்தை அளித்துப் போற்றினார்! இப்பிரபஞ்சத்தில் அமைந்த சகல உலகங்களிலும் வாழும் மனிதர்கள், தேவர்கள், நாகர், அசுரர், கின்னரர், கந்தர்வர் முதலிய அனைவருமே, தாங்கள் இறைவனுக்கு அளிக்கும் அவிர்பாகத்தை, முதன்முதலில் பெற்றுக்கொள்ளும் மகத்துவத்தை உடையவரே, ஸ்ரீ கணபதி தேவர் ஆவார்! ஆகையால்தான் சகல வேதங்களும், சாஸ்திரங்களும் கணேசரை முதற்கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்தகைய புனித தெய்வமான ஸ்ரீகணபதியை, பாலச்சந்திரனாகப் போற்றுகின்றார்.

3. வாக்தேவதை என்று அனைவராலும் போற்றப்படும் சாரதாதேவி, ஒலிகளுக்கெல்லாம் ஆதாரமானவள்! இவ்வுலகில் நிகழும் நிகழ்வுகள் அனைத்தையும் இயக்குபவளே சரஸ்வதி தேவியாவாள்.

4. வாக்தேவதையான வாணி சரஸ்வதியே! எழுத்துக்களுக்கும், எழுதுபவர்களுக்கும் மூலமாகத் திகழ்கின்றாள்! இந்த தேசத்தின் மணி மகுடமாக திகழ்பவளும் அவளே ஆவாள்! எல்லையில்லாத தனது ஆற்றலை, எல்லா திசைகளிலும் செலுத்துபவள்! இத்தகைய வாக்தேவதையான ஜகதாம்பாளை தமது சிரம் தாழ்த்தி வணங்குகின்றார்!

5. எப்போதும் தன்னையே தியானித்து வரும் ஞானிகள், மகான்கள் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் பரிபூரண பரம்பிரம்மாவாகிய, பண்டரிபுர பாண்டுரங்கனை துதிக்கின்றார். பரிபூரண பரப்பிரம்மா என்ற சொல்லின் பொருளானது, பூரணத்துவம் நிறைந்த, அதாவது முழுமையான, எல்லாவற்றிற்கும் இறுதியான ஆற்றலை உடைய தெய்வமான பாண்டுரங்கன் என்பது பொருள். பாண்டுரங்கன், வடஇந்தியாவில் முக்கியமாக மகாராஷ்டிராவில் வாழ்ந்த, அனைத்து சாதுக்களுக்கும் ப்ரியமானவராக, அவர்கள் போற்றும் பகவானாகத் திகழ்கிறார். ஸ்ரீ தாஸ்கணு தமது ஆரத்தி பாடலில், ஷீரடியை பண்டரிபுரம் என்றும், சாயி தேவனையே விட்டல் என்றும்

NOT FOR SALE

வர்ணிக்கின்றார். தம்மை தியானிக்கும், சாதுக்களின் இருப்பிடம் தேடிச் சென்று, அருள் செய்பவராக பாண்டுரங்கன் திகழ்வதால், சாதுக்களின் ப்ரியமானவரே என்று போற்றுகின்றனர். மனித அவதாரம் எடுத்த இறைவனாகவே அனைவரும் பண்டரிராயரைப் பார்க்கின்றனர்! அதற்குக் காரணம் ஞானத்தின் உறைவிடமான பாண்டுரங்கன், தமது பக்தர்களின் மீது, கணக்கிட இயலாத சமுத்திரத்தைப் போன்று, கருணையைப் பொழிபவர். அத்தகைய அன்பின் திருவுருவமான பாண்டுரங்கனை நரஹரியாக போற்றுகின்றார்!

6. "எவ்வாறு ஒரு பொம்மலாட்டக்காரர், நூலிழைகளை தமது பிடியில் வைத்துக்கொண்டு, பொம்மைகளை தமது விருப்பத்திற்கேற்ப ஆட்டுவிக்கிறாரோ, அதைப்போல இவ்வுலகத்தின் உயிர்களை ஆட்டுவிக்கும், இயக்குநரான ஸ்ரீ மகாவிஷ்ணு இல்லாத இடமே இல்லை என்றும் அவருடைய ஆற்றலை, உண்மையான இயல்பை விவரித்துச் சொல்லும் வார்த்தைகளை, கற்றறிந்த அனைத்து நூல்களில் தேடியும் கூட கிடைக்கவில்லை!" என்கிறார். சக்ரபாணியான ஸ்ரீ மகாவிஷ்ணு, வெறும் ஏட்டறிவைக் கொண்டு, கர்வத்துடன் இருப்பவர்களுக்கு காட்சி அளிப்பதில்லை. அத்தகைய பகுத்தறிவுவாதிகள் தம்முடைய வாதங்களைக் கொண்டு, வீண்விவாதம் செய்வதிலேயே கழித்து தங்களின் பெருமையை மட்டுமே பறைசாற்றிக் கொள்கின்றனர்.

7. தான் என்ற கர்வத்தை ஒழித்த ஞானிகளுக்கும், மகான்களுக்கும் மட்டுமே, ஸ்ரீ சக்ரபாணியை புரிந்து கொள்ள முடியும்! என்கிறார். மற்ற அனைவராலும் எவ்வளவு நூல்களைக் கற்றாலும், கர்வம் அடங்காததால் ஸ்ரீ சக்ரபாணியான மகாவிஷ்ணுவை, ஒரு போதும் புரிந்து கொள்ள இயலாது! என்றும் கூறுகிறார். அப்படிப்பட்ட ஆற்றலையுடைய சக்ரபாணிக்கு, தமது மரியாதைக்குரிய வணக்கத்தை, தம் சரீரம் முழுவதையும் ஒடுக்கி அவர் முன்னர் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வதாகக் கூறினார்.

8. ஐந்து தலைகளை உடைய ஆதிசங்கரரை, மண்டை ஓடுகளை மாலைகளாக அணிந்தவரை, கழுத்தில் ஆலகால விஷத்தை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஏற்றுக் கொண்டு அனைவரையும் காத்து இரட்சிக்கும். நீலகண்டன் என்ற நாமத்தை உடையவர், சர்வேஸ்வரரை, திகம்பரரை, ப்ரம்ம ரூபத்தைக் கொண்ட பசுபதி தேவரை, ஈஸ்வரரான சிவனைப் போற்றுகின்றார்.

9. எவர் ஒருவர் சர்வேஷ்வரரின் நாமத்தை இடைவிடாது உச்சரிக்கின்றாரோ, அவருடைய உலகியல் துன்பங்கள் யாவற்றையும், உடனடியாக மாய்த்து விடுகின்றார்! அத்தகைய ஆற்றலைக் கொண்டதாலேயே, துர்ஜதி என்று அழைக்கப்படுகின்றார். துர்ஜதி என்ற நாமம், ருத்திரரின் அம்சமான, சர்வேஸ்வரரின் வல்லமையைக் குறிக்கும் சொல்லாகும்.

10. சர்வேஸ்வரரின் பாதங்களை, பணிந்து போற்றி வணங்கி இந்த துதிப்பாடலைப் பாடுகின்றார். அவர் அருள் இன்றி அவர் பாதம் கூட பணிய இயலாதக் காரணத்தால், அவருடைய அருளை யாசிக்கின்றார். நீலகண்டனாகிய சர்வேஸ்வரர், இந்த ப்ரார்த்தனைப் பாடலை சிறப்பாக பூர்த்தி செய்வதற்காக அவர் அருளை நாடுகின்றார்.

11. இப்பொழுது அத்திரி மகரிஷியின் புதல்வரும், ஆதி குருவும், குரு பாரம்பரியத்தை தோற்றுவித்தவரும் மும்மூர்த்திகளின் வடிவமும், ஆற்றலையும் பெற்ற ஸ்ரீதத்தாத்ரேயரை பணிகின்றார்! தேவர்களுக்கெல்லாம், அதிபதியான தேவேந்திரனின் குல தெய்வமும், தேவர்கள் அனைவரையும் அசுர சக்திகளிடம் இருந்து காத்து இரட்சிக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவையும் பணிகின்றார்! பக்தி மார்க்கத்தின் ஜகத்குரு என்று அனைத்து சாதுக்களாலும் போற்றி வணங்கப்படும் சாது துக்காராம் மற்றும் அனைத்து மஹான்களையும், இத்தகைய மஹான்களின் பக்தர்களான அடியவர்களையும வணங்கி போற்றுகிறார்.

12. சாய்நாதருக்கு எல்லா வெற்றிகளையும் உரித்தாக்குகிறார். சத்குருவான சாய்பாபாவை போற்றித் துதிக்கும் செயல் எளிதல்ல! இத்தகைய மாபெரும் பணியைச் செய்ய வேண்டுமானால், சகல தெய்வங்களையும், தேவதைகளையும் வணங்கி, அவர்களது அருளைப் பெற்ற பின்னரே, சத்குரு சாய்நாத் மகராஜ்

NOT FOR SALE

அவர்களைப் போற்றி தம்மால் எழுத இயலும், என்ற காரணத்தால் முதலில் அனைவரையும் துதித்து, பின்னர் பாபாவை போற்றத் துவங்குகிறார்! மிகக்கொடிய பாவங்களைச் செய்தவரும், சாய்நாதரிடம் சரணடையும் போது, அவர்களையும் கருணையோடு மன்னித்து, காத்தருள்பவரே, சாய்நாதர் ஆவார். தன்னுடைய சிரத்தை, பாபாவின் பாதங்களில் வைத்து தம்மை பாதுகாக்குமாறு வேண்டுகிறார். பாபாவின் புகழை தாஸ்கணு இவ்வாறு போற்றித் துதிக்கின்றார்.

13. "இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ள பூரணத்துவம் நிறைந்த சாய்நாதரே! உன்னை தியானிக்கும் அடியவர்கள் பரவச நிலையை அடைவார்கள்! நீரே இம்மண்ணில் மனித அவதாரம் எடுத்த ஸ்ரீ மகாவிஷ்ணு ஆவாய்!. தம் சரீரத்தில் தனது தர்ம பத்தினியான உமாதேவிக்கு, இடது பாகத்தை அளித்தவரும், மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்து அழித்த சர்வேஸ்வரரும் நீரே ஆவீர்!"

14. மனித அவதாரம் எடுத்த இறைவனும் நீயே! ஞானம் என்ற பரந்து விரிந்த ஆகாயத்தில் சூரியனும் சாயிநாதரே ஆவார். கருணையைப் பொழிவதில் சமுத்திரத்தைப் போன்றவர், பிறப்பும் இறப்பும் சூழ்ந்த, இத்தொடர் சங்கிலியான, வாழ்க்கை நோய்க்கு மருந்தாவாய்!

15. நீ ஏழை எளியவர்க்கு நினைத்ததை எல்லாம் தரும் சிந்தாமணியாவாய்! உனது அடியவர்களின் ஆத்மாவை புனிதமாக்கும் கங்கை நதியாவாய்! இவ்வுலக பந்த பாசங்களில் சிக்கி தவிப்போர்க்கு கரைசேர்க்கும் ஓடமாவாய்! வாழ்க்கைச் சூழலில் கலங்கியவருக்கெல்லாம் நீ அடைக்கலம் தந்தாய்!

16. இவ்வுலகில் உயிர்களின் படைப்பிற்கு மூலகாரணமாக விளங்கும், சுத்த சைதன்யம் என்ற மெய்ஞான உணர்வே நீதான்! கருணையின் கருவூலமே நீதான்! இப்பிரபஞ்சமே! உனது அற்புத லீலைகளுள் ஒன்றாகும்!

17. பிறப்பும் இறப்பும் இல்லா பேரருளே! அறிஞர்கள் மிகக் கடினமான சோதனைகளுக்கு பின்னர் ஆராய்ந்து யோசித்து ஒப்புக்கொண்ட உண்மை என்னவென்றால், பிறப்பு, இறப்பு என்ற இவை இரண்டு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சொற்களும் இவ்வுலகில் சாதாரண மனிதர்களுக்கு மட்டுமே! தெய்வத்திருவுருவான நீர், இவை இரண்டிலிருந்தும் விடுபட்டவர் ஆவீர்!

18. நீருற்றிலிருந்து வெளிப்படும் நீரானது, அந்த ஊற்றிலிருந்து தோன்றியது அல்ல. முன்பே பூமியில் தேங்கி இருந்த தண்ணீரே நீருற்றாக வெளிப்படுகின்றது.

19. அவ்வாறு ஊற்றிலிருந்து நீர் புறப்படும்போது, அது நீருற்று என்று பெயர் ஏற்பட்டது. ஆனால் அங்கு நீரே இல்லா விட்டால், அப்பெயரே ஏற்பட்டிருக்காது.

20. நீரின் இயல்பானது, அது ஊற்றாக பீறிட்டுக்கொண்டு வரும்போதும், அல்லது வற்றிப்போய், அந்த ஊற்று அடைந்த போதிலும், இத்தகைய இரண்டு நிலைகளிலும், நீர் வருந்துவதோ! அல்லது பொருட்படுத்துவதோ இல்லை! ஆனால் ஊற்றானது, நீர் நிறைந்து இருக்கும்போது மகிழ்வதும், நீர் வற்றியவுடன் வருந்துவதுமாக இவை இரண்டின் இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

21. இந்த மனித சரீரமும் நீருற்றைப் போன்றது. சுத்த சைத்தன்யம் என்று சொல்லப்படும் மெய்ஞான உணர்வே நீர்! அது ஊற்றாக வெளிப்படும் போதும், ஓடையாக, குளமாக, நதியாக, சமுத்திரமாக ஓடும் போதும் தனது இயல்பை மாற்றிக்கொள்ளாமல் நீராகவே இருக்கின்றது. அவ்வாறே மெய்ஞான உணர்வைப் பெற்றவர்கள், எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும், அச்சூழல் சிறிதும் தங்களின் இயல்பை பாதிக்காமல், அந்த உணர்விலேயே தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வார்கள்.

22. பிறப்பற்ற பெருங்கடலே, சாயிநாதா! கருணையின் உருவமே நீயாவாய்! எம்மைப் போன்ற மானுடர்களின் அறியாமை என்னும் இருளை அழிக்க, மின்னலைப் போன்ற ஒளியைப் பாய்ச்சக்கூடிய இந்திரனின் வஜ்ராயுதத்தை ஏந்தி வருமாறு சாயிநாதரை அழைக்கின்றார்.

23. இப்பூமியில் அறியாமை என்ற எண்ணற்ற மாயத்திரைகள் இன்றளவும் இருந்து கொண்டுதான் வருகின்றது.

NOT FOR SALE

வருங்காலங்களிலும் அளவிட இயலாத இத்தகைய மாயத்திரைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

24. அவ்வாறு தோன்றும் எண்ணற்ற மாய உருவங்களின் பெயர்களும், தோற்றங்களும் வெவ்வேறாக இருக்கும். இத்தகைய வேறுபாடுகளை வைத்தே அவர்கள் இன்னாரென்று இவ்வுலகிற்கு அடையாளம் காட்டப்படுகின்றார்கள்.

25. சுத்த சைதன்யமான மெய்ஞான உணர்வுகளில் நான் வேறு, நீ வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாது! இங்கு வேறுபாடு என்பதே கிடையாது! இத்தகைய பிரித்துப் பார்க்கும் வேற்றுமை உணர்வுகள் எங்கே இல்லையோ! அங்கேயே சுத்த சைதன்யம் என்ற மெய்ஞானம் நிரந்தரமாக வீற்றிருக்கும்!

26. சுத்த சைதன்யம் என்ற மெய்ஞான உணர்வு, இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ள போது, இங்கு நானும், நீயும் ஒன்றுதான்.

27. ஆகாயத்தில் இருக்கும்பொழுது, நீருண்ட மேகமாய், ஒன்றாக திரண்டிருந்த நீரானது, பூமியில் விழும் பொழுதுதான் பல தோற்றங்களை தருகின்றன!

28. அவ்வாறு ஆகாயத்தில் இருந்து விழும் மழைநீர், புனித கோதாவரி ஆற்றுப்படுகையில் கலக்கும் பொழுது, கோதாவரி என்றே பெயர் பெறுகின்றது. ஆனால் அதே சமயம் கிணற்றில் விழுந்த நீருக்கு அப்படிப்பட்ட மகத்துவம் கிடைக்கவில்லை!

29. சாதுக்களும், ஞானிகளும் கோதாவரி நதியைப் போன்று புனிதமானவர்கள்!. சாயிநாதரான தாமே அந்நதியின் புனிதமான நீராவீர்!. நாங்கள் அனைவரும் கிணறுகள், குளங்கள், ஏரிகள் விழும் நீராவோம்!. இதுவே நமக்குள் இருக்கும் வித்தியாசமாகும்! குளம், குட்டை, கிணற்றில் விழும் மழைத்துளிகளாகிய நாம், அவற்றின் நிழலிலேயே திருப்தி அடைகின்றோம்! நம் உள்ளத்தில் எழும் அனைத்து எண்ணங்களும், கோதாவரி நதியைப் போன்ற உயர்வானதாகவும், புனிதமானதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு உயர்வான எண்ணங்களுக்கு இடமளிக்காத காரணத்தால் புனித கோதாவரியை மறந்து, சாதாரண கிணற்று நீராகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

NOT FOR SALE

30. இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கும், மறு உலகத்திற்கு தேவையான அருளைப் பெறுவதற்கும் நாங்கள் உன்னையே சரணடைய வேண்டும்! உன்னிடம் எங்களை சமர்ப்பிக்க வேண்டும்! பக்தியோடு இரு கரங்கள் கூப்பி, கர்வம் விட்டொழித்து வணங்குவதன் காரணம், நீரே பக்தியின் உன்னத உயர்ந்த வடிவமாவாய்! புனிதத்தின் உருவமாவாய்!

31. கோதாவரி நதியில் விழுந்த காரணத்தால், அதன் நதிப் பெருக்கால், அந்நீரும் புனிதமடைந்தது. அப்படி கோதாவரி நதியில் கலக்காத நீர் வெறும் சாதாரண நீராக எல்லா இடத்திலும் தோற்றமளிக்கின்றது.

32. கோதாவரி நதியானது, புனிதத்தின் அடையாளமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சத்தியமாகும். அதன் காரணம், அப்புனித நீர் உள்வாங்கும் பவித்ரமான நிலப்பகுதியே ஆகும்.

33. ஆகாய மேகங்கள் சேகரிக்கும் மழைநீரின், பவித்ரமான தன்மையை இப்பூமியில், எப்பகுதி மாற்றாமல் அவ்வாறே அதன் இயல்பை ஏற்றுக்கொள்கிறதோ, அப்பகுதியை ஞானிகளும், ஞான நூல்களும் கோதாவரி என்று பக்தியோடு அழைக்கின்றனர்.

34. அதே சமயம் மழைநீரின் துளிகள், பூமியில் மற்ற பகுதிகளில் விழும் சமயம், அங்குள்ள மண்ணின் தன்மையை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய இயல்பை எப்போது இழக்கின்றதோ அவை புனிதத்துவம் பெறவில்லை. உதாரணமாக சில பகுதிகளில் சேரிக்கப்பட்ட மழைநீர், அப்பகுதியின் தன்மைக்கு ஏற்ப, கசப்பாகவும், உப்பாகவும், சேற்று நீராகவும், மாசுகள் பலவும் கலந்து துர்நாற்றம் கொண்ட நீராகவும் மாறிவிடுகின்றது. அத்தகைய நீர்ப்பரப்பை எவரும் பவித்ரமான நதிகளின் பெயரைச் சொல்லி அழைக்கவில்லை.

35. அவ்வாறே குருநாதரே! எந்த பவித்ர உருவத்தில், ஆறு துர்க்குணங்களாகிய மாசுகள் இல்லையோ, அப்படிப்பட்ட சரீரத்திற்கு ஞானிகள் என்ற பெயர் பொருந்தும், இச்செய்யுளில் காமம், கோபம், பேராசை, சலனம், தற்பெருமை மற்றும்

NOT FOR SALE

பொறாமை முதலிய ஆறு துர்குணங்களும், எவர் ஒருவரை தீண்டாமல் ஒதுங்கி தூர விலகிச் சென்று விடுகின்றதோ, அவரே அனைவரும் போற்றி வணங்கும் ஞானி என்று அழைக்கப்படுவார். அத்தகைய மகானும், ஞானியுமான சாயிநாதரை பணிகின்றார்.

36. அத்தகைய மேன்மையும், மகத்துவமும் நிறைந்த மகான்களையும், சாதுக்களையும் கோதாவரி என்றே அழைக்கின்றனர். அவை எல்லாவற்றிலும் தலை சிறந்த மகத்துவத்தை தன்னகத்தே கொண்ட சாயிநாதரை பணிகின்றார்.

37. இவ்வுலகம் படைக்கப்பட்ட நாள் முதல் கோதாவரி நதியானது உற்பத்தி ஆகிவிட்டது. அந்நதி தன்னுள் முழுமையான நற்குணங்களாகிய நீரை எப்போதும் சுமந்து கொண்டிருப்பதால் இன்றளவும் வற்றாமல் ஜீவநதியாக ஓடிக்கொண்டே இருக்கின்றது.

38. கோதாவரி நதியின் பழமையை கணக்கிட்டுப் பார்த்தால், அது இராமாயண காலந்தொட்டே வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இராவணனை வதம் செய்த, ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி, அழகிய பஞ்சவடி என்ற வனப் பகுதியில் தன் வனவாச காலத்தின் சில வருடங்களை, மாதா சீதாதேவியோடு, கோதாவரி நதிக்கரையில் தான் கழித்தார். அத்தகைய புகழ்பெற்ற கோதாவரி நதிப்படுகையின் நீர், அன்று இருந்தவாறே இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்நதியில் அன்று ஓடிய அதே நீரை இன்று நம்மால் காண இயலாது.

39. இதில் ஆச்சர்யம் என்னவென்றால், இவ்வாறு நதியின் நீர் ஒவ்வொரு முறையும் கடலைச் சேர்ந்தாலும் நதியின் புனிதம் ஒருபோதும் கெடுவதில்லை.

40. ஒவ்வொரு முறையும் நதியில் வந்து சேரும் நீரை, கடலுக்கு அளித்து மகிழ்கின்றது. மீண்டும் மழைக்காலத்தில் நிரம்பிய மழை நீரோடு, இவ்வாறு கோதாவரி ஒவ்வொரு பருவத்திலும் புதுமையாகத் திகழ்கின்றது.

41. எவ்வாறு நதியின் நீர் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

படுகின்றதோ, அதைப்போலவே அனைத்து சாதுக்களும், ஞானிகளும், வெவ்வேறு காலகட்டங்களில், தேவைக்கேற்ப, அவதாரங்கள் எடுத்து புதுப்பிக்கப் படுகின்றார்கள். அவர்களில் மிக உன்னத ஆத்மாக்கள், பொங்கி வரும் அலைகளுக்கு சமமானவர்கள் ஆவார்கள். காரணம், அலைகள் பலமுறை வந்து செல்லக்கூடிய இயல்பைக் கொண்டது. ஒவ்வொரு முறையும் வரும் அலைகள், புதிதாகப் பிறந்ததுபோல ஆரவாரத்துடன், ஆனந்தமாக வந்து, நம்மை மகிழ்விப்பதைப் போல, மகான்களும், ஞானிகளும், பூமியில் தர்மத்தை நிலை நாட்டவும், நமக்கு ஆனந்தமயமான இறையனுபவத்தைக் கூறி மகிழ்விக்கவும், அலைகளைப் போல மீண்டும் மீண்டும் இவ்வுலகில் அவதரிக்கின்றனர்.

NOT FOR SALE

42. இப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த கோதாவரி நதியில், முதன்முதலில் வெளிப்பட்ட வெள்ளமாக தோன்றியவர்களே, ஸனத்குமாரர்கள் என்று அழைக்கப்படும் மூவர் ஆவார்கள்.

43. அதன் பின்னர் தேவரிஷியான நாரதரும், தும்புருவும், துருவரும், பக்த ப்ரஹலாதரும் ஆற்றல் வாய்ந்த பலிசக்ரவர்த்தி என்று போற்றப்படுபவரும், சபரி, அங்கதரும், வாயு குமாரரும் விதுரர் மற்றும் கோபர் - கோபிகைகளும் ஆவார்கள். இவர்களைப் போன்ற எண்ணற்ற மகரிஷிகளும், மகான்களும் வெவ்வேறு காலகட்டத்தில் தேவைக்கேற்ப அவதரித்தனர். கோதாவரி நதியின் வெள்ளம் எவ்வாறு, புதிது புதிதாக அலைகளை, மீண்டும் மீண்டும் அனுப்பிக் கொண்டிருக்கிறதோ, அதைப்போல, மகான்களின் அவதாரம் ஒவ்வொரு முறையும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இப்போதைய இந்த யுகத்தில் காலத்தின் தேவையை முன்னிட்டு, அவ்வாறு கோதாவரி நதியில் புறப்பட்ட புது வெள்ளமே, நம் சாயிநாத மகராஜ் ஆவார். அத்தகைய புனித வெள்ளமான சாயிநாதரே! தங்களின் திருவடிகளை பக்தியோடு சரணடைகின்றேன்! எனது குறைகளையும், தவறுகளையும் மன்னித்து பொறுத்துக் கொண்டு கருணையோடு அருள்வாயாக!

44. தாஸ்கணுவாகிய நான் ஒரு ஏழை பாமரன்! அறியாமை என்ற இருளில், உழன்று கொண்டிருப்பவன்! மாயையால்

ஆட்கொள்ளப்பட்டவன்! ஆகையால் பல பாவங்களைச் செய்து அதிலிருந்து மீள இயலாமல் தவித்துக் கொண்டிருப்பவன்!. ஆகையால் சாயிநாதா என் தவறுகளுக்காக தயவுகூர்ந்து என்னை புறந்தள்ளி விடாதீர்கள்!.

45. எவ்வாறு இரும்பில் உள்ள குறைகளை பாரிசக் கல்லானது பொருட்படுத்தவில்லையோ, அதைப் போலவே சிறிய ஓடைகளான லெண்டி மற்றும் ஓகோல் என்பவை, தம்மை வந்து அடைந்தாலும் கோதாவரித்தாய் அவற்றை நிராகரிப்பதில்லை. சிறிய ஓடைகளாக இருந்தாலும் அவற்றையும் அன்போடு ஏற்றுக்கொள்கின்றது.

46. அதைப் போல அடியேனும் முழுமையான துர்ச்சிந்தனைகளால் ஆளப்பட்டிருக்கிறேன்! ஆனால் உனது கருணையான ஒரே ஒரு பார்வை மட்டுமே எனது தீய எண்ணங்களை அழித்து விடக்கூடியது. இதுவே இந்த தாஸ்கணுவின் தாழ்மையான கோரிக்கையாகும்!.

47. பாரிசக்கல்லின் தொடர்பு ஏற்பட்ட போதும், இரும்பானது தன்னிடம் உள்ள குறைத்தன்மைகளை நீக்காவிட்டால், அது பாரிசக்கல்லிற்கு இழுக்கைத் தரும். ஆகையால் குருவரரே! என்னை, பாவச் செயலை செய்ய அனுமதிக்க வேண்டாம்! அவ்வாறு உமது பக்தனாகிய நான், பாவச் செயலைச் செய்துவிட்டால், அச்செயல் உமது பெயருக்கு களங்கம் விளைவிக்கக் கூடியது. குழந்தைகள் எத்தனை தவறுகளைப் புரிந்தாலும், பெற்ற அன்னையானவள், சினம் கொள்ளாமல் பொறுத்துக் கொள்வதைப் போல, எனக்கும் தாங்கள் கருணை காட்ட வேண்டுகிறேன்! ஓ சத்குரு சாயிநாதா! கேட்டதை எல்லாம் தரும் காமதேனுவும், நினைத்ததை தரும் சிந்தாமணியும் நீரே ஆவீர். ஞானமாகிய ஆகாயத்தில் சுடர்விட்டு பிரகாசிக்கும் ஆதவன் நீரே ஆவீர்! நற்காரியங்களின் நாயகரும் நீரே ஆவீர். இம்மண்ணுலகிற்கு மட்டுமல்ல, விண்ணுலகிற்கும் தந்தை தாமே ஆவீர்! தங்களின் அடியவர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்ததற்கும், அதற்கு வழிவகை செய்வதும் தாமே ஆவீர்!

48. ஓ பவித்ர தேவரே! தூய்மையானவரே! நீரே அமைதியின் உறைவிடம்! ஆனந்தத்தின் இருப்பிடம்! ஓ பூரணத்துவம் கொண்ட

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


படைப்புக் கடவுளைப் போன்றவரே! வேறுபாடுகளைக் களைந்தவரே! ஞானத்திருக்கடலே! புருஷர்களுக்கெல்லாம் தலைவரான புருஷோத்தமரே! பொறுமையின் சிகரமே! உனது அடியவர்க்கெல்லாம் அடைக்கலம் அளித்தாயே! என்னை ஆசிர்வதியுங்கள்! என்னை ஆசிர்வதியுங்கள்! நவநாத நாராயணர்களில் முதல்வரும், மகான் கோரக்நாத் அவர்களின் சத்குருவுமான மச்சீந்திரரும் சாய்நாதரே! நீரே, மஹா ஞானியான ஜாலந்தரும், மகா ஞானியாகிய சாது ஸ்ரீஞானேஷ்வரரும், அவருடைய சகோதரருமான நிவ்ருத்தி நாதரும் நீரே ஆவீர்! பக்த கபீரும், ஷேக் முகம்மதுவும், சாது ஏக்நாத் மகராஜ் அவர்களும் நீரே ஆவீர்! மிகச் சிறந்த சாதுவான தாமாஜிபந்தும் சாவதா மாலியும் நீரே ஆவீர்! மராட்டிய மன்னன், வீர சத்ரபதி சிவாஜி அவர்களுக்கு குருவாக விளங்கிய, சந்த் இராமதாஸ் என்று அனைவராலும் போற்றப்படும் மிகச்சிறந்த சாதுவும் நீரே ஆவீர்! ஜகத்குரு என்று அனைவராலும் பாராட்டப்படும் சாது ஸ்ரீ துக்காராம் மகராஜ் அவர்களும் நீரே ஆவீர்! சாது சாகாவும், ஸ்ரீதத்தாத்ரேயரின் அவதாரமான ஸ்ரீ மாணிக்புரபுவும் நீரே ஆவீர்.

49. இந்த யுகத்தில் நிகழ்ந்த உமது அவதாரம், மற்றும் உமது கற்பனை கூட செய்ய இயலாத உயர்ந்த தன்மை, இயல்பு ஆகியவற்றை புரிந்து கொள்வது, அத்தகைய எளிதான செயல் அல்ல! நீங்கள் அனைவரையும் பாரபட்சமின்றி காத்து இரட்சிப்பதால், உமது குலத்தின், மதத்தின் அடையாளங்களை எவரிடமும் வெளிப்படுத்தியதில்லை!.

50. ஒரு சிலர் உம்மை இஸ்லாமியர் என்று சொல்வதுண்டு! மற்றும் சிலர் உம்மை அந்தணர் என்றும் சொல்வதுண்டு! யாதவகுல ஸ்ரீ கிருஷ்ணரைப் போன்று தங்களுடைய பூர்வீகமும் எவராலும் அறிந்து கொள்ள முடியாத ஒன்றாகும்.

51. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அனுபவித்திருக்கிறார்கள். ஒரு சிலர் அவரை யதுகுலதிலகமா ஆராதிக்கின்றனர். ஒரு சிலர் ஆடுமாடுகளை மேய்க்கும் இடையர் என்றனர்! நந்தகோபருடைய தர்மபத்தினியான அன்னை யசோதா, ஸ்ரீ கிருஷ்ணரை இறைவனாகப் பார்க்கவில்லை, தனது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அன்புக் குழந்தையாக கொஞ்சி மகிழ்ந்தாள்! கம்சன் என்ற அசுரன், ஸ்ரீகிருஷ்ணரை, தம்மை வதம் செய்ய வந்த எதிரி என்றான். ஸ்ரீ கிருஷ்ணரின் தேரோட்டியான உத்தவர் அவரை தன் அன்புக்குரிய நண்பர் என்றார். பாண்டவர்களின் வீரத் திருமகனான அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரை எங்கும் வ்யாபித்த பரம்பொருள் என்றார்.

52. ஓ குருவரா! எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றி ஒவ்வொருவரும் தமது மனதில் தீர்மானித்ததை எடுத்துரைத்தார்களோ அதைப்போலவே தங்களைப் பற்றியும் அவரவர் மனதில் தோன்றியவற்றை எடுத்துரைக்கின்றனர்.

53. ஒரு சிலர் தாங்கள் மசூதியை இருப்பிடமாகக் கொண்டதாலும், தங்களின் காதுகளில் துளையிடப்படவில்லை என்பதாலும், நீங்கள் செய்யும் 'பாத்தியா' என்ற திருக்குர்ஆன் ஓதுவதைப் பார்த்துவிட்டு, நீங்கள் ஒரு இஸ்லாமியர் என்று தீர்மானிக்கின்றனர்.

54. தாங்கள் பஞ்சபூதங்களின் முதற்கடவுளான அக்னி பகவானுக்கு, எப்போதும் ஆஹுதி அளிப்பதைப் பார்த்துவிட்டு, ஹிந்துவாகத்தான் இருக்க இயலும் என்று அடியேனின் மனதிலும் தோன்றியது.

55. அறிவில் சிறந்தவர்கள் என்று தம்மை பறை சாற்றிக் கொள்பவர்களே, இத்தகைய புறத்திலுள்ள வேறுபாடுகளை எப்போதும் விரும்பி ஆராய்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் ஞானத்தில் சிறந்த பக்தர்கள், இத்தகைய புற வேறுபாடுகளை வைத்து ஒரு மகானை, அவர் இன்னாரென்று அடையாளம் காண்பிக்க மாட்டார்கள்.

56. நீரே படைப்புக் கடவுளான பிரம்மதேவர் ஆவீர். குலம், மதம், இனம் என்பவற்றையெல்லாம் கடந்தவரும் நீரே ஆவீர். ஆதிகுருவும் நீரே! இவ்வுலகை படைத்தவரும் நீரே ஆவீர்.

57. ஒவ்வொரு மகான்களின் அவதாரத்திற்கும் ஒரு காரணம் நிச்சயமாக இருக்கும் சாயிதேவா! மதங்களின் பிரிவினையால் சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்பட்டு, அதனால் சமூக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அமைதிக்கும், நன்மைக்கும் பாதகம் ஏற்படுவதை, தாங்கள் விரும்பவில்லை. தங்களுடைய அவதார நோக்கமே! பிரிவினை வாதங்கள் பேசும், இந்து- இஸ்லாமிய மதங்களின் மெய்ப்பொருளை அனைவருக்கும் எடுத்துரைக்கும் விதமாக அனைவரின் முன்னிலையிலும், மசூதியிலும் அமர்ந்துகொண்டு, அக்னி பகவானையும் ஆராதனை செய்தீர்கள்! தங்களுடைய இத்தகைய லீலைகள் மூலமாக பக்தர்களுக்கு, மதங்கள் யாவும் இறைவனிடம், நம்மை அழைத்துச் செல்லும் மார்க்கம் மட்டுமே என்பதை எளிமையாக அனைவருக்கும் புரிய வைத்தீர்கள்!

58. இன, குல வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நீரே, ப்ரம்மம் ஆவீர்! சத்தியத்தின் திறவுகோல் நீங்கள்! மனிதர்களின் கற்பனைக்கும் எட்டாத அற்புத சக்தியை கொண்டவரும் தாமே ஆவீர்!

59. சாயி நாதரே! பலரும் உமது மதம், குலம் இவற்றைப் பற்றி, தங்களின் மனதில், பலவற்றை நினைத்துக் கொண்டும், அந்த நினைவுகளுக்கேற்றவாறு அனுமானித்துக் கொண்டும், பல விவாதங்களை முன் வைத்து தீர்மானித்துக் கொண்டும் வருகிறார்கள்! இத்தகைய தர்க்க விவாதங்களுக்கு நடுவில் அடியேனின் சாதாரண வார்த்தைகள் எவ்வாறு மகத்துவம் பெறும்?

60. ஆனாலும் தங்கள் முன்னால் அமர்ந்திருக்கும் நான், தங்களை போற்றாமல் எவ்வாறு மௌனமாக இருக்க இயலும்? அவ்வாறு போற்றித் துதிக்க வேண்டுமென்றால் வார்த்தைகளே எனக்கு கருவிகளாகத் துணை செய்கின்றது! அடியேனின் போற்றுதலை ஏற்றுக்கொள்ளுங்கள்!

61. தங்களின் கருணையால், எனக்குக் கிடைத்த மிகச்சிறந்த சொற்களைக் கொண்டு, எவ்வாறு உயர்வாக தங்களுக்கு புகழாரம் சூட்ட முடியுமோ, அத்தகைய உன்னதமான பணியைச் செய்ய விரும்புகின்றேன்!

62. ஞானிகளும், மகான்களும் இறைவனுக்குரிய தகுதியைக் காட்டிலும் உயர்வான தகுதியைப் பெற்றவர்கள் ஆவார்கள்! உன்னுடையது, என்னுடையது என்ற வேறுபாடுகளைக்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

களைந்தவர்கள்! ஸ்ரீ தாஸ்கணு, மகான்களின் சிறப்பை, இறைவனை விடவும் உயர்ந்ததாக மதிப்பிடுகிறார். இக்கருத்தை இறைவனே, ஸ்ரீமத் பாகவத புராணத்தில் முன்மொழிந்திருக்கிறார். பகவானைவிட பாகவதர்களும், சாதுக்களும், ஞானிகளும் உயர்வானவர்கள் என்ற காரணத்தால் தான், ஸ்ரீமத் பாகவத புராணத்தில் முதல் ஒன்பது ஸ்கந்தங்களை, ஞானிகளுக்காக அளித்துவிட்டு இறுதியில், பத்தாவது ஸ்கந்தத்தில்தான் பகவானின் சரித்திரமே இடம் பெறுவதாக, சுகப்ரம்ம ரிஷி, பரீக்ஷித் மகாராஜாவிற்கு எடுத்துரைக்கிறார். அசுரர்களான இரண்யகசிபுவும், இராவணனும் வதம் செய்யப்பட்ட காரணம், இறைவனை நிந்தித்து, வெறுத்து, இறை அவதாரங்களான மகான்களையும், சாதுக்களையும் சித்ரவதை செய்தனர். பகவான் தன்னை இகழ்ந்து நிந்தித்தவர்களைக் கூட மன்னித்து விடுவார். ஆனால் தன் ப்ரியத்திற்கு உகந்த சாதுக்களை துன்புறுத்தினால், ஒரு போதும் பொறுத்துக் கொள்ள மாட்டார் என்று புராணங்களும், சாஸ்திரங்களும் கூறுகின்றன. அவ்வாறே பகவானுக்கு ப்ரியமான சாதுக்களும் ஒருபோதும் பகவானை நிந்திக்க மாட்டார்கள்.

63. நவநாத நாராயணர்கள் என்று அழைக்கப்படும் நாத் என்ற வரிசையில் வந்த, ஒன்பது நாராயணர்களில் ஒருவரான, ஜாலந்தர் நாத் மகராஜ் அவர்களை, கோபிசந்தன் என்ற அரசன் குப்பைத் தொட்டியில் அடைத்து எரித்து விட்டான்! இச்செய்தியை, அப்பரம்பரையில் வந்த, சக்தி வாய்ந்த மகான் கோரக்கர் என்கி கோரக்நாத், கோபி சந்தனால் எரிக்கப்பட்ட ஜாலந்தரின் கதையைக் கூறுகிறார். அதைக்கேட்ட ஜாலந்தரின் சீடரான, கிருஷ்ணபாதர் என்பவர், விரைந்து சென்று, தமது குருவை மனதார தியானித்து அழைக்க, என்ன அற்புதம்! எரிந்து சாம்பலான சரீரத்துடன் மீண்டு, அக்குப்பைத் தொட்டியில் இருந்து வெளியே வந்தார். அவர் கோபிசந்தன் தம்மை எரித்ததை பொருட்படுத்தவே இல்லை. காரணம், நவநாத் என்ற பரம்பரையில் வந்த குருமார்களை, பஞ்சபூதங்களும், இயற்கையும், வேறு எந்த சக்தியும் ஒன்றுமே செய்ய இயலாது என்பதால், தம்மை எரித்த கோபி சந்தனுக்கும், ஜாலந்தர் மகராஜ் கருணையைப் பொழிந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

64. அரசன் கோபி சந்தனுக்கு, இவ்வுலக பந்தங்களில் இருந்து விடுபட்டு, முக்தியைப் ப்ராப்தமாக அளித்தார். அதுமட்டுமல்ல கோபிசந்தனை, அழியாத புகழ்பெற்ற அரசனாக மாற்றினார். இதுவே மகான்கள், சர்வசக்தி வாய்ந்தவர்கள் என்பதை எடுத்துரைக்கின்றன. மகான்களின் ஆற்றலை வார்த்தைகளால் எடுத்துரைக்க இயலாது.

65. ஞானிகள் கதிரவனைப் போன்றவர்கள், அவர்களின் பெருந்தன்மையும், மன்னிக்கும் கருணை உள்ளமும், சுடர்விட்டு பிரகாசிக்கும் ஆதவனின் ஒளியைப் போன்றது. ஞானிகளின் அன்பும், அருளும் அமைதியாக ஒளிவீசக்கூடிய நிலவைப் போன்றது. நிலவின் குளிர்ந்த தன்மையைப் போன்ற அன்பையும், அருளையும் அடியவர்களுக்கு வழங்குவார்கள்.

66. ஞானிகள் மணம் மிக்க கஸ்தூரியைப் போன்றவர்கள்! அவர்களின் ஆசீர்வாதம், கஸ்தூரியின் தெய்வீக நறுமணத்தைப் போன்றதாகும். ஞானிகள் சுவை மிக்க கரும்பிற்கு ஒப்பாவார்கள். அவர்களின் ஆசீர்வாதம் கரும்பின் இனிய சுவைக்கும் இணையானதும், மேலானதும் கூட.

67. மகான்களுக்கும், ஞானிகளுக்கும் நல்லவர்களும் ஒன்றுதான் தீயவர்களும் ஒன்றுதான், அதில் எந்தவித மாறுபாடும் இல்லை. இதில் விந்தையான விஷயம் என்னவென்றால், நற்குணமுடையவர்களைக் காட்டிலும் மகான்களின் பரிவும், அன்பும், தீயவர்களிடம் அதிகமாகவே காணப்படுவதுதான். தீயவர்களின் தீய குணங்களை நீக்க, ஞானிகள் பரிவு கொண்டு, தங்களுடைய அன்பால் அத்தீயவர்களின் மனதை மாற்றி, அவர்களையும் நல்லவர்களாக மாற்றும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள்.

68. இக்கருத்தை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள, தாஸ்கணு மகராஜ் ஒரு மிகச்சிறந்த உதாரணத்தைத் தருகிறார். அது என்னவென்றால், கோதாவரி நதிக்கரையில் துவைப்பதற்காக வரும் துணிகள், கறைகளும், அழுக்கும் நிறைந்ததாகவே இருக்கும். பரிசுத்தமான வஸ்திரங்கள் கோதாவரி நதிக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை.

NOT FOR SALE

69. ஒரு வேளை பரிசுத்தமான துணிகள், நதிக்கு வராமல் இருந்தாலும், என்று அத்துணிகளின் மீது அழுக்கும் கறையும் படிகிறதோ, அன்று அவையும் நதிக்கரைக்கு வந்தே தீரவேண்டும்.

70. சாயிநாதரே! உம்முடைய பாதுகைகளின் தரிசனம் ஒன்றே, புனித கோதாவரி நதியில் நீராடியதற்கு சமானமாகும்!. ஓ சமர்த்த சாயி! என்னுடைய பாவங்களை கழுவி துவைத்து என்னை தூய்மையானவனாக மாற்றுவாயாக!

71. இக்கலியுகத்தில் பாவங்கள் பெருகிவிட்டன. இங்கு வாழும் நாம் மீண்டும் மீண்டும் பல தவறுகளைச் செய்கின்றோம். ஒவ்வொரு முறையும் நாம் செய்த பாவச்செயலுக்காக, வருந்தினாலும், மீண்டும் அதே பாவத்தில் உழல்கிறோம். ஆகையால் நம்மைப் போன்றவர்களுக்கு, மகான்களின் தரிசனம் மிக மிக அவசியமாகும்.

72. கோதாவரி நதியில் நீர்நிரம்பி வழிகின்றது. அழுக்குத் துணிகளாகிய நம் உள்ளத்தில் இருக்கும் தீய எண்ணங்களை கோதாவரி நீக்கியே ஆக வேண்டும்! அவ்வாறு ஒரு வேளை நீக்க இயலாவிட்டால், அது கோதாவரியின் புனிதத்திற்கு இழுக்காகும்!

73. சாயிநாதராகிய நீங்கள் நிழலையும், குளிர்ச்சியையும் தரக்கூடிய பசுமையான மரம் ஆவீர்.அத்தகைய மரநிழலாகிய தங்களின் அரவணைப்பின் கீழ் இளைப்பாற வந்த பயணிகளே நாங்கள் ஆவோம்! சூரியனின் சுட்டெரிக்கும் கதிர்களால் நாங்கள் நிழலைத் தேடி வந்துள்ளோம்.

74. ஓ குருராயா! ஆதவனின் சுட்டெரிக்கும் கதிர்களின் வெப்பத்திலிருந்து எம்மை நீர்தான் காப்பாற்ற வேண்டும்! தமது அடியவர்களான எம்மை, நிழலும், குளிர்ச்சியும் தரும் மரம் போல காப்பாற்றுவதைவிட வேறு என்ன ஆனந்தம் இவ்வுலகில் இருக்க முடியும்?

75. மர நிழலில் அமர்ந்து இருக்கும் ஒருவனை, அந்த நிழலே, கொதிக்கும் அனலாகி சுடும் போது, அந்த மரத்தை எவ்வாறு நிழல்தரும் மரம் என்று கூற இயலும்? அதுபோல தங்களுடைய பாதுகாப்பிலும், அரவணைப்பிலும் இருக்கும் எங்களை, தாம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


காப்பாற்றாமல் போனால், தங்களை இரட்சகர் என்று எவரால் கூற இயலும்?

76. தங்களுடைய கருணையும், அருளுமின்றி இவ்வுலகில் நிகழும் செயல்கள் எதுவுமே நியாயமாகாது! நியாயப்படுத்தவும் இயலாது! சத்தியத்தையும், தர்மத்தையும் நிலை நிறுத்துவதற்காகவே சேஷசாயி, அர்ஜுனரோடு இணைந்தார்.

77. இராமாயண யுகத்தில், சகோதர பாசத்தில், சத்தியத்தை மறக்காமல், தர்மவழியில் செல்ல வேண்டும் என்று விபீஷணன் நினைத்தான்! அவனுக்கு வானவீரர், கிஷ்கிந்தையின் அரசரான சுக்ரீவனின் துணை கிடைத்தது! சுக்ரீவரின் துணையைக் கொண்டே, அவன் காரணமாகவே ஸ்ரீ ராமரை அடைந்து, தம்மையே அவருக்கு சமர்ப்பணம் செய்தான். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் அருளை, அன்பை விபீஷணன் பெற்றதற்கு காரணமே, சுக்ரீவர்தான். அதைப்போல, தனது திவ்ய நாமத்தை தொடர்ந்து எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும் சாதுக்கள், மற்றும் ஞானிகளால் மட்டுமே ஸ்ரீ ஹரியின் கீர்த்தி உயர்வாக போற்றப்படுகின்றது.

78. உருவமும், இயல்பும் அற்ற பரப்பிரம்மத்தைப் பற்றி வேதங்களும் முழுமையாக எடுத்துரைக்கவில்லை, சாஸ்திரங்களாலும் எடுத்துரைக்க இயலவில்லை. ஆனாலும் சாதுக்களும், ஞானிகளும், பிரம்மத்தின் உருவையும், இயல்பையும், தங்களுடைய உயர்ந்த பக்தியால் எடுத்துரைத்து எல்லா சாஸ்திரங்களையும் ஆச்சர்யப்படவும், வெட்கப்படவும் வைத்தனர்.

79. மகான்களின் மகத்துவத்தை இறைவனே பல உதாரணங்களின் மூலம் எடுத்துரைக்கிறார். தாமாஜி என்ற பாண்டுரங்கனின் தீவிர பக்தர், அரசவையில் குற்றம் சாட்டப்பட்டு சிறை சென்றபோது, அவர் தனது பக்தியால், வைகுண்டபதியான ஸ்ரீமன் நாராயணனை, மாதா ருக்மிணி தேவியின் ப்ராணநாதரை, மஹர் என்ற ஒரு தாழ்த்தப் பட்டவராக வேடம் ஏற்கச் செய்து, தாம் குற்றவாளி அல்ல என்பதை மன்னர் ஒப்புக்கொள்ளச் செய்தார். அதே போன்று சோகாமேலா என்ற பாண்டுரங்கனின் பரம பக்தர், மாடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்தார். அவர் தமது தீவிர

NOT FOR SALE

பக்தியாலும், அன்பினாலும் தமக்குப் பதிலாக வைகுண்டபதியை, எருமை மாடுகளை மேய்த்து அவை இட்ட சாணத்தையும் கைகளில் ஏந்துமாறு செய்து விட்டார். அன்பும், பக்தியும் எவரிடம் இருக்கின்றதோ, அவருக்கு இறைவனே அடிமையாகின்றான் என்ற உண்மையை, உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே, இத்தகைய லீலைகளை நடத்துகிறார்.

80. தன்னையே எப்போதும் தியானித்து வரும் சாதுக்களுக்காக தண்ணீரைக் கூட, இறைவன் தனது தோள்களில் சுமந்திருக்கிறார். அத்தகைய சாதுக்களின் உலகியல் பாரம் முழுவதையும் இறைவன் தாமே ஏற்றுக் கொண்டிருக்கிறார். இத்தகைய உதாரணங்களால், பகவானைக் காட்டிலும் அவரைப் போற்றும் பாகவதர்களாகிய சாதுக்கள், ஞானிகள், மகான்கள் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர் என்பதை நம்மால் புரிந்து கொள்ள இயலும்

81. தாஸகணுவாகிய எனக்கு, இனிமேலும் உம்மைப் பற்றி புகழ்வதற்கு வார்த்தைகளே இல்லை! ஓ சத்குரு சாய்நாதரே! ஷீரடி என்ற கிராமத்தின் விலைமதிக்க இயலாத நீரே எமது தாயும், தந்தையும் ஆவீர்!

82. பாபா உனது லீலைகளை எவரால் விவரிக்க இயலும்? அடியேனின் வாயிலிருந்து வெளிப்படும் சாதாரணமாக வார்த்தைகளைக் கொண்டு தங்களைப் போற்றுவதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

83. எத்தகைய பாவம் செய்தவர்களையும், மன்னித்து காப்பதற்காகவே நீ ஷீரடிக்கு வருகை தந்தாய்! அச்செயலை நிரூபித்த நீ வெறும் தண்ணீரை ஊற்றி, அதில் விளக்கேற்றி, தண்ணீருக்கும், தீபத்தை எரியவைக்கும் மகத்துவத்தை அளித்தாய்!

84. உனது யோக ஆற்றலை பல வகைகளில் நீ வெளிப் படுத்தினாய்! சாதாரண மென்மையான மரப்பலகையில், இற்றுப்போன கயிற்றில் கட்டி தொங்கவிட்டு, அதை உன்னுடைய படுக்கையாக்கிக் கொண்டாய்! உனது இத்தகைய யோக ஆற்றலைக் கண்ட அனைவரும், மெய்மறந்து வியந்து பார்க்கச்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


செய்தாய்!

85. மருத்துவர்களும், ஜோதிடர்களும் குழந்தை பாக்கியம் இல்லை என்று மறுத்துவிட்ட சூழ்நிலையில் கூட, உன்மீது கொண்ட நம்பிக்கையால், அப்பெண்களுக்கும் தாயாகும் சௌபாக்கியத்தை வழங்கினீர்!. உம்மிடம் எவர், அவ்விதமான வியாதியால் பீடிக்கப்பட்டு, வந்தாலும் அவர்கள், அனைவரையும், உன்னுடைய அருட்பிரசாதமான உதியை வழங்கி ஆசீர்வதித்ததால், அவர்களுடைய வியாதிகள் அனைத்தும் நொடியில் நீங்கிவிட்டன, உன்னுடைய உதியைப் போன்ற அருமருந்து இவ்வுலகில் வேறு என்ன இருக்க முடியும்?

86. உமது பக்தர்களாகிய எங்களது உலகவியல் துன்பங்கள், அனைத்தையும் நீக்கி, எம்மைக் காத்து இரட்சிப்பது உனக்கு ஒரு பொருட்டே இல்லை ப்ரபோ! தேவாதி தேவரே எவ்வாறு ஒரு சிறிய எறும்பின் எடை, யானைக்கு பாரமாக இருக்க இயலும்?

87. ஆகையால் குருராயரே! இந்த அடியவனிடத்தில் கருணை காட்டுங்கள்! உமது பாதங்களையே தஞ்சம் அடைந்த என்னை தயைகூர்ந்து புறந்தள்ளாதீர்கள்!

88. தேவா! நீர் அரசர்களுக்கெல்லாம் அரசர் ஆவீர்! அருளை வழங்குவதில் அந்த குபேரனைவிட செல்வந்தர் தாமே ஆவீர்! எத்தகைய காயத்தையும், எப்படிப்பட்ட வலியையும், வேதனைகளையும், மாற்றி அமைப்பதில் உமக்கு நிகர் வேறு எவருமே இல்லை தேவா? இப்படிப்பட்ட பேராற்றலைக் கொண்ட உம்மை விட உயர்ந்தவர் வேறு எவர் உள்ளார்கள்?

89. எந்த தெய்வத்தை வணங்குவதாக இருந்தாலும் ஏதாவது ஒரு விதிமுறையைப் பின்பற்ற வேண்டும் எனறு சாஸ்திரங்கள் கூறுகின்றன! ஆனால் தேவாதி தேவா! உம்மை வணங்குபவருக்கு ஒரு விதிமுறையும் அவசியமில்லையே ஐயனே! உம்மைக் காட்டிலும் விதிகள் எவ்வாறு மகத்துவம் பெறமுடியும்?

90. சுடர்விட்டு இப்பிரபஞ்சம் முழுவதும் பிரகாசிக்கும் சூரியனின் மணடலத்தில், கொலுவீற்றிருக்கும் சூரியனின் அரசவையில், தீபாவளியைக் கொண்டாட ஆசைப்பட்டால், ஆதவனின்

NOT FOR SALE

கதிர்களைக் காட்டிலும், வெளிச்சத்தை காட்டும் விளக்குகள் எங்கே இருக்கின்றன?

91. இவ்வுலகில் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளின் தாகத்தையும் தீர்க்கக்கூடிய சமுத்திரத்திற்கே, தாகம் எடுத்தால், அத்தாகத்தை பூமியானது எவ்வாறு தீர்க்க இயலும்? அக்னி தேவரே தம்மை சூடேற்றிக் கொள்ள நெருப்பை தேடினால், அந்நெருப்பை எங்கிருந்து கொண்டு வர இயலும்?

92. ஓ ஸ்ரீசமர்த்த குருராயா! உம்மை போற்றிப்பாடும், துதித்து வணங்கும், கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் இவை எல்லாவற்றிலும் உம்முடைய அருள் என்ற அமிர்தம் நிரம்பி வழிகின்றது! அத்தகைய அருளின் காரணமாகவே, உம்மைப் போற்றும் தகுதியை அவை பெறுகின்றன! உம்மைத் துதிக்கும் வார்த்தைகள் எல்லாம் உன்னிடமிருந்தே பெறப்பட்டதாகும்!

93. தாஸகணுவாகிய, என் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள், அனைத்துமே உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளாகும்! ஆனால் ஒரு ஆச்சர்யம் என்னவென்றால், இதுவரை நான் கூறிய இத்தத்துவக் கருத்துக்களின் உண்மையை நானே உணரவில்லலை! இத்தகைய உன்னத கருத்துக்களைக் கூறுவதற்கு அடியேனுக்கு எந்தத்தகுதியும் இல்லை! எந்த அனுபவமும் இல்லை என்பதே சத்தியமாகும்!

94. என்னுடைய சமர்த்த குருராயா! அடியேன் உன்னை, ஆகம விதிகளின்படி பூஜைகள் செய்து வணங்க வேண்டும் என்றால், அதற்குரிய சாதனங்கள் சத்தியமாக என்னிடம் இல்லை!.

95. தேவனே! நான் எனது ஞானத்தைக் கொண்டு உம்மை போற்றுவதற்கு எவ்வித அருகதையும் அற்றவன்! ஆதலால் எனது கற்பனையின் துணை கொண்டே உம்மைப் போற்றி பாடுகின்றேன்! அக்கற்பனைக் கூட உன்னுடைய கருணையால் மட்டுமே சாத்தியமானது! ஸ்வாமி! இந்த அடிமையின் ப்ரார்த்தனையை தயை கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்!

96. இப்பொழுது அடியேனின் கண்ணீரால் உமது பாதங்களை அபிஷேகம் செய்கின்றேன்! உண்மையான பக்தி என்ற சந்தனக்

NOT FOR SALE

 நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல 

குழம்பை உமது பாதங்களில் பூசுவதற்கு அனுமதி அளிப்பீராக!

97. அலங்கார வார்த்தைகளான கப்னி என்று சொல்லக்கூடிய உமது நீளமான ஆடையை உங்களுக்கு அணிவிக்கின்றேன்! அடியேனின் உண்மையான சமர்ப்பணம் என்ற அன்பு மாலையை, தங்களுடைய கழுத்தில் அணிவிக்கின்றேன்!

98. அடியேனின் துர்குணங்களாகிய தூபம், தங்களின் முன்னால் எரிக்கப்பட்டுவிடும். அக்குணங்களின் தொகுப்பு முழுவதுமே தூய்மையானதாக இருக்க முடியாது. ஆனாலும் அத்தீய குணங்களான, தூபத்தை எரிக்கும்போது நறுமணம் கமழ்கின்றதே தவிர துர்நாற்றம் வீசுவதில்லை!. அதற்கும் நினது கருணையே காரணமாகும்.

99. ஒரு வேளை சத்குருவிற்கு பதிலாக வேறு ஒருவரின் முன்னர் தூபம் ஏற்றப்படுமானால், அந்த தூபத்திற்கு என்ன நேரிடும் என்பதை நாம் இப்போது காண்போம்!

100. அத்தூபம், அக்னியால் ஏற்றப்படும்பொழுது, அக்னியின் ஸ்பரிசம் அத்தூபத்தில் பட்ட அடுத்த விநாடி, அத்தூபம் தனக்கே உரிய தன்மையான நறுமணம் கமழும் குணத்தை கைவிட்டுவிடும். தூபத்திலிருந்து நறுமணம் வராதபொழுது அத்தூபத்திற்கு என்ன மகத்தும் இருக்க இயலும்?

101. ஆனால் என்ன அற்புதம்! உமக்கு முன்னால் ஏற்றப்படும் தூபத்தில் தீய குணங்கள் பொசுக்கப்பட்டு நற்குணமாகிய நறுமணம் மட்டுமே வெளிப்படும்!

102. எப்பொழுது மனதின் வக்ர எண்ணங்கள் எரிக்கப்பட்டதோ! அப்பொழுதே மனம் தூய்மையாகி விடும்! புனித கங்கை நதிக்கரைக்கு வரும் சடலங்கள் எரிக்கப்பட்டவுடன் அந்த ஆத்மாக்களுக்கு முக்தி அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் கங்கையும் தனது புனிதத்துவத்தை இழப்பதில்லை!.

103. ஓர குருவரா! என் மனதை ஆட்டிப்படைக்கும் சலனங்களான ஆசை, மற்றும் உண்மைக்கும், பொய்மைக்கும் வித்தியாசம் அறியாத மயக்கம் இவற்றை தீபமாக உமக்கு முன்னர் பணிவுடன் ஏற்றிவைக்கின்றேன்! அவ்வாறு ஏற்றி வைக்கப்பட்ட தீபத்தால்,

NOT FOR SALE

சலனங்கள் எல்லாம் எரிக்கப்பட்டு, சத்தியத்தை என்னால் உணரமுடிகின்றது. அவ்வாறு சலனங்களை எரித்து, சத்தியம் என்ற உண்மை நிலையை தீபம் எனக்கு அளித்துவிட்டது.

104. அடியேனின் தூய்மையான பக்தி, நம்பிக்கை இவற்றைக் கொண்டு நீ அமர்வதற்கான அழகிய ஆசனம் ஒன்றை செய்து தருகிறேன்! அதற்குப் பதிலாக தாம் எனக்கு ஒரு உதவியைச் செய்ய வேண்டும்? அது என்னவென்றால், அடியேனின் பக்தி என்ற நைவேத்யத்தை தாம் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

105. என்னுடைய பக்தியை உனக்கு காணிக்கையாக அளிக்கின்றேன்! அதன் பலனை எனக்குத் தருவாயாக! காரணம், நான் உன்னுடைய குழந்தை, அதனால் உன்னுடைய ஞானப்பாலில், என்னுடைய பங்கையும் நான் உரிமையுடன் கேட்கின்றேன்!

106. என்னுடைய மனதை முழுமையாக தங்களுக்குக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்! ஆகையால் மனதாலும், சரீரத்தாலும் நல்லதை நினைத்தாலும் செய்தாலும், தீயவற்றை நினைத்தாலும் தீய செயல்களில் ஈடுபட்டாலும், அது ஒருபோதும் என்னை பாதிக்காது! காரணம் நான், என்னை தங்களிடம் முழுமையாக சமர்ப்பித்து விட்டேன்!

107. ஓ! புனிதனே! சாய்நாதா! இப்பொழுது நான் என்னுடைய நமஸ்காரத்தை உனக்கு பணிவோடும், பக்தியோடும் சமர்ப்பிக்கின்றேன். தயை கூர்ந்து அதனை ஏற்றுக்கொள்வாயாக!

## அஷ்டாங்க ப்ரார்த்தனை
(எட்டுவிதமான ப்ரார்த்தனை)

எப்போதும் அமைதியான மனநிலையை உடையவரே! ஞானததின் சிகரமே! நீயே கருணைக்கடல்! சத்தியத்தின் அவதாரம்! அறியாமை என்னும் இருளை அழிக்க வந்தவர்! சாதுக்களில் உயர்ந்த மகானாகிய நீ! மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன்! எண்ணங்கள் யாவையும் கடந்து நிற்பவனே! அன்பின் திருவுருவே! என்னைக் காப்பாற்றுவாயாக! என்னைக் காப்பாற்றுவாயாக!

NOT FOR SALE

ஓ ஷீரடியின் சாய் நாதரே! ஞானத்தில ஆதவனுக்கு நிகராவாய்! உயர்ந்த ஞானத்தை அடியவர்களுக்கு வழங்குபவரே! அடியவர்களின் இதயத்தடாகத்தில் நீந்திவரும் அன்னப்பறவையே! உன்னை சரணடைந்தவர்களை நீ நிச்சயமாக காத்து இரட்சிப்பாய்!

இவ்வுலகை படைத்த பிரம்ம தேவரும் நீரே! இவ்வுலகை காத்து இரட்சிக்கும் விஷ்ணு தேவரும் நீரே! மூவுலகத்திலும் தீயவற்றை அழிக்கும் திரிபுரத்தை எரித்து ருத்ர மூர்த்தியும் நீரே ஆவீர்!. இவ்வுலகில் நீ இல்லாத இடம் எதுவுமே இல்லை!. எங்கும் வ்யாபித்தவரே! ஓ சாயி நாதா! எங்கள் எல்லோரின் இதயத்திலும் நீங்காத இடம் பிடித்தவரும் நீங்களே ஆவீர்!

கருணையோடு எங்கள் அனைவரின் பாவங்களையும் மன்னித்து விடுங்கள்! எங்களின் ஆழ்மனம் என்ற சமுத்திரத்தில் தங்களைக் குறித்து எழும் சந்தேகங்கள், பக்தியற்ற தன்மை முதலிய அலைகளை உடனடியாக நீக்கி விடுங்கள்!

நீங்களே தாய்ப்பசு ஆவீர்கள்! நானோ கன்றுக்குட்டியாகிய தங்களின் குழந்தையாவேன்! வானில் ஒளிவீசும் நிலவே நீர்! நானோ தங்களின் கருணையாகிய ஒளியில் கசிந்து உருகும் கல்லாவேன் ஸ்வாமி! தங்களுடைய பாதங்களை ஆனந்தமாக புனித கங்கை நதி ஸ்பரிசிப்பதைப் போல தாஸ்கணு என்ற இந்த அடியேன், பணிவுடன் தங்களின் பாதங்களை சரணடைகின்றேன்!

ஓ ஸ்வாமி! தம்முடைய திருக்கரத்தை அடியேனின் சிரசின் மேல் வைத்து ஆசிர்வதியுங்கள்! அவ்வாறு நிகழ்வதன் மூலம் என்னுடைய துன்பங்களும், கவலையும் என்னைவிட்டு ஓடிவிடும்! இந்த கணு (தாஸ்கணு) என்றுமே உங்கள் அடிமையாவேன்!

இந்த எட்டுவிதமான ப்ரார்த்தனைகளினால் நான் தங்களை சரணடைகின்றேன்! இதனால் எனது பாவங்கள், வறுமை, துக்கம் முதலியவை என்னிடமிருந்து துரத்தப்படுகின்றன.

நீங்கள் தாய்ப்பசுவாக இருப்பதாலும், நான் கன்றுக் குட்டியாக, தம்முடைய குழந்தையாக இருப்பதாலும், என் மீது எத்தனை தவறுகள் இருந்தாலும், என்மேல் கோபத்தை, வெறுப்பை காண்பித்து மேலும் மேலும் என்னை கலங்க வைக்காதீர்கள் ஸ்வாமி!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்வாமி! தாங்கள் மலையகிரியில் உள்ள கிடைத்தற்கரிய சந்த மரமாவீர்கள்! நானோ! எதற்கும் பயனற்ற ஒரு முட்புதர்! நீங்கள், சகல உயிர்களின் தாகம் தீர்க்கும் வற்றாத ஜீவநதியான கோதாவரி ஆவீர்கள்! அப்புனித நீர் பட்டு, பாவங்களை கழுவ நினைக்கும் பாவி நானே ஆவேன்!

உயர்ந்த நறுமணம் கமழும் சந்தன மரம், தம்மோடு சேரும் சாதாரண மரப்பட்டைகளையும் நறுமணத்துடன் இருக்கச் செய்யும் இயல்பைக் கொண்டது! அதைப்போலவே, சாதாரண மரப்பட்டையான நான், தம்முடைய தரிசனம் என்ற உறவு கிடைத்தும், எனக்குள் இருக்கும் தீய எண்ணங்களை அழிக்காவிட்டால், சந்தனமரமாகிய தம்முடைய நிழலில், இருந்தும் என்ன பயன்? அப்போது மனம் மிக்க சந்தன மரம் என்று யார் அழைப்பார்கள்?

கஸ்தூரியின் சிறந்த மணம், தம்மிடம் கலக்கும் தூசியையும் மணக்கச் செய்வதே ஆகும். மாலை தொடுத்தபின்னர் பூக்களின் வாசனையும், அழகும் அதைத்தாங்கும் பூமாலைக்குச் சென்றுவிடும்!

மிகச்சிறந்த சாதுக்களும், மகான்களும் தம்மிடம், எவர் உண்மையாக பணிந்தார்களோ அவர்களையெல்லாம் உயர்ந்த நிலையை அடையச் செய்கிறார்கள்!

பஸ்மம் என்று அழைக்கப்படும் புனிதமான உதியும், இடையில் ஒரே ஒரு கோவணமும், தமக்கு ப்ரியமான காளையின் உருவமான நந்தீஸ்வரரையும் சிவனார் தம்முடைய அடையாளமாகக் கருதினார். அத்தகைய காரணங்களால் இவையாவும் புனிதமானவை என்று அனைவராலும் போற்றப்படுகிறது.

பசுக்களை மேய்க்கும் இடையர்களை மகிழ்விப்பதற்காக, பிருந்தாவனத்திலும், யமுனா நதிக்கரையிலும், இவ்வுலகின் இரட்சகரான, ஸ்ரீ கிருஷ்ணர் "தஹிகாலா" என்று அழைக்கப்படும் தயிர்பானையை உடைத்தல் என்ற விழாவை கோலாகலமாக நடத்தினார். அறிவில் சிறந்த ஞானிகளும், இறைவனின் இந்த லீலையை அனுபவித்து ஆனந்தமடைகிறார்கள்.

அதைப்போலவே அடியேனும் ஒரு பாவி! ஆனால் நான் தங்களின் பாதுகாப்பு வளையத்திற்குள் இருக்கிறேன்! ஓ குருராயா! இந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


பாவச் சூழலில் இருந்து நீ என்னை கரைசேர்க்க மாட்டாயா!

இவ்வுலக வாழ்விற்குத் தேவையான பொருளையும் மறு உலக வாழ்விற்குத் தேவையான அருளையும், உலகியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் அடியேன், திருப்தி அடைவதற்கான வழிகளை ஏற்படுத்துவாயாக! ஓ! குருராயா! இவை இரண்டையும் தாம் எனக்கு கருணையோடு வழங்குவீர்கள் என்று நான் ஐயமின்றி உறுதியாக நம்பிக்கையோடு இருக்கிறேன்!.

உனது அனுக்ரஹத்தால் அலைபாயும் உன் உள்ளத்தை கட்டுப்படுத்துவீராக! மகா சமுத்திரத்தையும் சுவையாக மாற்றிவிட்டால், அது உப்புத்தன்மை உடையது என்று பயப்படத் தேவையில்லை. சமுத்திரத்தைக்கூட சுவையுள்ளதாக மாற்றும் ஆற்றலை உடையவர் நீரே ஆவீர்! தம்முடைய பேராற்றலால் சமுத்திரத்தின் தன்மையை மாற்றிவிடும் தாங்கள், தயைகூர்ந்து இந்த தாஸகனுவின் ப்ரார்த்தனையையும் ஏற்றுக்கொள்ளுங்கள்!

என்னிடம் எத்தனை குறைகள் இருந்தாலும், அவையாவும் உம்முடையதே ஆகும். காரணம், அடியேன், தங்களிடம் என்னை சமர்ப்பணம் செய்துவிட்டேன். ஆகையால் அடியேனின் சரீரமும், ஆத்மாவும் செய்யும் தவறும், பிழைகளும் உம்முடையதே ஆகும்! ஆகையால் நான் தவறு செய்யாமல் என்னை காத்து இரட்சிக்க வேண்டுகிறேன்! உலகின் மிகச்சிறந்த குருமார்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும் தாங்கள், அடியேனுக்கு அருள்செய்வதற்காக யோசிக்க வேண்டாம்!

நான் இனிமேலும் பேசுவதற்கு என்ன இருக்கிறது! நீரே எங்களின் அடைக்கலம் ஆவீர்!. தனது தாயின் கரங்களில் மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கும் குழந்தை, தனது தாய் நிச்சயமாக தன்னை காத்து இரட்சிப்பாள் என்று நம்பிக்கையுடன் பயமில்லாமல் இருப்பதைப் போல நானும் உணர்கிறேன்!

ஓ ஸ்வாமி! உமது திருப்புகழை எவர் மனம் உருகி அன்போடு பாராணயம் செய்கிறாரோ, அவர்களின் விருப்பம் நிச்சயமாக பூர்த்தி செய்யப்படும்.

இந்த ப்ரார்த்தனையின் மீது தங்களின் ஆசீர்வாதம் நிரந்தரமாக

NOT FOR SALE

இருக்கட்டும்! ஒருவருக்கு எத்தனை துன்பங்கள் நேரிட்டாலும் இந்த ப்ரார்த்தனைப் பாடலை உண்மையாகவும் பக்தியோடு பாராயணம் செய்தால் ஒரு வருடத்திற்குள் அவர்களின் துன்பங்கள் விலகி ஓடிவிடும்!

யார் என்ன வகையான பூஜைகள் முறையாகச் செய்தாலும் இப்பிரார்த்தனைப் பாடலை தினமும், தூய்மையான உள்ளத்தோடும் பக்தியோடும் பாராயணம் செய்யலாம். ஒரு வேளை தினமும் இப்பாடலை பாராயணம் செய்ய இயலாவிட்டால், ஏகாதசி என்ற புனித நாளிலும் வியாழக்கிழமைகளிலும் இப்பிரார்த்தனையை மனம் உருகி கூறினால், அதனுடைய மிகச்சிறந்த பலன்களை நம்மால் உணர்ந்து கொள்ள இயலும்!

எவர் ஒருவர் நம்பிக்கையோடு இப்பிரார்த்தனையை, செய்து வருகிறாரோ, குருவின் கருணையால் நிச்சயமாக ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடைவார்கள். ஆன்மீகத்தில் மட்டுமல்ல இவ்வுலகியல் ஆசைகளையும், அவரவர்களின் தேவைக்கேற்ப, சத்குரு நிறைவேற்றுவார். திரும்ப திரும்ப இப்பிரார்த்தனையை சொல்லிக்கொண்டே இருப்பதன் மூலம் அறிவில்லாதவர்கள் கூட, ஞானத்தில் சிறந்தவர்களாக மாற்றப்படுவார்கள்.

ஒருவேளை இப்பிரார்த்தனையைப் பாராயணம் செய்து கொண்டிருப்பவர்களின் ஆயுட்காலம் மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டிருந்தாலும், அவை சத்குருவின் தயவால் நீண்ட ஆயுளைப் பெறுவர். தொடர்ந்து செய்யும் இப்பிரார்த்தனை அவரை நூறாண்டுகாலம் மகிழ்ச்சியோடு வாழ வைக்கும்.

இப்பிரார்த்தனையைப் பாராயணம் செய்யும் இடத்தில், செல்வத்திற்கு குறைவு ஏற்பட்டால் குபேரனே நேரில் வருகை தந்து அளவற்ற செல்வத்தை அளிப்பார். இப்பிரார்த்தனையைப் பக்தியோடு படிக்கப்படும் இடத்தில், குழந்தை செல்வம் அற்றவருக்கு, நிறைய குழந்தைகள் பிறப்பார்கள்.

எவருக்கு தீய வினைகளால் கடுமையான நோய்கள் பீடிக்கப்பட்டிருந்தாலும், அத்தீய வினைகள் வரும் திசைகள் முழுவதும் சத்குருவின் கருணையால் தூய்மையாக்கப்பட்டு, அவையாவும் துரத்தப்படுகின்றன! கொடிய நோய்கள் கூட நீங்கி விடும் அற்புதத்தை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இந்த ஸ்லோகம் செய்துவிடும்! என்று தாஸ்கணு பக்தர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார். பயமும், கவலைகளும் காணாமல் போய்விடும்! சுயகௌரவமும், தன்னம்பிக்கையும் வெளிப்படும்!

இந்த ஸ்லோகத்தை ஆத்மார்த்தமாக படிப்பவர்கள், அழிவில்லாத பிரம்மத்தை உணரும் சௌபாக்கியத்தை பெறுவார்கள் என்பது உறுதி! அறிவில் சிறந்தவர்கள் என்று தங்களை நினைத்துக் கொள்பவர்கள் இந்த துதியை உணர்ந்து படிப்பதன் மூலம் வீண் விவாதங்கள், தீய சிந்தனைகள் அவர்களை விட்டு அகன்றுவிடும்!

தொடர்ந்து ஷீரடி என்ற புனித ஸ்தலத்திற்கு சென்று பாபாவின் பாதங்களை உள்ளத்தில் நிலைநிறுத்தி போற்றி துதியுங்கள்!. அவரே ஆபத்பாந்தவர்! அநாத இரட்சகர்! தம் அடியவர்களின் தேவையை அறிந்து வேண்டியதை தரும் கற்பக மரமாவார்!.

சாயிநாதருடைய கருணையால் அன்றி இந்த துதியை அடியேனால் எழுதியிருக்க இயலாது. சக வருடம் 1840, ஸ்ரீ கணேச சதுர்த்தி அன்று, புனித நர்மதா நதியின் கரையில் கம்பீரமாக வீற்றிருக்கும் மகேஷ்வரருடைய ஆலயத்தில் ஸ்ரீ அகல்யாதேவியன் சந்நிதானத்தில், ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ்சரி, சத்குரு சாய் நாதரின் அருளால், இனிதாக பூர்த்தியடைந்தது.

ஸ்ரீ சாயிநாதர் இந்த ப்ரார்த்தனையின் ஒவ்வொரு எழுத்திலும் நின்று, அதை எழுதுமாறு என் உள்ளத்தில் உணர்ந்ததால், தாஸ்கணுவாகிய நான் இப்பணியை செய்ய முடிந்தது.

தாமோதரன் என்ற சீடன் இப்பாடலை எழுத, எல்லா ஞானியர்க்கும் சேவகனான இந்த தாஸ்கணு, சத்குருவின் பாதங்களுக்கு சமர்ப்பித்தார். ஓ பாண்டுரங்கா! எனது உள்ளம் உருக நான் வேண்டுவது என்னவென்றால், ஸ்ரீ சாயிநாத ஸ்தவன மஞ்சரி என்ற இந்த ப்ராத்தனை பாடல் தொகுப்பு, இவ்வுலக வாழ்க்கையில் துன்புறும் அனைவரின் துன்பங்களையும் போக்கி சத்குருவின் திருவருளை பரிபூரணமாக கிடைக்கச் செய்யட்டும்.

ஜெய் சாய்ராம்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


ஓம் சாய்ராம்

## ஸ்ரீ வெங்குசா மகராஜ் மகாசமாதி மந்திர்

ஹுசைன்பூர், கர்நாடகா.

## ஆசிரியரின் அனுபவங்கள்

ஸ்ரீ குருப்யோ நமஹ!

ஆதிகுருவான ஷீரடி ஸ்ரீ சாய் பாபாவை வழிநடத்திய, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகா சமாதி கர்நாடக மாநிலத்தில், ஹுசைன்பூர் என்ற புண்ணிய ஸ்தலத்தில் அமைந்துள்ளது.

NOT FOR SALE

ஸ்ரீ வெங்குசா மகராஜ், பாபாவை, கோதாவரி நதிக்கரையை நோக்கிச் செல்லுமாறு பணித்தவுடன், பாபாவும், தனது குருவின் உத்தரவை ஏற்று, அவருடைய நினைவாக, தம்மைத் தாக்க வந்த அப்புனித செங்கல்லையும், தனது குருவின் அங்கியான கஃப்னி என்று சொல்லக்கூடிய ஆடையையும், பெற்றுக்கொண்டு ஷீரடிக்கு வருகை தந்ததைப் பற்றி நாம் அனைவரும் ஸ்ரீ சாய் குருசரித்திரத்தின் மூலம் அறிந்து கொண்டோம்!

மகாயோகீஸ்வரரான, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் இந்நூலை அடியேன் வெளியிடுவதற்கு முன்னர், அவருடைய ஆசீர்வாதங்களை பெற்று வருவதற்காக பாபாவின் குரு ஸ்தலமான ஹுசைன்பூர் என்ற புண்ணிய ஸ்தலத்திற்கு சென்றேன். ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களை, தங்களின் குலதெய்வமாகவே நினைத்து பூஜை செய்து வழிபடும், அத்தலத்தை சுற்றி வசிக்கும் பூர்வகுடிமக்கள், அடியேனிடம் பகிர்ந்து கொண்ட அற்புதங்களையும், திரு.சென்ன நாகப்பா என்ற கன்னட எழுத்தாளர் எழுதிய நூலில் இருந்தும், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுக்கு மகாசமாதி ஆலயம் எழுப்பி, அவருடை திருவுருவத்தை முதன்முதலாக அனைவருக்கும் அடையாளம் காட்டி ப்ரதிஷ்டை

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


செய்தவருமான திரு.ஹனுமந்தராயுடு, அவர்கள் நேரடியாக அடியேனிடம் கூறிய அற்புதங்களையும் நாம் இப்போது காண்போம்!

மகாயோகியான ஸ்ரீ வெங்குசா மகராஜ், ஆந்திரா, கர்நாடகா எல்லை பகுதிகளில் அமைந்துள்ள மிக உயர்ந்த மலைகளின் நடுவில் உள்ள பெரிய குகைகளில் பல ஆண்டு காலம் யோக நிஷ்டையில் இருந்தார். தன்னுடைய யோக ஆற்றலின் மூலம் சமூக நலனையும், ஒற்றுமையையும் காத்து இரட்சிக்க பல அற்புதங்களை இன்றளவும் புரிந்து கொண்டிருக்கிறார். அவர் யோக நிஷ்டையில் அமர்ந்த மலைக் குகைகள், பெல்லாகவி (Bellagavi) மற்றும் தார்வாட் (Dharwad) பகுதிகளை அடியேன் தரிசிக்கச் சென்றபோது இச்சரித்திரத்தை படிக்கும் பாபாவின் பக்தர்கள் அனைவருக்கும் அம்மகானின் அருள் கிடைக்க ப்ரார்த்தனை செய்தேன்!

ஒருமுறை ஸ்ரீ மகராஜ் மலைக்குகையில் யோக நிஷ்டையில் அமர்ந்திருந்தபோது, அங்குள்ள கிராமவாசிகள் தங்களுடைய பசுக்களை மேய்ப்பதற்காக அம்மலைக்கு வந்தனர். அச்சமயம் திடீரென்று சூறாவளிக்காற்று வீசியதால் அதை தொடர்ந்து பெய்த பலத்த மழையினால் கிராமவாசிகள் அனைவரும் அஞ்சினர். அப்பொழுது திடீரென்று அங்கு காட்சியளித்த மகராஜ், கிராமவாசிகளை சுற்றி பெரிய வட்டம் ஒன்றை வரைந்தார். அவர் உடனடியாக அங்கிருந்து மறைந்துவிட்டார். என்ன ஆச்சர்யம்! அவர் வரைந்த வட்டம் என்ற பாதுகாப்பு வளையத்திற்குள் காற்றும், மழையும் நுழையவில்லை. மறுநாள் காலை அம்மக்களும், பசுக்களும் பத்திரமாக தங்களுடைய கிராமத்தை அடைந்தனர். அக்கிராமவாசிகளிடம் தங்களை, ஸ்ரீ வெங்குசா மகராஜ் காப்பாற்றிய அந்த அற்புதத்தை பகிர்ந்து கொண்டனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வெங்குசா மகராஜ் ஒரே சமயத்தில், பல இடங்களில், பலருக்கு காட்சி அளிக்கும் அவதூதர் ஆவார். ஒருமுறை இருவேறு குலத்தவர் ஸ்ரீ மகராஜ் அவர்களை தமது இல்லத்திற்கு உணவு உபசாரம் பெற்றுக்கொள்வதற்காக ஒரே சமயத்தில் அழைத்தனர். ஸ்ரீ மகராஜ் சிரித்துக்கொண்டே அவர்கள் இருவருடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக வாக்களித்தார். என்ன அற்புதம்! அவர் வாக்களித்தவாறு ஒரே சமயத்தில் ஒரு அந்தணரின் வீட்டில் சைவ உணவையும், வேறு குலத்தவர் இல்லத்தில் அளித்த உணவையும் உண்ட காட்சியை கிராமவாசிகள் நேரில் கண்டு அதிசயித்தார்கள்.

ஸ்ரீ மகராஜ் அவர்கள், வறண்டு காணப்பட்ட பல கிராமங்களில், மழையை வரவழைத்து பஞ்சபூதங்களின் மேல், தமக்குள்ள ஆதிக்கத்தை பலமுறை நிரூபித்துள்ளார். மனிதர்கள் மட்டுமல்லாமல், கொடிய மிருகங்களும் இவர் சொல்லுக்கு கட்டுப்படும். ஒருமுறை கிராமவாசி ஒருவருடைய பசுவின் மேல், தார்வாட் (Dharwad) மலைப்பகுதியில் இருந்து வந்த ஒரு சிறுத்தை பாய்ந்து கொல்வதற்காக முயற்சிக்கும்போது, ஸ்ரீ மகராஜ் தன்னுடைய ஒற்றை விரலால் அச்சிறுத்தையை எச்சரித்தார். அடுத்த விநாடி அச்சிறுத்தை, அவருடைய உத்தரவிற்கு கட்டுப்பட்டு அப்பசுவை விட்டுவிட்டு ஓடிவிட்டது.

இதே போன்று மற்றொரு முறை உழவுத்தொழில் செய்து கொண்டிருந்த ஒரு எருது கால் இடறி, அங்கிருந்த கிணற்றில் விழுந்துவிட்டது. உயிருக்காக போராடிய அந்த எருதை காப்பாற்றுவதற்காக அவ்வூர் மக்கள், பல்வேறு முயற்சிகளை செய்து பார்த்தார்கள். அவையாவும் பலனளிக்காமல் போகவே வேறு வழியின்றி தங்கள் குலதெய்வமான வெங்குசா மகராஜ் அவர்களை ப்ரார்த்தனை செய்தனர். ஸ்ரீ மகராஜ் திடீரென்று அவ்விடத்தில் காட்சியளித்தார். அவர் அந்த கிணற்றில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எட்டிப்பார்த்து 'ஓ பசவண்ணா! சற்று வெளியே வாருங்கள்' என்றவுடன் என்ன அற்புதம்! மிக ஆழமான அக்கிணற்றில் விழுந்த எருது, தாமாகவே கிணற்றின் மேல் பகுதிவரை எழும்பி வெளியே வந்துவிட்டது. இந்த அற்புதத்தை கண்ட அவ்வூர் மக்கள் மகராஜ் அவர்களை நமஸ்கரித்து நன்றி தெரிவித்தார்கள். அவர் குறிப்பிட்ட ஸ்ரீ பசவண்ணா என்பவர் பனிரெண்டாம் நூற்றாண்டில் (12th Century) வாழ்ந்த கர்நாடக மாநிலத்தின் மிகப்பெரிய யோகீஸ்வரர் ஆவார். வீரசைவ மரபை தோற்றுவித்தவரும் அவரே.

ஸ்ரீ மகராஜ் அவர்கள் பெரும்பாலும் எவரிடமும் உரையாடுவதில்லை. அவரிடம் குழந்தைப்பேறு வேண்டி மக்கள் ப்ரார்த்தனை செய்யும்போது, தமது கைத்தடியை இரண்டு கைகளில் ஏந்திக்கொண்டு தொட்டிலை போன்று தாலாட்டுவார். அவ்வாறு தாலாட்டினால் கோரிக்கை வைப்பவர்கள், நிச்சயமாக ஆசிர்வதிக்கப்படுவார்கள். எப்பொழுதும் ஏகாந்த நிலையில் அமைதியாக இருக்கும் மகராஜ் தமது கைத்தடியை கொண்டே பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அதை பார்த்த அவ்வூரில் சிலர் அந்த கைத்தடியில் ஏதோ ரகசியம் அடங்கியிருப்பதாக நினைத்துக் கொண்டு ஒருநாள் அத்தடியைத் திருடிக்கொண்டு சென்று விட்டார்கள். எவரும் அறியாமல் ஒரு மறைவான இடத்தில் அவர்கள் அந்த கைத்தடியை ஒளித்து வைத்திருந்தனர்.

ஸ்ரீ மகராஜ் அவர்கள் அனைவரின் மன ஓட்டத்தையும் படிக்கும் அபார ஞானம் கொண்டவர். முக்காலத்தையும் உணர்ந்த அவர் மறுநாள் பக்தர்களின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தார், அவரை தரிசிக்க வந்த பக்தர்களுடன், அவருடைய கைத்தடியை திருடியவர்களும் அங்கு அமர்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கே அவர்கள் கண்ட காட்சியால் அதிர்ச்சியடைந்தனர். காரணம்! மகராஜ் அவர்களின் கைத்தடி, அவர் எப்போதும் வைக்கும் அதே இடத்தில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சிலர் அறியாமையால் இன்றளவும் மகான்களின் கையில் வைத்திருக்கும் பொருள்களுக்கு மட்டுமே சக்தியிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் சர்வசக்தி வாய்ந்த மகான்களை சோதித்துப் பார்க்க நினைக்கமாட்டார்கள்.

ஸ்ரீ சாய் பாபாவின் குருவான, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள் மகாசமாதி அடைந்த பின்னரும் இன்றளவும் சூட்சும சரீரத்தில் பல்வேறு அற்புதங்களை புரிந்துகொண்டிருக்கிறார். அடியேன் அவரது மகாசமாதியை தரிசித்து மகராஜ் அவர்களின் ஆசீர்வாதம் பெற்ற பின்னரே, இந்நூலை அச்சிடவேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தேன். அதற்கேற்றவாறு, அப்புண்ணிய ஸ்தலத்திற்கு சென்றுவரும் வரை, இந்நூல் அச்சில் ஏறவில்லை என்பதை கும்பகோணம் நாடார் பிரஸ் அவர்களிடம் இருந்து வந்த செய்தியின் மூலம் அறிந்து கொண்டேன். ஸ்ரீ மகராஜ் மகாசமாதியை எவ்வாறு சென்று தரிசிப்பது என்று சிந்தித்த வேளையில், பெங்களூரில் வசிக்கும் ஸ்ரீ மகராஜ் அவர்களின் தீவிர பக்தர் திரு.வெங்கட் என்பவர் அச்சமயத்தில் தொழில் நிமித்தமாக காசிக்குச் சென்றிருந்தார். மகராஜ் அவர்களின் கருணையால் காசியில் இருந்து விமானம் மூலம் விரைந்து பெங்களூர் வந்த திரு.வெங்கட் அவர்கள் அடியேனை அழைத்துச்சென்று கர்நாடக ஆந்திர மாநிலத்தின் எல்லை பகுதியில் அமைந்த அந்த மகாசமாதியை தரிசித்து வர அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். இதில் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய அற்புதமான தகவல் என்னவென்றால், திரு.வெங்கட் அவர்கள் அடியேனுக்கு இதற்கு முன்னர் அறிமுகமே இல்லாதவர் ஆவார்.

ஸ்ரீ வெங்குசா மகராஜ் தமது சமாதி இடத்தை தேர்வு செய்தபின், அவரது சரீரத்தை அடக்கம் செய்த பின்பும், அவர் உயிருடன் பல காலம் தியானம் செய்த கொண்டு, பலருக்கு காட்சி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அளித்து, பல அற்புதங்களை புரிந்தார் என்பதை ஹூசைன்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம பூர்வகுடி மக்களும் சான்றுகளோடு நிரூபித்துள்ளனர். இத்தகைய மகத்துவம் வாய்ந்த லீலைகளை, சாய் பக்தர்களோடு பகிர்ந்து கொள்வதில், அடியேன் ஆனந்தமடைகிறேன்!

ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள் மகா சமாதி அடைந்த பின்னரும், நீண்ட காலம் உயிருடன் வாழ்ந்ததை, ஹூசைன்பூர் மக்கள் யாவரும் கண்டு தரிசித்துள்ளனர். எவ்வாறு ஷீரடி வாழ் மக்களுக்கு "சாயி" என்ற பொக்கிஷம் கிடைத்ததோ, அதைப் போலவே ஹூசைன்பூர் கிராமவாசிகளுக்கு "ஸ்ரீ வெங்குசா மகராஜ்" என்ற பொக்கிஷம் கிடைத்தது அவர்களின் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியமே காரணமாகும்.

ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களை சமாதியில் அமர்த்திய உடன், அச்சமாதிக்குழி மூடப்பட்டுவிட்டது. அப்போது ஹூசைன்பூரைச் சுற்றிலும் இஸ்லாமியர்களே அதிகமாக வசித்தார்கள். தங்களுடைய ஊரில், ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த மகானை, அவர்கள் முறைப்படி எரிக்காமல், அடக்கம் செய்ததால் அதன் மூலம், தங்களுக்கு ஏதேனும், தீங்கு நேரும் என அஞ்சி, அவர்கள் இச்செய்தியை அரசாங்கத்திடம் தெரிவித்தார்கள். அப்போது ஹூசைன்பூர் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும், ஹைதராபாத் நிஜாமின் ஆதிக்கத்து உட்பட்டு இருந்தது.

கிராமவாசிகளின் புகாரைக் கேட்டறிந்த ஹைதராபாத் நிஜாம், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் சமாதி குழியை தோண்டிப் பார்த்து விட்டு தீர்மானிக்கலாம் என்று முடிவு செய்தார். சமாதியை தோண்ட அமர்த்தப்பட்ட இந்துக்கள் பலர், அம்மகானின் சாபத்திற்கு அஞ்சி, சமாதியைத் தோண்டுவதற்கு மறுத்து விட்டார்கள். பின்னர், அவ்வூர் இஸ்லாமியர்கள், நிஜாமின் உத்தரவை ஏற்று, சமாதியைத் தோண்டினார்கள். அவர்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனைவரும் கண்ட காட்சியால் மெய்சிலிர்த்து, உடல் வியர்த்து செய்வதறியாமல், பயந்து, நடுங்கி, உடனடியாக அச்சமாதியை முன்பிருந்தவாறே மூடிவிட்டு, அங்கு அமர்ந்து மன்னிப்பு வேண்டினர்.

அச்சமாதியில் ஷீரடியில், கிராமவாசிகள் பாபாவின் குருஸ்தானனை தோண்டும் பொழுது கிடைத்த, அதே காட்சியை ஹுசைன்பூரிலும் கண்டனர். அச்சமாதியில் ஸ்ரீ வெங்குசா மகராஜ் கம்பீரமாக தியானத்தில் அமர்ந்திருந்தார். அவர் முன்னர் விளக்குகள் சுடர்விட்டு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. அங்கே ஜெப மாலைகளும் வைக்கப்பட்டு இருந்தன. சமாதியை திறந்து பார்த்தவர்கள் செயலிழந்து நின்று விட்டார்கள்! இது எவ்வாறு சாத்தியம்! இத்தனை மாதங்களுக்குப்பின் இவர், மூடியிருந்த சமாதிக்குள் எவ்வாறு உயிருடன் அமர்ந்திருக்கிறார்? இந்த விளக்குகள் எவ்வாறு இவ்வளவு பிரகாசமாக இன்றும் எரிந்து கொண்டிருக்கின்றன? இந்த கேள்விகளுக்கெல்லாம், விடை தெரியாமல் இறுதியாக ஹைதராபாத் நிஜாமிடம், தாம் அளித்த புகாரை திரும்பப் பெற்றுக் கொண்டு, இச்சமாதியில் அமர்ந்து இருக்கும் அவுலியா, எங்களைக் காப்பாற்றவே இங்கு எழுந்தருளி இருக்கின்றார்! என்றும் ஹைதராபாத் நிஜாமிற்கு, கடிதம் மூலமாக தெரிவித்தனர். அக்கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் நிஜாம், உண்மை நிலையை கண்டறிய, ஆய்வுக்குழு ஒன்றையும் அனுப்பினார்.

அக்குழுவும், ஸ்ரீ வெங்குசா மகராஜ் மிகப்பெரிய மகான் என்றும், அவர், இந்து-முஸ்லீம் மதத்தினரிடம் உள்ள வேற்றுமைகளை களைவதற்காகவே, தீவிர வைஷ்ணவராக இருந்த போதிலும், இஸ்லாமியர் வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதியில் அவர் சமாதி நிலையில் அமர்ந்தார் என்றும், அச்சமாதியின் புனிதத்துவத்தை, நிஜாம் அரசாங்கம் காப்பாற்ற வேண்டும் என்றும் அறிக்கை சமர்ப்பித்தது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


இவ்வறிக்கையைப் பெற்றவுடன், ஹைதராபாத் நிஜாம் அவர்கள், அச்சமாதிக்கு மரியாதை தெரிவிக்கும் விதமாகவும், அதற்கு காவலாகவும், பஞ்சலோகத்தால் உருவாக்கப்பட்ட அழகிய ஸ்ரீ கருட வாகனத்தையும், ஸ்ரீ நாகராஜரையும் அளித்து கௌரவித்தார். இவை இரண்டு இன்றளவும் அச்சமாதி நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவ்வூர் மக்கள், தமது மகராஜ் அவர்களின் மகா சமாதியை ஸ்ரீ கருடரும், ஸ்ரீ நாகரும் காத்துக் கொண்டிருப்பதாக உறுதியாக நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.

மகராஜ் சமாதியின் அருகில் ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த மூதாட்டியான நரசம்மா அவர்கள், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் தீவிர பக்தையாவார். மகராஜ் அவர்களின் சமாதிக்கு முறையாக ஆரத்தி எடுத்து, நைவேத்யம் சமர்ப்பித்து, பூஜைகள் செய்து வந்தார். அவருக்குப்பின் 6-வது தலைமுறையாக தற்பொழுது அவருடைய வம்சாவளியினர், தொடர்ந்து இப்பணியை செய்து வருகின்றனர். இதுவும் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் உத்தரவின் பெயரில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுக்கு சமாதி நிலையம் எழுப்பட வேண்டும் என்று திருவாளர் ஹனுமந்த ராயுடு தீர்மானித்தார். ஸ்ரீ ராயுடு முதன்முதலாக 1971இல், அரசாங்கத்தின் மின்வாரியத்துறை அதிகாரியாக ஹுசைன்பூருக்கு பணியாற்ற வந்தார். அப்போது அங்குள்ள பல கிராமங்களில், மின்சார இணைப்பு இல்லை. திரு.ராயுடு, அங்குள்ள அனைத்து கிராம மக்களுக்கும் மின்சாரம் கிடைக்க வழி செய்தார். அப்போது ஹுசைன்பூரில் ஆள்நடமாட்டம் இல்லாத ஒரு வனப்பகுதியில் அமைந்த, ஒரு மிகச்சிறிய சமாதியைக் கண்டதும், அவருக்கு அதற்கு அருகில் செல்ல வேண்டும் என்று ஒரு உத்தரவு கிடைத்தது. திரு. ராயுடு பயந்து கொண்டே அதற்கு அருகில் சென்றார். அங்கு

NOT FOR SALE

சென்றவுடன் திரு. ராயுடு அவர்களுக்கு, தமது குருவே, இங்கு சமாதியாக இருக்கிறார் என்று தீர்மானமாகத் தெரிந்து விட்டது. உடனடியாக பல மைல் தூரம் உள்ள அப்பகுதியில், அரசின் உத்தரவு பெற்று, அரும்பாடுபட்டு மின்சார இணைப்பை பெற்று அச்சமாதியில் முதன்முதலாக மின்சார விளக்கை எரிய வைத்தார்.

அச்சமயத்தில் அவருடைய மனதில், இம்மகானின் தோற்றம் எவ்வாறு இருக்கும்? இம்மகானை தாம் நேரில் தரிசிக்க வாய்ப்பு கிடைக்கவில்லையே! என்று ஏங்கித் தவித்தார். அன்று அவருடைய உறக்கத்தில், சென்னை மாகாணத்திற்கு புறப்பட்டு வருமாறு ஒரு உத்தரவு கிடைத்தது. மறுநாள், திரு. ராயுடு சென்னை வந்தடைந்ததும், தாம் எவ்வாறு, எப்போது, தமது குருநாதரை சந்திக்கப் போகிறோம் என்று தவித்துக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் அந்த அற்புதம் நடந்தது! சென்னை மாகாணத்தில், ஒரு சிறிய வயது துறவியைச் சந்திக்க நேர்ந்தது. அத்துறவி அவரை, தனது அறைக்கு அழைத்தார். அவருடைய அறைக்குச் சென்ற திரு. ராயுடு, அங்கு மலை போல குவிந்து கிடந்த விபூதி (உதி)யைக் கண்டு வியந்தார்.

அங்கு அமர்ந்திருந்த அத்துறவி ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். அவர்கள் வாயிலிருந்து "சத்ய சாயி" என்ற வார்த்தை தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது! இதைக் கேட்டு ஆச்சர்யமடைந்த திரு. ராயுடு தாம், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக தானே இங்கு வந்தோம்! அவருக்கும் ஸ்ரீ சத்ய சாயி பாபாவிற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்! என்று வியந்தார்.

அத்துறவி, திரு. ராயுடு அவர்களிடம் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள் தான், முதன் முதலாக, ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வருகைப் பற்றி இவ்வுலகிற்கு அறிவித்தார்! என்று கூறினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அத்துறவி திரு. ராயுடு அவர்களிடம், ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பாட்டனாரான திரு. கொண்டம்மாராஜீ அவர்களிடம், “உங்களுக்கு பிறக்கும் மூத்த புதல்வருடைய புத்திரரே மிகப்பெரிய மகானாவார்!” என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார். ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் வாக்கிற்கேற்ப, ஸ்ரீ பெத்த வெங்கப்பாவின் புத்திரரே, பின்னாளில் ஸ்ரீ சத்ய சாயி பாபாவாக உலகம் போற்றும் மகானாக திகழ்கின்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் திரு. ராயுடு அவர்களுக்கு என்ன பேசுவது என்றே தெரியாமல், மகான்களின் கூட்டுறவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு, மெய்மறந்து நின்று கொண்டு இருந்தார். அவருக்கு தாம் எதைப் பற்றி கேட்க வந்தோம் என்பதே மறந்து விட்டது. அதைக் கண்ட, அத்துறவி புன்னகைத்து “நீ யாரைத் தேடி வந்தாயோ, அவர் உன்னிடத்தில் உன்னைத் தேடி வருவார்!” என்று கூறினார். தமது குருவை தாம் காண இருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியோடு, ஹுசைன்பூர் திரும்பினார்.

அதேசமயத்தில், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதியை தரிசிக்க ஆந்திரபிரதேசத்திலிருந்து ஒரு குழுவினர், ஹுசைன்பூருக்கு ஒரு பேருந்தில் வந்து கொண்டிருந்தனர். அவ்வாறு வரும் வழியில் “பெனுகொண்டா” (Penukonda) என்ற இடத்தின் அருகில், ஒரு வயதானவர் அப்பேருந்தை தடுத்து நிறுத்தினார். அக்குழுவின் தலைவி திருமதி. சாந்தம்மா என்பவர், தீவிர ஷீரடி சாயி பாபாவின் பக்தையாவார்! அவர், அந்த வயதானவரிடம், தமது வாகனத்தை தடுத்து நிறுத்தியதற்கான காரணத்தைக் கேட்டார்.

அந்த முதியவர், திருமதி. சாந்தம்மாவின் அருகில் விரைந்து வந்தார். அவருடைய கைகளில் ஒரு சிறிய திருஉருவச் சிலையை அளித்தார். அவர் திருமதி. சாந்தம்மாவிடம் “ராயுடு நா ரூப்பு

NOT FOR SALE

அடுகுதுன்னாரு" ராயுடு என்னைக் காண ஏங்கிக் கொண்டிருக்கிறார் என்று கூறிவிட்டு உடனடியாக அவ்விடத்தை விட்டு சென்று விட்டார்.

மகான்களுடைய பூர்வீகம் எவராலும் ஆராய்ந்து கூற இயலாது! அவர்கள் இறைவனின் நேரிடையான அவதாரங்கள் ஆவார்கள். ஸ்ரீ வெங்குசா மகராஜ், ஸ்ரீ வேங்கடேச பெருமாளுடைய அவதாரம் என்பதையும், அவருடைய வருகை பற்றியும் 13வது நூற்றாண்டில் ஸ்ரீ சங்கர் பட்டாச்சாரியார் என்பவரால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூலின் தமிழாக்கத்தில் 45வது அத்தியாயத்தில் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் வருகைபற்றி தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி. சாந்தம்மா, ஹுசைன்பூருக்கு தனது குழுவினருடன் வந்து இறங்கியவுடன், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகா சமாதியைத் தரிசித்தார். திரு. ராயுடு அவர்களை சந்தித்தவுடன், திருமதி. சாந்தம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு இல்லை! தமது கைகளில் வைத்திருந்த திருவுருவத்தை திரு. ராயுடு அவர்களின் கைகளில் அளித்து, அவரிடம், "ஐயனே! நாங்கள் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களை தரிசிக்க வரும் வேளை, வயதான, பிச்சைக்காரர் போன்று தோற்றமளித்த ஒருவர் இதை தம்மிடம் அளிக்குமாறு கூறினார்!" மேலும் அவர் என்னிடம், ராயுடு என்னுடைய உருவத்தைக் காண ஏங்கிக் கொண்டிருப்பதாகக் கூறினார்! என்றார். அத்திருவுருவம் தமது கைகளில் கிடைக்கப்பெற்றவுடன், திரு. ராயுடு அவர்கள் அதைப்போன்றே ஒரு திருவுருவச்சிலையை பளிங்கு கல்லில் செதுக்கச் செய்து, சமாதியில் பிரதிஷ்டை செய்தார். அத்துடன் மகராஜ் அவர்கள் தன்னுடைய புனித கைத்தடியோடு வீற்றிருக்கும் காட்சியும் சமாதி ஆலயத்தில் நாம் காணலாம். இந்த அற்புதக் காட்சியை, சாட்சியாக திரு. ராயுடு அவர்களே அடியேனுக்கு உணர்த்தியதை நாம் இறுதியில் காண்போம்! ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் பாதுகைகள்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கைத்தடி, எழுதுகோல் இவை அனைத்தையும் அடியேனுக்கு அளித்து இந்நூலில் இடம்பெறச் செய்ததும் ஒரு மிகப்பெரிய அற்புதமாகும்.

நாம் இப்போது ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் பாதுகைகளின் மகத்துவத்தைப் பற்றிக் காண்போம்! மகராஜ் அவர்களின் பாதுகைகள் தீராத வியாதிகளையும், வறுமையையும், வேதனைகளையும் தீர்க்கவல்லதாகும் என்று ஹுசைன்பூர், பாவ்கடா, பெனுகொண்டா மற்றும் அதைச்சுற்றியுள்ள பல கிராம மக்களின் நம்பிக்கையாகும். ஹுசைன்பூரில் அமைந்த ஒரு சிறிய கிராமத்தில், ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் தீவிர பக்தை இருந்தார். அவர் எப்போதும் மகராஜ் அவர்களின் நாமத்தையே சொல்லிக்கொண்டிருப்பார். ஒருநாள் திடீரென்று மகராஜ் அவர் முன் தோன்றினார். அவர் தனது பக்தையிடம், அவள் வேண்டுவது யாது என்று கேட்டவுடன், அவர் சிறிதும் யோசிக்காமல், மகராஜ் அவர்களின் பாதுகைகளைக் கேட்டார்.

அவர் ‘‘ஸ்வாமி! இங்குள்ள மக்கள் அனைவரும் வறுமையிலும், வியாதியும், பேய், பிசாசு தொல்லைகளிலும் சிக்குண்டு, மிகவும் வருந்துகின்றனர்! தம்முடைய பாதுகைகள் இவர்களின் குறைகளைப் போக்க வேண்டும் என்று ஆசீர்வதியுங்கள்!" என்று வேண்டினார். தன்னலம் கருதாமல், அனைவருக்காகவும் ப்ரார்த்தனை செய்த அத்தாயின் உள்ளம் கண்டு மகிழ்ந்த மகராஜ், தனது பாதுகைகளை அவரிடம் அளித்தார். அன்று முதல் பரம்பரையாக அக்கிராமத்தில் எவருக்கு எந்தவிதமான பிரச்சினை என்றாலும், அப்பாதுகைகள், அங்கே வரவழைக்கப்படும்.

அந்தப் பெண்மணி, அப்பாதுகையால் தீண்டும்போது, அவருடைய வேதனைகள் விலகிச் செல்வதை அம்மக்கள் கண்கூடாக கண்டு வியக்கின்றார்கள். அன்று முதல் ஏறக்குறைய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

150 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பாதுகைகள், அவ்வூரைச் சுற்றி பல கிராமங்களுக்கும், ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று வந்திருக்கின்றது. அப்புனிதமான மகராஜ் அவர்களின் பாதுகைகள், இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அவர் மகராஜ் அவர்களை தியானித்து அதற்காக நிதியுதவியை வேண்டினார். அங்குள்ள பக்தர்கள் அனைவரும் நிதியுதவி அளித்ததால், ஒரு அழகான சிறிய மண்டபம் ஒன்றை எழுப்பினார். ஸ்ரீ மகராஜ் அவருக்கு ஒவ்வொரு வருடமும் தை (பிப்ரவரி) மாதத்தில், பல்லக்கு ஊர்வலம் நிகழ்த்துவதற்கும் ஏற்பாடு செய்தார். அந்த ஊர்வலத்தில் ஒருபுறம் ஸ்ரீ சத்யசாயி பாபாவும், மறுபுறம் ஸ்ரீ ஷீரடி சாய் பாபாவும், நடுவில் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களையும் எடுத்துச் செல்வது இன்றளவும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

திரு. ராயுடு அவர்கள் துவங்கி வைத்த விழா, இன்றளவும், ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் ஒரு வாரகாலம் ஹுசைன்பூரில் இருக்கும் இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இணைந்து நடத்தும் விழாவாக சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதி குறித்தும், அவருடைய அற்புதங்களையும், அவருடைய நினைவுச் சின்னங்களையும் கண்டு அவற்றைக் குறித்து எழுத அடியேன் ஆர்வம் கொண்ட பொழுது, சத்குரு ஷீரடி சாய்பாபா ஒரு மிகப்பெரிய அற்புதத்தை நிகழ்த்தினார்.

அன்று இரவு சுமார் 7.30 மணியளவில், கைப்பேசியில் எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அழைத்தவர் இன்னாரென்று அடியேனுக்கு தெரியாது. அவரைத் தொடர்பு கொண்டு விசாரித்த பொழுது அவர் என்னிடம் "அம்மா நான் ராயுடு பேசுகிறேன்! தங்களிடம் ஸ்ரீ வெங்குசா மகராஜ் குறித்து நிறைய பேச வேண்டும்!" என்றார். நான் அதிர்ச்சியடைந்தேன்! காரணம் நான் அறிந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்ட தகவலின்படி, திரு. ராயுடு என்பவர் 1970-களில் வாழ்ந்தவர் என்பதே ஆகும்.

அடியேன் மிகவும் அச்சத்துடன் தாங்கள் எந்த ராயுடு என்று தெரிந்து கொள்ளலாமா! என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுடன் தொடர்பு கொண்ட ஒரே ராயுடு நான்தானம்மா! ஹனுமந்த ராயுடு என்பது என்னுடைய பெயர் என்றார். என்னால், சிறிதும் நம்ப இயலவில்லை. “அப்படியானால் தங்களுக்கு இப்போது என்ன வயது? என்று கேட்டேன்! அவர் தனக்கு 86 வயது ஆகிவிட்டது என்று கூறவும் வியப்பின் உச்சிக்கே சென்று விட்டேன்”.

திரு.ராயுடு, “என்னுடைய குரு மகராஜ் அவரைப்பற்றி நீ எழுதப் போகிறாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும் அம்மா! ஆகையால் தான் நான் தங்களை அழைத்தேன்! என்றார். அடியேன் எவரைக் கொண்டு தகவலை சேகரிக்க வேண்டுமென்று நினைத்தேனோ, அவரே என்னை தொலைபேசியில் அழைத்து, ஸ்ரீ வெங்குசா மகராஜ் பற்றிய அனைத்து விபரங்களையும் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், மகராஜ் அவர்களின் மகாசமாதியை அனைவரும் வருங்காலத்தில் தரிசிக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் கூறினார். இத்துணை அற்புதங்களையும் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களை இவ்வுலகத்தாருக்கு எடுத்துக்காட்டவே, ஷீரடி ஸ்ரீ சமர்த்த சாயி பாபா, தமது நூறாவது மகாசமாதி வருடத்தில் இத்தகைய லீலைகளைச் செய்வதாகக் கூறினார். திரு.ராயுடு அவர்கள் தனது உடல்நிலை மிகவும் தளர்ந்து போன காரணத்தால், தன்னால் இனியும் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களுக்கு சேவை செய்ய இயலாது என்றும், அப்பணியை அடியேன் செய்ய வேண்டும் என்றும் அன்புடன் வேண்டினார்.

இச்சமாதி நிலையத்தைச் சுற்றி சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவிற்கு, எவ்விதமான முன்னேற்றமும் இன்றளவும்

NOT FOR SALE

ஏற்படவில்லை. தங்குவதற்கான வசதிகளோ, உணவருந்துவதற்கான உணவு விடுதிகளோ, இல்லாத ஒரு தனிப்பட்ட பிரதேசமாக, இப்புனித ஸ்தலம் காட்சியளிக்கின்றது. இச்சமாதியைச் சுற்றி ஏறத்தாழ 80 குடிசை வீடுகள் மட்டுமே இருக்கின்றன. இக்காட்சியை காகிதத்தில் வரைவதற்கு, அடியேனின் மனம் வேதனை அடைகிறது. இக்காட்சியை முற்றிலும் மாற்றுவதற்காகத்தான், பாபா, அடியேனை ஒரு கருவியாக இயக்குகிறார்! இனி இச்சமாதி நிலையத்தை, ஷீரடியைப் போன்று, உலகப் புகழ் பெற்று விளங்கும் புண்ணிய ஸ்தலமாக மாற்றவிருக்கிறார் என்று அங்குள்ள பக்தர்கள் பலரும் அடியேனிடம் உரைத்தனர்.

சத்குரு ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவின் கருணையால், அடியேன் ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதிக்கு சென்று வணங்கி, இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதியும், ஆசீர்வாதமும் பெற்று வந்தேன். பாபாவின் பக்தர்களான நாம், பாபாவின் குருவான ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் சமாதிக்கு சென்று ஆசி பெற்று வருவோம் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

(ஸ்ரீ வெங்குசா மகராஜ் மகா சமாதியை தரிசிக்க விரும்புவோர், பெங்களூர் மார்க்கமாகவும், ஆந்திரபிரதேசத்தில் புட்டபர்த்தி வழியாகவும் பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும் செல்லலாம்.)

குரு திருவடி சரணம்.



இங்ஙனம்,
**பாபா மாமி (எ)**
திருமதி. **ரமா சுப்ரமணியன்**

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல




NOT FOR SALE

சத்குரு ஸ்ரீ சாய்பாபாவின் குரு,

**ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகா சமாதி,**

ஹூசைன்புரா, ஆந்திர - கர்நாடக எல்லை.



ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதியில், முதன்முதலாக பூஜை செய்யப்பட்ட திருவுருவின் தோற்றம் (1950 – 1960)



ஸ்ரீ வெங்குசா மகராஜ் முதன்முதலாக பூஜை செய்த பக்தை திருமதி. நரசம்மா அவர்களின் முன்னோர், நேரில் கண்ட மகராஜ் அவர்களின் புனித கைத்தடியுடன், கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும் தோற்றம் ஆலயத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ளது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல



ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள் சமாதி நிலையில் அமர்ந்திருந்த தார்வாட (Dharwat) மலைப்பகுதி குகையின் வெளித்தோற்றம்

NOT FOR SALE



ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்கள் பல ஆண்டுகளாக யோக நிஷ்டையில் அமர்ந்த குகை, கர்நாடக மாநிலத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பெல்லாகவி குகை.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல




தற்பொழுது ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதியில்,
ஷீரடி ஸ்ரீ சாய்பாபா, ஸ்ரீ சத்ய சாய்பாபா இவர்களின் நடுவில்
ஸ்ரீ வெங்குசா மகராஜ் அமர்ந்திருக்கும் தோற்றம்



ஸ்ரீ வெங்குசா மகராஜ் அவர்களின் மகாசமாதி
மந்திர் வெளித்தோற்றம்

NOT FOR SALE